ஆறாவது உலகச் சைவ மாநாடு

சிறப்பு மலர் - 1997

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு

T13999
R005C03
T. 13999

ஆறாம் உலகச் சைவ மாநாடு

சிறப்பு மலர்

திசம்பர் 1997

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர், தமிழ்நாடு

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
ஆறாம் உலகச் சைவ மாநாடு

திசம்பர் 19-21, 1997

புரவலர்

கயிலை மாமுனிவர் திருவளர்திரு
காசிவாசி **முத்துக்குமார சுவாமித் தம்பிரான்**
காசிமடம், திருப்பனந்தாள் ஆதீனம், திருப்பனந்தாள்

தவத்திரு **இராமசுவாமி அடிகளார்**
பேரூர் ஆதீனம், பேரூர்

தவத்திரு **சிவநந்தி அடிகளார்**
மெய்கண்டார் ஆதீனம், இலண்டன் (இங்கிலாந்து)

முனைவர் **கி. கருணாகரன்**
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

அமைப்புச் செயலாளர்

முனைவர் **க. பாஸ்கரன்,** எம்.ஏ., பிஎச்.டி.,
இயக்குநர், தத்துவமையம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

மலர்க்குழு

முனைவர் **செ. இராசு,** எம்.ஏ., பிஎச்.டி.,
பேராசிரியர் - துறைத்தலைவர், கல்வெட்டியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முனைவர் **கு.வெ. பாலசுப்பிரமணியன்,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
பேராசிரியர், இலக்கியத் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முதுமுனைவர் **ம.சா. அறிவுடைநம்பி,** எம்.ஏ., பிஎச்.டி., டி.லிட்.,
இணைப் பேராசிரியர், அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

நன்றியுரை

முனைவர் **க. பாஸ்கரன்,**
(இயக்குநர், தத்துவமையம்)
அமைப்புச் செயலாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

தி. ஆ. 20 28 கார்த்திகை 27
12-12-1997

வணக்கம். திருவள்ளுவராண்டு 20 28 மார்கழித் திங்கள் நான்காம் நாள் முதல் ஆறாம் நாள் முடிய *(19.12.97 - 21.12.97)* ஆறாம் உலகச் சைவ மாநாடு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வாகை வளாகத்தில் நிகழ விருப்பதையொட்டி இச் சிறப்பு மலர் வெளிவருகிறது. இம் மாநாட்டை நடத்துவதற்கும் இச் சிறப்பு மலர் வெளிவருவதற்கும் உறுதுணையாக இருந்து இசைவளித்தவர்கள் திருப்பனந்தாள் காசிமடம் அருட் பெருந்திரு முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், பேரூர் ஆதீனம் அருட் பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், உலகச் சைவப் பேரவைத் தலைவர் அருட் பெருந்திரு சிவநந்தி அடிகளார், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர்.கி.கருணாகரன் ஆகியோராவர். அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றி.

இம் மலர் சிறப்பாக வெளிவருவதற்குப் பல்லாற்றானும் உறுதுணை புரிந்ததோடு அல்லும் பகலும் அயராது உழைத்த பெருமக்கள் முனைவர் செ. இராசு, முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன், முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி ஆகியோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

வாழ்த்துரை வழங்கிய சைவத் திருமடங்களின் குருமகாசந்நிதானங்களுக்கும், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களுக்கும், அருட்செல்வர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்களுக்கும், இலங்கையிலிருந்து வாழ்த்துச் செய்திகளை அனுப்பிய மாண்புமிகு செள. தொண்டமான் அவர்களுக்கும், திரு கா. தயாபரன் அவர்களுக்கும் மற்றும் ஏனைய சான்றோர் பெருமக்களுக்கும் என் நன்றி.

சைவ சித்தாந்தம், சைவ சமயம், கலைகள், திருமுறைகள், செப்போடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தக்க சான்றோர்களால் எழுதப்பெற்ற இக் கட்டுரைகள் தனிச் சிறப்பு வாய்ந்தவைகளாகும். இவற்றை உரிய காலத்தில் வழங்கிய ஆன்றோர் பெருமக்களுக்கு என் நன்றி.

மலருக்கு விளம்பரங்கள் அளித்துதவிய பல்வேறு நிறுவனங்கட்கும் என் நன்றி.

மிகக் குறுகிய காலத்தில் ஒப்படைக்கப்பெற்ற இப்பணியை ஏற்று இம் மலர் பொலிவோடும் செம்மையாகவும் சிறப்பாகவும் வெளிவர உறுதுணை புரிந்த சென்னை அலமு அச்சக உரிமையாளர் திரு து. இராமநாதன் அவர்களுக்கும், அச்சகத்தைச் சார்ந்தவர்களுக்கும் என் நன்றி.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையத்தைச் சேர்ந்த அலுவலக நண்பர்களுக்கும் என் நன்றி.

அன்புடன்,
க. பாஸ்கரன்.

பதிப்புரை

உலகெலாம் ஒளிவி ளக்கும்
ஒண்கதிர் ஞாயி றன்ன
இலகிய சைவ மேன்மை
எங்கணும் பரந்து நிற்கும்;
மலபரி பாக மாக்க
மன்றுளார் ஒருத்தர் தம்மைத்
தலைவராய் வணங்கி ஞாலம்
சிவனெறி வழுத்தி வாழும்!

கடலெலாம் தாண்டி வாழும்
கருணைகூர் சைவ ரெல்லாம்
அடைவுறத் தமிழ கத்தை
அடைந்தனர்; இந்தி யாவின்
இடம்பெறும் மாநி லங்கள்
எங்கணும் இருந்தும் வந்தார்;
நடைபெறும் ஆறாம் ஞால
நற்சைவ மாநாட் டிற்கே!

ஆதீனத் தலைவர் அன்பர்
அறிஞர்கள் ஆய்வு செய்வோர்
மேதகும் அமைச்சர் ஆள்வோர்
வள்ளல்கள் வணிக மக்கள்
ஓதுவார் மற்றும் யாரும்
ஒருங்கிவண் போந்தார் இன்றே
தீதகன் றுலகம் உய்யும்
திருநீற்றின் ஒளியே ஓங்க!

மாநாட்டின் நினைவாய்ச் சைவ
மலரிங்கு வருதல் காணீர்!
தேனூற்றம் கொண்ட தாகத்
திகழ்பெறும் சைவச் சான்றோர்
மான்மறிக் கையன் சீரை
மனமெலாம் தொழுது போற்ற
மேன்மையாய்த் தந்தார் இந்த
வண்மலர் விரித்துப் பாரீர்!

ஞானியார் முதலா யுள்ள
நற்பெரும் அறிஞர் தாமும்
நீணெடும் சைவம் போற்றும்
நெறியினில் உள்ளார் தாமும்
மாணுற வகுத்த வெல்லாம்
வளமைகூர் மலரிற் காண்பீர்!
ஊன்நெக அவர்க்குச் சொன்னோம்
உளமிகு நன்றி யென்றே!

விளம்பரம் அளித்த செல்வர்;
மிகுபொருள் தந்தோர்; அச்சு
நலமுறச் செய்து தந்தோர்
நற்கலை நிகழ்வு செய்வோர்
புலத்துறைச் சைவ நீதி
பொருந்திடப் புரப்போர்க் கெல்லாம்
மலர்க்குழு சென்னி தாழ்த்தி
வணக்கமும் நல்கு மன்றே!

திருப்பனசைக் காசி வாசி
திருப்பெருகு துறவர்; பேரூர்
ஒருநெறிய சாந்த லிங்கர்
உயர்லண்டன் சைவ மன்றம்
பரப்புடைய தஞ்சை கண்ட
பல்கலைக் கழகம் தானும்
விருப்புடன் நடத்து மிந்த
விழாமலர் போற்று வீரே!

அன்புடன்
முனைவர் **செ. இராசு**
முனைவர் **கு.வெ. பாலசுப்பிரமணியன்**
முதுமுனைவர் **ம.சா. அறிவுடைநம்பி**

பொருளடக்கம்

பக்கம்

வாழ்த்துரைகள்

கட்டுரைகள்

1. திருக்கோயில் வழிபாடு - மறைமலையடிகள் 1
2. சைவ சமயப் பாதுகாப்பு - மறைமலையடிகள் 5
3. மெய்கண்டார் நூல் மொழிபெயர்ப்பா? தமிழ் முதல் நூலா? - நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் 8
4. அன்பில் ஒருமைப்பாடு - திரு.வி. கல்யாண சுந்தரனார் 13
5. ஆடற்கலை - க. வெள்ளைவாரணன் 15
6. அறிவியலும் சைவமும் - க. வச்சிரவேல் முதலியார் 20
7. சேக்கிழாரும் திருவாசகமும் - சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் 22
8. பண்டைத் தமிழகத்தில் சிவன் - தி.வே. கோபாலையர் 24
9. நாம பஞ்சாட்சரம் - டாக்டர் அ.மா. பரிமணம் 29
10. உயிர் இயல்பு ஓர் ஆய்வு - கு. வைத்தியநாதன் 32
11. ஞானத்தின் வகைகள் - முனைவர் ச. கங்காதரன் 36
12. திருவருட்பயன் (ஒரு திறனாய்வு) - வை. முருகேசன் 39
13. திருவாசகத்தில் மணிவாசகர் - முனைவர் கு. சுந்தரமூர்த்தி 44
14. இருளும் விளக்கும் - ஆ. ஆனந்தராசன் 50
15. சிவதீக்கையும் சிவத்தணிக்கையும் - முனைவர் கி. லோகநாதன் 53
16. உள்ளத் தெளிவே ஆன்மீகம் - எஸ். தெய்வநாயகம் 59
17. நாவரசர் வாழ்வும் நம்மனோர் கடமையும் - முனைவர் ச. சாம்பசிவனார் 63
18. நடராசர் இல்லாததில்லை - முனைவர் செ. இராசு 68
19. திருநீறு - முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் 76
20. தேவாரப் பண்ணிசைப் பாடுமுறை - முனைவர் ஞானாம்பிகை குலேந்திரன் 80
21. சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பணியில் சைவ சமயத்தின் பங்கு - முனைவர் தா. ஈசுவர பிள்ளை 84

22. பேரின்பத் தூதுமொழி - முனைவர் வ. குருநாதன் 87

23. அரிய சிவமூர்த்தங்கள் - குடவாயில் பாலசுப்பிரமணியன் 91

24. சரபமூர்த்தி - அமைப்பும் பெருமையும்
- டாக்டர் அ. ஆனந்த நடராசன் 97

25. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்களில் சைவ
சித்தாந்தத்தின் அளவைக் கொள்கை - காறுபாறு ஸ்ரீமத் குமாரசாமித்தம்பிரான் 101

26. திருநாவுக்கரசர் நந்தவன மடாலயம் - தலவரலாறு
- தவத்திரு முத்து சிவராமசாமி அடிகள் 107

27. திருமுதுகுன்றம் அருள்மிகு குமாரதேவ சுவாமிகள் ஆதீன
வரலாற்றுச் சுருக்கம் - சீர்வளர் சீர் கல்யாண
சுந்தரசிவப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள் 108

28. ஸ்ரீ மாணிக்கவாசகத் திருமடாலயம் கூனம்பட்டி ஆதீன வரலாறு
- சீர்வளர் சீர் இராசலிங்க மாணிக்கவாசக சுவாமிகள் 110

29. தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
- பேராசிரியர் கு. ஆளுடைய பிள்ளை 111

30. திருக்குறளில் சைவ் சித்தாந்தம்
- மகாவித்துவான் சி. அருணை வடிவேலு முதலியார் 115

31. தமிழ் நிலைபெற்ற சைவம் - முனைவர் அருணை பாலறாவாயன் 118

32. வழிபாடும் தமிழும் - தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் 124

33. தமிழ்ச் சமயம் காட்டும் அப்பாலைத் தத்துவம்
- முனைவர் வை. இரத்தின சபாபதி 127

34. Saivism Through The Ages - Dr. T.B. Siddalingaiah 130

35. Mysticism in the Periya Puranam - T.N. Ramachandran 137

36. The Six Sacred Abodes of Lord Muruga
- Dr. S.N. Kandaswamy 148

37. Basis for the Siddhantin's view on God
- Dr. G. Bhaskaran 151

38. Saiva Siddhanta from A Scientific Perspective
- R. Subbarayalu 153

39. Sacred Ash in Karanagama - Dr. Raju Poundurai 155

40. The five fold action of Siva - Dr. P. Krishnan 157

வாழ்த்துரைகள்

"Kailai Ma Munivar"
THIRU VALAR THIRU KASIVASI
Muthukumaraswami Tambiran Swamigal

Head of Kasithiru Madam
Tirupanandal - 612 504
Thanjavur District

Date : 7-12-1997

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து".

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியாக விளங்கும் சிவபரம்பொருளை முதன்மையாகக் கொண்டு விளங்குவது நம் சைவ சமயமாகும். இச்சமயம் சமய குரவர் நால்வராலும், அருள்வழி வந்த அருளாளர்களாலும் போற்றி வளர்க்கப்பட்ட ஒன்றாகும். இதன் கொள்கைகளையும் தத்துவத்தையும் விளக்குவதற்கெனத் தமிழகத்தில் எழுந்த நூல்கள் பலவாகும். அவற்றில் பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களும் சிறப்புடையன. அவைகளால் போற்றி வளர்க்கப்பட்ட இச்சமயம் கொள்கைகளாலும், பக்தி நெறியாலும் உலகச் சமயங்களில் தலைசிறந்த சமயமாக விளங்குகிறது. இச்சமயத்தின் தத்துவங்களை உலகமெலாம் அறியச் செய்ய முன்பு மாநாடுகள் பல வேறுநாடுகளில் நடத்தப்பட்டவை போலத் தற்பொழுது ஆறாவது உலகச் சைவ மாநாடு காசித்திருமடமும், இலண்டன் மெய்கண்டார் ஆதீனமும், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத் தத்துவ மையமும் இணைந்து தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் திசம்பர்த் திங்கள் 19, 20, 21 நாட்களில் நடத்தப்பெறுவது பாராட்டுக்குரியது.

இம்மாநாட்டை ஒட்டி மலர் ஒன்று வெளியிடுவது சாலச் சிறப்புடையது. இம்மலர் சான்றோர் பலரது நுண்மாண் நுழைபுலம் மிக்க கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளால் பொலிவுடன் விளங்கிடவும் மாநாடு பலதுறைகளிலும் சிறப்புப் பெற்று நிகழ்ந்திடவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சிவ சிவ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க!

தவத்திரு பேரூர் **சாந்தலிங்க இராமசாமி அடிகளார்**
பேரூராதீனம், கோவை.

ஆறாம் உலகச் சைவ மாநாட்டு வாழ்த்துப்பா

1. அன்பு நெறியாம் சிவநெறியில் அருள்சேர் கோயில் பலவமைத்துப்
புன்மையகல புலப்பகைகள் போகப் பத்திநெறி வளர்த்துத்
தொன்மையான கலைஞானம் துலங்கப் பண்ணார் இசைபாடி
நன்மை பெருக அருள்நெறியே நாடும் சான்றோர் தமிழ் வளர்த்தார்.

2. நால்வர் பாடல் மறையாக நல்லாகமமாய் வழிபாட்டின்
சால்பு நிறைந்த நெறிகாட்டித் தண்ணார் இசைப்பாக் கேட்ட சிவம்
தோல்சேர் அரையில் துகிலோடும் தோன்றும் அம்மை அப்பனென்
பால்சேர் சுவையாய்க் கனியாகிப் பருக அன்பர்க்கருள் செய்தார்.

3. நலம்சேர் பாடற்(கு) உருகுகின்ற நம்பன் மண்மேல் வடிவெடுத்துக்
குலம் சேரடியார் வேண்டுவன கொடுத்தாதரித்து மண்ணின் மிசை
உலவி ஆண்ட பெருமையினை ஓது நூல்கள் திருமுறைகள்
பலவும் உணர்ந்த தமிழ் மன்னர் பண்பார் கோயில் பல அமைத்தார்.

4. வேதம் நான்கின் மேலாக விளங்கும் மறையாம் ஐந்தெழுத்தை
ஓதலுடனே மலர்கொண்டு உருவாம் தெய்வந்தனைப் போற்றிப்
பேதம் இன்றி உட்புகுந்து பேணி நீரும் பூவுமிட்டு
நாதன் திருத்தாள் வழிபாட்டால் நலம்சேர் கோயில் நம்கோயில்.

5. மன்னர் கலப்பால் அயல்மொழியை வழிபாட்டின் கண்புகுத்தியிடத்
தொன்மை மரபு மறந்தின்று கோயில் தோறும் புரியாத
ஒன்றால் பூசை செய்கின்றார் உள்ளமுருகத் திருமுறையில்
நன்மை பெருக வழிபாடு நடத்தும் இயக்கம் நாம் காண்போம்.

6. வீடுதோறும் வழிபாட்டின் மேன்மை பெருகத் தமிழ் மொழியில்
நாடும் உணர்வாய வாழ்வியலை நமது கோயில் நடைமுறையைக்
கூடும் அன்பால் உலகோர்க்குக் கூறும் ஆறாம் மாநாடு
பீடு பெறவே உதவும் அன்புப் பெரியோர் தமக்கெம் நல்வாழ்த்து.

7. சிற்பாகமங்கள் தமிழ்க்கலைகள் சேர்ந்த கோயில் புகுந்தடியார்
நற்றொண்டாற் றலகன்று இன்று நடப்பதேனென் றெண்ணிடுவோம்
கற்கும் கலையாய் அருட்பண்பு கலந்த தமிழைப் புதிக்கிடவே
பொற்பார் சைவமாநாடு தஞ்சையதனில் பொலிவுறுக.

8. உள்ளத் திண்மைச் சிவநந்தியடிகள் உலகில் மாநாட்டை
வள்ளன்மை சேர் நாடுகளில் நடத்தி ஆறாம் மாநாடு
தெள்ளு தமிழ்ப்பல் கலைக்கழகம் சேரநடத்திச் சிறப்பிப்பார்
உள்ளும் உணர்வால் சிவநெறிப் பண்பு ஓங்கிவளர வாழ்த்துகின்றோம்.

9. அனைத்தும் தமிழால் நடைபெறவே அகிலம் எங்கும் பரப்பிவரும்
மனத்திண்மையராம் சிவநந்தி யடிகள் சைவமாநாடு
தனைத்தஞ்சைப்பல் கழகத்தில் சமயத் தலைவர் வாழ்த்துடனே
நினைப்பும் செயலும் ஒன்றாக நிகழ்த்தத் துணை செய்வோர் வாழி.

10. செய்ய தமிழால் திருக்குட நீராட்டு செய்வோம் வாழ்வியலில்
செய்யும் அனைத்தும் திருமுறைகள் சேர்க்கோயில் தமிழ் மரபு
உய்யும் வழிபாட்டினுக் குரியதென்னும் உண்மை பரவிடவே
செய்வோம் அன்பர் திருக்கூட்டம் சேர்ப்போம் வாழ்க சிவநெறியே.

இலண்டன் மெய்கண்டார் ஆதீனம் உலக சைவப் பேரவை

Central Executive

தலைமைச் செயலகம்

தவத்திரு சிவநந்தி அடிகளார்
Chief Executive, W.S.C. (H.Q.)
C/o. London Meikandaar Aadheenam
72, King Edward Road, London E17 6HZ
United Kingdom

போற்றி ஓம் நமச்சிவாய.

எமது இடைக்கால வரலாற்றில் சைவப் பொற்காலம் பொறித்த திருமுறை கண்ட பெருமன்னன் இராச ராசசோழன் கட்டி எழுப்பிய தஞ்சைப் பெரியகோயிலில் எழுந்தருளியிருக்கும் பிரகதீசுவரப் பெருமான் திருவருளால் 6ஆவது உலகச் சைவ மாநாடு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுவது உலகச் சைவ மறுமலர்ச்சியின் அறிகுறி; சைவ வரலாற்றில் ஒரு திருப்புமுனை. சிவப் பணியான இம் மாநாடு சிறப்பாக இனிதே நிறைவேறத் திருவருளை நினைந்து வாழ்த்துகிறோம்.

பழமையும், பெருமையும் வாய்ந்த நமது சைவம் இன்று ஒரு தனிப்பெரும் உலக சமயமாகக் கொடி உயர்த்தி நிற்கின்றது. சைவர்களும், சிவாலயங்களும், சைவக் கலைகளும் உலகெலாம் சிவநெறியின் சிறப்புக்களைப் பறைசாற்றுகின்றன. இருப்பினும், ஆங்காங்கே, அயல் வழக்குகளின் ஊடுருவல்களும், எதிர்ப்புக்களும், மதமாற்றமும், திருமுறைகளைத் திட்டமிட்டு ஓரங்கட்டும் முயற்சிகளும் இன்றும் நடைபெறுவது கண்கூடு. இம் மாநாடு சைவ சமயத்தின் இன்றையப் பிரச்சினைகளை, ஆய்வுக் கட்டுரைகள், பேருரைகள், கருத்தரங்குகள் போன்றவற்றால், அலசி, ஆராய்ந்து, ஓர் உலகச் சைவ மறுமலர்ச்சிக்கான செயல் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்பது எமது பேரவையின் பெருவிருப்பம்; காலத்தின் கட்டாயம்.

இம்மாநாடு நடைபெற அருளாசி வழங்கி உறுதுணையாக நின்ற பேரவைத்தலைவர், திருப்பனந்தாள் காசிமடத் தலைவர் ஸ்ரீ ல ஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கும், சைவத் திருமடங்களின் குருமகா சந்நிதானங்களுக்கும்; மற்றும் உலகளாவிய சைவ அன்பர்கட்கும், நிறுவனங்கட்கும்; குறிப்பாக, மாநாட்டின் பொறுப்பை ஏற்று வழிகாட்டிய தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கி.கருணாகரன் அவர்கட்கும், பல்லாற்றானும் அயராது சிவப் பணியாக உழைத்த பல்கலைக்கழகத் தத்துவத் துறைத் தலைவர் முனைவர் க. பாஸ்கரன் அவர்கட்கும் பேரவையின் சார்பில் நன்றி கூறுகிறோம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த உலகச் சைவ மாநாட்டில் கலந்து சிறப்பிக்கும் அனைவருக்கும் எமது அருளாசி நல்வாழ்த்துக்கள்.

''மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்''

அன்பே சிவம்,

சிவ சிவ
18-09-1997

சிவபெருமான் பேரருள்

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

292 ஆவது குருமகாசன்னிதானம் & ஆதீனகர்த்தர், மதுரை ஆதீனம்,

70, தெற்காவணி மூல வீதி, மதுரை - 625 001.

தேதி : 30-11-97

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக!

நமது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆறாவது உலகச் சைவ மாநாடு டிசம்பர்த் திங்கள் 19,20,21 ஆகிய மூன்று நாட்களில் நிகழ்த்திட ஏற்பாடு செய்திருப்பதறிந்து மகிழ்கின்றோம். அம் மாநாட்டின் மூலம், நமது நிரந்தரத் தாய் தந்தையாகிய சிவபெருமானின் பாரபட்சமற்ற ஆட்சி, நிர்வாக அமைப்பையும், ஞானப் பெருமக்கள் உயிரோடு வாழ்கின்றபோதே அவர்களைப் போற்றி, மதித்து, மரியாதை செய்து அவர் தம் ஆசி, ஆலோசனை பெற்று இச் சமுதாயம் எல்லா வகைகளிலும் சிறப்புற்று விளங்கிடவும் திருவருள் பாலிக்குமாறு பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

எல்லோர்க்கும் ஆசீர்வாதம்!

ஸ்ரீஞானசம்பந்த தேசிகர்

சிவமயம்

தொண்டை மண்டலாதீனம்

சீலத்திரு ஞானப் பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
காஞ்சிபுரம்

ஆறாம் 'உலகச் சைவ மாநாடு' தஞ்சையில் நடைபெறுவதறிந்து நெஞ்சம் நிறைகின்றது. தமிழ்ப் பல்கலைக்கழகம், திருப்பனந்தாள் காசி மடம், உலகச் சைவப் பேரவை மூன்றும் இணைந்து மாநாடு நடத்துவது பாராட்டத்தக்க செயலாகும். உலகளாவிய உயர் நோக்கம் கொண்ட சைவத்தின் மாண்பினை 'உலகச் சைவ மாநாடு' உலகிற்குப் பறை சாற்றும்.

'மனித சகோதரத்துவத்திற்கும், மனித மேம்பாட்டிற்கும் சைவம்' - என்பது பற்றி இம்மாநாடு சிந்திக்க இருப்பது, இந்நாளில் சாலப் பொருத்தமேயாம்.

ஆண்டவனையும், அரசர், வள்ளல்களையும் முதன்மைப்படுத்தி எழுதிய நூல்களும் உண்டு. குடிமக்களை முதன்மைப்படுத்தி எழுதிய நூல்களும் உண்டு. ஆனால், பல நிலைப்பட்ட அடியார்களைத் (தொண்டர்களைத்) தலைமைத் தானத்தில் வைத்து நூலெழுதி மானிடத்தைப் போற்றிய மாண்பினைச் சைவத்தில் பெரியபுராணத்தைக் கொண்டு அறியலாம். ஒரு நூலுக்குத் தொண்டர்களின் தொண்டே தலைமைத் தானம் பெற்றுள்ளது என்றாலும் பெரும் சிறப்பே.

திருவீழிமிழலையில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஆற்றிய தொண்டினால் பஞ்சம் நீங்கிப் பசி அடங்கியதன்றோ? மனித சகோதரத்துவத்திற்கும், மனித மேம்பாட்டிற்கும் இரு பெருமக்களின் தொண்டு அருந்தொண்டேயாகும்.

அப்பூதியார் தண்ணீர்ப் பந்தல் வைத்ததும், இளையான்குடி மாறர் அடியார்க்குப் பசி நீக்கியதும் சகோதரத்துவம் வளர்க்கும் செயலாகும். முத்தீ வளர்க்கும் அந்தணர் திருநீலநக்கர், தான் வேள்வி செய்யும் இடத்தில், திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தங்க வைத்ததும், திருஞானசம்பந்தர் தன்னுடனேயே திருநீலகண்ட யாழ்ப்பாணரை ஊர்தோறும் அழைத்துச் சென்றதும் மானுடம் போற்றும் செயலாகும்.

சிவனடியார்களின் வாழ்வு முறை, சிவ நினைவும் உலகியல் நன்னெறியும் கலந்தனவாகும். இறைவன் முன் யாவரும் சமம் என்ற மேலான கொள்கையுடன் அவர்கள வாழ்ந்து காட்டினர்.

'சைவத்தின் மேற் சமயமில்லை' என்றும் 'சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை' என்றும் போற்றப்படும் சைவம், மேலும் பல மாநாடுகளைக் கண்டு சகோதரத்துவத்திற்கும் மானுட மேம்பாட்டிற்கும் வழிகாட்ட வேண்டிக் கச்சி ஏகம்பனைத் தொழுது வாழ்த்துகின்றோம்.

சிவம்.

சிவமயம்

ஸ்ரீ பாலசித்த குருவே நம:

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்

மயிலம் - 604 304 & பொம்மையபாளையம் - 605 114.

நாள் : *04-12-1997*

தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகமும் திருப்பனந்தாள் திருமடமும், இலண்டன் உலகச் சைவப் பேரவையும் இணைந்து நடத்தும் ஆறாவது உலகச் சைவ மாநாட்டுத் தொடர்பான மடல் கிடைக்கப் பெற்றோம்; மட்டற்ற மகிழ்வுற்றோம். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாநாட்டில், கற்றீண்டு மெய்ப்பொருள் கண்ட ஞானமரபினராகிய ஆதீனத் தலைவர்களும், சிறப்பென்னும் செம்பொருள் காணும் அறிஞர் பெருமக்களும் உலகளாவிய நிலையில் பங்கேற்பது பாராட்டுக்குரியதாகும்.

'எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென்
றெவ்வுயிர்க்கும் அன்பா யிரு'

என்னும் உண்மையை உலகிற்கு உணர்த்தி, வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் சைவ சமயத்தின் சார்பில், 'மனித சகோதரத்துவத்திற்கும், மனித மேம்பாட்டிற்கும் சைவம்' என்னும் மையப் பொருளில் இம்மாநாடு நிகழவிருப்பது, தற்காலத்தில் அவசியமானதாகும்.

சைவசமய தோத்திர சாத்திரங்களின் அருமை பெருமைகள், உலக உயிர்க்குலத்திற்குச் சைவசமயம் வழங்கும் ஞானக்கொடைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மாநாட்டுக் கருத்தரங்க நிகழ்ச்சிகள் யாவும், மக்கள் வாழ்வை உயர்விக்கும் என்பதுவும், 'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை' என்னும் உண்மையை உணர்விக்கும் என்பதுவும் திண்ணம்.

திருப்பனந்தாள் ஆதீனம், பேரூர் ஆதீனம், இலண்டன் - மெய்கண்டார் ஆதீனம் ஆகியவற்றின் திருவருள் தொண்டின் துணைகொண்டு, தஞ்சைத்தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையம் நடத்தும் ஆறாவது உலகச் சைவ மாநாடாகிய 'எழில்ஞானபூசைப் பெருவிழா' சீரும் சிறப்புமாக நடைபெறவும், தெய்வ நலமும் சிவஞான மணமும் கமழும் வகையில் மாநாட்டுச் சிறப்புமலர் வெளி வரவும், இத்தொண்டில் ஈடுபட்டோர் யாவரும் இருமை நலமும் எய்தவும் எல்லாம் வல்ல மயிலந்தண் மாமலை அ/மி வள்ளிதெய்வயானை உடனுறை மணக்கோல முருகனின் திருவருளையும், எம் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீ பாலசித்தர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகளின் குருவருளையும் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றோம்.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

குருவே துணை

தவத்திரு குமரகுருபரசுவாமிகள்
மடாதிபதி
கௌமார மடாலயம்
சின்னவேடம்பட்டி (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 006
தமிழ்நாடு

நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம்; பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் இல்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழைஓர் காதின்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

சைவத்திற்கும், திருமுறைக்கும் சிறப்புச்சேர்ந்த தஞ்சையில் ஆறாம் உலகச் சைவ மாநாடு திருப்பனந்தாள் காசித் திருமடமும், தமிழ்ப் பல்கலைக்கழகமும், இலண்டன் உலகச் சைவப் பேரவையோடும் இணைந்து நடத்துவது அறிந்து மகிழ்ந்தோம்.

காவிரிக்கரையின் ஒரு கவின்மிகு நகராகவும் விண்மறைக்கும் கோபுரங்களைப் பெற்ற வினைகளைப்போக்கும் தெய்வத் திருக்கோயில்களையுடைய திருநகரமாகவும் தமிழகப் பண்பாட்டின் உறைவிடமாகவும்; உலகப்புகழ்பெற்ற திருநகராகவும் பழம்பெருமை வாய்ந்தது தஞ்சை. அந்நகரில் சைவ மாநாடு நடப்பது மிகப்பொருத்தமாகும்.

இவ் உலகச் சைவ மாநாடு இனிது நடைபெறவும், இதன் நினைவாக வெளியிடப்பெறும் சிறப்புமலர் சிவமணம் கமழ்ந்து அன்பர்களுக்கு நிலையான இன்பத்தை அளிக்கவும் வேண்டுமென முருகப்பெருமான் திருவருளையும் எம் சிந்தையிடங்கொண்ட குருவருளையும் வேண்டி வாழ்த்துகின்றோம்.

அன்புள்ள,
குமரகுருபர சுவாமிகள்

சிவமயம்

திருமுதுகுன்றம் அருள்மிகு குமாரதேவ சுவாமிகள் ஆதீனம்

23 ஆவது பட்டம்
சீர்வளர்சீர் கல்யாணசுந்தர சிவப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள்
ஆதீன கர்த்தர்

அருள்மிகு குமாரதேவர் மடம்
விருத்தாசலம் - 606 001.

நாள் 4-12-1997

அன்புடையீர்!

தாங்கள் அனுப்பிய ஆறாம் உலகச்சைவ மாநாட்டுச் செய்தி அறிக்கை கண்டோம்.

மிக்க மகிழ்ச்சி.

1997 திசம்பர் 19-21 ஆகிய நாட்களில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் 'மனித சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டிற்கும் சைவம்' என்னும் தலைப்பில் நடைபெறும் மாநாடும், கருத்தரங்கும் நன்முறையில் நடைபெற அருள்மிகு நடராசப் பெருமானையும் அருள்மிகு குமாரதேவர் குருவருளையும் வேண்டுகிறோம்.

மாநாடுகளும், கருத்தரங்குகளும் தான் மக்களிடம் கருத்தைக் கொண்டு செல்லும் சிறந்த கருவியாகும். சைவம் ஒன்றுதான் மனித சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டிற்கும் அரும்பாடு பட்டுவந்துள்ளன என்று கூற முடியும். பன்னிரு திருமுறைகள் அதற்குத் தக்கச் சான்றுகளாகும். குறிப்பாகப் பெரியபுராணத்தில் காணப்படும் 63 தனியடியார்களின் வரலாறு மனித மேம்பாட்டிற்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். மேலும் சுந்தரருடைய வாழ்க்கை வரலாறு கைம்மைத் திருமணம். கலப்புத் திருமணம், சமபந்தி போசனம், கூட்டு வழிபாடு போன்றவற்றிற்குத் தக்க எடுத்துக் காட்டாகும்.

இவை போன்ற நல்ல செயல்களைச் செய்ய முன் வந்த சீர்வளர் சீர்காசிவாசி சுவாமிகளுக்கும், தவத்திரு சாந்தலிங்க சுவாமி அடிகளார்க்கும், சிவத்திரு சிவநந்தி அடிகளாருக்கும், தமிழ்ப் பல்கலைக்கழக விழா ஒருங்கிணைப்புப் பொறுப்பாளர்களுக்கும் நல்லருள் கிடைக்க அருள்மிகு நடராசப் பெருமானின் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சீர்வளர் சீர்குருமகா சந்நிதானம்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகள்

கூனம்பட்டி ஆதீனம்
பல்லகவுண்டம்பாளையம் (அஞ்சல்) விஜயமங்கலம் - 638 056

இனிய அன்புடையீர்! நிறைந்த ஆசிகள். நலம்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், திருப்பனந்தாள் காசித்திருமடத்தோடும், இலண்டன் உலக சைவப் பேரவையோடும் இணைந்து நடத்துகின்ற ஆறாம் உலகச் சைவ மாநாட்டு வைபவம் அறிந்து மகிழ்ந்தோம்.

இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள இடைவெளியை நீக்கி மனிதனைப் பக்குவம் பெறச் சமைப்பது சமயம். சமயங்களில் மேலானது ''சைவ சமயம்''. தெய்வத்தில் மேலானது அநாதி நிலையாகிய சிவபரம்பொருள். எல்லாச் சமயங்களையும் உள்ளடக்கியும், பிற சமயங்களைக் குறை கூறாமலும், தன்னிகரில்லாது விளங்குவது சைவ சமயம், ஜாதி, இனம், மொழி கடந்தும் தழும்பாத நிறை குடம் போன்றும் விளங்குவது சைவ சமயம். ''வாழ் வெனும் மையல் விட்டுச் சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறலரிது'' எனும் திருமுறை வாக்குக் கிணங்க, முன்பு செய்தவத்தின் ஈட்டம்தான் சைவ சமயம் சார வைக்கும்.

எல்லாரிடத்தும் அன்பு பேணுதலும், பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகப் பாவித்து இரங்கி உதவுதலும், பொறுமையும், சகிப்புத் தன்மையும், கருணை உள்ளமும் கொண்டவரே சைவர். ''எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர் சங்கரன் தான் மறவாமை பொருள்'' என்பது சேக்கிழார் வாக்கு, பிறவா நெறியளிப்பது சைவ சமயமே.

இத்துணைச் சிறப்புடைய சைவப் பெருமக்கள் சேர்ந்தும், கூடியும் நிகழ்த்துகின்ற ''ஆறாம் உலகச் சைவ மாநாடு'' சிவ பரம்பொருளின் திருவருளால் சிறப்போடு நிகழவும் விழாவில் கலப்போரும், காண்போரும் உலகில் மக்கள் ஒற்றுமையை நிலை நாட்டவும், தெய்வீகத் தன்மையோடு மேம்பட்டு விளங்கவும் ஆவன செய்திட வேண்டுமென வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

நிறைவுடன்
இராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகள்

சிவ சிவ

திருநாவுக்கரசர் நந்தவன மடாலயம்

(குறும்பசாமிகள் மடம்)

தவத்திரு. முத்து சிவராமசாமி அடிகள்
மடாதிபதி

தென்சேரிமலை
சுல்தான்பேட்டை (ஒன்றியம்)

நாள் : *06-12-1997*

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டிவிடும்

என்ற திருவள்ளுவர் பெருந்தகையின் வாக்கின்படி இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆறாம் உலகச் சைவ மாநாட்டின் வாயிலாக நமது மனித சமுதாயத்தில் சகோதரத்துவம் மற்றும் அனைத்து ஜீவநேயத்திற்கும் நம் சைவ சமயச் சான்றோர்கள் காட்டிய வழியில், சான்றாக நால்வர் பெருமக்களில் அப்பர் சுவாமிகளின் திருத்தொண்டின் சிறப்புக்கள் :-

படைக்கலமாக உன் நாம எழுத்து ஐந்தும் என் நாவில் கொண்டும், திருத்தொண்டின் உறைப்பானும் சமண சமயத்தை வென்று சைவ சமயத்தை ஓங்கச் செய்தார். அப்பர் சுவாமிகளின் திருத்தொண்டின் சிறப்பிற்கு ஏற்ப இன்றையச் சமுதாய மக்களாகிய நாம் ஆன்ம நேயமும் ஜீவ காருண்யமும் செயல்முறையில் யாவரும் திறம்படச் செயல்பட உதவுவதுடன் மாநாட்டுக் கருத்துக்களும் எல்லோருக்கும் வந்து அடையவேண்டுமாய் இம்மாநாட்டைக் கேட்டுக் கொள்கிறேன்.

தன் கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பது.

இப்படிக்கு,
தவத்திரு **முத்துராமசாமி அடிகள்**

சிவ சிவ

ஸ்ரீ மௌன மடாலயம்

39, சபாநாயகர் தெரு, சிதம்பரம் - 608001.

நாள் : 08-12-1997

சிற்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்த னடியிணை மறவாத தவத்திரு சிவநந்தி அடிகளார் அவர்கட்குச் சிவஞானப் பெருஞ் செல்வ முதலியன மேன் மேலாகுக.

சோழ வள நாட்டின் நடு நாயகமாகத் திகழும் தஞ்சையம் பதியில் ஆறாவது உலகச் சைவ மாநாடு நடைபெறுவது சாலச் சிறந்த ஒன்று ஆகும். தஞ்சையிலேதான் மாமன்னன் இராசராச சோழன், இராசராசேச்சரம் என்னும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை எடுப்பித்தான். அப்பேரரசனே தில்லையிலே ஆனந்த நடராசப் பெருமான் ஆலயத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த தேவாரப் பனுவல்களை வெளிக்கொணர்ந்து உலகறியச் செய்தான்.

தரணி போற்றும் தஞ்சைப் பல்கலைக்கழகமும், அறக்கொடை மடமாகிய திருப்பனந்தாள் காசிமடமும், இலண்டன் சைவப் பேரவையோடு இணைந்து சைவ மாநாட்டினை நடத்துவது பாராட்டுதலுக்கு உரியதாகும்.

ஆறாவது உலகச் சைவ மாநாடு சீரோடும் சிறப்போடும் நடைபெறவும்; கலந்து கொள்ளும் அறிஞர் பெருமக்களும், கட்டுரையாளர்களும் வையத்துள் வாழ்வாங்கு வாழவும்; வருகை புரிந்து கேட்டு இன்புறும் பார்வையாளர்கள் நலமுடன் திகழவும் எல்லாம் வல்ல ஸ்ரீமந் ஆனந்த நடராசப் பெருமான் திருவருளையும் ஸ்ரீ மௌன தேசிகர் குருவருளையும் சிந்திக்கிறோம்.

மௌன. சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சிவ சிவ

காமாட்சிபுர ஆதீனம்

சாக்தஸ்ரீ. சிவலிங்கேஸ்வர சுவாமிகள்

அபிராமிபட்டர் திருமடம்,
ஒண்டிப்புதூர் (அஞ்சல்), கோவை - 641 016.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம் என்பதற்கு ஏற்பவும் சைவநீதி விளங்கச் சைவத்தின் மேல் சமயம் வேறில்லை என்பதை விளக்கவும் தாங்கள் கொண்டுள்ள முயற்சிக்கு வாழ்த்துக்கள். மாநாடு சிறப்புற நடைபெறுவதை அறிந்து மகிழ்கிறோம். விழா சிறப்பாக நடைபெறவும் விழாவின் சிறப்பு மலர் மணம்வீசி உலகெலாம் சைவ ஒளிவீச உறுதுணையாக அமைய நல்லாசிகள்.

மணுவளர் தஞ்சை நகரில்
கண்ணுடையார் கண்டபிரான் துணையால்
சைவநீதி தழைக்கச் செய்யும் மாநாடு
மையல்விழி மாதேவி அருள் பெற்று
முனைவர் நல்ல பாஸ்கரனார் செயல் ஓங்க
அனைத்து நலனும் பெற்றுயர்க தொடர்ந்து
விண் உயர வளர்ந்த சைவநீதி விளங்க
மண்உடையோர் போற்றி மகிழ்வோம்.

சிவலிங்கேஸ்வர சுவாமிகள்
ஆதீனகர்த்தர் காமாட்சிபுர அதீனம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சித்தர் ஞானபீடம் டிரஸ்ட்

நேதாஜி நகர், கோவைப்புதூர், கோயம்புத்தூர் - 641 042

நாள் : 8-12-1997

நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத் தப்பானின்ற
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன்தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவேனல்லேன்
கனகமா மணிநிறத்தெம் கடவுளானே!

மனிதன் திருவருளின் துணையுடன் தன்னையும் உலகையும், இவற்றைப் படைத்துக் காத்து வரும் கடவுளைப் பற்றியும், எண்ணத் தொடங்கிய காலம் முதல் தோன்றிய கருத்துக் கருவூலங்களின் முடிநிலை சைவ சித்தாந்தம். சமய கோடிகள் அனைத்தும் தன்பால் அடங்கும் முறையால் அடங்கி நிற்கத் தானவற்றுள் ஒன்றினும் அடங்காது ஒரே நிலையில் நிற்பது இத்திருநெறி. எனவே ''விரிவிலா அறிவினோர்கள் வேறொரு சமயம் செய்து எரிவினாற் சொன்னாறேனும் எம்பிராற்கேற்ற தாகும்'' என்ற விரிந்த பார்வையில் உலகச் சமயங்களை இந்நெறி நோக்குகின்றது.

சீவர்கள் சீவத்தன்மை நீங்கிச் சிவமாதலே உயிர் வாழ்வின் முடிவும் பயனுமாகும். ''தன்னிலைமை மன்னுயிர் சாரத் தருதலே'' திருவருளின் பண்பும் செயலும் ஆம். இதனை உணர்த்தி அன்பு நெறியே திருவருளைப் பெறும் வழி என நெறியுஞ் சுட்டி, இந் நெறி வழியே எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் ஒத்துரிமையுடையவராய் மக்களைச் சைவ நெறி வாழச் செய்கிறது.

முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்வரும் ஆக்கச் சிந்தனைகளுக்கும் இடங்கொடுத்து மரபுக்கும் அறிவியலுக்கும் முரணாதவாறு பின்னைப் புதுமைக்கும் புதுமையாகக் காலத்திற்கும், இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் உள்ளார்ந்த ஆற்றலும் இச்சமயத்துக்கு உண்டு. சைவம் தன் மரபுநிலை பிறழாமல் பிறசமயத் தாக்குதலினின்றும் அதனைக் காத்தனர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர், கதிரைவேற் பிள்ளை காசிவாசி செந்தினாதையர் மற்றும் இன்னோரனைய பெரியோர்கள், காலத்திற்கேற்ற புதுமைகளுக்கும் புரட்சிச் சிந்தனைகளுக்கும் சைவச் செந்நெறி இடங்கொடுத்து நிற்றலை வடலூர் வள்ளற் பெருமான்,

பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், மறைமலையடிகளார், தமிழ்த் தென்றல் திரு.வி.க., குன்றக்குடி அடிகளார் முதலிய பெரியோர்கள், சமயச் சான்றோர்கள் எடுத்துக் காட்டி வலியுறுத்தியுள்ளனர்.

இன்று சைவர்கள் தமிழ் வழங்கும் நாட்டிற்கு அப்பால் கடல் கடந்து வாழ்கின்றனர். இளந்தலைமுறையினரிடையே தமிழ் பயிலுதலும் சைவநெறி நிற்றலும் குறைந்து வருகின்றது. இந்நிலையில் குடியேறிய நாடுகளில் உள்ள சூழ்நிலைக்கேற்பச் சைவச் செந்நெறி பேணி ஒழுகும் முறையைச் சிந்திக்கவும், தமிழகத்திலும், இந்தியத் திருநாட்டிலும் வேறுபடும் மாறுபடும் சமயங்களுக்கிடையே சைவத்தைப் பேணும் முறையைச் சிந்திப்பதற்கும் உலகச் சைவ மாநாடு அடித்தளம் அமைத்துள்ளது.

ஆங்காங்கு உலகம் முழுவதும் தத்தம் வசதிக்கும் நிலைக்கும் ஏற்பச் சைவத் தொண்டு செய்து வரும் நிறுவனங்களனைத்தும் இலண்டன் உலகச் சைவப் பேரவையோடு இணைந்து சைவத் தொண்டாற்ற இம்மாநாடு வாய்ப்பு அளிக்கின்றது.

இம்மாநாட்டில் சிவநெறிக்கு வலுவூட்டக்கூடிய ஆக்கமான சிந்தனைகளும் செயல்திறமும் வெளிப்படத் திருவருள் துணை நிற்பதாகுக!

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் ஆறாவது உலகச் சைவ மாநாடு சிறப்புடனும் ஏற்றத்துடனும் அமைய எம் ஆன்ம மூர்த்தி ஞானாம்பிகை உடனமர் ஞானமூர்த்தி அருளுக என வழுத்தி வாழ்த்துகிறோம்.

ச.ச.ந. நாடிஸ்வரன்

திருச்சிற்றம்பலம்

தவத்திரு சாது சுவாமிகள் திருமடம்

தவத்திரு நந்தியடிகள் ஆசிரமம், தவத்திரு நந்தியடிகள் திருமடம்
அருள்மிகு சண்முக விலாச அன்னதான சமாசம்
மேற்கு கிரி வீதி, அடிவாரம், பழனி - 624 601.

நாள் : 05-12-1997

உலகில் முதன் முதலில் தோன்றிய மக்கள் தமிழ் மக்கள். ஏன் முதலில் தோன்றிய மண் தமிழ் மண் என்று புவிஇயல் அறிஞர்கள் சொல்லுகின்றனர். அப்படித் தோன்றிய மண்ணில் தோன்றிய மக்கள் தமிழ் மக்கள். அவர்கள் பேசிய மொழி தமிழ். தமிழைப் பேசியவர்கள் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நடைமுறைகளே தமிழ்ச் சமயம். அதுவே சைவ சமயம்.

சைவசமயம் தோன்றியதை யாரும் கணக்கில் கொள்ள இயலாத காலமாக உள்ளது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு காலத்தை நிர்ணயிக்கின்றனர். இச்சமயத்தை உலகெங்கும் பரப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் உலகசைவப் பேரவை என்ற அமைப்பை அன்பிற்கும் பாராட்டுதலுக்கும் உரிய சிவநந்தி அடிகளார் அவர்கள் தோற்றுவித்து, அது பல நாடுகளையும் பரவி ஆல்போல் தழைத்து அருகதுபோல வேரூன்றி மூங்கில் போல் கிளைகிளைத்துத் தற்போது தமிழ்நாட்டில் தமிழ் வளர்த்த தஞ்சையில் பல்கலைக்கழகத்தோடு இணைத்து, முயற்சியோடு பேரூர் அடிகளார் திருப்பனந்தாள் சுவாமிகள் ஆகியோருடைய வழிகாட்டுதலோடு நடைபெறும் 6ஆவது உலகச் சைவ மாநாடு சீரும் சிறப்பும் பெற்று நடைபெறத் தாம் வழிபடும் தண்டமிழ்க்கடவுள் பழனி ஞானதண்டாயுதபாணியார் திருவருளும் ஆதிகுரு முதல்வர் தவத்திரு சாது சாமிகள் தண்ணருளும் தாங்கள் சைவப் பணிக்கு உறுதுணையாக இருக்கத் திருவருளைச் சிந்திக்கிறோம்.

அன்பன்
சாது சுவாமிகள்
சாது சண்முக அடிகள்

பாலமுருகனடிமை

அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்,

இரத்தினகிரி, கீழ்மின்னல் - 632 517, வேலூர் அம்பேத்கார் மாவட்டம், தமிழ்நாடு

மனிதகுல வரலாற்றில் தொன்மையில் தோன்றிய மூத்தகுடி தமிழ்க் குடியே யாகும். அதன் அடிநாதமே ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பதுதான். தமிழ் மக்கள் பண்னெடுங்காலத்துக்கு முன்பே சமயநெறியில் காலூன்றினர். அவர்களது சமயம் சிவநெறியே. சிவசமயமே பின் சைவ சமயமானது. சங்க காலத்துக்கு முன்னும் பின்னும் தழைத்தோங்கி யிருந்தது சைவ சமயமே.

இறைவனை ஒளிவடிவாகவும், அன்பு வடிவாகவும் உணர்ந்து தொழுவது உலக சமயங்களுள் முதன்மையான சைவ சமயம்.

'சோதியே சுடரே சூழொளி விளக்கே''

என்றும்

'ஓராதார் உள்ளத்தே ஒளிக்கும் ஒளியானே''

என்று ஒளி வடிவாகவும்,

''அன்பே சிவமானது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''

என்றும்

''அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே''

என்று அன்பு வடிவாகவும் சைவச் சமயச் சான்றோர் பலர் போற்றி வந்ததையே வழிபடு பொருளாகப் போற்றி வருவது சைவ சமயம்.

அன்பு முதிர்ந்து அருள் வடிவான இறைவனை வழிபடுவோரும் அன்பு வடிவினராகவே செயல் படுவரன்றோ? தூய சைவ சமய நெறியாளர்கள் அனைவரும் அவர்கள் உலகின் எந்த மூலையிலிருந்தாலும் அன்பின் செயல்பாடுகளில் ஆர்வம் காட்டுபவர்களாகவே விளங்குகின்றனர்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லால் மற்று வேறொன்றும் அறியாத அருள் உள்ளம் கொண்ட அடியார்களால் வளர்க்கப்பட்டது தானே சைவம். இறைவனது

கடன் அடியார்களைத் தாங்குதல், - அடியார்களின் கடன் பணி செய்து கிடப்பதே என்று வாழ்ந்து காட்டிய அப்பரடிகளின் வாழ்வை எதிரொலிப்பது தானே சைவம்.

இந்த அன்பு தழுவிய சைவ சமயத்தை முன்னிறுத்தி ஆறாம் உலகச் சைவ மாநாட்டைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், திருப்பனந்தாள் காசி மடத்தோடும், இலண்டன் உலகச் சைவப் பேரவையோடும் இணைந்து நடத்துவது அறிந்து மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

''மனித சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டிற்கும் சைவம்'' என்னும் மையப் பொருளில் நடைபெறும் இம் மாநாடு,

''மக்கள் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்''

என்ற உயர்ந்த குறிக்கோளில் வெற்றிபெற எல்லாம் வல்ல இக்குன்றுறைக் குமரன் எந்தன் அருளாளனின் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்தி மகிழும்

பாலமுருகனடிமை

சிவமயம்

கோவிலூர் மடம்

கோவிலூர் - 630 307 (காரைக்குடி அருகில்)

ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்
கோவிலூர் ஆதீனகர்த்தர்

நாள் : 08-12-1997

சைவநெறி என்பது சிவநெறியாகும். சிவனை முழுமுதற் கடவுளாகப் போற்றும் நெறியாகும். இதுவே பக்திநெறி, அருள்நெறி என்றும் போற்றப்பெறுகிறது.

அன்பும், சிவமும் இரண்டல்ல, ஒன்றேயாகும். சிவன் அன்பு வடிவமானவன்; அன்புடையார் உள்ளத் துறைபவன் என்பது வெள்ளிடைமலை.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே.

என்ற திருமூலர் மந்திரத்தால் அறியலாம்.

இன்றும், என்றும் மக்கள் மனத்தில் இருக்க வேண்டியது அன்பு. அன்பின் காரணமாகச் சகோதரத்துவம் வளரும். நாடு, மொழி, இனம், சாதி என்ற வேறுபாடு அற்ற நிலையை அன்பே உருவாக்க இயலும்.

இன்றைய உலகிற்கு வேண்டுவது அன்புநெறியாகும். சைவம் என்பது அன்பு நெறியை உயிராகக் கொண்டது. இந்நெறி உலகம் முழுவதும் பரவினால் மக்கள் அமைதி பெற்று இன்புற்று வாழ்வர். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற வாக்கை நன்றே தெளிய வைக்க வேண்டும். இது நல்லோர்களின் கொள்கை நெறியாக வளர வேண்டுமெனக் கருதுகிறோம்.

'மனித சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டிற்கும் சைவம்' என்ற மையப் பொருளில் ஆறாம் உலகச் சைவ மாநாடு நடைபெறுவது அறிந்து மகிழ்கிறோம்.

இம்மாநாடு சிறப்புற நடைபெறவும் இதில் பங்கேற்ற பேரன்பர்களுக்கு நலம் பெருகி வளம் சிறக்கவும், கொற்றவாளீஸ்வரர் உடனாய திருநெல்லையம்பாளின் திருவடிகளை வழுத்துகிறோம்.

ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்

ஸ்ரீ இராமகிருஷ்ண ஆசிரமம்

பசுபதி பாளையம், கரூர் 639004, திருச்சிராப்பள்ளி மாவட்டம்

நாள் : 08-12-1997

உலகில் சமயங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் தொன்மையானது, சைவ சமயம் என்பது ஆன்றோர் கூற்று.

பாமரனைப் பண்புடையவனாகவும், பண்புடையவனைத் தெய்வீகமயமாக்கவும் துணை புரிவதே சமயம். சுருங்கக் கூறின், மனிதனிடத்துள்ள தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தத் துணைபுரிவதுதான் சமயம்.

பாரதத்தின் முதுகெலும்பு ஆன்மீக வாழ்க்கைதான் என்றார் சுவாமி விவேகானந்தர். மக்கள் சமயத்தைச் சார்ந்திருந்து, சமயநன்னெறிகளைப் பின்பற்றி வாழும் அளவிற்குத்தான் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்.

மக்களிடையே மனித நேயத்தையும், நல்லிணக்கத்தையும் உருவாக்கச் சமயங்கள் மிகுந்த துணை புரிந்திருக்கின்றன.

சமய வாழ்வில் ஜாதிகளுக்கோ, ஜாதிப் பூசல்களுக்கோ இடமில்லை.

உண்மையான சமய வாழ்வு மக்களிடையே சகோதரத்துவத்தையும், நல்லிணக்கத்தையும் உருவாக்கும்.

மானுட சமுதாயம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு, சைவ சமயம் பெரும் பங்கு வகித்திருக்கிறது. இனியும் பெரும் பங்கு வகிக்கும்.

உன்னதமான இந்த நற்பணியில் ஈடுபட்டிருக்கும் தஞ்சைப் பல்கலைக்கழகத்தைப் பாராட்டுகிறோம். எடுத்துக்கொண்ட நற்பணி இனிது நிறைவேற இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே

திருஞானசம்பந்தர்.

இறைவன் தொண்டில்,
அன்புள்ள,
ஆத்மானந்த

முனைவர் கி. கருணாகரன்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

நாள் : 11-12-1997

தமிழ்ப் பல்கலைக்கழகம் 1997 திசம்பர் 19 முதல் 21 வரை ஆறாவது உலகச்சைவ மாநாட்டை இலண்டன் உலகச் சைவப் பேரவையோடும், திருப்பனந்தாள் காசித்திருமடத்தோடும் ஒருங்கிணைந்து தமிழகப்பிற சைவ மடங்கள் ஆதரவோடும், சைவப் பேரறிஞர்கள், சித்தாந்தச் சான்றோர்கள், ஆய்வாளர்கள் ஆகியோர்களது நல்வாழ்த்துக்களுடன் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் சிறப்பாக நடைபெற விருப்பது பாராட்டுதலுக்குரியது. இத்தகைய அனைத்துலகக் கருத்தரங்க மாநாட்டில் 750க்கும் மேற்பட்ட உலகப் பேராளர்கள் கலந்துகொள்வதும், 400க்கும் மேற்பட்ட கட்டுரைகள் படிக்க இருப்பதும் சைவ சித்தாந்தத்தில் துறை போகிய வல்லுநர்கள், சான்றோர்கள் சொற்பொழிவுகளை நிகழ்த்தவிருப்பதும் இம்மாநாட்டின் வெற்றிக்கு மாத்திரமில்லாமல் எதிர்கால மெய்ப்பொருளியல் மற்றும் சமூக இலக்கியக் கோட்பாடு வளர்ச்சிக்கும் பெரிதும் துணை நிற்கும். எனவே, இம்மாநாடு சிறப்புற நடைபெறவும், எதிர்காலச் சமுதாய நல்லிணக்கத்திற்குத் துணையாக அமையவும் என்னுடைய எளிமையான நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

(கி. கருணாகரன்)
துணைவேந்தர்

அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்
தலைவர்
சக்தி குழுமம்
கோயம்புத்தூர்

உலகச் சைவ சமய மாநாடு தஞ்சையில் நடக்கிறது. சமயங்கள் யாவினையும் வென்று ராஜாங்கத்தில் அமர்ந்தது வைதிகச் சமயம் என்று தாயுமானப் பெருந்தகை கூறுகிறார்.

சைவ சமயம் உலகெங்கும் பரந்துள்ளது. மெக்சிகோ நாட்டில் கிடைத்துள்ள நாகரிகத் தடயங்கள் சைவ சமயப் பழமையைப் பேசுகின்றன. உலகப் பெருஞ்சமயங்களில் சைவத்தின் சாயல் படிந்திருக்கிறது. சைவம் ஒரு தனிச் சமயமல்ல. அது ஒரு வாழ்க்கை நெறி.

'விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்து எரிவினால் செய்தாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்' என்று எல்லா வழிபாடுகளையும் தனக்குள் அடக்கிக் கொள்கிற பக்குவம் அதற்கு உண்டு.

வேத காலம் முதலாக இன்று வரை வடமொழியிலும் தமிழிலும், சாத்திரம், தோத்திரம், சரித்திரம், புராணம், இலக்கியம் என்ற எல்லா வகையிலும் மற்றச் சமயங்களையெல்லாம் விஞ்சுகிற அளவுக்கு வளமையுடையது. அது தனக்கென வகுத்துக் கொண்டிருக்கிற வாழ்வு நெறி மற்ற எல்லாச் சமயங்களுக்கும் பொருந்துகிற வகையில் அமைந்துள்ளதாகும்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்

இதுதான் சைவ சமய நெறி.

சைவ சமயத்துக்குப் பாரத நாடு தாயகம் என்றாலும் இன்று அதனைப் பின்பற்றுகிற மக்கள் இங்கிலாந்து, அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா, இலங்கை, தென்ஆப்பிரிக்கா, ஹவாய், மொரிஷியஸ் முதலிய பலப்பல தேசங்களில் பரவி வாழ்கிறார்கள்.

சைவ சமயத்துக்குள்ளேயே தனிப் பிரிவுகள் - காஷ்மீர சைவம், கூர்ச்சர சைவம், கன்னட வீர சைவம், தமிழக சித்தாந்த சைவம், வைதிக ஸ்மார்த்த சைவம் - முதலிய பல பிரிவுகள் உண்டு. இப்படிப் பல மக்களிடையே பல பிரிவுகளாகக் கிளைத்து விழுது பாய்ந்து ஓங்கி வளர்ந்துள்ள சைவத்தை உலக நல்லறிஞர்கள் கூடி ஆராய்வது வரவேற்கத்தக்கது. பாராட்டத்தக்கது.

சோழப் பேரரசு கோலோச்சிய தஞ்சை கல்விக் களஞ்சியம், கலை வளர்த்த பீடம், சமயக் கருவூலம். தஞ்சைப் பல்கலைக்கழகம், இப்பெரும் பணியை மேற்கொண்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

மாநாட்டுச் சிறப்பு மலர் சைவ மணம், தமிழ் மணம் பரப்பி அரிய கருத்துத்தேன் பிலிற்ற எனது அகமலர்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நா. மகாலிங்கம்

S. Thondaman, M.P.

Ministry of Livestock Development & Estate Infrastructure

வாழ்த்துச் செய்தி

உலகின் தொன்மை மிக்க சமயங்களில் சைவசமயமும் ஒன்று. இதன் சிறப்பும் உயர்வும் பலவிடங்களிலும் சுடர்விட்டுப் பிரகாசிப்பதை காணும் போது மனம் புளகாங்கிதம் கொள்கின்றது.

சைவசமயத்தின் உயர்வை, வெளிக்கொணரும் வகையில் உலக சைவப் பேரவை மாநாடுகளை, பல நாடுகளிலும் நடத்தி வருவது கண்டு மிகவும் பெருமிதம் கொள்கின்றேன். தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் தங்கள் சமயத்தையும் கலாசாரத்தையும் கட்டிக் காப்பதில் முன்னிற்பவர்கள் என்பதை இம்மகாநாடுகள் வாயிலாக அறிந்து கொள்ள வாய்ப்பேற்படுகின்றது.

ஏற்கனவே தமிழ்நாடு, மலேசியா, பிரான்ஸ், இலங்கை, தென்–ஆபிரிக்கா போன்ற நாடுகளில் ஐந்து மகாநாடுகள் சிறப்பாக நடைபெற்றதை கேள்வியுற்ற போது நான் மிகவும் சந்தோஷமடைந்தேன்.

இன்று மீண்டும் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் உலக சைவ மாநாடு நடைபெறுவது மிகவும் மனப்பூரிப்பை ஏற்படுத்துகின்றது. தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகம் திருப்பனந்தாள் காசித் திருமடம் என்பவைகளோடு உலக சைவப் பேரவை இணைந்து இந்த ஆறாவது உலக சைவ மாநாட்டை நடத்துவது வரவேற்கத்தக்கதொன்று. ஏனெனில் தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயம் அமைந்த மண்ணில் சைவமாநாடு நடைபெறுவது சாலப்பொருத்தமானதும் மிகவும் பேறுடையதுமாகும்.

உலக சைவப் பேரவை பல நாடுகளிலும் இத்தகைய மாநாடுகளை ஆண்டுதோறும் நடத்தி நமது சைவ சமயத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என இச்சந்தர்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன். இந்த மாநாடு வெற்றிகரமாக அமைந்து சைவத்திற்கும் தமிழுக்கும் பெருமை சேர்க்க வேண்டும். இதன் பயன்பாடுகள் யாவும், தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாது, கடல்கடந்த பல நாடுகளுக்கும் சென்றடைந்து சைவ மக்களது உள்ளத்தில் தெளிவையும், பூரிப்பையும், மனச்சாந்தியையும் ஏற்படுத்திட இறையருள் வேண்டி என் நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொழும்பு
7அக்டோபர், 1997.

சௌ. தொண்டமான்
கால்நடை அபிவிருத்தி மற்றும்
தோட்ட உட்கட்ட அமைப்பு அமைச்சர்.

Ministry of Livestock Development & Estate Infrastructure
45, St. Michael's Road, Colombo 3.
Telephone: 441848
Fax: 941 - 541364

SRI LANKA ASSOCIATION OF THE WORLD SAIVA COUNCIL

உலக சைவப் பேரவையின் இலங்கை மன்றம்

Patrons:

T.T. Santhalinga Ramasamy Adikalar
Srilasri Somasundara Paramacharaya Swamigal
Swami Siva Nandhi Adikalar

Vice - Patrons :

Ms. Thangammah Appacutty
Mr. R. Yoganathan
Mr. A.M. Duraisamy
Mr. T. Senthilverl
Mr. S. Sathiamoorthy
Mr. R. Navasivayam

President :

Mr. K. Thayaparan

Vice - Presidents :

Mr. K. Shanmugalingam
Mr. B.S. Sarma
Mr. S. Danabalaa
Mr. G. Krishnamoorthy
Ms. Satsorupavathy Nathan

Secretary :

Mr. V. Nadarajah

Asst. Secretary :

Mr. S. Theivanayagam

Treasurer :

Mr. S. Vaithamanithy

Asst. Treasurer :

Mr. Kumar Vadivel

Committee Members :

Mrs. Shanti Navukarasan
Mrs. Yamuna Ganeshalingam
Mrs. Shanthi Balasubramaniam
Mr. S. Kumarasamy
Mr. T. Kanagaratnam
Mr. P. Wijayaratnam
Mr. S. Kathiravelu
Mr. K. Jegatheesan
Mr. V. Sivajeyarasah
Ms. Gomathy Suppiah

ஆசிச் செய்தி

உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை 1995 செப்தெம்பரில் கொழும்பில் 4ஆவது உலக சைவ மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தியதுடன் 1996 ஆம் ஆண்டில் டேர்பன் நகரில் இடம்பெற்ற 5 ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்கென ஆகக்கூடிய தொகையான 38 அங்கத்தவர்களையும் அனுப்பிவைத்தது. இம்முறை 6 ஆவது மாநாட்டில் 15 பங்குபற்றுநர்களும் 61 பார்வையாளர்களும் கலந்து கொள்வதற்குள்ளனர். எமது இலங்கைக்கிளை உலக சைவப் பேரவையின் சகல நிகழ்ச்சித் திட்டங்களிலும், செயற்பாடுகளிலும் ஆர்வத்துடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட்டு வருகின்றது.

உலக சைவப் பேரவை இயங்க ஆரம்பித்து ஐந்து ஆண்டுகளே ஆகியுள்ள போதிலும், இக்குறுகிய காலப்பகுதிக்குள் எட்டு நாடுகளில் கிளைகளைத் தாபித்துள்ளதுடன், உலகெங்கும் வாழும் சைவர்களின் நலனிலும், மீளெழுச்சியிலும் பெருமளவு ஈடுபாடுள்ள ஒரு உன்னத அமைப்பாக விளங்கிவருகின்றது. இதற்கான புகழெல்லாம், இப்பேரவையை ஆரம்பித்து இயக்கிவரும் இலண்டன் மெய்கண்டான் ஆதீனத்தின் தவத்திரு சுவாமி சிவநந்தி அடிகாளரையே சாரும்.

உலக சைவப் பேரவை இன்னமும் அதன் நீண்டதொரு பயணத்தின்ஆரம்பத்திலேயே உள்ளது. எனினும் அதன் அங்கத்தவர் சகலரதும், அத்துடன் தொடர்பான நிறுவனங்களினதும் தீவிர பங்களிப்பும் ஆதரவும் நாம் விரும்பும் குறிக்கோளை நோக்கி துரிதமாக முன்னேறுவோம் என்ற நம்பிக்கையை எமக்குத் தந்துள்ளது.

ஆண்டு தோறும் பல்வேறு நாடுகளில் இடம்பெற்று வரும் மாநாடுகள், சைவ உலகின் மேம்பாட்டிற்கான செய்பாடுகள் மீதான கலந்துரையாடல்களை சைவப் பெரியார், அறிஞர், நிருவாகிகள், சமூகத் தொண்டரிடையே ஊக்குவித்து பொது இணக்கமொன்றினைக் காணுதலை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இந்த 6ஆவது உலக சைவப் பேரவையின் மாநாட்டின் முழு வெற்றிக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், சைவத்தின் மூலமாக உலக சகோதரத்துவத்திற்கும், மனித மேம்பாட்டிற்கும் சிறந்ததொரு வழி பிறக்க வேண்டுமெனவும் மனதார பிரார்த்திக்கின்றேன்.

கொழும்பு
அக்டோபர், 1997.

கா. தயாபரன்
தலைவர், உலக சைவப் பேரவை,
இலங்கைக் கிளை,
உதவிச் செயலாளர் நாயகம்,
உலகச் சைவப் பேரவை.

கட்டுரைகள்

திருக்கோயில் வழிபாடு*

மறைமலையடிகள்

''மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்,
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.'' - *தாயுமானசுவாமி.*

தெய்வத்தன்மை பொருந்திய ஔவையார், ''ஆலயந் தொழுவது சாலவும் நன்று'' என்று அருளிச் செய்திருக்கின்றார். 'கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது மிகவும் நல்லது' என்பதே அத் திருமொழியின் பொருளாகும். மற்ற இடங்களிலிருந்து செய்யும் வழிபாட்டைக் காட்டிலும் கோயிலுக்குச் சென்று அங்கே கடவுளுக்குச் செய்யும் வழிபாடு ஒன்றே சிறந்ததாகும் என்பது அதனால் தெளிவாகப் புலப்படுகின்றது. கடவுளை யன்றி வேறெதனையுங் காணமாட்டாத முற்றுணர்வுடையார்க்குக் கோயிலிற் செய்யப்படும் வழிபாட்டிற்கும் வேறிடங்களிற் செய்யப்படும் வழிபாட்டிற்கும் வேறுபாடு சிறிதுந் தோன்றாதாயினும், உலகங்களையும் உலகத்துப் பொருள்களையுமே எந்நேரமும் நினைந்து கொண்டிருக்கும் மற்றை எல்லார்க்குந் திருக்கோயில் வழிபாட்டைத் தவிரக் கடவுளை நினைந்து உருகுதற்கு வேறு வழி சிறிதுமே இல்லை. கோயில் அல்லாத மற்ற இடங்களெல்லாம் உணவு தேடுதற்கு இசைந்த முயற்சிகளுந், தேடிய பொருள்களை வைத்து நுகர்தற்கு இசைந்த முயற்சிகளுமே நடைபெறுந் தன்மையுடையனவாய் இருக்கின்றன. அந்த முயற்சிகள் நடக்கும் இடங்களிலே செல்பவர்களுக்கு அங்கேயுள்ள பொருள்களைப் பற்றிய நினைவும், அம் முயற்சிகளைப் பற்றிய நினைவுகளுமே அடுத்தடுத்து உள்ளத்தில் தோன்றும். மாம்பழம் விற்குங் கடைப் பக்கமாய்ச் செல்வார்க்கு மாம்பழத்தைப் பற்றிய நினைவும், சாராயம் இறைச்சி கஞ்சா அபின் முதலான தீய பண்டங்கள் விலையாகும் அங்காடி வழியே செல்வார்க்கு அவற்றைப் பற்றிய நினைவுகளும், புழுகு மருக்கொழுந்து சந்தனக்கட்டை முதலான நறுமணங்கமழும் இனிய பண்டங்களுள்ள இடங்களிற் செல்வார்க்கு அவற்றைப்பற்றிய நினைவுகளும், பயன் மிகுந்த கல்விப்பொருளை ஊட்டும் பள்ளிக்கூட வழிச் செல்வார்க்குக் கல்வியின் அருமையைப் பற்றிய நினைவும், ஒருவர் பிணமாய்க் கிடக்க அவரைச் சூழ்ந்து சுற்றத்தார் ஓவென்றலறும் வீட்டின் ஓரமாய்ச் செல்வார்க்கு நிலையாமையைப் பற்றிய நினைவும், அழகுமிக்க இருவர் மணஞ்செய்ய அவரைக் கண்டு எல்லாரும் மகிழ்ந்திருக்கும் வீட்டின் பக்கத்தே செல்வார்க்கு அம் மகிழ்ச்சியைப் பற்றிய நினைவுந் தோன்றுதலைத் தெளிவாக அறிந்திருக்கின்றனம் அல்லமோ? இவற்றைப் போலவே கடவுளைத் தொழுதற்கென்று ஆங்காங்கு அமைந்திருக்குங் கோயில்களான தூய இடங்களுக்குச் செல்லும் நல்லோர்க்குங் கடவுளைப்பற்றிய நினைவும் இடைவிடாது தோன்றுவதாகும். உலக வாழ்வெனுந் துன்பத்திற் கிடந்து உழன்று கொண்டு கடவுளை நினைதற்கு இடமின்றி வருந்தும் மக்களுக்கு இடையிடையே நம் ஐயனைப் பற்றிய எண்ணத்தை எழுப்பும் பொருட்டாகவே ஓர் ஊரிற் பல இடங்களிலுங் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோயில்களே இல்லாத நாடு நகரங்களில் இருப்பவர்களுக்குக் கடவுளைப்பற்றிய நினைவு சிறிதுந் தோன்றாதாகையால் அவர்கள் விலங்குகளினுங் கடைப்பட்டவராவார்கள்; உயர்ந்த நினைவில்லா அவர்கள் தங்கியிருக்கும் அவ்விடங்கள் விலங்குகள் குடிகொண்ட காடுகளையே ஒப்பனவாகும். இவ் வுண்மையினை உணர்த்துதற்கன்றோ,

''திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீறு அணியாத திருவி லூரும்,
பருக்கோடிப் பத்திமையிற் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்,
விருப்போடு வெண்சங்க மூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்,
அரும்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே''

---

* அறிவுரைக் கொத்து, பாரி நிலையம், சென்னை, ஆறாம்பதிப்பு 1967.

என்னுந் திருப்பாட்டும் எழுந்தது?

''திருநீறு அணியாத நெற்றியைச் சுடு, சிவாலயம் இல்லாத ஊரைக் கொளுத்து'' என்னும் உபநிடதத் திருமொழியும் இவ் வுண்மையினையே அறிவிப்பதாகும்.

இனி, மன உறுதி உடையவர்கள் எந்த இடத்திலிருந்தும் கடவுளை நினைக்கலாமாகையாற், கடவுளைத் தொழும் பொருட்டுக் கோயிலுக்குத்தான் செல்லல் வேண்டுமென்று வற்புறுத்தியுரைத்தல் என்னையெனின், மேலே சொல்லியபடிக் கோயிலைத் தவிர மற்ற எல்லா இடங்களும் வேறு வேறு நினைவுகளை உள்ளத்தில் எழுப்பி மனவுறுதியைச் சிதைப்பனவாய் இருத்தலால், நம்மனோரில் எவ்வளவு மனத்திட்பம் வாய்ந்தவர்கள் இருந்தாலும் அவர்கள் மற்ற இடங்களிலிருந்து கடவுளை நினைக்கப் புகுவார்களாயின், அவர்களைச் சுற்றிலும் நடக்கும் உலக முயற்சிகளாலும், அவ்வவ்விடங்களைப் பற்றிய எண்ணங்களாலும் அவர்களுடைய நினைவு கலைந்து பழுதுபட்டுப் போகும். மேலும், அத்தனை மனவுறுதி வாய்ந்தவர்கள், பலருங் கடவுளைத் தொழுதற்கென்ற இடமாக வகுக்கப்பட்டமையாற் பலரின் தூய நினைவுகளால் மிகவும் புனிதமாய் விளங்குந் திருக்கோயிலின் உள்ளே சென்று நம் ஆண்டவனை வணங்குவதற்குப் பின்வாங்குவதுங் கூசுவதும் அருவருப்பதும் ஏன்? மிகப் புனிதமான கோயிலை வெறுப்பது மனவுறுதிக்கு அழகாகுமா? பலருடைய நினைவாற் கடவுளுக்கென்றே சிறப்பாக அமைக்கப்பட்ட கோயிலிற் சென்று வணங்குவதால் மனவுறுதி யுடையார்க்கு அவ்வுறுதி மேலுமேலும் உரம்பெற்று விளங்குவதோடு, அவரது நினைவும் அங்குள்ள இறைவன் திருவுருவத்தை நேரே கண்டு மகிழ்ந்து திருவருள் இன்பத்திற் படிந்திருக்குமன்றோ? ஆகையால், மனவுறுதி யுடையவர்களுக்குந் திருக்கோயில் வழிபாடு இன்றியமையாது வேண்டற்பாலதேயாம் என்க அளவற்ற மனவுறுதியுங் கரைகடந்த அன்புந் தூய உள்ளமுந் தூய அறிவும் நிறைந்த திருஞானசம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் முதலான மேலோரே கோயில்கடோறுஞ் சென்று நம் ஐயனை வணங்கி வந்தனராயின், தாழ்ந்த நிலையிலுள்ள மற்றவர்கள் திருக்கோயில் வழிபாட்டைக் குறைவாகக் கருதுவதும், அதனை ஏளனஞ் செய்வதும் எவ்வளவு பொல்லாத குற்றமாய் முடியும்!

அப்படியானாலும், மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளுக்கும் மனத்திற்கும் புலனாகாமல் அறிவு வடிவாய் எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் பிரிவற நிறைந்து நிற்கும் இறைவனை அவ் அறிவு வடிவாகவே நினைந்து வணங்காமற், கல்லினாலுஞ் செம்பினாலும் உருவாக்கப்பட்ட உயிர் அற்ற வடிவங்களில் வைத்து வணங்குவது குற்றமாகாதோ வெனிற், குற்றமாகாது. சிறு குழந்தையாய் இருந்த காலத்திலே தன் தாய் தந்தையரைப் பிரிந்து நெடுந்தொலைவிலுள்ள ஓர் இடத்திற் பிறரால் வளர்க்கப்பட்ட ஒரு சிறுவன் ஆண்டு முதிர முதிர அறிவும் முதிரப் பெற்றவனாய்த் தன் தாய் தந்தையரைக் காண விரும்பியபோது, அவனை வளர்த்து வந்தவர் அவன் தாய் தந்தையர்தம் ஓவியத்தைக் காட்ட அவன் அதில் அவர்களைக் கண்டு வணங்கி அகம் மகிழ்தல்போல, எல்லையின்றி எங்கும் நிறைந்த இறைவனைப் பிரிந்து அவனது திருவருள் வடிவைக் காணமாட்டாமல் அறியாமையிற் கட்டுண்டு கிடக்கும் நம்மனோர்க்குச் சிறிது சிறிதாக அறிவை விளங்கச் செய்து வருந் திருஞானசம்பந்தர், மெய்கண்ட தேவர் முதலான நம் வளர்ப்புத் தந்தைமார் நமது அவாவினை அறிந்து, தாம் கண்ட தம் ஐயன் அருள் வடிவைக் கல்லிலுஞ் செம்பிலும் அமைப்பித்துக் காட்ட, நாம் அதனைக் கண்டு வணங்கி அதன் வழியே நம் ஐயனை அறிந்தவர்களாய் அகங் களித்து வருகின்றனம் அல்லமோ? ஓவியத்தின் கண்ணே தம் உருவங்களைக் கண்டு தம் புதல்வன் மனம் மகிழ்ந்து வணங்குகின்றான் என்பதைச் சேய்மைக் கண் உள்ள அவன் பெற்றோர்கள் அறிந்து, அவனது அன்பிற்குத் தாமும் மனம் மகிழ்வார்களேயல்லாமல் அவன்மேற் சினங்கொள்வார்களோ? இங்ஙனமே, நாமும் நம் ஐயன் அருள் வடிவை நேரே காண இயலாமையால், அதனை நம் ஆசிரியர் உதவி கொண்டு கல்லிலுஞ் செம்பிலுங் கண்டு அன்பால் அகந்துளும்பி வழிபட, அதனை அறியும் நம் ஆண்டவன் அதற்கு மகிழ்ந்து

அவ்வழிபாட்டினை ஏன்று கொண்டு நம்மைப் பாராட்டிச் சீராட்டி வருவான் என்பதே திண்ணம். நம் முழுமுதற் றந்தையின் இரக்கத்திற்கு ஒரு வரம்பேயில்லை. சிற்றறிவினரும் ஏழை மக்களுமான நாம் நம் பெருமானை அடைதற்பொருட்டு, இத்துன்பக் கடலின்கண் அவன் திருவுருவ அடையாளங்களாகிய தெப்பங்களைக் கைப்பற்றிக் கொண்டு தத்தளித்து வருவதைக் கண்டு, அவன் நம்மேல் மிகவும் இரக்கம் உடையனாகி நமக்குத் தனது அருளை வழங்கி நம்மை இப்பிறவிக் கடலினின்றுங் கரையேற்றித் தனது பேரின்ப நாட்டில் வாழ்விப்பனேயல்லாது, நம்மேற் சினந்து நம்மை அதன்கண் அமிழ்த்தித் தாழ்விப்பான் அல்லன். ஆதலால், முழுமுதற் கடவுளான நம் ஐயனைச் சேருங்கருத்தோடு அவன் அருள் வடிவிற்கு அடையாளங்களாகக் கல்லிலுஞ் செம்பிலும் அமைத்த திருவுருவங்களை வணங்கி வருதல் சிறிதுங் குற்றமாக மாட்டாதென்க. திருக்கோயிலிலுள்ள திருவுருவங்கள் இறைவனை யறிதற்கு வைத்த குறிகளே யல்லாமல் வேறு அல்ல. இவ்வுண்மை,

''குறிகளும் அடையாளமுங் கோயிலும்
நெறிகளும் அவன் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே''

என்னுந் திருநாவுக்கரசு நாயனார் திருமொழிக்கண் நன்கு விளக்கப்பட்டமை காண்க.

இனி, முழுமுதற் கடவுளாகிய நம் சிவபெருமானை யன்றி, வேறு நம் போன்ற சிற்றுயிர்களின் வடிவங்களைக் கல்லிலுஞ் செம்பிலுஞ் செய்து வைத்துக்கொண்டு அவற்றை வணங்குதலே பெரிதுங் குற்றமாவதாம். மாரி கூளி எசக்கி கறுப்பண்ணன் மதுரைவீரன் முதலிய ஆவிகளெல்லாம் நம்போற் குற்றமுடைய சிற்றுயிர்களாதலின் அவற்றைத் துணையாகக் கொள்வது, ஒரு குருடன் மற்றொரு குருடனைத் துணைகூட்டிச் சென்று இருவரும் பள்ளத்தில் வீழ்தற்கே ஒப்பாம். விவிலிய நூலிலுங் கடவுளுக்கு மாறான உருவங்களை வணங்குதல் ஆகாதென்று சொல்லப்பட்டதே யல்லாமற் கடவுளின் திருவுருவத்தை வழிபடுதல் வழுவென்று கூறப்பட்டதில்லை. ஈசாவசியோபநிடதத்தின் ஒன்பதாவது மந்திரமும், ''அறியாமையொடு கூடிய சிற்றுயிரின் வடிவங்களை வணங்குபவர்கள் இருள் நிறைந்த நிரயத்திற்குச் செல்கின்றார்கள்'' என்று இங்ஙனமே கூறுகின்றது. ஆகையால், முழுமுதற் பழம்பொருளின் உண்மை அருள் வடிவாய் அம்மையப்பராய் நின்ற திருவுருவத்தையும், அம் முதற்பொருளின் பேரருள் விளக்கத்திற்கு இடமாய் மேலோராற் பண்டைக் காலந்தொட்டு வணங்கப்பட்டு வரும் பிள்ளையார் முருகப்பிரான் முதலானோர் திருவுருவங்களையும், இவர்களின் அருள்வழிப்பட்ட அடியார் திருவுருவங்களையும் அன்றி வேறு எவற்றையும் வணங்குதல் சிறிதும் ஆகாது என்று கடைப்பிடித்தல் வேண்டும்.

இங்ஙனம் மிகவும் புனிதம் உடையதாய் விளங்குந் திருக்கோயிலினையும், அதனுள் நிறுத்தப்பட்டிருக்கும் அருள் அடையாளங்களையுஞ் சிவமென்றே நினைந்து உள்ளங் கரைந்துருகி வணங்கவே, கன்றை நினைந்த புனிற்றாப்போல இறைவன் அக் குறிகளில் விளங்கியிருந்து அவர்க்கு அருள் வழங்குவன். இதற்குத்,

''திருக்கோயில் உள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே தேறினர்க்குச் சிவன் உறைவன்
ஆங்கே''

என்னுந் திருப்பாட்டே சான்றாகும். பகலவன் ஒளியில் எங்கும் உள்ள நெருப்பானது காந்தக் கண்ணாடியில் விளங்கித் தோன்றினாற்போல, எங்குமுள்ள இறைவன் அன்பர்களின் வேண்டுகோளுக்கு

இணங்கி இத் திருக்கோயிலின் திருவுருவத்தின்கண்ணும் விளங்கித் தோன்றினான் என்று உண்மையாக எண்ணி வழிபடுவார்க்கு அவன் அங்கு முனைத்துத் தோன்றி அருள் புரிதல் திண்ணம். ஆனால், நம்மனோரிற் பலர் தாம் கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவதாக வெளியே பெருமை பேசிக்கொண்டாலும், உண்மையில் அவர்கள் அவ்விடத்தைக் கோயிலாகவும் அதனுள்ளிக்கும் திருவுருவத்தைக் கடவுளின் அருளுருவ அடையாளமாகவும் நினைந்து நடக்கின்றார்களென்று நம்மால் நம்பக்கூடவில்லை. ஏனென்றால், அவர்கள் கோயிலின் உட்சென்றால் அடக்க ஒடுக்கமும், ஐயன் திருவடியில் நினைவும் வையாமல், வீண் கதையும் வம்பு வழக்குகளும் மணச்சடங்கு பிணச்சடங்குப் பேச்சுகளுந் தமக்கு முன் உபாசாரஞ் செய்யவில்லையென்னும் வீம்புப் பேச்சும் பேசுபவராய் ஒருவரோடொருவர் சிரித்துப் பகடி பண்ணுதலிலும், அன்பர்கள் அருவருக்கத்தக்க இன்னும் பல வீணானவைகளைச் செய்வதிலும் உள்ளத்தை வைத்துப் பெருங் குற்றங்களை மூட்டை மூட்டையாகத் தொகுத்து வைக்கின்றார்கள். ஐயோ! உலகத்திலே அழிந்து போகுஞ் செல்வப் பொருள் சிறிது உடையவர்களைக் கண்டாலும் அவர்கள் முன்னிலையிற் கைகட்டி வாய் புதைத்துச் செல்லும் மாந்தர்கள், அளவிறந்த உலகங்களையும் அவ்வுலகங்களில் உள்ள அளவற்ற பொருள்களையும் உடைய எல்லாம்வல்ல தலைவனான நம் ஆண்டவன் முன்னிலையிற் செல்லுங்கால் எவ்வளவு அடக்க ஒடுக்கமும் அன்பும் பணிவும் உடையராக இருத்தல்வேண்டும்! தம் தலைவராகிய கடவுள் இத் திருக்கோயிலினுள் எழுந்தருளியிருக்கின்றாரென்று அவர்கள் உண்மையாகவே நினைத்திருந்தால், ஆ! இப்படியெல்லாஞ் செய்வார்களா! இதற்கு முன்னெல்லாம் இவர்கள் இங்ஙனம் அறியாமையாற் குற்றமாக நடந்தாலும், இனியேனுஞ் செருக்கற்று அடக்கமும் அன்பும் பணிவும் பூண்டு, ஐயன் முன்னிலையில் நெஞ்சம் நெக்கு நெக்கு உருகக் கண்ணீருங் கம்பலையும் உடையவராய் அவன் புகழ்பாடி அவனது திருவருட் பெருஞ் செல்வத்தைப் பெற்றுப் பிழைத்திடுவாராக!

Welcomes all delegates to

SIXTH WORLD SAIVA CONFERENCE AT THANJAVUR

TEMPLE TRAVELS & TOURS

C/o HOTEL TEMPLE TOWER

20/1A, S.M. Road, Near New Flyover, Thanjavur - 7

Phone :25125, 25225, 25325, 25425, 25525

Fax : 04362, 23727, Grams : Temple Tower

சைவசமயப் பாதுகாப்பு

மறைமலையடிகள்

''காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர்! அகண்டாகாரசிவ
போகம்எனும் பேரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்,
ஏகஉருவாய்க் கிடக்கு தையோ!
இன்புற்றிட நாம் இனி எடுத்த
தேகம் விழும்முன் புசிப்பதற்குச்
சேரவாரும்! செகத்தீரே!''

-தாயுமானசுவாமிகள்.

''சைவசமயம்'' என்பது 'சிவத்தை ஆராய்ந்து அறிந்த பொழுது அல்லது கொள்கை' என்ற பொருள்படும்; இந்தக் கொள்கையைப் பாதுகாத்துக் கொள்ளுதலே சைவசமயப் பாதுகாப்பு ஆகும். உலகத்திலே அளவிறந்த கொள்கைகள் இருந்தாலும், அவையெல்லாவற்றுள்ளுங் கடவுளைப் பற்றிய கொள்கையே சமயம் என்று பெரும்பான்மையும் எல்லாராலுங் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. மக்கள் நிலையில்லாத வாழ்க்கை உடையவராய் இருத்தலாலும், நோயுந் துன்பமுங் கவலையும் அடுத்தடுத்து வந்த அவரை வருத்துதலாலுந், தமக்குத் துணையாக நினைத்த மக்களுந் தம்மைப்போலவே நோய் முதலியவற்றால் வருந்தி நிலையின்றி மறைந்து போதலாலும், அவர்கள் தம்மினுந் தம்மைப்போன்ற எல்லா உயிர்களினும் மேற்பட்டு உயர்ந்த ஒரு பேரறிவுப் பொருளான கடவுளின் துணையை நாடினவராய் இருக்கின்றார்கள். கடவுள் இல்லையென்று வலியுறுத்திப் பேசிவந்தவர்களுங்கூடப் பெருந்துன்பங்கள் வந்து தம்மை மூடிக்கொண்ட காலத்தில் தாம் கொண்ட கொள்கையைப் பிசகென உணர்ந்து கடவுளை நம்பத் தலைப்பட்டிருக்கின்றார்கள். கடவுளிடத்தில் நம்பிக்கையில்லாத அருகரும் பௌத்தருங் கூடத் தமக்கு மேற்பட்ட துணையை நாடினவர்களாய்த் தம் சமய குரவரையே கடவுளாக எண்ணி வழிபட்டு வருகின்றனர். தம்மையே கடவுளாக நினைப்பவர்களுங்கூடத் தமது கொள்கையை உண்மைப்படுத்திக் கொள்ள முடியாமை கண்டு ஏதாவதொன்றைத் தமக்கு மேற்பட்டதாக வைத்து வணங்கி வருகின்றார்கள். இங்ஙனமாக ஒன்றோடொன்று மாறுபட்ட கொள்கைகள் உடையவர்களெல்லாருங் கடைசியாகக் கைக்கொண்டது, 'தமக்கு மேற்பட்ட ஒரு பேரறிவுப் பொருள் வணக்கமே' ஆகும். இம் முடிந்த கொள்கையில் எல்லாச் சமயிகளும் உடன்பாடு உடையவராய் இருக்கின்றனர்.

இனி, மக்கள் எல்லாரும் இங்ஙனந் தம்மின் மேற்பட்ட ஒரு பேரறிவுப் பொருளின் உதவியை விரும்பி நிற்றல் எதன் பொருட்டு என்று ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்குங்கால், அவர் தமது துன்பத்தை நீக்கிக் கொள்ளுதற்கும் இன்பத்தைப் பெறுதற்குமேயாம் என்னும் உண்மை புலனாகும். மக்கள் மட்டுமேயல்லர், மக்களினுந் தாழ்ந்த எல்லா உயிர்களுங்கூடத் தமது துன்பத்தைப் போக்கி இன்பத்தை ஆக்கிக்கொள்ளவே முயன்று நிற்கின்றன. இங்ஙனம் நம் கண்ணெதிரே காணப்படுகின்ற இவ்வுண்மையைக் கொண்டு, எல்லா உயிர்களும் இப்போது துன்பக் கயிற்றாற் கட்டப்பட்டிருக்கின்றனவென்றும், இத்துன்பக் கயிற்றை அறுக்கவும் இன்ப வெள்ளத்தைப் பெருக்கவுந் தம்மால் ஆகாமையின், துன்பத்தினின்றுந் தம்மை விடுவித்து இன்பத்தை ஊட்ட வல்ல முழுமுதற்கடவுளின் உதவியைப் பெறுதற்கு அவை பெரிதும் விரும்பி நிற்கின்றன வென்றும் நாம் தெளிவாக அறிந்து கொள்கின்றனம் அல்லமோ? இன்னும், பிறப்பு இறப்பு நோய் மூப்புக் கவலை இழப்பு முதலான பலதிறப்பட்ட வடிவங்களிற் றோன்றுந் துன்பங்கள் அத்தனையும் எல்லா உயிர்களையும் வருத்திவரக் காண்கின்றோமாதலால், இத் துன்பங்கள் உடையோர் வேறுவகையில் எவ்வளவு உயர்ந்தோராயினும் உயிர்களேயல்லாமற் கடவுளாக மாட்டார். இவ் வுயிர்களை இத் துன்பத்தினின்றும் மீட்டு இவற்றிற்கு இன்பத்தைத் தருங்கடவுள் ஒருவரே எவ்வகைத் துன்பமும் இல்லாதவர்; எல்லா இன்பமும் ஒருங்கே உடையவர். இதுவே கடவுளுக்கு உண்மையான தன்மை யென்பதை எல்லாச் சமயிகளும் உடன்பட்டு உரைப்பார்களாயினுஞ், சைவசமயத்தில் மட்டும் அவ்வுண்மை முன்னுக்குப் பின் மாறில்லாமற் காணப்படுகின்றது; மற்றைச் சமயத்தவர்களோ பிறப்பு இறப்பு முதலான மேற்கூறிய துன்பங்களிற் கிடந்து உழன்றவர்களை,

அவரவரிடத்துள்ள சிற்சில சிறந்த தன்மைகளைக் கண்டும் வலிய செய்கைகளைக் கண்டும் முழு முதற் கடவுளாகத் துணிந்து வணங்கி வருகின்றனர். நாடக அரங்கத்தில் அரசகோலந் தாங்கிவந்து ஆடுவோன் உண்மையில் அரசன் ஆகாமைபோல, இறைவனருளாற் சிற்சில உயர் நலச் செய்கைகளைப் பெற்றவர்கள் அவற்றால் அவ் விறைவனைப்போற் கருதப்படினும் அவர் உண்மையில் அவ் விறைவனாகமாட்டார். சைவசமயிகள் வணங்கிவருவது, இன்ப வடிவான கடவுளேயல்லாமற் பிற உயிர்களுள் ஒன்றும் அன்றென்பதற்கு அடையாளம் என்னென்றால், அன்பு அல்லது இன்பம் என்று பொருள்படுஞ் சிவம் என்னுஞ் சொல்லையே முழுமுதற்கடவுளுக்குச் சிறப்புப் பெயராக வைத்து வழங்குவதும், அச் சிவத்திற்குப் பிறப்பு இறப்பு முதலான எவ்வகைத் துன்பமுஞ் சிவபுராணங்களிற் காணப்படாமையு மேயாம். இவ்வுண்மையை வலியுறுத்தும் பொருட்டே,

''யாதொரு தெய்வங்கொண்டீர்
அத்தெய்வமாகியாங்கே,
மாதொரு பாகனார் தாம் வருவர்; மற்று அத்
தெய்வங்கள்,
வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையுஞ்
செய்யும்;
ஆதலால் இவையிலாதான் அறிந்தருள் செய்வனன்றே''

என்பது சிவஞானசித்தியாரிலும் அருளிச் செய்யப் பட்டது.

இங்ஙனம், இன்பவடிவாக விளங்கும் முதல்வனையே வணங்குஞ் சைவசமயிகள் எவ்வுயிர்க்கும் இன்பத்தையே செய்யக் கடமைப்பட்டவர்களாயிருத்தலால், இன்பத்திற்கு மாறான துன்பத்தைத் தருங் கொலைத் தொழிலை எவ்வுயிர்களிடத்துஞ் செய்யாதவர்களாயும், அக் கொலைத் தொழிலால் வரும் ஊனைத் தின்னாதவர்களாயுஞ் சீவகாருணிய ஒழுக்கத்தில் தலைசிறந்து நிற்கின்றார்கள். சீவகாருணிய ஒழுக்கம் மற்றைச் சமயத்தவராலுங் கைக் கொள்ளப்படினும், அது சைவசமயிகளுக்கே பழமைக் காலந் தொட்டுச் சிறந்த உரிமையாகி வருகின்றது. மற்றைச் சமயத்தவருந் தம்மிற் புலால் தின்னாத ஒருவரைப் பார்த்து, 'அவர் சைவராகி விட்டார்' என்று சைவப்பெயராற் கூறுதலிற், சீவகாருணிய வொழுக்கஞ் சைவசமயிகளுக்கே சிறப்புரிமைப் பொருளாய் விளங்குகின்றது.

இனி, இங்ஙனமெல்லாம் பலவகையாலும் உயர்ந்த சைவசமயத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் வழிகள் என்னென்றாற், சைவசமயத்திற் பிறக்கும் பெருந்தவம் பெற்றவர்கள் முதலில் தம்மால் வணங்கப்பட்டுவரும் முழுமுதற் கடவுளான சிவத்தின் இயல்புகளை அறிந்தோரிடத்தும் நூல்களிடத்துங் கேட்டும் பயின்றும் நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும். பெண்பாலாரே பிள்ளைகளின் நல்லறிவு வளர்ச்சிக்கும் நல்லொழுக்கத்திற்குங் காரணராக இருத்தலாற், பெண்மக்களுக்குச் சைவசமய நூல்களையும் நல்லொழுக்கங்களையும் அறிந்தோர் வாயிலாகக் கற்பித்து வருதல் வேண்டும். ஆண்பிள்ளைகள் மற்றக் கல்வியொடு சைவசமய உணர்ச்சியும் பெற்றுவரும்படி கல்விச்சாலைகள் ஆங்காங்குத் திறப்பித்து, அதனைச் செவ்வையாகப் புகட்டிவருதல் வேண்டும். தேவார திருவாசகங்களுக்குப் பொருள் தெரிந்து கொள்வதோடு, இனிய குரலில் அவற்றை இசையுடன் ஓதுதற்கும் ஒவ்வொருவரும் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

இனி, ஓர் உயிரைக் கொலை செய்யாமையுங், கொன்று அதன் ஊனைத் தின்னாமையுஞ் சைவ சமயத்திற்குச் சிறந்த அறமாயிருத்தலால், எல்லாருஞ் சீவகாருணிய வொழுக்கத்தைக் கைப்பற்றி யொழுகும்படி எவ்வெவ் வகையால் முயற்சி செய்தல் வேண்டுமோ அவ்வவ் வகையாலெல்லாஞ் செய்து அதனை எங்கும் பரவச்செய்தல் சைவர்க்கு இன்றியமையாத கடமையாயிருக்கின்றது.

இனித், தமிழ்மொழியின் அமைப்பும் அதன் இயற்கையுஞ் சைவசமய உண்மையோடு மிகவும் ஒன்றுபட் டிருத்தலால், அதனை எல்லாரும் நன்றாகக் கற்று வேறு மொழிக் கலப்பில்லாமற் செவ்வையாகப் பேசவும் எழுதவும் அதிற் புதிய புதிய நூல்கள் இயற்றவும் பழகிக் கொள்ளுதல் வேண்டும். தமிழ் அல்லாத மற்ற மொழிகளில், வருத்தப்பட்டுச் சொல்லுஞ் சொற்களுஞ், சினந்துன்பம் வந்தாற் பிறக்கும் உரத்த ஓசைகளும், இளைத்த ஒலிகளும் நிரம்பிக் கிடத்தலால் அவையெல்லாஞ்

செயற்கை மொழிகளென்றுந், தமிழில் வருத்தமின்றி இயல்பாற் பிறக்குஞ் சொற்களே நிறைந்து சினத்தாற் பிறக்கும் வெடுவெடுப்போசையுந் துன்பத்தாற் பிறக்கும் இளைப்பொலியும் இன்றி, எல்லாம் இனிய குணத்திற் பிறக்கும் மெல்லோசைகளாய் இருத்தலின், தமிழ் இன்பவடிவாய் விளங்குஞ் சிவத்தோடு ஒத்த இன்பம் வாய்ந்த தெய்வ மொழியாம் என்றுஞ் சைவ சமயிகள் இவ்வுண்மை யைக் கருத்திற் பதியவைத்து அதனை வளரச் செய்தற்கான எல்லா முயற்சிகளையுங் குறைவரச் செய்தல் வேண்டும்.

நம் செந்தமிழ்மக்களில் நூறாயிரம் பேர்க்கு இரண்டு மூன்று பேரே சிறிதுகற்றவர் களாயிருக்கின்றார்கள். மற்றவர்கள் எல்லாருங் கல்வியறிவு இல்லாதவர்களாயும், அறியாமைச் சேற்றிற் புதைந்து கிடப்பவர்களாயும் இருக்கின்றார்கள். உலகத்தில் இவ்விந்திய நாட்டைத் தவிர மற்றைப் பெரும்பாகங்களில் இருப்பவர்களெல்லாருங் கல்வியிலும் மெய்யுணர்விலும் உழவிலுங் கைத்தொழிலிலும் வாணிகத்திலும் நாளுக்கு நாள் மேம்பட்டு வர நமது நாட்டிலுள்ளவர்களோ - அவர்களிலுந் தமிழர்கள் இவற்றில் மிகவுந் தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றார்கள்! இவர்களை இனிக் கல்விச்சாலைகளுக்கு அனுப்பிக் கல்வி கற்பித்தல் இயலாதாகலின், ஊர்கள்தோறும் நகரங்கள் தோறுங் கழகங்கள் வைப்பித்து அவற்றின் வாயிலாகத் தமிழுஞ் சைவமும் உணர்ந்த அறிஞரைப் பல இடங்கட்கும் அனுப்பித், தமிழ் நூற்பொருள்களையுஞ் சைவ நூற்பொருள்களையும் விளக்கமாக அறிவுறுத்தி வருதல் இப்போது உடனே செயற்பாலதான நன்முயற்சியாகும். தமிழ் கற்றோர் தொகை மிகவுஞ் சுருங்கிப் போனதால், 'தமிழ் அறிஞர்க்குப் பொருள் ஏன் வேண்டும்?' என்று ஏளனமாய் உரையாமல், அவர்க்கு ஏராளமாய்ப் பொருளுதவி செய்து, கல்வியில் எல்லையின்றிக் கற்று அதனைப் பிறர்க்கும் பயன்படுத்தும்படி அவருக்கு மனக்கிளர்ச்சியினை விளைவித்தல் வேண்டும்.

இனிச் சிவபிரான் கோயில்களில் நிறுத்தப்பட்டிருக்குந் திருவுருவங்கள், இறைவனுக்கு என்றும் உரிய அருளுருவத்தையும், அன்பர்க்கு அருள் செய்யும் பொருட்டு முதல்வன் ஒரொருகாற்கொண்ட திருவுருவத் தோற்றங்களையும் அன்பர்க்கு நினைவில் எழுப்புதற் பொருட்டு அமைத்த வடிவங்களேயாகும். இவ்வடிவங்களை வணங்கச் செல்லும் அன்பர்கள் இவற்றைக் கண்டவுடன் ஐயன் அருள் உருவங்களை நினைந்தவராகி அகங்குழைந்து உருகுவர். ஆண்டவனதருளுருவத்திற்குச் செய்யும் எண்ணத்துடன் தம் அன்பினாற் பூவும் நீரும் இட்டு ஆடையணிகலன்கள் சாத்தி அவ்வடிவங்களை வணங்குதலும் அவ்வன்பிற்கு அடையாளமாகும். இறைவனருளைப் பெறுதற்கு மெய்யுணர்வும் அதன் வழித்தோன்றும் பேரன்புமே வாயில்களாதலாலும், இக்காலத்தில் மக்களிற் பல்வகைக் கூட்டத்தாரும் அறிவைப்பெருகச் செய்து, அறிவாலும் அன்பாலும் ஆண்டவனை அடைதற்கு மிக முயன்றுவருதலாலுஞ் சைவ சமயிகளான அறிஞரும் அறிவுநெறியிற்றமது கருத்தை மிகுதியாய்ச் செல்லவிடுதல் வேண்டுமே யல்லாமல், வெறுந் தொழில் நெறியிற் புகுந்து ஒப்பனைகளின் பொருட்டுந் திருவிழாக்களின் பொருட்டும் ஆயிரக்கணக்காகவும் நூறாயிரக்கணக்காகவும் போட்டி போட்டுக்கொண்டு பொருள்களைச் செலவழித்துச் செருக்கடையலாகாது. எல்லா உலகங்களையும் எல்லாப் பொருள்களையும் உடைய பெருஞ்செல்வரான நம் ஆண்டவனுக்கு, ஏழை மக்கள் நல்ல அல்லாவழிகளில் ஈட்டிய பொருளைத் திரள் திரளாகக் கொடுத்தாலும், அவன் அதனைக் கண்டு ஏமாறித்தனது அருளைக் கொடுத்துவிடுவான் அல்லன். நம் ஐயனுக்கு வேண்டுவன அன்பும் அன்பொழுக்கமுமேயாகும். அதுபற்றியன்றே திருநாவுக்கரசு நாயனாரும்,

''நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே''

என்று அருளிச் செய்தனர்.

ஆதலால், திருக்கோயில்களுக்குச் செய்யுஞ் செலவை இயன்றமட்டுஞ் சிறுகவே செய்து, மிச்சப்பெரும்பொருளை சிவவறிவு வளர்ச்சிக்குஞ், சிவனடியார்கட்கும், பழுதுபட்ட கோயில்கள் சாவடிகள் குளங்கள் சோலைகள் பாட்டைகள் முதலியவற்றின் திருப்பணிகட்குஞ் செலவு செய்து சைவர்கள் எல்லாருஞ் சிவபெருமான் திருவருளைப் பெறுவார்களாக!

மெய்கண்டார்நூல் மொழிபெயர்ப்பா? தமிழ் முதல் நூலா? ★

நாவலர் ச. சோம சுந்தரபாரதியார்

சிவநெறிச் செல்வரான மெய்கண்டார் பெயரால் வழங்கும் நூற்பெயர் யாது? அதை முதலில் இயற்றியவர் யார்? சுத்தாத்துவித வைதீக சித்தாந்த சைவசமய குரவர்களே இவற்றை வேறுபடக் கூறுகின்றனர். மாதவச் சிவஞான யோகிகள் வடகைலையில் சங்காரக் கடவுளான உருத்திரனாரிடம் உபதேசம் கேட்ட நந்தி தாம் கேட்டபடி சனகாதி முனிவருக்குத் 'தேவபாடை'யில் இயற்றித் தந்தது சிவஞான போதமென்றும், அதைச் சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாம முடைய மெய்கண்ட தேவர், பரஞ்சோதி முனிவர்பால் பெற்றுத் தமிழில் மொழிபெயர்த்தார் என்றும் வற்புறுத்துகிறார்கள். சைவசரபமான விருதைச் சிவஞான யோகிகள், சிவபெருமான் தமிழில் இயற்றிய சிவஞான போதம் நந்தி முதல் பரஞ்சோதி முனிவர்வரை பரம்பரையாய்க் கேட்டு வந்ததை, மெய்கண்டார் ஏது திருட்டாந்தம் கூட்டி மீட்டுரைத்தாரென்று தம் ''போதவினாவிடை''யிற் புகலுவர். தனித்தமிழ்ப் பேருரையாளர் தன்னிகரற்ற சிவானுபூதிச் செல்வர் மறைமலையடிகள், நந்திமுதல் வழிவழியே உபதேச முறையிற் கேட்டுவந்த வுண்மைகளை வடித்து நூல் வடிவில் சிவஞான போதத்தை மெய்கண்டதேவர் இயற்றியருளினா ரென்று கருதுகிறார்கள். ''மாபாடிய''ச் சிவஞானயோகிகள் இதன் முதல் நூல், வடமொழி இரெளரவராகமத்தில் ஒரு படலம் என்பர். போதவினாவிடைப் பிந்திய யோகியார் இது சிவனார் இயற்றிய தமிழ்த்தனி முதனூலென்பர் முனிவரான முந்திய யோகிகள் மெய்கண்டாரை மொழிபெயர்ப்பாளர் என்பர். இந்திரபோகப்பிந்திய யோகியார் சிவன் சொல்ல நந்தி யெழுதிய தமிழ்ப்போத ஏட்டை வாங்கித் தமிழ் நாட்டிற்கு ஏதுக்கூட்டி மீட்டுரைத்தவரே மெய்கண்டார் என்று கூறுவர். மறைத்திருவடிகளாரும் விருதை யோகியாரொடு பெரிதும் உடன்படுவர்.

இவ்வாறு தம்முள் மாறுபடினும் ஒருவந்தம் இவர்கள் ஒருப்படுமொன்றிரு முடிபு முண்டு. ''வட நூற் கடலுக் கெல்லை கண்ட மாதவ முனிவரும், வேதாகமங்களும் போதமும் ஆதியில் சிவனே தமிழில் செய்தவையென்று முழங்கிய தமிழ்ச் சிவயோகியும் மறைமலையடிகளும், சிவநெறித் தமிழ் நூல் 'சிவஞானபோதமென'' வடமொழிப் பெயரோடு எழுந்ததென்பர். அதன்மேல் பிறரால் பிறந்த பெரும் பொருள் நூலைத் தானாக்கியதுபோல் நெஞ்சறிந்த பொய்யை அஞ்சாதுரைத்தவர் மெய்கண்ட தேவர் எனும் குறிப்பும் இவர் கூற்றில் உள்ளுறை முடிபாய் விளங்குகிறது. தமிழ்ப் ''போதம்'' மொழிபெயர்ப்பாயின் இதன் வடமொழி முதனூலையும், முதனூலாயின் இதனையுமே சிவன்பால் கேட்டு நந்தி கைலையில் எழுதினார் என்பதே, தவயோகியும் சிவயோகியும் துணிந்த முடிபு. எனவே, வெண்காட்டு வேளாளர் மெய்கண்டவர் அல்லர், கைகொண்ட கைலை நூலை வையத்து வெளிப்படுத்தியவரே, மெய்யை மறைத்ததைச் செய்தது தாமெனக் கொள்ளவைத்தவர் அவர் என்று உள்ளக் கருத்தைத் தெள்ளத் தெளியக் கண்டதுபோல் இவர் கூறுகின்றனர்.

''சிவஞானபோதம்'' நூற்பெயரென்றும், அதை முதலிற் செய்தவர் நந்தியென்றும், ஆரிய மொழியில் இரெளத்திராகமத்தின் ஒரு படலம் தமிழில் மொழிபெயர்த் துரைக்கப்பட்டதென்றும் கூறுதற்கேற்ற குறிப்பு எதுவேனும் தமிழ் முதனூலினும், அதன் வழி நூலாகிய சித்தியாருள்ளும் சிறிதும் பெறுகிலம். அதற்கு மாறாக மெய்கண்டார் நூலை மெய்கண்டாரிடமே நேரிற் கேட்டுத் தெளிந்த அருணந்தியார் அதன் விளக்கமாகத் தாமியற்றிய சிவஞான சித்தியாரென்னும் வழிநூலில் ''மின்னமர் பொழில் சூழ்வெண்ணெய் மேவிவாழ் மெய்கண்டார் நூல், சென்னியிற் கொண்டு சைவத்திறத்திறத்தினைத் தெரிக்கலுற்றாம்'' என்று பாடினர். முதல்நூற் சிறப்புக் கூறும் செய்யுளிலதன் பெயரைச் ''சிவஞானபோதம்'' என்னாது, ''மெய்கண்டார்நூல்'' என்றே கூறியிருக்க, அதைவிடுத்துப் புதிய வடமொழிப் பெயர் புனைந்து சூட்டுவானேன்? நூற்புலவரின் நாற்பத்தொன்பது மாணவருள் முதல்வராய், அந்நூலை விளக்கப்புகுந்த அருணந்தியார் அறியாத பெயரை, யாங்ஙனம் கண்டு யாரிடம் கொண்டு யாவர் புகுத்தினர்? சிவன் தமிழர் தனிமுதற் கடவுள் எனவும், மாயாவாத ஆரிய வேதாந்தத்துக்கு மாறாகத் தமிழர் சிவநெறி மெய்கண்ட நூலென்றும் பறையடித்து மகிழும் சான்றோர்,

---

★ முனைவர் ச. சாம்பசிவனார் வெளியிட்ட **'தமிழும் தமிழரும்'** என்ற நூலிலிருந்து எடுக்கப்பெற்ற கட்டுரை.

T. 13999

தமிழ்ச் சிவநெறி அறிவு நூலை ''ஞானபோதம்'' என ஒரு பொருளுக்கு இரு வடமொழிச் சொல்லை இணைத்துப் பெயரிட்டுக் களித்து மயங்குவதேனோ?

இனி, மக்களுக்குய்யத் தக்க நூல்களைத் தரக் கருதிய தமிழ்ச் சிவனார், தமிழையிகழ்ந்து வேதாகமங்களை ஆரியர் மொழியிலாக்குவாரா? அதுமட்டோ? தன்னை வணங்குந் தமிழர்க்கு விலக்காய், வேதங்கேட்பின் உருக்கிய செம்பவர் காதில் ஏற்றுச் சாதற்குரியராய் விதிப்பாரோ? பலப்பல குட்டித் தேவரைப் பரசும் வேதம் தமிழருக்கு வேண்டாமென்று அதை ஆரியர் மொழியிலாக் கினரெனினும், தன்னுயர் கடவுட்டன்மையை விளக்கும் ஆகமங்களையும் தமிழரறியா வடவர் மொழியி லியற்றியருளிய எண்ணம் ஏதோ? இனித் தமிழர் உய்யக் கருதியனுப்பிய உயர் ''சிவஞானபோத'' த் தையேனும் தமிழிலன்றி ஆரிய மொழியிலாக்கிய நோக்கம் யாதோ? சங்கப் புலவராய்த் தங்கிய சிவனார் தமிழிகழ்ந்தாலும், மொழிபெயர்த்தனுப்பத் தமிழறிந்தவர் கைலையிலில்லையா? ஆரிய மறியாக்கு தலைத் தமிழ்ச் சேய் சீரியநுண்பொருள் கல்லாமொழியுளதெல்லா முணர்ந்து சொல்லவல்ல தென்று தெரிக்கத் திருவுளமிருந்தபெற்றியோ? அவ்வருட்பேறுபெற்ற கடவுட் குழவி தான் மொழி பெயர்த்தளித்த மெய்வரலாற்றை மறைத்துளத்து அதைத் தனது முதனூல்போல் அவையடக்கியலொடு நவைபடச் செய்ததை நயக்க வொண்ணுமோ.

விருதையார் கூற்றினை மெய்யெனக்கொள்ளின், மெய்கண்டார் பொய்ம்மை வையங்கொள்ளா வழுவாய் முடியும். நந்தி செய்து தந்த நூலைச் சொந்தமாக்கிய சுவேதவனர் செய்கை அந்தமில் பழிக்கு அவரையாளாக்குமன்றோ? கடவுட் சிவனோ, கைலைநந்தியோ கண்டு தந்ததைக் கொண்டு தான் கண்டதாய்ப் பொய்யுரைத்தவரைப் ''பொய்கண்டகன்ற மெய்கண்ட தேவர்'' எனப் புகழ்வது தகுமா? சாக்கியர் போதமுற்றதால் புத்தரானது போல், சுவேதவனப்பெருமாள் சிவநெறியுண்மைகளைச் சிந்தையிற்றெளியக் கண்டதால் அவர் புதிய புகழ்ப் பெயரால் துதிக்கப் பெற்றனர். தாம் கண்ட வுண்மைகளைத் திரட்டி வடித்தவர் செய்த நூற்கவர் புகழ்ப் பெயரே ஆகுபெயராய் ''மெய்கண்டார்'' என வழங்குகிறது. பிறர் கண்டதை இவர் கொண்டுரைத்தனரேல் இவர் மெய்கண்டாரென்பது பொய்யாகும்.

இன்னு மிவ்வுண்மையைத் தெளிக்கும் சான்று வேறுமுளது. சுவேதவனர் செய்த தமிழ்ச் சிவநெறி நூல் மொழி பெயர்ப்பென்போர் அதற்கு முதனூலாகக் காட்டும் வடமொழிச் சிவஞானபோதம், பன்னிரு சுலோகமுள்ளதோர் சிறு செய்யுள். அது, சிவனருளிய இரௌரவாகமத்தினொரு படலமென்பர். அவ்வடமொழிப் போத நூலிறுதிச் சுலோகமே அவர் கூற்றைப் பொய்யாக்கி அது முதனூலாகாமையையும், சிவஞானபோதமென்னும் பிறிதொரு நூலிலுள்ள எல்லாப் பொருள் நிச்சயத்தையும் அது எடுத்துரைப்பதென்பதையும் விளக்குகிறது.

''ஏவம் வித்யாத் சிவஞாந போதோ சர்வார்த்தி நிர்ணயம்'' என்பது இறுதிச் சுலோகவீற்றடி முடிவு. ''இவ்வாறு சிவஞான போதத்தில் எல்லாப் பொருள்களும் நிச்சயிக்கப்படுதலறிக'' என்பது அதன் செம்பொருள். எனவே, வடமொழிச் சுலோகம் சிவஞானபோதமன்று, சிவஞானபோதத்திலிப்படிக் கூறப்படுகிறதென்று அது எடுத்துரைக்கின்றதென்ற உண்மை தெளிவாகிறது. சிவஞான போதமென வடமொழியில் வேறு நூலின்மையாலும், மெய்கண்டார் தமிழ்நூலே நாளடைவில் சிவஞான போதமென வழங்குவதாலும், அச்சுலோகங்கள் மெய்கண்டார் பன்னிரு நூற்பாக்களின் மொழிபெயர்ப்பென்பது வெள்ளிடை மலையாய் விளங்குகிறது. சிவனே முதலிற் செப்பியது அந்தச் சுலோகங்கள் ஆமேல், ''இவ்வாறு உண்மைகள் சிவஞான போதத்தில் நிச்சயிக்கப்படுவதறிக.'' என்னும் கடையடி பொருள் முரணாகிய பொருந்தாக் குளறுபடையாகு மன்றோ? அதனால் அவ்வீற்றுச் சுலோகக் கடையடி கூறுவது உண்மையென்பதும், தமிழில் விழுமிய நூல்களை யெல்லாம் வடவர் மொழிபெயர்த்துத் தமதாக்கும் வழக்குப் பற்றி மெய்கண்டார் நுண்பொருணூலும் வடமொழியில் பின்னர்ப் பெயர்க்கப் பெற்றதென்பதும், அது மொழிப்பெயர்ப்பாதலின் பாயிரம் அவையடக்கின்றியாக்கப் பெற்றதும் தெள்ளத்தெளிய, இறுதிச் சுலோகமியம்புகிறது. அப்படியிருந்தும், தமிழ்நூலே மொழிபெயர்ப்பென்று மொழிபவர், அத்துவித சைவ சுத்த வைதிக சித்தாந்திகளாதலின், அதினமக்கு வியப்பின்று.

தென்றமிழ்ச் சிவனை வடவாரியரின் பனிமலையேற்றி, நூற்புரி தோளில் நுடங்கச்சாத்திப் பார்ப்பானாக்கி வாழ்த்தி மகிழும் மனப்பாங்குடையார், நம்மவர் பேசும் தமிழை யிகழ்ந்து, தெய்வ நூலெல்லாம் தேவ பாடையிலிருப்பதே முறை யென்றெண்ணுதல் இயல்பு. தாமறியாத ஆரியர் வேதம்

T.13499

ஏமமென்று எண்ணுமவர் இயற்கைக்கேற்ப வேதாந்தத்தின் வேறாம் தமிழ்ச் சிவநெறியைச் சுத்தாத்துவித வைதிக சைவ சமயமாக்கினர். வடமொழி பெயர்ப்பை முதனூலாக்கி, மெய்கண்டார் செய்த தமிழ் முதனூலை மொழிபெயர்ப்பென்றார். அதனாலவ்விரு நூற் பெரியாரும் பொய்யராவதைப் பொருளாயெண்ணிலர்.

மெய்கண்டார் தமிழிற் றனிமுதனூலே இயற்றினரென்பதும், அதன் மொழிபெயர்ப்பே வடமொழிப் ''போதம்'' ஆகுமல்லது வடநூற்கது மொழிபெயர்ப்பாகாதென்பதும், புதிதாய் நானே புகலுவதன்று; முன் மூதறிஞர் சொன்னதுமுண்டு. சித்தியாருக்குரை வகுத்த வித்தகர் பலருள், முனிவர் மட்டுமே ''மெய்கண்டதேவன் மொழிபெயர்த்தருளின''தாகக் கூற, அவருக்கு முந்திய மறைஞான தேசிகரும் சிவாக்கிரயோகியும் நிரம்ப அழகியரும் மெய்கண்ட நூலை சுவேதவனப் பெருமாள் தாமே இயற்றிய முழுமுதநூலெனப் பாராட்டியுள்ளதும் ஆராயற்பாலது. அதை மொழிபெயர்ப்பென்ற பிற்றைக் கூற்றுக்கு இற்றைஞான்றுவரை எனைத்துச்சான்றும் எவரும் கூறாமையும் கருதற்குரியது.

இனி, இவ்வுண்மைக்கு மாறாக, தம் கூற்றுக்கிவர் சாற்றும் சான்று, தமிழ்ப் போதத்தின் சிறப்புப்பாயிரச் செய்யுளேயாகும். முதலில், சிறப்புப்பாயிரம் செய்தவர் யாவர் என்பதிதுவரை யாரும் தேராச் செய்தியாகும். யாவரேயாயினும், மெய்கண்டார்க் கதிற் பொறுப்பிலை என்பதொருதலை. ஒரு நூற்குச் சிறப்புப் பாயிரம் செய்தற்குரியவர், அந்நூற்புலவன் றன்னொடு கற்றோன், அவன்பாற் கற்ற நன்மாணாக்கன், தகுமுரைகாரனென்றின்ன மூவகைத்தன்மையராவர். பனுவற் புலவன் பாயிரங் கூறல் நூல்மரபன்று; ஆன்ற சான்றோர் வழக்குமில்லை. அன்றியும் பாயிரச் சொற்களை ஆய்ந்து பார்க்கினும், அவை சுட்டும் உண்மையும் அதுவே. ''உயர்சிவ ஞானபோதமுரைத்தோன், பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன், பொய்கண்டகன்ற மெய்கண்டதேவன்'' எனப் படர்க்கையிற் பாயிரம் பேசுதலாலுமதுதேற்றமாகும். இனி அவரொடு கற்றோர் யாருமிலரால், அவர்பாற் கற்ற மாணவர் யாருமப் பாயிரம் பகர்ந்ததாய்க் கேட்கிலமாதலால், இவ்வரும் பொருள் நூற்குரைதரும் பெரியாரெலாம் நூலொடு பாயிரம் சேர்த்துரைகூறி, அதைச் செய்தவர் யாரெனச் சுட்டாமையினால், மூவகைத் தகவினர் யாவரும் பாயிரம் செய்திலரென்பது தெற்றென விளங்கும். ஆகவே, நூலை ஆக்கிய புலவரும், நூற்குப் பாயிரம் போக்கற் குரியருமல்லாத, தம் பெயர் சொல்லத் துணியாத ஒருவர் செய்து சேர்த்த பாயிரம், நூல் வரலாற்றை நுனித்தாய்ந்து நுவலச் சாலாது.

மேலும், சிறப்புப் பாயிரச் செய்யுளை நோக்கினும், மெய்கண்டதேவர் பொய்விண்ட குறிப்புப் புலப்படவில்லை. அவர், நந்தி செய்ததைத் தமிழில் பெயர்த்துத் தந்தனரென்றேனும், செந்தமிழ் மொழியில் நந்தியார் செய்து வந்ததை வாங்கி வழங்கினரென்றேனும், சிறப்புப்பாயிரம் செப்பவுமில்லை. அது வருமாறு :-

''மலர்தலை யுலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல், ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருடீர்ந்து,
அருந்துயர்க் குரம்பையி னான்மா நாடி,
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போத முரைத்தோன்,
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பலநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே'' ★
(சிவஞானபோதம் : சிறப்புப் பாயிரம்)

★ மலர்தலை - விரிந்த இடம்; துமிய - கெட; ஞாயிறு - சூரியன்; குரம்பை - உடம்பு; ஆன்மா - உயிர்; மயர்வு - மயக்கம்; நந்தி - நந்தியம் பெருமான்; முனிகணம் - சனற்குமார முனிவன் முதலிய முனிவர்கள்; பெண்ணைப் புனல் - பெண்ணையாற்று நீர்; வெண்ணெய் - திருவெண்ணெய்நல்லூர்; சுவேதவனன் - மெய்கண்டதேவரின் பிள்ளைத் திருப்பெயர் சுவேதவனப் பெருமாள்; பொய்கண்டு-பொய்ச் சமயங்களின் பொருள் இது இது என்று கண்டு; பயம்-பிறவி; கடந்த - வென்ற; தவர் - தவத்தோர்.

சுவேதவர் சொன்ன மெய்ந்நெறித்தமிழ் நூலை, அவர் மாணவருள் முதல்வரும் சகலாகம பண்டிதருமான அருணந்தியே ''மெய்கண்ட நூல்'' என்று விதந்து கூறினர். சகலாகம பண்டிதர், வடமொழிப் போதமோர் படலமாய்க் கொண்ட இரௌரவாகமம் கற்றில ரென்பது சற்று முண்மையா? கற்றிருந்தால், அவர் அவ்வாகமப் படல மொழிபெயர்ப்பாவதை மறந்தோ மறைந்தோ முதனூற் பெயரையும், உண்மையையுமழித்துத் தமது குரவரே மெய்கண்டுரைத்ததாய்ப் பொய்யைத் துணிந்து புகன்றனர் என்பதா? முதனூல் உண்மையை முழுது மறைத்துத் தாமொழிபெயர்த்ததைத் தமதறிவாலேகண்டு தாமுரைத்த மெய் நூல் போல வழங்கினராயின், சுவேதவனப் பெருமாள் ''பொய்கண்டகன்ற மெய்கண்டா'' ராவதெப்படி? அவர் தமிழ் நூலின் உண்மை வரலாற்றை மெய்கண்டாரினும் அருணந்தி யாரினும் அதிகமாய் அறிந்து கூறுமாற்றல் பிந்திய பிறர் பெற்றவாறென்னை?

இனிப் பாயிரப் பொருளையே ஆய முயல்வோம். ''காணுமுறுப்பாய கண்ணும், எல்லொளியின்றி இருளில் பொருள்களைக் காண்கிலாதது போல், கெடு முடலுள்ளே நிலை யுயிர்ப் பரிசை, கடவுள் துணையின்றி உயிர்கள் தாமே உணரவொண்ணாது; இவ் விழுமிய சிவநெறி மெய்யறிவு, முன் நந்தி முனிவருக்குச் சொன்னது; அவ்வுண்மையைக் கடவுள் அருளாற் கண்டு தெளிந்து மக்களுக்குரைத்தான், சுவேதவனன் என்ற மெய்கண்ட தேவன்'' என்பது பாயிரப் பொழிப்பு. இதில் நந்தி முனிவருக்களித்தது, ஒரு நூலென்ற குறிப்பில்லை. ''சிவஞானபோதம்'' என்றால் சிவஞானமாகிய போதம். அதாவது மெய் அறிவு என்று பொருள். நந்தியாற் போதிக்கப்பட்டதும் அம்மெய்யறிவே. சுவேதவனர் கண்டுரைத்ததும் அவ்வுண்மையே.

அதனாலவர் ''மெய்கண்டா''ராயினர். அவர் செய்த நூலும் ''மெய்கண்டானூலா''யிற்று. கடவுள் துணையின்றிக் கடவுளை உயிரறியாதென்பதே சிவஞான சாரமென்பதும், அதுவே மெய்கண்டார் நூலி னுண்பொருளென்பதும் பாயிரப் புலவர் கருத்து. மெய்கண்டார் கூறும் உண்மைகளுள் அதுவுமொன்றாவதன்றி அதுவே நூல் முடிபன்று. உலகு-உயிர்-கடவுளின் நிலை வினைத்தொடர் இயல்களை அறுதியிட்டளவையா லுறுதிகண்டுரைப்பது மெய்கண்டார் நூல். அதற்குப் பாயிரம் பாடிய பேரிலாப் புலவர் தாங் கண்டவாறு கூறிச் சென்றார்.

இனிக் கடைப்பாயிரம் கடைச் செருகலாதல் வெளிப்படை. நூலி னிறுதியிலோதும் பாயிரம் புலனெறி வழக்கில் கேட்கப்படாத ஓர் புதுமையாகும். அதன்மேல், முதற் பாயிரம்பெற்ற இந்நூற்குக் கடையிலொரு பாயிரமுடைவதெதற்கு? ஓதும்நூ லெதற்கும் வேதச் சார்பு வேண்டும் என்னும் ஐதிகம் புகுந்த பிற்கால வைதிகப் பண்டித உலகில், வட கைலைச் சிவனார் வாயாற்கூறிய ஆரிய வேதாகம சாரமாய்ப் போதநூலை நந்தி ஓதின உண்மை பரவிய பின்னர், ஊர் பெயரறியா ஒரு பெருஞ் சைவர் செய்து கூட்டிய கடைப்பூட்டிதுவாம். ''மெய்கண்டார் நூலியற்றியவரல்லர்; மொழிபெயர்த்ததற்கு வார்த்திகப் பொழிப்புரை சேர்த்த அவ்வளவே சுவேதவனர் செய்தது;'' என்ற கதையை இணைக்க நினைத்துப் பிணைத்த பின் கூட்டு. ஏது திருட்டாந்த வார்த்திகம் பொழிப்பு மெய்கண்டார் நூலில் முன் இருந்ததில்லை என்று தோன்றுகிறது. அதை நூற்பாவாரி எழுத்து விடாமல் மொழிபெயர்த்துள்ள வடமொழிப் போதத்தில், ஏது திருட்டாந்தம் எதுவும் குறியாமை கருதற்குரியது. முன்னவை முதநூ லிற்குப் பின்னிருந்தால், வடமொழிப் பெயர்ப்பிலவை விடுபடமாட்டா. அதிற் சுட்டது விட்டதால், அம்மொழிபெயர்ப்பின் பின்னிவை செருகப்பெற்றன என்னில் பிசகாகாது. அப்புதுக் கூட்டுக்காதரவாகக் கடைப்பாயிரக் கதை முடைந்திருக்கலாம். முதற்பாயிரமதற்கு நூலொடு சிற்றுரை விரித்த சிவஞான முனிவரர், கடைப்பாயிரத்தைப் பொருட்படுத்தாமையும் கருதற்பாலது.

கடைசியாக நான் விடை தரவேண்டிய வினா ஒன்றுளது. மாபாடிய கர்த்தர் மாதவ யோகிகள் கூற்றைக் கடுப்பது சமயமரபோடமையுமா? எனச் சிலர் வினவலாம். மெய்கண்டார் செய்தது முதனூலா? மொழி பெயர்ப்பா? என்பதை ஆராய்ந்து, தக்க சான்றும் மேற்கோளும் காட்டித் தம் முடிபு கூறியிருந்தால், அவர்கள் கருத்தை எவரு மதியாதிருக்க இயலாது. தமக்கு முன்னமே, தம்மடக் குழுவினர் தழுவி வழங்கிய கொள்கையை முனிவரர் கடுத்திலா தெடுத்துக் கையாண்டுள்ளார். உபதேச முறையிற் குரவர் கூறியதை அவமதியாமற்கொண்டு தாமும் கூறினர்போலும். கூர்த்ததம் மதியின் ஓர்பாலுண்மைபார்த்துத் தேர்ந்துதெளிந்து கூறிலர். முனிவர்பாலெனக்குத் தனி மதிப்புண்டு. ஆங்கிலச் சுவடியே முதலிற் றொடங்கி அம்மொழிப் பயிற்சியி லழுந்திய எனக்குத் தோன்றாத் துணையாய்த் தமிழறிவுறுத்திய முதற்பெருங்குரவர் சிவஞான முனிவர். எந்தையார் நண்பர் எனக்குத் தந்த நைடதம் வெறுத்து, நான்

முதல் விரும்பிப் படித்து வியந்தது காஞ்சிப் புராணம். சிவன்பாலன்பு தடிக்கச் செய்தெனைப் பதினாலாண்டுப் பருவத்து விசேடதீக்கை பெறவைத்து, தமிழ்ச் சுவையோடு நுண்புல நுகர்வில் வேட்கை விளைத்தவர் பன்னூற் பயிற்சியே. பிறரெவர் கூற்றையும் அறிவாலாய்ந்து கண்ட மெய்யை நான் கடைப்பிடித்து ஒழுகும் பண்பினை வளர்த்தவர் நுண்பொருளுரைகளே. பழந்தமிழ்ச் சிவநெறி அழுந்திய உணர்வினேன். அத்துவித வைதிக சித்தாந்தமென்பது பழந்தமிழ் அறியா வடமொழிப் புதுப்பெயர் ஆதலின் அதனை யென் தமிழ்ச் செவி வெறுக்கும். தமிழில் விளங்க வழங்காதவைகள் தமிழர் கடவுட் கொள்கைகளாகா வென்பதென் கருத்து. சிவநெறி தமிழர் பழவழிபாடு. நவநனி மதங்களை விரும்பேனாதலின், நாத்திகமென்பதும் நானறியாதது. மெய்கண்ட பெரியார் நல்ல தமிழர். கடவுளறிவால் கண்ட மெய்ந்நிலையை அரிய இனியதமிழ் நூற்பாவில் தெளியத் திரட்டிச் செறிய யாத்துளர். அவர் சொன்ன உண்மைகள் என்றும் மன்னியதன்மைய எனினும், அவற்றைத் தொகுத்து அளவை முறையில் வரிசைப்படுத்திச் செய்யுளுருவில் முதலில் செய்தவர் சுவேதவனராகிய மெய்கண்ட தமிழ்ப் பேரறிவாளர். அறிவே மக்களை ஆன்றோராக்கும் கடவுட்பண்பு. அறிவை யிகழ்ந்து பிறர்வழிமொழிவார் உறுப்பொத்துப் பண்பொவ்வா வேறு திறத்தினர். அறமறி அறிவின் திறத்தொழுகுவது தமிழரியல்பு. அறிவினும் தங்குழு மரபினைப் பேணல் ஆரியர் வழக்கு. வடமொழிக் கடலை மாந்தி ஏக்களித்தவர் மாதவப் பொதியைப் புதிய அகத்தியர் ஆதலின், அவர் நம் தமிழ் முனியாயினும் வைதிக வழக்கில் ஊறிய உணர்வினர்; ஊன்றிய காதலர். அவர் மதி நுட்பம் நூலோடுடையராயினும் அதி நட்பு மடத்து மரபினில் வளர்த்த உளத்தினர். அவரிடத்தன்பும் மதிப்புமுடை யேனாயினும், மெய்கண்டார்பால் பெருமதிப்புடையேன். முனிவர் பெருமையை முழுதும் பேணும் நான் அவரினும் பெரியவர் மெய்கண்டாரெனக் கருதுகின்றனன். அவர் அறிவாலே ஆய்ந்து துணியாமல் மடத்துமரபால் உரைத்ததைக் கொண்டு மெய்கண்டாரைப் பொய்யராக்கத் துணிகிலன். அதனாலிதனை வெளியிடத் துணிந்தேன். தவச் சிவஞான முனிவர்க்கன்பு தணிதலாலன்று; தமிழ்ச் சிவநெறியிலும் தவா மெய்கண்ட பெரியாரிடத்தும், பெருகுமன்பாற்றூண்டப் பெற்றிதைப் பன்முறை முன்னே பல்லோரிடத்தும் சொன்னதையின்று (மே *1944*) எழுதலாயினேன். தவமுனி பிறந்த பாண்டி நாட்டினேன், அவரும் வணங்கும் சோணாட்டறிஞரை மீக்கூறுவது மிகையாகாதென வைதிகச் சைவரும் வையாதுண்மையை நடுநிலை உளத்தால் நாடுவரென்று நம்புகின்றேன்.

6ஆவது உலகச் சைவ சமய மாநாட்டிற்கு வந்திருக்கும்
ஆன்றோர்களையும், சான்றோர்களையும் அன்புடன் வரவேற்கும்

ஸ்ரீ மீனாட்சி டிரேடர்ஸ்

மற்றும்

ஸ்ரீ மீனாட்சி ஸ்டீல்ஸ்

Dealer

Cement Steel & Sanitary wares

Shop

1,2,3, Infant Jesus Complex, Pudukkottai Road, Thanjavur - 613 005

Phone : 23472

அன்பில் ஒருமைப்பாடு *

திரு.வி. கல்யாண சுந்தரனார்

நாயன்மார் அறுபத்து மூவரும் தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில், பல்வேறு மரபுகளில், பல்வேறு சாதிகளில் தோன்றினவர். அவர்தந் தொண்டுகளும் பல திறப்பட்டவை. அவர்தந் தொழில்களுங் கோலங்களும் பலதிறப்பட்டவை. நாயன்மார் இடத்தானும், மரபானும், சாதியானும், தொண்டானும், தொழிலானும், கோலத்தானும் வேறுபட்டவராயினும், கடவுளிடத்தில் அன்பு செலுத்துவதில் அவரெல்லாரும் ஒன்றுபட்டவரே யாவர். இவ்வாறே நமது தேசத்தில் வாழும் மக்கள் பிறப்பாலும் சிறப்பாலும் பிறவாற்றாலும் வேறுபடினும், பொதுஜன சேவையில் ஒன்றுபட்டவர்களா யிருத்தல் வேண்டும். கடவுள் சேவையில் நாயன்மார் வேறுபடாது ஒன்று பட்டமையான், அவர் வீடுபே றெய்தினர். அவர் இன்னும் ஆலயங்களில் பூசிக்கப்படுகின்றனர். அறுபத்துமூவர் நினைவு தோன்றுங் காலத்து, அவர்தந் தொழில் சாதி முதலியன மனத்தில்தோன்று கின்றனவோ? இல்லையே. அவரெல்லாருஞ் சிவனடியார் என்னும் ஒரெண்ணமே உள்ளத்தில் எழுகிறது.

சாதிப்புன்மை

அறுபத்து மூவர் அனைவர்க்கும் ஒரே வித பூசை, விழா, வணக்கம் முதலியன நடைபெறுகின்றன. கண்ணப்பரை வேடரென யாவராயினுங்கழிக்கின்றனரோ? திருக்குறிப்புத் தொண்டரை வண்ணாரென எவராவது ஒதுக்குகின்றனரோ? திருநாளைப் போவாரைப் பஞ்சமரென யாராவது தள்ளுகின்றனரோ? இவரனைவரையும் இன்னுங் கோயில்களில் பிராமணரல்லரோ பூசிக்கின்றனர்? இந்நாயன்மாரைப்போல இந்நாள் வாழும் பாரதமக்களும் தேசசேவையில் ஒன்றிய அன்பு கொள்வார்களாயின், உலக இன்பம் விரைவில் எளிதில் கிடைக்கும்.

அறுபத்து மூவருள் வேதியரிருந்தனர்; வேளாளரிருந்தனர்; சாலியர் இருந்தனர்; சான்றார் இருந்தனர்; பஞ்சமர் இருந்தனர்; பரதவர் இருந்தனர்; வண்ணார் இருந்தனர்; வேடர் இருந்தனர்; வேறு பல சாதியாருமிருந்தனர். இப் பெரியவர்கள் தாங்கள் பிறந்த சாதியில் உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்டு, தாங்கள் செய்த சேவையில் ஒருவரோடொருவர் மலைந்து பூசல் விளைத்தார்களோ? எல்லோரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டில் கட்டுப்பட்டுக் கிடந்தனர். அவர்தம் வழிவழி வந்த தமிழ் மக்கள் இப்பொழுது சாதிப்பகைமையில் தலைசிறந்து விளங்குகிறார்கள். என்னே காலம்! என்னே கொடுமை!!

சுந்தரர்

திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆதிசைவ பிராமண குலத்தில் பிறந்தார்; நரசிங்கமுனையர் என்னுங் குறுநில மன்னர் வீட்டில் வளர்ந்தார்; பரவை என்னும் உருத்திர கணிகையையும், சங்கிலி என்னும் வேளாளப் பெண்ணையும் மணந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாழ்வில் சாதிப்புன்மை இடம் பெற்றதோ? அப்புன்மை நொறுங்குண்டது என்றே சொல்லலாம்.

திருநாவுக்கரசரும் அப்பூதியடிகளும்

திருநாவுக்கரசர் வேளாளகுலத்தில் பிறந்தவர். இவரைக் குருவாகவும் கடவுளாகவும் பொன்னாகவும் பொருளாகவும் அப்பூதியடிகள் போற்றினார். அப்பூதியடிகள் பிராமண குலத்தில் தோன்றியவர். அப்பூதியடிகள், திருநாவுக்கரசு சுவாமிகள்பால் அன்புகொண்டு, அவரை வரவேற்றுப் போற்றிய முறைகளையும், அவரோடமர்ந்து உண்ட நேயத்தையும் அவரது வரலாற்றிற் காண்க.

அப்பரும் சம்பந்தரும்

வயதில் முதிர்ந்த வேளாளராகிய அப்பர் சுவாமிகள், குழந்தைப் பருவமுடைய பிராமணராகிய திருஞான சம்பந்த சுவாமிகளைக் கண்டவுடன் பணிந்ததும், இவர் அவரை ''என் அப்பரே'' (தந்தையரே) என்று கூவிவிளித்ததும், அப்பர், சம்பந்தர் சிவிகையைத் தாங்கியதும், அதையறிந்ததும் சம்பந்தர் அப்பர் திருவடியில் விழுந்து வணங்கியதும், இருவரும் க்ஷேத்திர யாத்திரை செய்து பலதிறக்

★ நாயன்மார் திறம், ஆசிரியர், சென்னை, இரண்டாம் பதிப்பு 1937.

குலங்களிற்றோன்றிய நாயன்மாரின் மடங்களிலும் வீடுகளிலும் உண்டதும் தமிழ் நாட்டில் நிகழ்ந்தனவேயாம். திருநாவுக்கரசர் - சம்பந்தர் காலத்தில் அடியவரிடைச் சாதிப்புன்மை ஆக்கம் பெறவேயில்லை. ''ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் - கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே'' என்பது அப்பர் திருவாக்கு. ''நலமிலராக நலமதுண்டாக நாடவர் நாடறிகின்ற - குலமிலராகக் குலமதுண்டாகத் தவம்பணி குலச் சிறைபரவும் - கலைமலி கரத்தன்'' என்பது சம்பந்தர் திருவாக்கு.

சேரமானும் வண்ணானும்

சேரமான் பெருமாள் நாயனார் சேரநாட்டு மன்னர். அவர் ஒருநாள் யானை சேனை புடைசூழ நகர்வலம் வந்தபோது, அவரெதிரே ஒரு வண்ணான் வெளுத்த வடிவினனாகப் போந்தான். மழை நீரால் அவன் தலைமீதிருந்த உவர்மண் கரைந்து ஒழுகி அவன் உடலை வெளுக்கச் செய்தது. அவ்வெண்ணிறம் திருநீறு பூசிய வேடம்போல் சேரர் பெருமானுக்குப் புலனாயிற்று. ஆனதும் சேரர் பெருமான் யானை விட்டிழிந்து வண்ணான் காலில் விழுந்தார். அவன் அஞ்சி, ''அடி வண்ணான்'' என்று அலறினான். மன்னர் ''அடிச்சேரன்'' என்று விழுந்து விழுந்து அவனை வணங்கினார். மன்னர் பிறப்பெங்கே? வண்ணான் பிறப்பெங்கே? மன்னர் சிறப்பெங்கே? வண்ணான் சிறுமை எங்கே? எல்லாம் அன்புக்குமுன் ஓடின.

நமிநந்தி - திருநீலநக்கர்

சாதியால் தீட்டு உண்டு என்னுங்கருத்துக்கொண்டிருந்த நமிநந்தி யடிகளுக்குக் கடவுள், ''எல்லா மனிதருஞ் சிவகணங்களே'' என்ற உண்மையை அறிவுறுத்தியதையும், அந்தணச் செல்வராகிய திருநீலநக்கர், தம்மில்லம் போந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர்க்குத் தம் வீட்டின் நடுவண், வேதிகையின் பாங்கர், இடந் தந்து உபசரித்ததையும், வேறு பல நாயன்மார் சாதி பேதங் கருதாது, எல்லாரிடத்துஞ் சமரச உணர்வுகொண்டு, அன்னமிட்டு வழிபட்ட வரலாற்றையும் பெரியபுராணத்திற் பரக்கக் காண்க.

சாதி பாராட்டாமை

நாயன்மார் காலத்தில் சாதிபேதம் இருக்கவில்லை என்று சொல்லுதல் முடியாது. அவர்கள் காலத்தில் சாதிபேதம் இருந்தது. ஆனால் சாதி பேதம் பாராட்டப்படவில்லை. சாதிபேதங் கூடாது என்று உபதேசிக்கும் தற்கால நாகரிக தேவதை, தாண்டவம் புரியும் இந்த வேளையில், சாதி நிந்தை, சாதிப் பகைமை, சாதிப் பூசல், சாதிக் கூட்டம், சாதிப் பற்று முதலிய கொடுமைகளே நடம் புரிகின்றன. நாயன்மார் காலத்தில் தற்கால நாகரிகம் பரவி யிருக்கவில்லை. ஆனால் அக்காலத்தில் சாதி பேதத்தால் நிந்தையாதல், பகைமையாதல், பிறவாதல் மூண்டு கனன்றெழவில்லை. அக்காலம் நாகரிகக் காலமோ? இக்காலம் நாகரிகக் காலமோ? உண்மையை அறிஞர்கள் ஆராய்வார்களாக.

அந்தணர் பெருமானாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையில் எல்லாச் சாதியாரையும் ''அடியார்க்கும் அடியேன்'' என்று வழுத்தியிருக்கிறார். திருநாவுக்கரசு சுவாமிகள்,

''சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங்குல முங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளு மாற்பேறரே''

என்று திருவாய்மலர்ந்திருக்கிறார்கள். வேறு பல நாயன்மாரும் சாதிபேதத்தை மறுத்தோதியிருக்கிறார். நாயன்மார் காலத்தில் சாதி வேற்றுமையிருந்தும், அதைக் கருதாது, அவர் அன்பின் வழி நின்று ஒழுகியதுபோல, இக்காலத்தும் அவர்தம் வழித்தோன்றிய தமிழ்மக்கள் சாதியில் கருத்தைச் செலுத்தாது, அன்பு நெறி பற்றித் தொண்டு செய்ய முயல்வார்களாக.

ஆடற்கலை

க. வெள்ளைவாரணன்

உள்ளத்திற்கு உவகையளிக்கும் கவின் கலைகளுள் ஆடற்கலையாகிய கூத்தும் ஒன்றாகும். தமிழ் முனிவராகிய அகத்தியர், இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் உரிய இலக்கணமாக அகத்தியம் என்ற இலக்கண நூலை இயற்றியுதவினார் என்பது வரலாறு. இயற்றமிழிலக்கணமாகிய தொல்காப்பியத்திலும், பத்துப் பாட்டும் எட்டுத் தொகையுமாகிய சங்க இலக்கியத்திலும், சிலப்பதிகாரம் மணிமேகலை பெருங்கதை சீவகசிந்தாமணியாகிய செந்தமிழ்க் காப்பியங்களிலும் இசைக்கும் நாடகத்திற்கும் உரிய குறிப்புக்கள் பல ஆங்காங்கே காணப்படுகின்றன. அவற்றைக் கூர்ந்து நோக்குங் கால் இசை நாடகமாகிய இக்கலைத்துறைகளை எழில் பெற வளர்த்த கலைஞர்கள் கூத்தர், பாணர், பொருநர், விறலி யென்னும் இந்நால்வகையோராவர் என்பது நன்கு புலனாம்.

இவர்களுள், கூத்தர் என்பார் எண்வகைச் சுவையும் மனத்தின்கண் பொருந்திய குறிப்புக்களும் புறத்துப்போந்து புலப்படும்படி ஆடவல்லவராவர். இவர்களையொத்து விறல்பட ஆடுவாள் விறலியென அழைக்கப் பெற்றாள். 'பொருந்' என்பது ஒத்து நடித்தல் என்ற பொருளில் வழங்கும் சொல்லாகும். ஒருவரைப் போன்று கோலம்புனைந்து நடிக்கவல்ல நாடக மாந்தர்கள் பொருநர் என அழைக்கப் பெற்றனர். நோக்கினார் கண்ணிடத்தே தமது ஆடற்பொலிவு என்றும் நிலை பெற்றுத் தோன்றும்படி நடித்துக்காட்டுதல் கூத்தர் பொருநர் ஆகிய இக்கலைஞர்களது இயல்பாகும். இவ்வியல்பு நோக்கி இவர்களைக் 'கண்ணுளர்' எனவும் 'கண்ணுளாளர்' எனவும் பண்டைத் தமிழ்ச் சான்றோர் பெயரிட்டு அழைத்துள்ளார்கள்.

இவர்களால் மேற்கொள்ளப்பெற்ற ஆடற்கலையானது, அகக்கூத்து, புறக்கூத்து, பதினோராடல்கள் எனப் பல்வேறு பகுதிகளாக வளர்க்கப்பெற்றது. ஏதாவதொரு கதையினைத் தழுவி நடிக்கப்பெறும் கூத்தினை நாடகம் என்றும், கதை தழுவாது பாட்டினது பொருளுக்கேற்பக் கைகாட்டி வல்லபஞ் செய்யும் சுவையும் மெய்ப்பாடும் பொருந்திய அவிநயக் கூத்தினை நாட்டியம் எனல் மரபு.

நாட்டியமாவது, ஆடல் பாடல் அழகு என்னும் மூவகை நலங்களையும் ஒருங்கு பெற்ற நாடகமகளிரால் தமது உள்ளக் குறிப்பு உடம்பில் தோன்றும் மெய்ப்பாடுகளால் புலப்படும்படி சுவைபெற நடிக்கப் பெறுவதாகும். இதன் இலக்கணத்தினை விரித்துரைப்பது நாட்டிய நூல். ஆடல் பாடல் அழகு என்னும் இம்மூன்று திறத்தாலும் குறைவின்றி நிரம்பிய நாடகக் கணிகையாகிய மாதவி என்பாள், ஐந்தாம் ஆண்டு தொடங்கிப் பன்னிரண்டாம் ஆண்டு வரை ஏழாண்டுகள் ஆடலாசிரியன்பால் நாட்டிய நூலை நன்குபயின்று சோழமன்னன் பேரவையிலே திறம்பெற ஆடினாள் என்ற செய்தி சிலப்பதிகார அரங்கேற்று காதையாற் புலனாம்.

முத்தமிழுள் ஒன்றாகிய நாடகத்தின் இலக்கணத்தினை விளக்குதல் வேண்டிப் பரதமுனிவர் இயற்றிய நாடகத்தமிழ்நூல் பரதம் என்ற பெயரால் வழங்கப்பெற்றதென்பது, 'நாடகத் தமிழ் நூலாகிய பரதம்' என அடியார்க்கு நல்லார் கூறுதலாற் புலனாம். பரதராற் செய்யப்பட்டது என்ற பொருளில் வழங்கிய பரதம் என்ற நூற்பெயரானது, அந்நூலிற் சொல்லப்பட்ட சிறப்புடைய நாட்டியமாகிய கலைத் திறத்தைக் குறிக்கும் பெயராகவும் பிற்காலத்தில் வழங்கப்பெறுவதாயிற்று.

தமிழ் நாட்டில் தொன்று தொட்டுப் பயிலப் பெற்று வரும் ஆடற்கலையாகிய இதன் இயல்பும், இதனைப் பயின்று ஆடவல்ல கூத்தியராகிய நாடகமகளிரின் இயல்பும், இம்மகளிர்க்கு நாட்டியக் கலையைக் கற்பிக்கவல்ல ஆடலாசிரியனது இலக்கணமும், நாடகத்திற்கும் இசைக்கும் உரிய இசைப் பாடல்களை இயற்றித்தரும் கவிஞனது இயல்பும், இசையினை அளவு பெற நிறுத்தவல்ல தண்ணுமையாசிரியன் வேய்ங்குழலூதுவோன் யாழாசிரியன் முதலியோர் இயல்புகளும், நாடக அரங்கின் அமைப்பும், அவ்வரங்கிலே புகுந்து ஆடுகின்ற முறையும் பிறநுட்பங்களும் சிலப்பதிகார அரங் கேற்றுகாதையிலே தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன. இக்குறிப்புக்களை யெல்லாம் ஒப்பவைத்து நோக்குங்கால் இளங்கோவடிகள் வாழ்ந்த காலமாகிய கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே நம்

தமிழ்நாட்டில் ஆடற்கலையானது காண்போர் கண்ணையுங் கருத்தையுங் கவரும் பொலிவும் நுட்பமும் உடையதாய்ச் சிறந்த முறையில் வளர்ச்சி பெற்றிருந்ததென்பதும், இக்கலையின் நுட்பத்தைக் கற்பிக்கவல்ல ஆடலாசிரியர் பலர் வாழ்ந்தார்களென்பதும் விளங்கும்.

சிலப்பதிகார அரங்கேற்றுகாதையில் ஆடலாசிரியனது இலக்கணம் வருமாறுணர்த்தப்பட்டமை காண்க.

'இருவகைக் கூத்தின் இலக்கண மறிந்து
பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினோ ராடலும் பாட்டும் கொட்டும்'

ஆகியவற்றின் நுட்பங்களை விளங்க அறிந்திருத்தல் வேண்டுமென விதித்துள்ளார். இருவகைக் கூத்தாவன :- வசைக் கூத்து, புகழ்க் கூத்து; வேத்தியல், பொதுவியல்; வரிக்கூத்து, வரிச்சாந்திக் கூத்து; சாந்திக் கூத்து, விநோதக் கூத்து; ஆரியம், தமிழ்; இயல்புக் கூத்து, தேசிக் கூத்து என இவ்வாறு இரண்டிரண்டு பகுதிகளாக வகைப்படுத்துரைக்கத் தக்க கூத்து விகற்பங்கள் எனவும், ஈண்டு இருவகைக்கூத்தெனக் குறிக்கப்பட்டவை சாந்திக்கூத்தும் விநோதக்கூத்தும் ஆகிய இரண்டுமேயெனவும் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுவர். எனினும் இளங்கோவடிகளால் 'இருவகைக்கூத்து' எனக் குறிக்கப்பட்டவை வேத்தியல், பொதுவியல் என்னும் இரண்டுமேயாம் என்பது,

''வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்தின்
நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்து''
(அரங்கேற் - ங கூ, சா)

எனவரும் சிலப்பதிகாரத் தொடராலும்,

''வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டும் தூக்கும் துணிவும்''
(ஊரலர் - கஅ, ககூ)

எனவரும் மணிமேகலையடிகளாலும் நன்கு துணியப்படும். சான்றோர் குழுமிய மன்னனது பேரவையிலே நடித்தற்கேற்ற நுட்பமும் சிறப்பும் வாய்ந்த கூத்து வேத்தியல் எனப்படும். கற்றோர் கல்லாதார் ஆகிய பொதுமக்கள் அனைவரும் கண்டு களித்தற்கேற்ற எளிமை நிலையில் நிகழுங்கூத்து பொதுவியல் எனப்படும். வேத்தியலை அகக்கூத்தென்ப. பொதுவியலைப் புறக்கூத்தென்ப.

இனி, சாந்திக் கூத்தாவது தலைவன் சாந்தமாக ஆடிய கூத்தெனவும், அது சொக்கம், மெய்க்கூத்து, அவிநயம், நாடகம் என நால்வகைப்படுமெனவும் கூறுவர். இவற்றுள், சொக்கம் என்பது சுத்த நிருத்தம். அது நூற்றெட்டுக் கரணமுடைய தென்பர். உடம்பாகிய மெய்யின் தொழில் நலம் விளங்க நடிக்கப்பெருங்கூத்து மெய்த்தொழிற் கூத்தாகும். அது தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப்படும். இவை மனத்தகத்தே தோன்றும் இராசதம் தாமதம் சாத்துவிகம் என்னும் அகச்சுவைபற்றித் தோன்றுவனவாதலால் அகமார்க்கம் எனக் கூறப்படும். அவிநயக் கூத்தாவது கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்வது என்பதும், நாடகமாவது கதை தழுவிவரும் கூத்தென்பதும் முன்னர்க் கூறப்பட்டன. இவ்வாறு நால்வகைப்படப் பகுத்துரைக்கப்பட்ட இக்கூத்துக்கள் யாவும் உலகமக்கள் தீமை நீங்கி நன்மை பெற்றுயர்க என நிகழ்த்தப்படுவன வாதலின் சாந்திக் கூத்து எனப் பெயர் பெறுவனவாயின.

இனி, விநோதக்கூத்தாவன குரவைக் கூத்து, கழாய்க் கூத்து, குடக் கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவைக்கூத்து முதலியனவாம். இவை மக்கள் உள்ளத்திற்கு மகிழ்ச்சிதரும் பொழுதுபோக்காதலின் விநோதமெனப்பட்டன. இவற்றுள், குரவை யென்பது காமமும் வீரமும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக மகளிர் எழுவர் அல்லது எண்மர் ஒன்பதின்மர் கைகோத்து ஆடும் கூத்தாகும். கலிநடமாகிய கழாய்க் கூத்தென்பது, மூங்கிலைக் காலாக நிறுத்தி அதன்மேற் கட்டிய கயிற்றின்மேல் ஏறியாடும்

இயல்பினதாகும். குடக்கூத்தென்பது தெய்வத்திறம்பற்றிய பதினோராடல்களுள் ஒன்றாகும். கரணம் என்பது நிலத்தின்மேற் படிந்தாடும் ஆடலாகும். நோக்கு என்பது பாரமும் (பெரியனவும்) நுண்மையும் (நுண்ணியனவும்) மாயமும் (காண்போர் கண்களை மறைக்கும் தந்திரச் செயல்களும்) அமையச் செய்யப்படும் இயல்பினதாகும். தோற்பாவை யென்பது, தோலாற் பாவை செய்து ஆட்டுவிப்பது. இவற்றுடன் நகைச்சுவைபற்றிய விதூடகக் கூத்தும் சேர்த்து விநோதக்கூத்து எழுவகைப்படும் என்பாரும் உளர்.

இனி, பல்வகைக் கூத்தாவன வென்றிக் கூத்து, வசைக் கூத்து, விநோதக்கூத்து என இவ்வாறு பகுத்துரைக்கப்படும் கூத்துக்களாகும். பகைவனது ஒடுக்கமும் தம்முடைய வேந்தனது உயர்ச்சியும் மேற்படும் நிலையில் அமைந்த கூத்து வென்றிக் கூத்தெனப்படும். பலவகையுருவங்களையும் பழித்துக்காட்டுங் கருத்துடன் நிகழ்வது வசைக்கூத்தெனப்படும். பெருவேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினோர் பகைவரை வென்று கொற்றத்துடன் வீற்றிருக்கும் பெருமித நிலையில் அன்னோர் பொழுது போக்காகக் கண்டு மகிழ்தற்குரிய முறையில் நிகழ்த்தப் பெறுங்கூத்து விநோதக்கூத்தின்பாற் படுவதாகும்.

இனி, தெய்வத்திறம் வாய்ந்த கூத்துக்களாக நம் நாட்டில் நெடுங்காலமாகப் போற்றப்பெறும் சிறப்புடைய ஆடல்கள் பதினொன்றாம். அவையாவன : அல்லியம், கொடுகொட்டி, குடைக்கூத்து, குடக்கூத்து, பாண்டரங்கம், மல்லாடல், துடியாடல், கடையம், பேடு, மரக்காலாடல், பாவையாடல் என்பனவாம். இவற்றுள் முன்னுள்ள ஆறும் நின்ற நிலையில் நிகழ்த்தப்படும் கூத்துக்கள். பின்னுள்ள ஐந்தும் நிலத்திற்படிந்து வீழ்ந்து ஆடுமியல்பினவாகிய கூத்துக்களாகும். இவை பதினொன்றையும் 'பதினோராடல்' என்ற பெயராற் குறிப்பிடுதல் மரபு. உலகிற்கு இடர் விளைத்த அசுரர்களாகிய கொடியோர்களைக் கொல்லுதற்பொருட்டு அமரர்களால் நிகழ்த்தப் பெற்றவை இப்பதினோராடல்களாகும். இவற்றைத் 'தெய்வவிருத்தி' என்ற பெயராற் குறிப்பிடுதலும் உண்டு.

இந்திர விழாவைக் காணவிரும்பித் தன் மனைவியுடன் காவிரிப்பூம்பட்டினத்தை யடைந்த விஞ்சை வீரனொருவன், அந்நகரத்து ஆடல்மகளாகிய மாதவி யென்பாள் சிவபெருமான் முதலிய தெய்வங்களால் பதினோராடல்களையும் அவ்வத் தெய்வங்களுக்குரிய அணிவகையாகிய கோலத்துடனும் கொள்கையுடனும் மேற்கொண்டு ஆடியதிறத்தைத் தன் மனைவிக்குக் காட்டி மகிழ்ந்தான் என்ற செய்தி சிலப்பதிகாரம் கடலாடுகாதையிற் கூறப்பட்டது. இக்காதையில் தெய்வவிருத்தியாகிய பதினோராடல்களின் சிறப்பு இளங்கோவடிகளால் விளக்கப்பட்டது.

1. கொடுகொட்டி

எல்லாம் வல்ல இறைவனாகிய சிவபெருமான், தேவர்களது வேண்டுகோட்கிரங்கிக் கொடியோர்களாகிய அவுணர்கள் வாழும் முப்புரங்களும் வெந்தழிய எரிமுகப் பேரம்பினை ஏந்திய அளவிலே, திரிபுரத் தவுணர்கள் எரிந்து சாம்பராய் விழ அங்ஙனம் விழுந்த வெண்பலிக்குவையாகிய பாரதியரங்கத்திலே (சுடுகாட்டிலே) உமா தேவியார் தன் திருமேனியின் ஒரு கூற்றினராய் நின்று பாணி தூக்கு சீர் என்னும் தாளங்களைச் செலுத்தி நிற்க வெற்றி மகிழ்ச்சியாற் கைகொட்டி நின்று ஆடிய கூத்து கொடுகொட்டி எனப்படும். அருளாளனாகிய இறைவன் தன் திருமுன்னர் முப்புரங்களும் தீப்பற்றி வெந்தழியக் கண்டும் சிறிதும் இரங்காது தனது மறக் கருணை தோன்றக் கைகொட்டி நின்று ஆடிய கொடுமையுடைத்தாதல் நோக்கி இக்கூத்திற்குக் கொடுகொட்டி யெனப் பெயர்தந்தனர் முன்னோர். கொடுங்கொட்டி எனற்பாலது கொடுகொட்டியாகிய இக்கூத்தினைப் பறையூர்க் கூத்தச் சாக்கையன் என்பான், சேரன் செங்குட்டுவன் முன் திறம்பட ஆடிக் காட்டிய செய்தியை இளங்கோவடிகள் சிலப் பதிகாரம் நடுகற்காதையில் விளக்கியுள்ளார்.

2. பாண்டரங்கம்

வானோராகிய தேரில் நான்மறைகளாகிய குதிரைகளைப் பூட்டித் தேர்முன் நின்ற திசைமுகனாகிய பிரமன் காணும்படி பாரதி வடிவாகிய (உமையுருவாகிய) சிவபெருமான் வெண்ணீற்றையணிந்தாடிய கூத்து பாண்டரங்கம் எனப்படும். பாண்டரம் - வெண்மை. வெண்மை வாய்ந்த திருநீற்றையணிந்து ஆடுதலால் பாண்டரங்கம் என்னும் பெயர்த்தாயிற்று.

3. அல்லியம்

அஞ்சன வண்ணனாகிய கண்ணன், தன்மாமனாகிய கஞ்சனது வஞ்சனையால் வந்த யானையின் கொம்பினை ஒடித்தற்கு நின்றாடிய ஆடல் அல்லியம் எனப்படும். 'அல்லியம் என்பதனை அலிப்பேடு என்பாருமுளர்' என அடியார்க்கு நல்லார் குறிப்பிடுதலால் இக்கூத்து அலியாந் தன்மையில் நின்றாடியது எனலாம்.

4. மல்லாடல்

மாயோனாகிய திருமால், வாணன் என்னும் அசுரனை வெல்லுதற் பொருட்டு மல்லனாய்ச் சென்று அவனை அறைகூவியழைத்து அவனது உடம்பினை இறுகப் பிடித்து உயிர்போக நெரித்துத் தொலைத்த நிலையில் ஆடிய கூத்து, மல்லாடல் என்ப.

5. துடியாடல்

கடல் நடுவே வேற்றுருவாய் மறைந்து நின்ற சூரனது வஞ்சனையறிந்து அவனைப் போரிற் கொன்று முருகப்பெருமான், அக்கடலின்கண் எழும் திரையே அரங்கமாக அமைய நின்று துடிகொட்டி யாடிய கூத்து துடியாடல் எனப்படும்.

6. குடைக்கூத்து

முருகனொடு பொருதற்கு வந்த அவுணர்கள், அப்பெருமான் முன் பொருதலாற்றாது தாம் போர் செய்தற்கு எடுத்த படைக்கலங்களைக் கீழே யெறிந்து விட்டு வருத்தமுற்றபொழுது, அப் பெருமான், அன்னோர்க்கு நல்லுணர்வுண்டாம் வண்ணம் தனது குடையை முன்னே சாய்த்து அக்குடையினையே ஒருமுக எழினியாகிய திரையாகக் கொண்டு ஆடிய கூத்து குடைக் கூத்தெனப்படும்.

7. குடக்கூத்து

வாணாசுரன், தன் மகள் உழைகாரணமாகக் காமன் மகன் அநிருத்தன் என்பானைச் சிறைப்படுத்தினானாக, நீலமேனி நெடியோனாகிய திருமால், வாணனையழித்தல் வேண்டி அவனுடைய சோ என்னும் நகர வீதியிற் சென்று குடங்கொண்டு ஆடியகூத்து குடக்கூத்தெனப்படும். இது பஞ்சலோகங்களாலும் மண்ணாலும் இயன்ற குடத்தினைக் கொண்டு ஆடப்பெறுவதால் வந்த பெயர்.

8. பேடாடல்

காமன் தன்மகன் அநிருத்தனைச் சிறை மீட்ட நிலையில் ஆண்மைத் தன்மையில் திரிந்த பெண்மைக் கோலத்தோடு சோ நகரத்தில் ஆடிய ஆடல் பேடு எனப்படும்.

9. மரக்காலாடல்

வெற்றிவேற்றடக்கைக் கொற்றவையாகிய துர்க்கை, சினமிக்க அவுணர் வஞ்சனையாற் செய்த கொடுந்தொழிலைப் பொறாளாய் ஆடிய ஆடல் மரக்காலாடல் எனப்படும். அவுணர்கள் உண்மைப் போரால் வெல்லமாட்டாது வஞ்சனையால் வெல்லக் கருதித் தன்மேல் பாம்பு தேள் முதலியனவாகப் புகுதலை யுணர்ந்த கொற்றவை, அவற்றை உழக்கிக் களைதற் பொருட்டு மரத்தைக் காலாகக் கட்டிக் கொண்டு கையில் வாளேந்தி யாடுதலின் இது மரக்காலாடலாயிற்று என்பர்.

10. பாவையாடல்

கொடும்போர் செய்தற்கு முற்பட்ட அவுணர்கள் போர்க்கோலத்தோடு மோகித்து வீழும்படி திருமகள், கொல்லிப் பாவை வடிவாய் ஆடியது பாவை ஆடல்.

11. கடையம்

வாணாசுரனுடைய சோ நகரத்தின் வடக்கு வாயிலின்கண் உளதாகிய வயலிடத்தே நின்று அயிராணி (இந்திரன் மனைவி) ஆடியது கடையம் என்னும் கூத்தாகும். இது கடைசியராகிய உழத்தியர் கோலத்தில் ஆடிய கூத்தாதலின் கடையம் என்னும் பெயர்த்தாயிற்று.

தேவர் அசுரர் முதலிய எல்லாவுயிர்களும் ஏனைப் பொருள்களும் தத்தம் நிலை குலைந்து அழிதற்குரிய ஊழிக்காலத்திலே முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உலகிலுள்ள பல வடிவுகளையும் மீண்டு தன்னிடத்தே ஒடுக்கிக்கொண்டு கொடுகொட்டி, காபாலம், பாண்டரங்கம் ஆகிய கூத்துக்களை ஆடியருள்வாரெனவும், அக்கூத்துக்களுக் கேற்ப அவருடன் பிரிப்பின்றி விளங்கும் உமையம்மையார், பாணி, தூக்கு, சீர் என்னும் தாளவகைகளைத் தருவார் எனவும் கலித்தொகையிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல் கூறும். இதன்கண் பதினோராடலிற் சொல்லப்படாத காபாலம் என்றதொரு கூத்துக் கூறப்பட்டுள்ளது. இறைவன், அயன்தலையாகிய கபாலத்தைக் கையிலேந்தியாடுதலால் இது காபாலம் என்னும் பெயர்த்தாயிற்று. இவ்வாறே தெய்வத்திறம் பற்றிய ஆடல்கள் பல முற்காலத்தில் நம் நாட்டில் வழங்கியிருத்தல் வேண்டும். அவற்றுட் சிறப்புடையனவே பதினோராடல் எனத் தொகுத்துரைக்கப் பட்டன.

''தாண்டவம் நிருத்தம் நாட்டியம் என்னும் மூன்று கூறுபாட்டினும் நாட்டியம் என்றது புறநடத்தை'' என அரும்பதவுரையாசிரியர் கூறியதனைக் கூர்ந்து சிந்திக்குமிடத்து, அவரால் முதற்கண் குறிப்பிடப்பட்ட தாண்டவம் என்பது அகமார்க்கப் பொருள்பற்றி வருமென்பதும், நிருத்தம் என்பது அகச்சுவை முதலியன கலவாத சுத்த நிருத்தம் என்பதும் நன்கு புலனாம். இராசதம் தாமதம் சாத்துவிகம் என்னும் குணத்தின்வழித் தோன்றும் அகத்துணர்வு அகமார்க்கப் பொருளாகும். இறைவன் ஆடிய திருக்கூத்துக்கள் இவ்வாறு தோன்றியனவாதலால் தாண்டவம் எனும் பெயர் பெற்றன.

அவரவர் பிறந்த நிலத்தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையும் விளங்க நடிக்கப் பெறுவது வரியென்னும் கூத்தாகும். இது, கண்கூடுவரி, காண்வரி, உள் வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக் கோள்வரி என எண்வகைப்படும். இவை நாடகமகளிராலன்றி ஏனையோரால் நடித்தற்கரியன. இவை சிலப்பதிகாரம் வேனிற் காதையாலும் அதனுரையாலும் நன்கு விளங்கும்.

குறள், மறம், சித்து, சோனகம், பார்ப்பான், சாடதாரி, பறை முதலிய பல கோலங்களை மேற்கொண்டு அவ்வக் கோலத்திற்குப் பொருத்தமான வசனத்துடன் மகளிரால் ஆடப்படும் கூத்துக்கள் 'கோலம்' என்னும் வகையைச் சார்ந்தன என்பர் பரதசங்கிரக நூலாசிரியர்.

''விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியும் இவ்வுலகத்து
நகைப்புற னாக நின்சுற்றம்
இசைப்புற னாக நீஒம்பிய பொருளே''

எனவரும் புறப்பாடல், நாடக அரங்கிற் பலவேறு கோலந்தாங்கி நடித்து மறையும் நடிப்புத்திறனை நன்கு விளக்குதல் காண்க.

அறிவியலும் சைவமும் ★

க.வச்சிரவேல் முதலியார்

அறிவியல்

உலகப் பொருள்களை நன்கு ஆராய்ந்து, அவற்றின் இயல்புகளை உடன்பாட்டு முகத்தால் உணரும் முறையைப் பின்பற்றுவதே அறிவியல்முறை எனப்படும். இவ்வாராய்ச்சி முறையில் உள் நோக்கி உணர்தல் (Introspection), கற்பனை (Speculation) என்பவற்றுக்கு இடம் இல்லை. இவ்வாறு ஆராய்ந்து காணும் முடிவுகள் சரி பார்க்கத் தக்கவையாய், பிறர்க்கு எடுத்துரைத்து மெய்ப்பித்தற்குரியவையாய் இருத்தல் வேண்டும். இத்தகைய முடிவுகளின் ஒழுங்கு அமைப்பே அறிவியல் எனப்படும். இது பூதவியல், பூத மாற்றவியல், உயிருடைப் பொருளியல் முதலாகப் பலப்பலப் பிரிவுகளாகி வளர்ந்து, மக்களுக்குக் கவர்ச்சி தரும் நாகரிகத்தை வளர்த்துக் கொடுத்துள்ளது. இதனோடு உடன் எண்ணப்படுவது தொழில்நுட்பக்கலை, உண்மையில் இஞ்ஞான்று அறிவியலும் தொழில் நுட்பக்கலையும் (Science and Technology) உலகத்தில் பெரியதொரு மாற்றத்தைச் செய்து வந்துள்ளது. மேலும் செய்யும். இவற்றால் எல்லா நாடுகளும் எல்லா மக்களும் நன்மை பெறவேண்டும் என்பதில் யாதும் ஐயுறவு இல்லை.

அறிவியலின் குறைகள்

ஆயினும், இவற்றில் ஒரு குறை உள்ளது. இவை மனிதனின் கையில் ஒரு பேராற்றலுள்ள கருவியைத் தருகின்றன. அக்கருவி நல்லதையும் விளைக்கவல்லது; தீயதையும் விளைக்கவல்லது. ஆனால், இவை அக்கருவியை எந்தத் திசையில் பயன்படுத்துவது என்பதைக் குறிப்பிடவில்லை. மேலும் அக்கருவியைப் பயன்படுத்தும் மனிதனைப்பற்றிய ஆழ்ந்த உண்மைகளை ஆராயக் கூறுகின்றது. அவன் தன்னை எப்படிக் கட்டுப்படுத்திக்கொண்டு நடக்கவேண்டும் என்று இவை கூறவில்லை. மக்கள் வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள் யாது என்னும் ஆராய்ச்சியை அறிவியல் தன் ஆட்சி வரம்புக்கு அப்பாற்பட்டதாகக் கூறித் தள்ளிவிடுகின்றது.

அறிவியற் குறையின் விளைவுகள்

இக்குறைவால் நேர்ந்துள்ள விளைவு யாது? மனிதன் இயற்கைப் பொருள்களை அடக்கி ஆள்கின்றான்; ஆனால், தனக்குள் பலதலைப்பட்ட உணர்வுகளை ஒழுங்குபடுத்தி ஆள வலி இல்லாதவனாகி விட்டான். நாகரிகத்தின் உச்சவரம்பில் ஏறி நிற்கின்றான். ஆனால், தன்னை அறியாமையால் அந்த நாகரிகத்தோடு தன்னையும் ஒருங்கே அழித்துக் கொள்வானோ என எண்ணி நடுங்கும் நிலையில் இருக்கின்றான்.

''நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்'' *(திருக்குறள் 476)*

என்னும் பொய்யாமொழிக்கு எடுத்துக்காட்டாகும் அளவிற்கு, அறிவியலும் தொழில் நுட்பக் கலையும் மனிதனை உயர்த்தி உள்ளது எனக் கூறிவிடலாம் போல உள்ளது.

அறிவியல் உண்மை ஒன்றனையே குறிக்கோளாகக் கொள்ளுகிறது; அதுவும் புறப்பொருள் பற்றியதே ஆகும். ஆனால், மக்கள் வாழ்க்கை உண்மை-நன்மை-அழகு என்னும் முப்பொருளையும் அடிநிலையாகக் கொண்டு நடைபெறக் காண்கின்றோம். அறிவியல், மனிதன் இயற்கையை எதிர்த்துப் போர்புரிந்து அதைத் தனக்குப் பயன்படுவதாக்கிக் கொள்ள உதவுகின்றது. ஆனால், பிறமக்களோடு பழகி அமைதி வாழ்வு வாழவும், தனக்குள்ளே நிகழும் தீய உணர்ச்சி நல்ல உணர்ச்சி என்பவற்றின் போரில் வெற்றி காணவும் உதவவில்லை.

அறிவியலை நிறைவு செய்வன

இவ்வாறு ஆராய்ந்து காணும்போது, அறிவியல் துறை மக்களுக்கு இன்றியமையாததாகவும், அருட்கொடையாகவும் அமைந்தபோதிலும், அது மக்கள் வாழ்க்கையின் ஒரு சார்பு பற்றியதாகவே

★ *சைவ சமயச் சொற்பொழிவுகள்*, சைவ சித்தாந்த மகா சமாசம், சென்னை, 1959, பக். 113-116.

நின்றுவிடுகிறது. அதன் நிறைவு நிலையைக் கருதி, இணைப்பான பேருண்மைகளை வெளிப்படுத்த வில்லை. இந்த வகையில் அறிவியலில் உள்ள குறைகளை நீக்கவல்லனவாய் இருப்பவை, இலக்கியம்-தத்துவக் கொள்கை - நுண்கலைகள் முதலியனவே ஆகும்.

சிவநெறிச் சிறப்பு

இனி சைவம் எனப்படும் தொன்றுதொட்டு வரும் மெய்ந்நெறியை உளங்கொண்டு ஆராய்ந்தால், அது வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள் இன்னதெனத் தெளிவுபட விளக்கி, மனிதன் தன் சூழ்நிலைக்குத் தக நன்மையைக் கடைப்பிடித்து வாழும் வாழ்க்கை முறையை இலக்கியங்களாலும், தத்துவக் கொள்கையாலும், நுண்கலையாலும் புலப்படுத்தி வந்துள்ளது என்பதை உணரலாம்.

சைவம் என்பது பிறபல சமயங்கள் போல, உணர்ச்சியைப் பற்றி நிகழும் சமயம் என்னும் அளவில் அமைந்துவிடாமல், ஆராய்ச்சியை உறுதுணையாகக் கொள்ளும் உயரிய தத்துவக் கொள்கையாகவும் உள்ளது. இதன் சாரம்:

''எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென் (று)
எவ்வுயிர்க்கும் அன்பாயிரு''

என்னும் விதியில் உள்ளது. இதன் விரிந்த போக்கையும் நோக்கையும், இஃது உண்மைக்குக் கொடுக்கும் மதிப்பையும்

''அன்னிய நூலின் விதியவி ரோதமேல்
உன்னேல் பழுதென் றுளத்து''

என்னும் மற்றொரு விதியால் உணரலாம்.

சிவநெறித் தலைவர்கள்

சைவம் வேதகாலத்துக்கும் முற்பட்ட பழமை உடையது என்பதை அறிவோம். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இச்சிவநெறியைக் கைக்கொண்டு ஒழுகிய மக்கள் அறிவியலுக்கு ஒத்த மிகவுயர்ந்த பண்பாடும் நாகரிகமும் உடையராய் வாழ்ந்தவர்கள் என்பது தெளிவு. இஞ்ஞான்று நம்மிடையே உள்ள இலக்கியம், நுண்கலை, சிற்பம், பண்பாடு முதலியவற்றிற்கு அடிப்படை கோலியவர்கள் சைவத்தின் இரு கண்கள் எனப் போற்றப்படும் ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் தான் என்பது வரலாற்று உண்மை.

அறிவியலும் சித்தாந்தமும்

இனி இதன்கண் கூறப்படும் பொருள் உண்மை, பொருளியல்பு, சாதனம், பயன் என்பவை-அளவை முறைக்கு முற்றிலும் பொருந்தியவை என்பதைச் சிவஞான போதம் என்னும் ஒரு நூல் கொண்டே துணிதல் கூடும். சைவம் உலகத்தை உள்பொருள் எனவும், காரண காரிய நியதிக்கு உட்பட்டதெனவும், உயிரின் அறிவு வளர்ச்சிக்குத் துணை புரிவதெனவும் கொள்வது. இவை அறிவியல் முறைக்கு நூற்றுக்கு நூறு பாகம் பொருந்துவன. உலகத்தின் முடிநிலைக் காரணநிலையை ஆற்றலுருவ அருநிலை வியாபகப் பொருள் என்னும் சைவத்தின் கொள்கை ஐன்ஸ்டீன் (Albert Einstein) முடிபுக்கு ஒத்ததாக உள்ளது. இன்னும், காலத்தைப் பொருட்பெற்றியாகக் கொள்வதும், காலமும் இடமும் எல்லைக்குட்பட்டவை என்பதும் போன்ற பல நுண்ணிய கருத்துக்கள் அறிவியலின் இஞ்ஞான்றைய துணிவுகளுக்கு ஒத்துள்ளன.

இச்சிவநெறியை ஆராய்ந்து மேனாட்டினருக்குத் தெரிவித்தல், தமிழ் மக்களின் பண்பாட்டின் உயர்வை அவர்கள் தெரிந்து மகிழ ஏதுவாகும்.

சேக்கிழாரும் திருவாசகமும்

சிவக்கவிமணி
சி.கே. சுப்பிரமணியமுதலியார், கோவை

சேக்கிழார் நாயனார் திருவாசகத்திலே நன்கு பயின்று அதனைப் பாராட்டியுள்ளார்கள் என்று கொள்ளலாம்.

சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினாற் றோணோக்க மாடாமோ
- திருவாசகம் - திருத்தோணோக்கம், 6

எனவும், அதனை அடுத்த பாட்டிலே தொடர்ந்து அனுவதித்து ,

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்
- திருத்தோணோக்கம், 7

எனவும், சண்டீச நாயனார் சரிதத்தின் தத்துவத்தை மாணிக்கவாசக அடிகளார் எடுத்துக் காட்டியதைச் சேக்கிழார் பெருமான், சண்டீச நாயனார் புராணத்தை முடித்துக் காட்டுகின்ற அளவிலே,

''இந்த நிலைமை யறிந்தாரார்? ஈறி லாதார் தமக்கன்பு
தந்த வடியார் செய்தனவே தவமா மன்றோ சாற்றுங்கால்''
- சண்டேசுர நாயனார் புராணம்-59

என்று எடுத்துத் தலைப்பெய்து கொண்டார்.

''சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன் கண்ணினைநின்
றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி . . . . .''
- திருச்சதகம்-26

என்ற திருவாசகத்தின் சொல்லும், பொருளும், அழகும், அமைப்பும்,

''ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக் காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்தவஞ் செழுத்துக் காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரா னடியார்க்காகப்
பாங்குடை யுடையுங் கீளும் பழுதில்கோ வணமுநெய்வார்''
- நேச நாயனார் புராணம்-3

என்ற திருப்பாட்டிற் சிறந்து மிளிர்வது காணலாம்.

உருத் தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி........ - கண்டபத்து-3

என்ற திருவாசகம்,

. . . . . எனையறியாப் பருவத்தே யெடுத்தாண்ட
பெருந்தகை . . . . .
- திருஞானசம்பந்தர் புராணம் - 880

என்னும் பாட்டிலும்,

''செருப்புற்ற சீறடி'' -திருத்தோணோக்கம்-3

என்பது,

''திருப்பாதச் செருப்புத் தோய''
- திருஞானசம்பந்தர் புராணம்-1017

என்பதிலும்,

''ஐம்புலன்க ளார வந்தனை'' *-திருச்சதகம்-26*

எனுங் கருத்து,

''. . . . . யுருவின் கண்
அணையு மைம்பொறி யளவினு மெளிவர வருளினை''
- திருஞானசம்பந்தர் புராணம் - 161

என்ற இடத்திலும்,

''அணிகுழன்மேல் வண்டார்ப்ப'' *-திருவெம்பாவை-12*

எனும் திருவாக்கு,

''தேங்கோதை மலர்க்குழன் மேற்
சிறைவண்டு கலந்தார்ப்ப''
- தடுத்தாட்கொண்ட புராணம் -146

என்ற அழகிய வருணனையிலும்,

''இங்குநம் மில்லங்கள் தோறும் எழுந்தருளி''
- திருவெம்பாவை -17

என்ற கருத்து,

''அடியவர் மனைக டோறும் சென்று''
- திருநீலகண்ட நாயனார் புராணம் - 42

என்பதிலும்,

''நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்''
- திருப்பொற்சுண்ணம் - 5

என்ற பொருள்,

''தொண்டர்கள்பின் உம்பர்குழாம் மல்கு''
- திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 343

என்ற திருப்பாட்டிலும்,

''பள்ளந்தா முறுபுனலிற் கீழ்மே லாக''
- திருச்சதகம்-21

என்பது,

''அன்பு பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண்பு''
- சிறுத்தொண்ட நாயனார் புராணம்-4



என்ற திருப்பாட்டிலும் விளங்கும் அழகுகள் ஒப்பு நோக்கிக் காணற்பாலன. இன்னும் பற்பல இடத்தும் திருவாசகச் சொல்லும், பொருளும், போக்கும், பொலிவும், கருத்தும், கவினும் பெரியபுராணத்திலே சிறப்ப விளங்கி நிற்பதைக் காணலாம்.

பண்டைத் தமிழகத்தில் சிவன்

தி.வே. கோபாலையர்

பண்டைத் தமிழக வரலாற்றை அறியக் கருவிகளாய் உதவுவன தொல்காப்பியம் என்ற இலக்கண நூலும், பாட்டும் தொகையுமாகிய சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரக் காப்பியமும் ஆகும்.

சிவன் என்ற சொல் மேற்குறிப்பிட்ட பனுவல்களில் இடம்பெறவில்லை. எல்லோருக்கும் பொதுத்தெய்வமாக விளங்கும் சிவபெருமான் நானிலங்களின் சிறப்புத் தெய்வங்களைக் குறிப்பிடும் தொல்காப்பியத்தில் இடம் பெற வாய்ப்பு இல்லை. ஏனைய பண்டைய செய்யுட்களில் அப்பெருமான்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்துக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

சிவபெருமான் பண்டைய செய்யுட்களில் ஆதிரையான், யாழ்கெழு மணிமிடற்று அந்தணன், அருந்தவத்தோன், வாலிழை பாகத்து ஒருவன், காலக் கடவுள், நீல மணிமிடற்று ஒருவன், காஅய் கடவுள், புங்கவம் ஊர்வோன், சலதாரி, ஐந்தலை....மைந்துடை ஒருவன், எண்கையன், காரி உண்டிக் கடவுள், மூஎயில் முருக்கிய செல்வன், ஆலமர் செல்வன், சீர்மிகு சிறப்பினோன், கூற்று, முக்கட்செல்வன், பசுங்கண் கடவுள், கொலைவன், கணிச்சியோன், மழுவாள் நெடியோன், ஆல்கெழு கடவுள், பிறவா யாக்கைப் பெரியோன் கூளிப்படையினன் எனப் பலசொற்றொடர்களால் போற்றப்படுகின்றான்.

சிவபெருமான் முத்தொழில்கள்

நிலனும் நீரும் தீயும் வளியும்
மாக விசும் போடு ஐந்து உடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவன் (மதுரை. 453-55)

என்ற அடிகளில் சிவபெருமானே ஐம்பூதங்களையும் படைத்தவன் எனப் போற்றப்படுகிறான்.

நீலமேனி வாலிழை பாகத்து, ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே (ஐங்குறு. கட. வா.)

என்ற அடிகளால் அம்மையப்பனான சிவபெருமான் திருவடிச் சிறப்பினாலேயே மேல்நடுகீழ் என்ற மூவுலகங்களும் தோன்றின என்ற செய்தி பெறப்படுகிறது.

எல்லா உயிர்க்கும் ஏமமாகிய......அருந்தவத்தோன் (புறநா-1)

என்ற தொடர் உயிர்களைக் காப்பவனும் அவனே என்று சுட்டுகிறது.

யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே (அகநானூறு. கட.வா.)

என்ற அடிகளும் அவனே உலகைக் காப்பவன் என்று இயம்புகின்றன.

காலக் கடவுட்கு உயர்கமா வலனே (பதிற்று.)

ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல்
மைந்துடை ஒருவனும் மடங்கலும் (பரிபாடல்-1)

கூறாமல் குறித்ததன் மேல் செல்லும் கொடுங்கூளி மாறாப் போர் (கலி-1)

என்பன அழித்தற்கடவுளும் அவனே என்று குறிப்பிடுகின்றன.

தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தான்
பல்வயின் உயிரெல்லாம் படைத்தான்கண் பெயர்ப்பான் (கலி-129)

பல உலகங்களில் உயிர்களெல்லாம் பழைதாகிய ஊழிக் காலத்தே, பிறந்து இறந்து தடுமாறித் திரியும்படி அயனாய் நின்று படைத்த முதல்வன் அரனாய் அவ்வுயிரெல்லாம் தன்னிடத்தே வந்து தொகுதலைத் தான் விரும்பும் ஊழி முடிந்த காலத்திலே தன்னிடத்தே மீட்டு ஒடுக்கிக்கொள்கின்றான் - எனநெய்தற்கலி சிவபெருமானுடைய செயல்களாகப் படைத்தல்,காத்தல், அழித்தல் என்ற முச்செயல்களையும் ஒருசேரக் கூறுகின்றது.

சிவபெருமான் உருவ வருணனை

நுதலது இமையா நாட்டம்-

வான்இலங்கு பிறைஅன்ன விலங்குவால் வைஎயிறு

எரி அகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை

முதிராத் திங்களொடு சுடரும் சென்னி

யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்

செவ்வான் அன்ன மேனி

மார்பினஃதே மையில் நுண்ஞாண்

கொன்றைத் தாரன் மாலையன் கண்ணியன்

கையது கணிச்சி மழு வேல்

சேர்ந்தோள் உமையே

வரிகிளர் வயமான் உரிவை உடுத்தவன்
ஊர்ந்தது ஏறே (அகநானூறு கட.வா.)

என்ற தொடர்களால் சிவபெருமான் நெற்றிக்கண்ணோடு முக்கண்ணனாய், வளைந்த எயிற்றினனாய், செஞ்சடையனாய், பிறைசூடியாய், வேதம்ஓதுபவனாய், செம்மேனியின் மார்பில் பூணூல் அணிந்து, கொன்றை சூடி, கைகளில் கணிச்சி, மழு, வேல் இவற்றை ஏந்தி, அம்மையப்பனாய், ஏறு ஊர்பவனாய்ப் புலித்தோலாடையனாய்ச் சான்றோர்கள் உள்ளத்தில் காட்சி வழங்கும் செயல் கூறப்பட்டுள்ளது.

கறைமிடறு அணியலும் அணிந்தன்று

சீர்கெழு கொடியும் அவ்வேறு என்ப.

நீர்அறவு அறியாக் கரகத்தன் (புறநானூறு-1)

நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் (ஐங்குறு.கட.வா.)

என்பனவற்றால், அவன் விடக்கறைபொருந்திய நீலகண்டன், இடபக்கொடியன், நீர்நிறைந்த கமண்டலத்தோடு இருக்கின்றவன், பார்வதியைத் தன் உடம்பின் ஒரு கூறாகக் கொண்டுள்ளவன் என்ற செய்திகள் பெறப்படுகின்றன.

பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்தாகக் கருதப்படும் மருட்பாவில்,

பொன்னார் எயில்எரி ஊட்டிய வில்லன்

குறங்கு அறைந்த வெண்மணி ஆர்க்கும் விழவினன்

நுண்ணூல் சிரந்தை இரட்டும் விரலன்

இரண்டு உருவா ஈரணிபெற்ற எழில்தகையன்

சூலம் பிடித்த சுடர்ப்படைக் காலக்கடவுள்

என அவன் வில்லும் சூலமும் பிடித்து, மணியையும் உடுக்கையையும் ஒலிப்பித்து, இரண்டு உருவிற்கு ஏற்ப ஈரணிகளால் அழகாகக் காட்சி வழங்கும் திறம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவபெருமானுடைய அருளிச்செயல்கள்

1. அருந்தவத்தோன்

ஆறுஅறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து *(கலி-1)*
ஆல்கெழு கடவுள் *(முருகு-256)*
ஆல்அமர் செல்வன் *(கலி-81)*
சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்த்த
நீர்மலி கரகம் *(கலி-133)*

இத்தொடர்களால் சிவபெருமான் ஆலமரத்தடியில் கமண்டலத்தோடு அருந்தவத்தோனாய் அமர்ந்து முனிவர்களுக்கு வேதங்களின் விழுமிய பொருள்களை உபதேசித்தமை அறியப்படுகிறது.

2. கங்கையைச் சடையில் ஏற்றவன்

தேறுநீர் சடைக்கரந்து *(கலி-1)*
பிறங்குநீர் சடைக்கரந்தோன் *(கலி-150)*
எரிமலர்த்தாமரை இறைவீழ்த்த பெருவாரி
விரிசடைப் பொறை ஊழ்த்து விழுநிகர் மலர்ஏய்ப்பத்
தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி *(பரிபாடல்-9)*

அயனால் வீழ்த்தப்பட்ட ஆகாயகங்கையை மலர்ந்துவிழும் பூவை ஒப்ப வேகந்தணியச் சடைமுடியில் தாங்கிய செயல் மேற்குறிப்பிட்ட அடிகளால் பெறப்படுகிறது.

3. கொல்விடம் உண்டமை

காரி உண்டிக் கடவுள் *(மலைபடு-83)*
கறைமிடறு அணியலும் அணிந்தன்று *(புறநா-1)*
நீலமணி மிடற்று ஒருவன் *(புறநா-91)*
மணிமிடற்றன் *(கலி-1)*
கறைமிடற்று அண்ணல் *(புறநா-55)*

முதலிய தொடர்கள் சிவபெருமான் கொடிய விடத்தை உண்டு அதனை மிடற்றில் இறுத்தி அதனால் நீலகண்டனாகி உலகைப் பாதுகாத்த செய்தியை உரைக்கின்றன.

4. மும்மதில்களை அழித்தல்

ஓங்குமலைப் பெருவில் பாம்புநாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூஎயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற்று அண்ணல் *(புறநா-55)*

ஆதி அந்தணன் அறிந்து பரி கொளுவ
வேதம் மாபூண் வையத்தோ் ஊர்ந்து
நாகம் நாணா மலை வில்லாக
மூவகை ஆரெயில் ஓர் அழல் அம்பின்முளிய
மாதிரம் அழல எய்து *(பரிபாடல் 5)*
திரிபுரம் எரியூட்டிய வில்லன் *(பதிற்று.கட.வா.)*
முக்கண்ணான் மூஎயிலும் உடன்றக்கால் முகம் *(கலி-2)*

முதலிய அடிகளால் உலகமாகிய தேரில் பிரமனைத் தேரோட்டியாகக் கொண்டு மலைவில், பாம்புநாண், எரி அம்பு இவற்றால், திரிபுரம் தீமடுத்துத் தேவரைச் சிவபெருமான் புரந்த செயல் உணர்த்தப்படுகிறது.

5. ஆடல்கள்

பயில்இருள் காடு அமர்ந்து ஆடிய ஆடலன் *(பதிற்று-கட.வா.)*

கொடுகொட்டி ஆடுங்கால், பண்டரங்கம் ஆடுங்கால், காபாலம் ஆடுங்கால் *(கலி-1)*

என்பனவற்றால் சிவபெருமான் நள்ளிருளில் சுடுகாட்டில் நாட்டியம் ஆடுவதும், அவன் ஆடிய கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் என்ற கூத்து வகைகளும் உணரப்படுகின்றன. கொடுகொட்டி என்ற கூத்தின் சிறப்பு சிலப்பதிகாரத்தில் பரக்கக் கூறப்பட்டுள்ளது.

6. இராவணனை நெரித்தமை

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமைஅமர்ந்து உயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடி பொலி தடக்கையின் கீழ்ப்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் *(கலி-38)*

என்ற கலிஅடிகளால் இராவணன் சிவபெருமான் உமையம்மை யோடிருந்த கயிலைமலையைப் பெயர்க்க முற்பட்டு அப்பெருமானால் கைநெரிப்புண்ட செய்தி போதருகிறது.

7. காலனைக் காய்ந்தமை

படர்அணி அந்தி பசுங்கட்கடவுள்
இடரிய ஏற்றெருமை நெஞ்சிடந் திட்டுக்
குடர் கூளிக்கு ஆர்த்துவான்

(கலி-101)

வருத்தத்தை அணிகின்ற ஊழிமுடிவிலே பசிய நிறத்தைத் தன்பாகத்தே உடைய உருத்திரன் வருத்தத்தைச் செய்கின்ற ஏறாகிய எருமையை ஏறுகின்ற கூற்றுவனுடைய நெஞ்சைப் பிளந்து போகட்டு அவன் குடரைக் கூளிக்கு இட்டு அவற்றின் வயிற்றை நிரப்புவித்தல் கொல்லேறு ஒன்றன் செயலுக்கு உவமமாகக் கூறப்பட்டுள்ளது.

ஏற்றெருமை நெஞ்சம் வடிப்பின் இடந்திட்டுச்
சீற்றமொடு ஆருயிர்கொண்ட ஞான்று இன்னன்கொல்
கூற்று

(கலி - 103)

ஏறாகிய எருமையை ஏறுகின்ற கூற்றுவனுடைய நெஞ்சை வடிம்பாலே பிளந்து போகட்டுச் சினத்தோடே அரிய உயிரை வாங்கிய ஞான்று இறைவன் இத்தன்மையை உடையவன் என்ற செய்தி கொல்லேற்றை அடக்கிய பொதுவன் செயலுக்கு உவமமாக வந்துள்ளது.

இனி, சிவபெருமான் நிறம் முதலியன சில காளைகளுக்கு உவமமாகக் கூறப்பட்டுள்ளன.

முக்கண்ணான் உருவே போல் முரண்மிகு குராஅல் *(கலி-105)*

பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற்று அணிபோல

இரும்பிணர் எருத்தின் ஏந்துஇமில் குராஅல் (கலி-105)

கொலைவன் சூடிய குழவித் திங்கள்போல்
வளையுபு மலிந்த கோடுஅணி சேய் (கலி-103)

சீறரு முன்பினோன் கணிச்சிபோல் கோடு சீஇ
(கலி-101)

முதலியன காண்க.

பெரும்பாலும் கொன்றையே சிவபெருமானுக்கு உகந்த பூவாகக் கூறப்பட்டிருப்பவும்

புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா ஆங்கு (புறநா-106)

என எருக்கும் சிவபெருமானுக்கு அணியப்படும் பூக்களில் இடம்பெறுகிறது.

திருமாலுக்கு உரிய 'கமழ்குரல் துழாஅய்' 'நக்கு அலர் துழாஅய்' கூறப்பட்டிருப்பது போலச் சிவபெருமானுக்கு உரிய வில்வம் பழம்பாடல்களில் இடம்பெறவில்லை.

8. கயிலைமலை

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமைஅமர்ந்து உயர்மலை இருந்தன னாக, (கலி-38)

கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமய மாக (பதிற்று-43)

பரங்குன்று இமயக் குன்றம் நிகர் ஒக்கும் (பரிபாடல்-8)

இமையவர் உறையும் இமயச் செவ்வரை
சிமையச் சென்னி தெய்வம் பரசி (சிலம்பு - 28)

என்பனவற்றால் சிவபெருமானுடைய இருப்பிடமாகக் கயிலை போற்றப்படுகிறது. இக்கயிலைமலை வடிவத்தை ஒருகோயிலுள் அமைத்து வழிபட்டு வந்தமை 'ஊர்க்கோட்டம்' என்று புகார்நகரக்கோயில் ஒன்றன் பெயரால் புலனாகிறது.

சிவபெருமான் கோயிலை வலம்வரும்போது பேரரசரும் தம் குடைகளை மடக்கிக்கொண்டு குடைபிடிக்கப்படாமலேயே நடந்து சென்றனர் (புறநா-6).

சிவபெருமான் நான்மறை முதுநூல் முக்கட்செல்வன் (அகநா-181) எனப் போற்றப்படுகிறான். அவன் ஓதும் மறை, முதுமுதல்வன் வாய்போகாது, ஒன்று புரிந்த ஈரிரண்டின் ஆறு உணர்ந்த ஒரு முதுநூல்' (புறநா-166) என்று போற்றப்படுகிறது.

மேலைக்கடலில் மறைய இருக்கும் செஞ்ஞாயிற்றுக்கும், நீலக்கடலுக்கும், சிவபெருமானும் திருமாலும் உவமமாகக் கூறப்பட்டுள்ளனர். 'வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வம்' (அகநா 181) என்பதனை நோக்குக.

இவற்றால் சிவபெருமானைப் பிறவாயாக்கைப் பெரியோன் என்று சிறப்பித்துப் பெருந்தெய்வமாகப் பண்டு தமிழர் வழிபட்ட செய்தி பண்டைப்பனுவல்களிலிருந்து பெறப்படுகிறது. புகார், மதுரை முதலிய தலைநகரங்களில் சிவன்கோயில் முதற்கோயிலாகச் சுட்டப்பட்டுள்ளமை சிலப்பதிகாரம் முதலியவற்றால் போதரும். தேவாரகாலத்துப் பிறசெய்திகள் யாவும் இடைக்காலத்தில் தோன்றியவையே என்பது தேற்றம்.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே!

நாம பஞ்சாட்சரம்

டாக்டர் அ.மா. பரிமணம், தமிழ்ப் பேராசிரியர், தஞ்சாவூர்

எழுத்து எனப்பொருள்படும் 'அட்சரம்' என்னும் வடமொழித் தற்பவச் சொல், தமிழில் 'அக்கரம்' என்றும் வழங்கப்படும். எனவே, பஞ்சாட்சரம் அல்லது பஞ்சாக்கரம் என்னும் தொடர், பெயர், திருவென்னும் முன்னடைசேர்த்துத் 'திருவைந்தெழுத்து' என்றும், அவ்வடை சேராது 'ஐந்தெழுத்து' என்றும் சைவ நூல்களில் வழங்கப்பெறும். இவற்றின் வடமொழி வடிவங்கள் முறையே 'ஸ்ரீபஞ்சாக்ஷரம்', 'பஞ்சாக்ஷரம்' என்பனவாம். திருவைந்தெழுத்தினைச் சைவப் பெருமக்கள், தங்கள் சமயத்திற்கான மூலமந்திரமாகக் கொண்டுள்ளனர். சைவச் சான்றோர் திருவைந்தெழுத்தினை 'நமசிவய' என்னும் எழுத்துக்களால் அமையும் மந்திரமாகப் போற்றுவர். மந்-நினைப்பவன்; திர-காப்பது என்று கொண்டு, மந்திரம் என்பதற்கு ஆறுமுக நாவலரவர்கள், 'நினைப்பவனைக் காப்பது' என்று விளக்கம் தந்துள்ளார்கள். மேலுமவர்கள், 'நினைப்பவனைக் காக்கும் இயல்புடைய வாச்சியமாகிய சிவத்துக்கும் சிவசக்திக்குமே செல்லும். ஆயினும் வாச்சியத்துக்கும் வாசகத்திற்கும் பேதம் இல்லாமை பற்றி, உபசாரத்தால் வாசகத்துக்குஞ் செல்லும், என்று விளக்கியுள்ளதால், திருவைந்தெழுத்தாகிய வாசகமே சிவமாக அமைந்து ஓதுவார்க்குச் சிவப்பேற்றினை நல்கும் என்னும் உண்மையைப் புலப்படுத்தியுள்ளார். இவ்வுண்மையை ஆளுடைய பிள்ளையார் தம் திருமுறையில், ''காதலாகி...... ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது, நாதன் நாமம் நமசிவாயவே'' என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

திருவைந்தெழுத்தின் ஒவ்வொரெழுத்தும், ஒவ்வொரு பொருள் குறித்தமைந்ததென்றும், அவற்றை முறை மாற்றி ஓதுவதன் காரணமாகத் தூலம், சூக்குமம், அதிசூக்குமம், காரணம், முத்தி எனப்பெயர் வேறுபாடுகள் உளவென்றும், அவற்றிற்குத் தனித்தனியான பயன் உண்டென்றும் சைவ சாத்திரங்கள் விரித்துக் கூறும். அம்மந்திரத்தை ஓதுங்கால், உதடு தீண்டாமல் மனத்தால் ஓதல், உதடு தீண்டத் தனக்கு மட்டுமே கேட்குமாறு ஓதல், பிறர்க்கும் கேட்குமாறு ஓதல் என வகைப்படுத்தி அவற்றிற்கு முறையே மானசம், உபாஞ்சு, வாசகம் (பாஷ்யம்) எனப்பெயரும் வழங்கியுள்ளனர். இவ்வடமொழிப் பெயர்கட்குத் தமிழில் முறையே மானதம், மந்தம், உரை என்று தூத்துக்குடி முத்தையாபிள்ளை பெயர் கொடுத்துள்ளார். இவ்வாறு ஓதும் முறை, சைவத்திற்கேயன்றித் தெய்வத்தை உடன்படும் பிற சமய மந்திரங்கட்கும் ஒக்கும்.

முருகப்பெருமானை முழுமுதலாக் கொண்டவர்கள், ஆறு எழுத்து மந்திரம் கொண்டிருந்தமையினை நக்கீரர், 'ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி' என்றும், அதனை ஓதுமாற்றை 'நாவியல் மருங்கின் நவிலப் பாடி' என்றும் காட்டியுள்ளார். அம்மந்திரம் 'நமோ குமாராய' என்று நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். திருமாலை முழு முதலாகக் கொண்டவர்கள் எட்டெழுத்து மந்திரங் கொண்டுள்ளனர். அதனை, 'நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணாவென்னும் நாமம்' என்னும் திருமங்கையாழ்வார் வாக்கால் அறியலாம். தெய்வத்தை உடன்படாத சமணர்களும் தம் சமயத்திற்கென மந்திரங் கொண்டுள்ளனர் என்பதும், அம்மந்திரம் ஐந்தெழுத்துக் கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கன. 'மொழிப் பொருள் தெய்வம்' என்னும் சிலப்பதிகாரத் தொடர் விளக்கத்தில் சமணர்களின் பஞ்ச மந்திரம், ''அ.சி.ஆ.உ.சா'' என்று அடியார்க்கு நல்லார் காட்டியிருப்பது கொண்டு அதனை உணரலாம்.

ஒவ்வொரு சமயத்தாரும், தம் சமய மந்திரங்களை முறையாக ஓதி, அச்சமயங் கூறும் உறுதிப் பொருளை எய்தியுள்ளனர். இறை நாம மந்திரங்களை ஓதினால், இறைவன் அகக்கண்ணிற்கும், புறக்கண்ணிற்கும் புலப்படுவான் என்பதனைத் தம் அனுபவக் கூற்றாக,

''விண்ணி னார் மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங் கள் ஓதி எழுத்தஞ்சும்
கண்ணினால் கழல் காண்பிடம் ஏதெனில்
புண்ணியன்புக லூ ரும்என் நெஞ்சுமே''

என்று அப்பரடிகள் காட்டியுள்ளார். எண்ணுதல், ஓதுதல், கண்ணுதல் ஆகியவற்றால் இறைவனைப் புறக்கண்ணால் புகலூரிலும், அகக்கண்ணால் நெஞ்சகத்தும் காணுதல் இயலும் என்பது அடிகளின் அனுபவ உரையாகும். சைவ சமயம், திருநீற்றினை மந்திரமாகக் கொண்டு போற்றும். 'மந்திரமாவது நீறு' என்பது திருமுறை. இன்றும் திருவாரூர்த் திருக்கோயிலில், திருநீற்றினைத் 'திருமந்திரம்' எனக் குறிப்பிடும் மரபு இருந்து வருகின்றது. திருநீறும் திருவைந்தெழுத்தும் திருமந்திரமாகப் போற்றப்படுவதால், திருநீற்றினை அணியும் போது, ஐந்தெழுத்தினை ஓதியே அணிதல் வேண்டு

மென்னும் சைவ ஒழுக்கம் தோன்றியது. இந்த ஒழுக்கத்தைச் சைவசமயத்திற்கு மீண்ட பின்னர்த் தவறாது பின்பற்றியதனை அப்பரடிகள், ''உனதருளால், திருவாய் பொலியச் சிவாய நமவென்று திருநீறணிந்தேன்'' என்று குறிப்பிடுகின்றார். 'சிவாயநம' எனக் கூறுவதால் வாக்கும், 'திருநீறணிந்தேன்' எனக் கூறுவதால் காயமும் சிவத்தில் ஈடுபட்டமையினை வெளிப்படுத்தவே, மனத்தால் நிகழ்ந்த சிவ ஈடுபாடு கூறாமலேயே குறிப்பிடப்பட்டதாகின்றது. மேலுமவர், இறைத் திருநாம மந்திரத்தை நூறாக, ஆயிரமாக, நூறாயிரமாக ஓதுபவர்களின் பாவங்கள் அழிந்துபடும் என்பதனையும், அத்தகையோர் தேவர்களினும் மாட்சியுடையராவர் என்பதனையும்,

''பூவனூர்ப் புனிதன் திரு நாமந்தான்
நாவில் நூறு நூறாயிரம் நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினும் செல்வர்கள் ஆவரே''

என்று அழகுறக் காட்டியுள்ளார்.

இறை மந்திரமாகிய திருவைந்தெழுத்தினைப் போலவே, ''அவனருளாலே அவன்தாள் வணங்கி'' அவனருள் பெற்று விளங்கும் திருவருட் சான்றோர்களின் பெயர்கள்தாமும் மந்திரங்களாய் அவற்றைப்போற்றுவார்கட்கு நன்மை பயப்பனவாகும். சிவாலயங்களில் நாயன்மார்கள் அனைவரையும் கல்லிலும் செம்பிலும் வடித்து வழிபடும் சைவமரபு தோன்றுமுன்னரே, நால்வர் படிமங்களைத் திருக்கோயிலில் நிறுவி வழிபடும் மரபு பரவியது. அதிலும், தேவார அடங்கன் முறை அருளிய மூவர்க்கும் படிமங்கள் அமைத்துப் பரவும் மரபு முற்பட்டது என்பதனைக் கல்வெட்டுக்கள் காட்டி நிற்கின்றன. சுந்தரர் போற்றிய, நம்பியாண்டார் நம்பிகள் விரித்துரைத்த, சேக்கிழார் விளக்கியருளிய நாயன்மார்கள் அனைவரும் ஒத்த சிறப்பினரேனும், தேவாரமெனும் அருளாரமுத அருட்கொடையால், அவற்றை வழங்கிய தேவார மூவர் முதலிகளும் சாயுச்சிய நிலை எய்தியவராகக் கருதப்பெற்றுத் தெய்வ நிலை கொண்டவர்களாக மதித்துப் போற்றப்படுகின்றனர். அதனால் அவர்களின் தோற்றங் கூறவந்த சேக்கிழாரடிகள், 'திரு அவதாரம்' செய்தனர் என்றே குறிப்பிட்டுள்ளனர்.

'நம்பியாரூரர் என்றே' நாமம் சாற்றப் பெற்ற சுந்தரர், ''தீதகன்று உலகமுய்யத் திருவவதாரம் செய்தார்'' என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். 'நாவுக்கரசு என்று உலகேழினும் நின்நாமம் நயப்புறமன்னுக' என்று இறைவனால் அருளப்பெற்ற மருள் நீக்கியாரை, ''உலகில் வரும் இருள் நீக்கி ஒளி விளங்கு கதிர் போற்பின் மலரும் மருள் நீக்கியார் வந்து அவதாரம் செய்தார்'' என்றும், அம்மையார் அளித்த அருள் ஞானப் பாலுண்ட அந்நிலையில் அனைத்து ஞானங்களையும் உணர்ந்த பிள்ளையாரைத் ''தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்'' என்றும் தெய்வச் சேக்கிழார் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. சிவபெருமானைச் சுட்டும் திரு ஐந்தெழுத்தினைப் போலவே, திருவென்னும் பெயர் முன்னடையினை நீக்கிய நிலையில், ஞானசம்பந்தர், நாவுக்கரசு, நம்பியாரூரர் என்று அமையும் திருப்பெயர்களும் ஐந்தெழுத்துக் கொண்ட பெயர்களாக அமைந்திருப்பது அறிந்து மகிழத்தக்கதாகும். இப்பெயர்கள் ஒற்று நீக்கிக் காணுங்கால் ஐந்தெழுத்தாக, அமையக் காணலாம். இப்பெயர்கள்தாமும் ஓதி வழிபடுவார்க்குத் திருவைந்தெழுத்தே போல நன்மை புரிந்துள்ள பாங்கினைத் திருத்தொண்டர் புராணத்தால் அறியலாம். அதனால் நாவுக்கரசரின் வரலாறு கூறத் தொடங்கிய சேக்கிழார், ''வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மை திகழ், பெருநாமச்சீர் பரவல் உறுகின்றேன்'' என்று கூறியுள்ளார். ஈண்டு 'நாமச்சீர்' என்பது 'பெயர்ப் பெருமை' என்று பொருள்படும். இவ்வகையில் தேவார மூவர்தம் திருப்பெயர்களும், ''நாமபஞ்சாட்சரம்'' எனத் தகும் சிறப்பெய்தி நலம் பயப்பனவாக அமைந்துள்ளன.

சேக்கிழார் புராணப்படுத்தியுள்ள அறுபான்மும்மை நாயன்மார்களுள், ஒருவர் புலனழுக்கற்ற அந்தணராய அப்பூதியடிகளாவார். அவர் நாவுக்கரசரைக் காணாமலேயே அவர்பால் ஆரா அன்பு கொண்டு, அவரது பெயரையே பலகாற் பேசியும் எழுதியும் வழிபட்டு ஈறிலாப் பெரும்பதம் எய்திய பாங்கினைப் பெரியபுராணம் விளக்குகின்றது. நாவுக்கரசெனும் நாமம் அப்பூதிப் பெருமானுக்கு மந்திரமாக அமைந்து நலம்பயந்தவற்றை வியந்து சிவப்பிரகாச சுவாமிகள் பின்வருமாறு ஏத்துகின்றார்:-

''உற்றானலன் தவம் தியினின்றானலன் ஊண்புனலா
அற்றா னலன் நுகர்வும் திரு நாவுக்கரசெனுமோர்

சொற்றான் எழுதியும் கூறியுமே என்றும் துன்பில் பதம்
பெற்றான் ஒரு நம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே''

இதில், 'ஓர் சொல்' என்பது 'ஒப்பற்ற மந்திரமொழி' என்றும், 'துன்பில் பதம்' என்பது 'எட்டுணையும் எய்துதலில்லாத முத்தி' என்றும் விளக்கப்பட்டுள்ளன.

அந்தணர் மரபில் தோன்றிய கணநாதர் எனப் பெயரிய நாயனார், தோணிபுரத்தோன்றலாய ஞானசம்பந்தருக்கு, 'நற்றிருப்பணியாயின நாளும் அன்பொடு' புரிந்து வந்தார். திருக்கோயிற் பணிகளை அன்பர்கட்குப் பயிற்றிவந்த அவர், ஞானசம்பந்தரின் திருவடிக்காதலால், 'முப்பொழுது அருச்சனை வழிபாடு' முதலியன செய்து பின்னர்க் 'கயிலை மால்வரை எய்தி, மான நற்பெருங்கணங்கட்கு நாதராகும் நிலை எய்தினார். ஞானசம்பந்தருக்கு அவர் ஆற்றிய அருச்சனையில் சம்பந்தரின் பெயர்த்திருநாமம் அடங்குமன்றோ!

பெருமிழலைக் குறும்பர் எனும் சிவனடியார், திருத்தொண்டத் தொகையருளிய நம்பியின், மலர்க்கழல்களைக் 'கையால் தொழுது வாயால் வாழ்த்தி மனத்தால் நினைக்கும் கடப்பாடு கொண்டொழுகினார். அதன் பயனாக அவர் அட்ட மாசித்திகளை அடைந்த சிறப்பினைச் சேக்கிழார் ''நாளும் நம்பியாரூரர் நாமம் நவின்ற நலத்தாலே ஆளும் படியால் அணிமாதி சத்தியான'' அணைந்ததோடு, முதல்வர் நாமத் தஞ்செழுத்தும் ஓதும் பாங்கும் எய்தினார். அதன் பயனாகச் சுந்தரர் கயிலை எய்தியமையினைத் தம் ஞானக் காட்சியாலறிந்து, தாமும் அவர்தம் அடியடையவிரும்பித் தம் யோகத்திறத்தால் கயிலை எய்தியதனைச் சேக்கிழார் அழகுறக் காட்டியுள்ளார். இச்செய்தியினை வியந்து, ''பெருமிழலைக் குறும்பரெனும் பரமயோகி பெரிதுவந்துன் திருவடித்தாமரையைப் போற்றி, விரை மலர்த்தூய் வந்தனை செய்கின்றான்'' என்று சிவப்பிரகாசர் பாராட்டியுள்ளார்.

'திருநாவுக்கரசு என்று கூறுவோர், செல்வம் இல்லை என இடர்ப்படார், இந்திரனே போன்று வாழ்வார், உலகியற் செல்வங்கள் நிலையா என்று உணர்வார், பிறவிக் கடலிற் புகமாட்டார், அரன்நெறி எனும் கரையினை எய்துவார் என்று, நாவுக்கரசெனும் நாம பஞ்சாட்சர மகிமையை நம்பியாண்டார் நம்பிகள் தம் திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை' என்னும் பிரபந்தத்தே' இலைமாடென்று இடர் பரியார் என்னும் திருப்பாடலிற் கூறியுள்ளார்.

திரு நாம பஞ்சாட்சரங்களை ஓதிப் பயன் கொண்ட மூன்று அடியார்களைச் சேக்கிழார் தம் புராணத்தும் காட்டியுள்ளார். அவராலும் பிறராலும் காட்டப்பெறாது அம்மந்திரங்களால் பயன் பெற்றோர் பலராவர்! சிவனடியார்களும், சிவத்தன்மையைப் புலப்படுத்தும் திருவேடமும், அவ்வகையால் அவர்கள் தம் திருநாமமும், அரன் எனவே கருதித் தொழும் மாண்பினவாகும் என்னும் தன்மையை, ''மாலற நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் ''தொழுமே'' என்னும் போதப் பெருமொழி குறிப்பினிற் புலப்படுத்துகின்றது. இந்த உண்மை வைணவத்திற்கும் பொருந்துதல் கூடும். நம்மாழ்வாரைத் தம் ஆள்வாராகக் கொண்டு, 'தேவுமற்றறியேன் குருகூர் நம்பி, பாவின் இன்னிசை பாடித் திரிவன்' என்று பாடிய மதுரகவியாழ்வார், ஏனைய ஆழ்வார்களைப் போல அரங்கப் பெருமானின் அருகிருக்கும் அருளைப் பெற்றனரன்றோ!, 'தென்குருகூர் நம்பி என்றக்கால், எண்ணிக்கும் அமுதூறும்' என்பது, மதுரகவியின் அனுபவமாகும், இறைத் திருநாமமும், இறையடியார் திருநாமங்களும் மந்திரங்களாகி நலம் பயக்கும் மாண்பு சைவம், வைணவம் முதலிய தமிழ்ச் சமயங்களுக்குரிய சிறப்பாகும்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி

உயிர் இயல்பு ஓர் ஆய்வு

கு. வைத்தியநாதன், இயக்குநர், திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்,
திருவிடை மருதூர் - 612 104.

1. தோற்றுவாய்

கடவுள், உயிர், ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை என்னும் பொருள்கள் ஆறும் தொடக்கமில் காலந்தொட்டு (அநாதியே) உள்ளன. *(1)* இவற்றுள் ''உயிர்'' என்பது ஆன்மா என்றும் வழங்கப்பெறும். அறிவு விளக்கம் பெற்ற உயிர், ஆன்மா எனப்படுகிறது.

2. உயிரின் உள்ளார்ந்த இயல்புகள்

ஒவ்வோர் உயிர்க்கும் இச்சை, அறிவு, செயல் என்னும் உள்ளார்ந்த இயல்புகள் (Innate Qualities) மூன்றும் என்றும் உள்ளன. *(2)* ஓரறிவுடைய புல் முதலிய பயிர்களுக்கும், இம்மூன்று உள்ளியல்புகள் உள்ளன. *(3)* இவ்வுண்மையைச் செயல்முறை விளக்கம் ஒன்றின் வாயிலாக நிறுவலாம்.

ஓர் அறையில் உள்ள தொட்டி ஒன்றில், ஒரு செடி (Plant) உள்ளது. அவ்வறையில் ஒளி உமிழும் மின் விளக்கு ஒன்று எரிகிறது. அந்த அறையில் இருக்கும் கதவில் சிறியதொரு துவாரம் உள்ளது. அந்த அறையைப் பூட்டி வைத்து, ஒரு வாரம் கழித்துத் திறந்து பார்த்தால், கதவுத் துவாரத்தின் வழியாக, அறையினுள் நுழையும் கதிரொளியை நோக்கி, அச்செடி சாய்ந்திருப்பதைக் காணலாம்.

இதிலிருந்து, ஓரறிவுடைய அந்தச் செடிக்குச் சூரிய ஒளியில் ''இச்சை'' நிகழ்வதையும், மின் ஒளி வேறு சூரிய ஒளி வேறு என்று வேறுபடுத்தி அறியும் ''அறிவு'' உள்ளதையும், கதிரொளியை நோக்கிச் சாயும் ''செயல்'' இருப்பதையும் தெளிவாக அறியலாம். ஆகவே, இச்சை, அறிவு, செயல் என்னும் உள்ளார்ந்த இயல்புகள் மூன்றும், எல்லா உயிர்களுக்கும் உள்ளன என்பது பெறப்படும்.

3. உயிர்கள் பல

ஒவ்வோர் உயிரின் விருப்பமும் (இச்சை Choice) வெவ்வேறு விதமாக இருக்கிறது. எனவேதான் உயிர்கள் ''பல''வாக உள்ளன. *(4)* உயிர்கள் மூவகைப்படும். அவை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப்படும். *(5)* இம்மூவகை உயிர்களும், ஒவ்வொரு வகையிலும் எண்ணில் அடங்காதனவாக உள்ளன. *(6)* ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் பற்றுள்ளது. பொருட்பற்று, அருட்பற்று, உடற்பற்று, இறைப்பற்று, உணவுப்பற்று, மனைப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, இனப்பற்று, இடப்பற்று, சொற்பற்று, கேள்விப்பற்று என்று இவ்வாறு பற்றுக்கள் பலவாறாக உள்ளன போல, உயிர்களும் பலவாக உள்ளன.

4. உயிர்க்குள்ள பல்வேறு நிலைகள்

கேவலம், சகலம், சுத்தம் என்னும் காரண நிலைகள் மூன்றும், *(7)* நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்னும் காரிய நிலைகள் ஐந்தும் *(8)* ஆக, உயிர்க்குப் பல்வேறு நிலைகளுள்ளன.

காரண நிலைகள் மூன்றனுள் ''கேவலநிலை'' என்பது, பிறவிக்கு வருமுன்பு உயிர் ஆணவ-மலத்தை மட்டும் சார்ந்து நிற்பதைக் குறிக்கும். ''சகல நிலை'' என்பது, பிறவிக்கு வந்த பிறகு ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் உயிர் சார்ந்து நிற்பதைக் குறிக்கும். ''சுத்தநிலை'' என்பது, மும்மலச் சார்பையும் விட்டுத் திருவருளை மட்டுமே சார்ந்து, பிறவி நீங்கப்பெற்ற உயிரின் நிலையைக் குறிக்கும் *(9)*.

காரிய நிலைகள் ஐந்தும், உயிர் பிறவியில் உழலும் காலத்தில், மாயாகாரியங்களோடு மருவியும் ஒருவியும் நிற்கும் பல்வேறு நிலைகளைக் குறிப்பனவாகும். *(10)* அந்நிலையில், உயிர் சார்ந்து நிற்கும் மாயா கருவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, உயிரின் அறிவு விளங்குவதும் விளங்காமல் இருப்பதுவும்

நிகழும். இவற்றிலிருந்து உயிர் தனித்து நிற்கும் இயல்புடையதன்று என்பது புலப்படும்.

5. பிறவிக்கு வருமுன்புள்ள உயிரின் நிலை

உயிர், பிறவிக்கு வருமுன்பு, அதன் அறிவும் செயலும் தொழிற்படவில்லை. *(11)* பிறவி நீங்கப் பெற்று, வீடு பேறு எய்திய நிலையிலும் அதன் அறிவும் செயலும் தொழிற்படவில்லை. *(12)* இவ்விரு நிலைகளிலும் உயிரின் இச்சை மட்டுமே தொழிற்பட்டுக் கொண்டிருந்திருக்கிறது. எனவே, பிறவிக்கு வருமுன்பு உயிரின் இச்சை ஆணவமலத்தைச் சார்ந்திருக்கிறது என்பது பெறப்படும். ''சார்தல்'' என்பது, ஏதேனும் ஒன்றைப் பற்றுக்கோடாகக் கொள்ளுதலைக் (depending on) குறிக்கும்.

ஒரு பொருளைச் சார்ந்து நிற்பதற்கு, அப்பொருளில் நமக்கு ஒருவகை விருப்பம் (Inclination) இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, இந்த உடலை நாம் பெரிதும் விரும்புகிறோம். எனவே தான், இதனைச் சார்ந்து நிற்கிறோம். இவ்வாறு விரும்பும் பொருள்களை மட்டுமே, நாம் சார்ந்து நிற்கிறோம் என்பதை அனுபவ வாயிலாக அறியலாம்.

உயிரின் உள்ளார்ந்த இயல்புகள் ஆகிய இச்சை, அறிவு, செயல்களில், அறிவும் செயலும் முறையே அறிகருவிகளாலும் செயற்கருவிகளாலுமே தொழிற்படுகின்றன. *(13)* கட்பொறி இல்லையேல் கண் தொழில் நடப்பதில்லை. கைப்பொறி இல்லையேல் கொடுக்கல், வாங்கற் றொழில் நடைபெறுவ தில்லை. இச்சையின் தொழிற்பாடு கருவிகளால் நடைபெறவில்லை. மேற்கண்ட இருவகைப் பொறிகள் இல்லாத நிலையிலும், இச்சையின் இயக்கம் நடைபெறுகிறது. எனவே அறிவும் செயலும் தொழிற்படாமைக்குக் காரணம், அநாதியே உயிர்களுக்குக் கருவிகள் வழங்கப்படாமையே ஆகும்.

ஆணவமலம், அநாதியே உயிரின் அறிவையும் செயலையும் மறைத்திருந்தது என்று கூறுவதற்குக் காரணம், உயிரின் இச்சை ஆணவமலத்தைப் பற்றிச் சார்ந்ததன் வண்ணமாம் தன்மை காரணமாக, ஆணவமலமயமாகி, *(14)* அதன் அறிவையும் செயலையும் விரும்ப இயலாமற் போனதே ஆகும்.

உயிரின் விருப்பத்திற்கு ஏற்பவே, இறைவன் உயிர்க்குப் பருவுடலை வழங்கியிருக்கிறான். இவ்வுண்மையை, ''மனம் முதலால் வந்த விகாரத்தால், வினை இரண்டும் காட்டி'' *(15)* என்றமையால் ஆய்ந்து தெளியலாம். எனவே, உயிரின் இச்சை எக்காலத்தும் தொழிற்பட்டுக் கொண்டே இருக்கிறது என்பது பெறப்படும்.

பிறவிக்கு வருதற்கு முன்னுள்ள நிலையில், உயிரின் இச்சை வேறு எதையும் சார்ந்து நிற்க இயலாமையால், ஆணவமத்தை மட்டுமே சார்ந்து நின்றது. *(16)*

பிறவிக்கு வருமுன் உயிரின் இச்சை ஆணவமலத்தைப் பற்றி நின்றமையால், உயிர்க்கு ஒருவகை மயக்கம் ஏற்பட்டது. உயிரின் அறிவு, அந்நிலையில் தொழிற்படாமல் இருந்ததால், எதை விரும்புவது என்பதை உயிர் அறியாமல் நின்றது. இதனையே, உயிரின் உள்ளியல்பு ஆகிய அறிவின் தொழிற்பாடுகளை ''ஆன்மா அநாதியே மறைத்து நிற்கும்'' என்று கூறப்படுகிறது. *(17)* அஃதாவது ஆன்மாவின் விருப்பமின்மையே அறியாமைக்குக் காரணம் என்பது பெறப்படும்.

6. பிறவிக்கு வந்த பின்புள்ள உயிர் நிலை

பிறவிக்கு வந்த பிறகு கூட, அறிவு விளக்கம் பெற வேண்டும் என்னும் விருப்பம், பெரும்பாலோர்க்கு இல்லை. பிறவி நிலையிலும் உயிர்க்கு ஆணவமலச் சார்பு உள்ளமையாலேயே, அறியாமை நீங்கப் பெறவில்லை. *(18)* முழுமையான அறிவு விளக்கத்தைத் தருவது, சைவசித்தாந்தம் ஒன்றே என்பதைத் தெளிவாகத் தெரிந்திருந்தும், பெரும்பாலோர் இதனைக் கற்பதற்கு முயற்சி செய்யவில்லை என்பதிலிருந்து இவ்வுண்மை புலப்படும். இதிலிருந்து அறியாமைக்குக் காரணம், உயிரின் இச்சை செம்மையுறாமையே என்பது பெறப்படும்.

நாம் செய்யும் தீவினைகள் பல தவறானவை என்பதைத் தெளிவாகத் தெரிந்திருந்தும், மீண்டும் மீண்டும் அத்தவற்றை நாம் செய்து கொண்டிருக்கிறோம். இதற்குக் காரணம் அறியாமையன்று. நாம் திருந்தி வாழ வேண்டும் என்னும் விருப்பம் நமக்கு இல்லாமையே இதற்குக் காரணமாகும். இதிலிருந்து,

உயிரின் விருப்பத்தை ஒழுங்குபடுத்தும் பொருட்டே, இறைவன் நமது அறிவையும் செயலையும் விளக்கும் கருவிகளை நமக்கு வழங்கியிருக்கிறான் என்பது தெளிவாகும். ஆகவேதான் உயிரின் விருப்பத்தைச் செம்மைப்படுத்துவதே அறிவின் வேலை என்கிறார் திருவள்ளுவர். *(19)* எனவே உயிரின் விருப்பம் ஒழுங்கு படுத்தப்பட்டு, தன் சார்பு நிலையை, உயிர் உணர்ந்தாலன்றி, உயிர்க்குப் பிறவி நீங்குவதில்லை. *(20)*

7. உயிரின் உண்மை நிலை பற்றியே ஆய்வு

வீடு பேற்று நிலையில், ஆன்மா அப்பணைந்த உப்பே போல், திருவருளைச் சார்ந்து, சிவமேயாய் நிற்பதே அதற்கு உண்மை இயல்பாகும். *(21)* சிவத்தின் உண்மை இயல்பு அன்பே ஆகும். *(22)* இறைவன் உயிர்கள் ஆகிய நமக்கு உடலைத் தந்ததன் நோக்கம், நமது உண்மை இயல்பாகிய அன்போடு கூடி வாழ்தல் பொருட்டே ஆகும். *(23)* உயிர்க்கும் உண்மை இயல்பு அன்பே என்பது பெறப்பட்டது. *(24)*

அன்பு என்பது, தொடர்பு உடையவரிடத்தில் காதல் உடையவனாதலைக் குறிக்கும். *(25)* காதல் என்பது விருப்பம். விருப்பம் உடையவரிடத்திலேயே நமக்கு இரக்கம் ஏற்படும். இரக்கம் என்பது அருள். அருட் குழந்தைக்கு அன்பே தாய். ஆக, அன்பிலிருந்தே அருள் தோன்றுகிறது. *(26)* சிவத்திலிருந்தே சத்தி தோன்றுகிறது. *(28)* உயிரின் உள்ளீடு அன்பு, அதன் வெளியீடு அருள் என்பது புலப்படும்.

உயிரின் விருப்பம் ஆகிய இச்சை செம்மையுற்றாலன்றி, அதிலிருந்து அருள் பிறக்காது. எனவே உயிரின் உள்ளார்ந்த இயல்புகள் மூன்றனுள், இச்சை செம்மையுறுவதே மனிதப் பிறவியின் நோக்கம் என்பது தெளியலாகும்.

8. பிறவி நீங்கிய உயிரின் நிலை

உயிரின் இச்சை செம்மையுறும் நிலையில், உயிர்க்குத் திருவருட்சார்பு பெருகும். அது பெருகப் பெருக, செயற்கையாக உயிர்க்கு ஏற்பட்ட தன்னலப்பற்று குறைந்து வரும். அந்நிலையில் உயிர் தன் உண்மை நிலை ஆகிய அன்பு வடிவாய் நிற்கும். இச்சை நிகழாத வழிச் சிவயோகம் ஆன்மாவுக்கு அனுபவமாகாது. *(29)* ஆகவே இச்சை செம்மையுறுதல் இன்றியமையாததாகும்.

அன்பு வடிவாய் நிற்கும் ஆன்மாவிற்கு இந்த உடலோடு இருக்கும் காலத்திலேயே, வீடுபேறு கிட்டி விடுகிறது. அவ்வாறு கிட்டிய வீடுபேறு, ஆன்மா உடலை விட்டு நீங்கியதும் நிலைத்து விடுகிறது. *(30)* விடவே, மீண்டும் பிறவியினுட்படும்நிலை அத்தகு ஆன்மாவிற்கு ஏற்படுவதில்லை.

வீடுபேறு என்னும் பெருநிலை அநாதியே உள்ளது. உள்ளதே சிறக்கும், இல்லது தோன்றாது என்னும் சற்காரிய வாதப்படி, என்றும் உள்ள வீடுபேற்றினையே அதற்கான பக்குவத்தைப் பெற்ற ஆன்மா பெறுகிறது. எனவேதான் உயிரின் இச்சை நிகழ வேண்டிய நிலையில் நிகழ்ந்ததும், சிவயோகம் ஆகிய பரமுத்தி, ஆன்மாவுக்கு உடலுள்ள பொழுதே கிடைத்து விடுகிறது என்று சைவ சித்தாந்தம் முழக்குகிறது.

9. நிறைவுரை

இதுவரை ஆய்ந்ததிலிருந்து, இறைவன் இந்தப் பிறவியை நமக்குத் தந்ததன் நோக்கம், நமது இச்சையை ஒழுங்குபடுத்துதல் பொருட்டே என்பது தெளிவாகும். இச்சையை ஒழுங்குபடுத்துதற்குரிய எளிய வழியைச் ''சைவர்களின் வேதம்'' ஆகிய திருக்குறள் தெளிவாக ஓதுகின்றது. திருவள்ளுவரின் உள்ளக்கிடக்கையைத் துல்லியமாகப் புரிந்து திருக்குறளைக் கற்பதே பயனுடையதாகும். ஆகவே, சிவாகமம் ஆகிய சைவசித்தாந்தக் கண் கொண்டு, திருக்குறளைப் பயின்று வருவதோடு, அதில் கூறியபடி ஆர்வம் கொண்டு ஒழுகுவோமாயின், இப்பிறவியிலேயே வீடுபேறு அடையலாம் என்பது ஒருதலை.

இக்கட்டுரையில் உள்ள குணம் கொண்டு, குற்றம் பொறுத்தருளுமாறு, அருளுள்ளம் உடையவரைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்''

மேற்கோள் நூல்கள் பற்றிய பட்டியல்

1. திருவருட் பயன் 52
2. சித்தியார் சுபக்கம் 187
3. சிவபுராணம் - அடி 26
4. சிவப்பிரகாசம் 19
5. திருவருட்பயன் 13
6. திருவருட்பயன் 11
7. சித்தியார் (சுபக்கம்) 227
8. சித்தியார் (சுபக்கம்) 222
9. சித்தியார் (சுபக்கம்) 227
10. சித்தியார் (சுபக்கம்) 224, 225
11. சித்தியார் (சுபக்கம்) 170, 210
12. சிவப்பிரகாசம் 87
13. சித்தியார் (சுபக்கம்) 151, 152
14. சித்தியார் (சுபக்கம்) 210
15. போற்றிப்பஃறொடை - கண்ணி 12, 13
16. சிவஞானபோதச்சிற்றுரை நூற்பா 4 கூறு 2
17. சித்தியார் (சுபக்கம்) 210
18. சித்தியார் (சுபக்கம்) 221
19. திருக்குறள் 422
20. திருக்குறள் 359
21. திருக்குறள் 321
22. திருமந்திரம் (காசிமடப்பதிப்பு) 270
23. திருக்குறள் 73
24. திருக்குறள் 80
25. அன்புடைமை-அதிகாரத் தலைப்பு-பரிமேலழகர் உரை
26. திருக்குறள் 757
27. சித்தியார் (சுபக்கம்) 167
28. சித்தியார் (சுபக்கம்) 239
29. சிவஞானபோதச் சிற்றுரைநூற்பா 11 கூறு 2
30. சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்பக் 565 (பொ. முத்தையாபிள்ளை)



ஞானத்தின் வகைகள்

முனைவர் **ச. கங்காதரன்,** பேராசிரியர், துறைத் தலைவர், சைவ சித்தாந்தத் தத்துவத்துறை,

மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

சைவசித்தாந்தத்தில் ஞானமே வீடுபேற்றுக்கு நேர் வாயில் என்று கூறப்படும். ஞானம் என்பது என்ன, அவற்றின் வகைகளைப்பற்றி இக்கட்டுரையில் ஓரளவு காண்போம்.

ஞானம் என்பது சரியை, கிரியை, யோகம் என்பவற்றின் விளைவாகத் தோன்றுவது.

சரியை

சரியை என்பது சிவபெருமானது உருவத்திருமேனியை மட்டும் உணர்ந்து அதனைப் புறத்தொழிலால் மட்டும் வழிபடுதல் ஆகும். திருக்கோயிலுக்குச் சென்று பொழுது புலர்வதன்முன் அலகிடுதல், மெழுக்கிடுதல், விளக்கேற்றுதல், மாலை கட்டிக் கொடுத்தல், தலையாரக் கும்பிட்டுக் கூத்தாடுதல், பாடுதல் முதலியன சரியையாகும் சத்திநிபாதம் மிக மெல்ல நிகழ்வதாகிய மந்த தரம் என்னும் நிலையில் நின்றோர் சரியைத் தொண்டினை விரும்பிச் செய்வர்.

கிரியை

சரியைத் தொண்டினைச் செய்துவந்த முதிர்ச்சியால் ஆணவமலம் மேலும் பரிபாக முற்றுச் சத்திநிபாதம் மந்தமாய் நிகழும். அப்பொழுது கிரியைத் தொண்டில் விருப்பம் உண்டாகும். கிரியையாவது சிவபெருமானது அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தின் சிறப்பு உணர்ந்து அப்பெருமானை மனம், மொழி, மெய் என்னும் மூன்றாலும் அகத்திலும் புறத்திலும் வழிபடுதல் ஆகும். இலிங்க மூர்த்தியை எழுந்தருள்வித்து, நறுமலர், புகைஒளி, திருவமுது, திருமஞ்சனம் முதலிய பூசைப் பொருள்களைத் திரட்டிக் கொண்டு, ஆகமங்கள் விதித்தபடி மெய்யன்போடு அருச்சனை செய்து, தியானித்து வழிபடுவது என இதை விளக்கலாம்.

யோகம்

கிரியைத் தொண்டினால் ஆணவமலம் மேலும் பரிபாக முற்றுச் சத்திநிபாதம் தீவரமாய் நிகழும். அந்நிலையில் இறைவன் அருவத் திருமேனியை உணரும் பக்குவத்தைப் பெற்று அகத் தொழிலால் மட்டும் வழிபடுதல் யோகம் ஆகும்.புறத்தே பரந்து செல்லும் மனத்தை அவ்வாறு செல்லாதவாறு அடக்கி அகத்தே நிறுத்தி ஒளி வடிவினனாகிய இறைவனோடு ஒன்றச் செய்தல் என இதனை விளக்கிக் கூறலாம்.

இத்தகு சரியை, கிரியா, யோகங்கள் ஆகிய தவத்தினைப் பொருள், புகழ் முதலிய உலகப் பயன்களைக் கருதாது, சிவபிரானிடம் கொண்ட அன்பு ஒன்றே காரணமாகச் செய்து வரின் அத்தவமுதிர்ச்சியால் இருவினை ஒப்பு உண்டாகும்.

நல்வினையாகிய இன்பத்தில் விருப்பும், தீவினையின் பயனாகிய துன்பத்தில் வெறுப்பும் கொள்ளாது, அவற்றில் உள்ளம் வேறுபடாது, இரண்டையும் ஒன்று போலக் கருதி அவற்றின்மேல் பற்றுச் செய்யாது நிற்கும் உணர்வே இருவினை ஒப்பு எனப்படும்.

இருவினை ஒப்பு நிகழவே, வினை நீங்கும். வினை நீங்கவே, உயிரறிவு உள்ளவாறு விளங்கும்; உணர்த்தியதை உணர்த்தியவாறே உணரும் தன்மையைப் பெறும். உணர்த்தியதை உணர்த்தியவாறு கொள்ளும் அறிவு நிலையே பக்குவம் எனப்படுகிறது. இதுவே ஞானத்தை உணர்தற்கேற்ற பருவம். சிவபிரான் குருவாக வந்து உண்மையை உணர்த்தி அருள்வார்.

''விரும்பு சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே''

என்று தாயுமானவர் பராபரக்கண்ணியில் அருள்கிறார். இப்பாட்டில் சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றை ஞானம் பெறுதற்குரிய படிகளாகமட்டும் தாயுமானவர் குறிப்பிடவில்லை. ஞானம் பெறுதற்குரிய படிகளும் ஒருவகையில் ஞானமே என்று கூறுகிறார். மேலும் இவை உண்மையில்

மெய்ஞ்ஞானம் நான்கு என்றே தாயுமானவரால் அழைக்கப்படுகின்றன. ஆகவே சரியை, கிரியை, யோகம் என்பவைகளை ஞானத்தின் வகைகளாகக் கருதலாம்.

காரைக்கால் அம்மையார் கருத்து

அம்மையார் அற்புதத் திருவந்தாதியில் நூலறிவு, நுழைவறிவு என்று அறிவின் இருவகைகளை அறிவிக்கிறார். நூலறிவு பதி, பசு, பாசம் பற்றிய கருத்துக்களை ஐயம், திரிபு அறக் கற்றல். நுழைவு அறிவு என்பது கற்றவற்றை நம் நடைமுறை வாழ்வில் கொண்டுவந்து செயல்படுத்தும் நடைமுறை அறிவாகும். அனுபவ அறிவு எனப்படும் நுழைவறிவே நமக்கு வேண்டற்பாலது என்பதை அம்மையார் பின்வருமாறு கூறுகிறார்.

''நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக
நீலமணி மிடற்றான் நீர்மையே - மேலுலந்த
தெக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே யாம்

- அற்புதத் திருவந்தாதி 33

அருள்நந்திசிவம் கருத்து

அருள்நந்திசிவம் சிவஞான சித்தியாரின் முதல் சூத்திரத்தில் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்று நான்கு வாக்குகளை விளக்கி, இவை சுத்தமாயையின் காரியம் என்று விளம்புகிறார். சூக்குமை வாக்கின் விருத்தியாகிய பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் இவற்றுக்கே அழிவுண்டு. சூக்குமை வாக்கு அழியாமல் நிலைபெறும். தவ விசேடத்தால் அதனை உள்ளபடிக் காணப்பெறுவார்க்குச் சுத்தமாயா புவனத்தில் உண்டாகும் அபர முத்திப் பெரும்போகமுண்டாம். சிவஞான முனிவர் இப்பகுதிக்கு விளக்கம் எழுதும்போது தன்னை (சூக்குமையை) உள்ளபடிக் காணுதலாவது, அதிசூக்கும வாக்கினை வியஞ்சக ஓசைபற்றித் தூலமாய்க் காணும் நம்மனோர் போலன்றி, நம்மனோர்க்குக் குடம், பட முதலியன காட்சிப் புலனாமாறு போலத் தன்னியல்பான் இனிது விளங்கக் காண்டல் என்று எழுதுகிறார். மூவகை அணுக்களுக்கும் முறைமையின் விந்துஞானம் பொருந்தவில்லை எனில், உயிர்கட்கு ஞானம் தோன்றா. இந்த விந்து ஞானம் தன்னின் வேறாகக் காணப்பட்டு நீங்க, அதற்கு மேலாகிய பேரறிவு ஒருவனுக்கு விளங்குமாயின், அவன் அப்பொழுதே பரமுத்தியைத் தலைப்படுவன். சித்தியார் ஒன்பதாம் சூத்திரத்தில் பாசஞானம், பசு ஞானம், பதிஞானம் பற்றி விளக்குகிறார். கருவிகள் மூலம் ஆன்மாவுக்கு வருகிற ஞானம் பாசஞானம். இந்த ஞானம் யாருக்கு வருகிறது என்ற கேள்விக்கு விடையாக ஆன்மாவுக்கு என்று கூறும் விடை தவறல்ல ஆயினும் முழுமையானது அல்ல. இறைவன் திருவருளை மறந்து ஆன்மாவுக்கு ஞானம் வருகிறது என்ற அறிவு பசுஞானம். கேவல நிலையில் ஆன்மாவுக்கு அறிவு இல்லை, உடல், கருவி, உலகு, நுகர்ச்சிப் பொருள்கள் (தநு, கரண, புவன, யோகம்) ஆகியவற்றைச் சிவபிரான் அருளால் ஆன்மா பெறுவதால் அறிகிறது என்று சிவபிரான் அருளை நினைந்து ஆன்மாவுக்கு அறிவு வரும் நிலையை - சிவபிரான் திருவருளை நினைந்து ஆன்மாவுக்கு அறிவு வருகிறது என்று அறிவது பதிஞானம், சிவஞானம், அருள்ஞானம் என்றெல்லாம் அழைக்கப்படும். பாசஞான, பசுஞானத்தால் காட்சிப்படாத சிவபிரான் பதிஞானத்தால் விளங்குவான் என்பதை அருள் நந்திசிவம் மெய்கண்டாரை அடியொற்றி விளக்குகிறார்.

சுவேதாசுவதர கருத்து

ஒரு மரக்கிளையில் இரு பறவைகள் உள்ளன, ஒரு பறவை பழத்தை அருந்துகிறது, அருகில் உள்ள மற்ற பறவை பழத்தை அருந்துகிற பறவையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறது என்ற சுவேதாசுவதரக்கருத்து ரிக்வேதத்திலும் வேறு இடங்களிலும் வருகிறது. பழத்தை அருந்துகிற பறவை ஆன்மா, பழத்தை அருந்துதல் ஆன்மா வினையை நுகர்தல், அருகில் பார்த்திருக்கும் பறவை இறைவன், இறைவன் பழத்தை அருந்துகிற பறவையைப் பார்த்திருத்தலுடன் வினையைக் கழிப்பதற்கு வழியையும் காட்டுகிறான் என்று சிறிது விளக்கி வேத-உபநிடதக் கருத்தைத் திருமந்திரத்தில் பின்வருமாறு அருள்கின்றார்:

''அன்னம் இரண்டுள ஆற்றங்கரையினில்
துன்னி இரண்டும் துணைப்பிரியாது அன்னம்
தன்னிலை அன்னம் தனியொன்றது என்றக்கால்
பின்னமடவன்னம் பேறணுகாதன்றே''.

சுவேதாசுவதர கருத்தை முழுமையாக உணர்ந்தால்தான் திருமூலரின் கருத்தைப் பொருளுள்ள வகையில் விளங்கிக் கொள்ள இயலும்.

அப்பர் அடிகள் திருவானைக் கோயில் திருப்பாட்டின் பொருளைப் புரிந்து கொள்ளுவதற்கும் மேற்கூறிய வேத, திருமந்திரப் பின்னணி முக்கியமானதாகும். அப்பாட்டு

''திருகு சிந்தையைத் தீர்த்து செம்மை செய்து
பருகி ஊறலைப் பற்றிப் பதமறிந்து
உருகி நைபவர்க்கு ஊனம் ஒன்று இன்றியே
அருகி நின்றிடும் ஆனைக்கா அண்ணலே''

ஆனைக்கா அண்ணல் அருகுநின்றிடும் என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ள இந்தப் பின்னணி இன்றியமையாததாகும்.

உமாபதி சிவம் கருத்து

உமாபதி சிவம் உயர்ஞானம் இரண்டு என்று கூறி, முண்டக உபநிடதத்தில் (1.1.5) வரும் பரஞானம், அபர ஞானம் (பரவித்தை, அபரவித்தை) கருத்தை விளக்கும் வகையில் தெரிவிக்கிறார்.

''கிரியை என மருவும் அவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தம்.....உயர் ஞானம் இரண்டாம் மாறா
மலமகல அகலாத மன்னுபோதத்
திருவருள் ஒன்று ஒன்று அதனைத் தெளிய வோதும்
சிவாகமம் என்று உலகறியச் செப்பும் நூலே''
- சிவப்பிரகாசம், 10.

ஆணவமலம் அகலுமாறு உதவும் சிவபிரான் திருவருள் பரஞானம். இத்தகு பரஞானத்தைத் தெளிய ஓதும் சிவாகமம் அபரஞானம் என்று உமாபதி சிவம் விளக்குகிறார்.

சேக்கிழார் பெருமான் திருஞானசம்பந்தர் ஞானம் பெற்றபோது நால்வகை ஞானத்தை அவர் பெற்றதாக அருள்வதைத் தெரிவிக்கும் பெரியபுராணப் பாட்டு :

'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலை ஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்''

திருவடியைச் சிந்திக்கும் சிவஞானம், பிறப்பை முழுமையாக மாற்றும் ஓங்கிய ஞானம் உவமையிலாக் கலைஞானம், மெய்ஞ்ஞானம் என்னும் நான்கு ஞானங்கள் சேக்கிழாரால் தெரிவிக்கப்படுபவை.

அறிவு என்பது செயல்பாட்டுக்கு வரவேண்டும் அகளமாயாரும் அறிவரிதாகிய மெய்ப்பொருள் நமக்குச் செய்துவரும் உதவிகளை நாம் மறவாமல் பழைய பழக்கத்தைத் தவிர்த்து, நமது நடைமுறை வாழ்வே ஞானத்தின் வெளிப்பாடாக ஆதல் வேண்டும். இது திருவுந்தியார் வெளிப்படுத்தும் ஞானத்தின் வகையாகும்.

திருவருட்பயன்

(ஒரு திறனாய்வு)

பேராசிரியர்
வை. முருகேசன்
மெய்கண்டான் பண்ணை
திருவத்திபுரம் - 604407

சைவசித்தாந்த நூல்கள் பதினான்கனுள் எட்டாவதாக வைத்துச்சொல்லப்படும் நூல் திருவருட்பயன் என்பது. இதனை அருளிச் செய்தவர் கொற்றவன்குடி உமாபதி சிவனார் ஆவர். கொற்றவன்குடி என்பது அவர் வாழ்ந்த ஊர்.

மெய்கண்ட சந்தான குரவர் வரிசையில் நான்காமவராக வைத்துச் சொல்லப்பட்டவர் உமாபதி சிவனார். இப்பொழுதுள்ள திருத்தருமபுர ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனம் முதலான சைவ மடங்கள் பலவும் மெய்கண்ட சந்தான வரிசையில் வந்தனவேயாம்.

சாத்திர நூல்கள் பதினான்கனுள் எட்டுநூல்களைச் செய்த பெருமை உமாபதி சிவனார்க்கு உண்டு. கோயில் என்று போற்றப்படும் பெருமையுடைய தில்லையம்பதியின் எல்லையில் வாழ்ந்த பெருமையும் இப்பெரியார்க்கு உண்டு.

உமாபதி சிவனார் நூல்களில் மிகவும் சிறப்பாக மதித்துப் போற்றப்படும் நூல் திருவருட்பயன் என்பது. அது குறள்வெண்பா யாப்பினால் அமைந்தது. பத்துத்தலைப்புக்களை உடையது. தலைப்புக்குப் பத்துக்குறள்களாக நூறுபாக்களால் நிறைவு பெற்றது. திருக்குறளில் வரும் அதிகாரங்களைப் போலவும் அத்தலைப்புக்களைக்கருதலாம். ஆனால் திருக்குறள் போலப் பால் வகுப்பு நூலில் இல்லை. முன்னுள்ள நான்கு அதிகாரங்களையும் பாயிரமாகவோ பிறப்புப் பாலாகவோ கருதினால் பின்னுள்ள ஆறு அதிகாரங்களையும் வீட்டுப்பாலாகக்கருத இடமுண்டு. அவ்வாறாயின் திருவருட்பயன் நூல் பிறப்பும் வீடும் அமையச் சமைந்த ஒரு முழுநூல் என்பதில் தடையொன்றும் இராது.

நூலில் வரும் அதிகாரங்கள் பத்தும் பின்வருவன. அவை,

பதிமுதுநிலை
உயிரவைநிலை
இருள்மலநிலை
அருளது நிலை
அருளுரு நிலை
அறியும் நெறி
உயிர் விளக்கம்
இன்புறு நிலை
அஞ்செழுத் தருள்நிலை
அணைந்தோர் தன்மை

என்பன. இவற்றுள் முதல் மூன்றும் சித்தாந்தக் கருப்பொருள்களாம் பதிபசுபாசம் என்பவற்றை முறையே விளக்கும் அதிகாரங்களாம். அவற்றைச் சிவஞான போத நூலாசிரியர் நூல் நடுவேயுள்ள ஆறு ஏழாம் சூத்திரங்களால் அசத்தும் சத்தும் சத்தசத்துமாய் வரை செய்து உணர்த்தினார். இந்நூலாசிரியர் அவற்றை நூல் முதலில் வைத்து உணர்த்தினார் இருள் மலநிலையில் இறுதிக்கண்ணவாகிய இரண்டு குறள்களே பாகமாகிய மாயையைக் குறித்து விளக் கின. ஒழிந்த எட்டும் இருள் மலத்தின் கொடுமையே கூறின, அதுவும் ஓராற்றால் உயிர்க்குப்பாசமாய்க் கருதப்படுதலான்.

நான்காவதாக வந்த அதிகாரம் அருளதுநிலை என்பது. அது நூலின் கருப்பொருளாய் விளங்கும் இறைவனது திருவருளின் இறப்பையே பேசுவது. அந்த அதிகாரம் ஆன்மாக்களது பிறப்பு

நிலையினைப்பலபட விரித்துக் கூறுவதாகவே உள்ளது. பிறப்பு நிலையில் உள்ள ஆன்மாக்கள் இறைவனருளில்தான் வாழ்ந்தனவாயினும் அவ்வருளைச் சிறிய அளவிலேனும் பழகிக் கொள்ளாமல் வறிதே உலகைச் சார்ந்து வாழ்ந்து பிறப்பின் பயனை இழந்து போகின்றனவே என்று ஆசிரியர் இரக்கத்துடன் நெகிழ்ந்து கூறுவதாகவே அந்த அதிகாரம் அமைந்துள்ளது. அதனால் நூலின் முதல் நான்கு அதிகாரங்கள் பிறப்பியல் என்றே கருதப்பட்டன. ஒழிந்த ஆறும் வீட்டியலே கூறின.

ஐந்தாம் அதிகாரமாக வந்த அருளுரு என்பது இறைவனது குருவடிவேயாம். பிறப்புநிலையில் உயிர்கள் உலகையே சார்ந்து வாழுங்கால் எப்படியோ தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகப் பெற்றுச் சரியை முதலான மூன்று தவங்களையும் செய்து அத்தவப்பயனால் இறுதியாக ஒரு நல்ல குடியில் வந்து பிறப்பன. நற்றவப்பயனாலும் நற்குடிச்சார்பாலும் இருவினை ஒப்பு என்னும் சமனிலை உணர்வு வாய்க்கப்பெறுவன. அதுதான் உயிர்களுக்குப் பக்குவநிலை ஆகும். அதை உணர்ந்த முதல்வன் குருவாகி அவ்வுயிர்களை விரையவே உணர்த்த வருவான். அதுவே இங்கு அருள் உரு எனப்பட்டது.

இறைவனால் உணர்த்தப்படும் ஞானத்தை உயிர்கள் அறிவது இங்கு அறியும் நெறி ஆயிற்று.

ஞானத்தை உணர்ந்த ஆன்மாக்கள் முதலில் தாம் சார்ந்துள்ள உடம்பின் வேறாயும் தாம் சார்ந்துள்ள இறையின் வேறாயும் தம்மைத் தனி ஒரு பொருளாகப் பிரித்து உணர்வதே ஆன்மப்பிரகாசம் அல்லது ஆன்ம தரிசனம் ஆம். அதுவே இங்கு உயிர் விளக்கம் எனப்பட்டது.

உயிர்விளக்கம் எய்திய சுத்தான்மாக்கள் தம்மை உணர்ந்த உணர்வு நெறியாலே தம் தலைவனையும் சிந்தையிலே தேடிக்கண்டு உணர்ந்து இன்புறும். அது இங்கு இன்புறுநிலை ஆயிற்று.

அந்த இன்பம் சிவஞானிகளுக்குத் திருவைந்தெழுத்தைக் கணிப்பதாலும் உண்டாமாதலின் திருவைந்தெழுத்தின் சிறப்புக்களை விவரிக்கும் அதிகாரம் அஞ்செழுத்தருள் நிலை ஆயிற்று.

இறுதியாக அந்தச் சிவஞானிகள் இறைவனோடு பிரிவின்றி ஏகனாகியே நின்று நிட்டையில் இறைவனை அணைந்து ஒன்றாம் தன்மை எய்துவர். அவர் இயல்பு கூறும் இறுதி அதிகாரம் அணைந்தோர் தன்மை எனப்பட்டது. இந்த அதிகாரத்தோடு நூல் நிறைவு எய்துகிறது.

இதுகாறும் நூலின்கண் உள்ள அதிகார அடைவு குறித்து ஒரு திறனாய்வு செய்தோம். இனி நூலுக்குள்ளும் சிறிது நுழையலாம்.

உலகப் பொதுமறை அருளிய வள்ளுவர் வழிநின்றே இந்நூலாசிரியர் தாமும் ''அகர உயிர்போல் அறிவாகி எங்கும் - நிகரில் இறை நிற்கும் நிறைந்து'' என்று நூலைத்தொடங்கினார். அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி-பகவன் முதற்றே உலகு என்பது வள்ளுவர் அருளிய பொதுமறை. அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர்இன்றேல் - இக்கிரமத்தென்னும் இருக்கு!! என்பது மெய்கண்டார் அணுகிய முறை. இதனால் உண்மை அனைவர் வாயிலிருந்தும் ஒருபடித்தாய் வெளிப்பட்டதை உணரமுடிந்தது.

கடவுள் வாழ்த்து அதிகார முடிவில் பிறவிப்பெருங்கடலைக் கடத்தற்கு இறைவனடியைத் தெப்பமாக்கினார் வள்ளுவர். பதிமுதுநிலை அதிகாரத்து முடிவில் பிறவிநோயை ஒழித்துக்கொள்ள இறைவனை மருந்தாக்கினார் இந்நூலாசிரியர்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்
இது திருக்குறள்.

உன்னும் உளது ஐயம் இலது உணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து.
இது திருவருட்பயன்.

உணர்வில் உணர்வாய் ஓவாது மன்னுபவம் தீர்க்கும் மருந்து உன்னும் - உன்னிலும் உளது, ஐயம் இலது என்று அங்கு முடிக்க வேண்டும். உன்னிலும் உளது என்ற எச்சவும்மையால் என்னிலும் உளது

என்றும் அனைவரிலும் உளது என்றும் பொருள் காணவேண்டும். திருக்குறளோடு இந்த ஒற்றுமையும் உளங்கொளற்பாலது.

இறைவன் உலகில் எங்கும் உடனாயும் வேறாயும் நின்றான் என்பது ஒரு சைவ சித்தாந்த உண்மை. ''வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம்மிழலையே'' என்பது பிள்ளைப் பெரியவர் அருள்வாக்கு. அந்த உண்மையை மூன்றே சொற்களால் உவமையும் பொருளும் தோன்ற விளக்கிய இந் நூலாசிரியர் திறன் போற்றுதற்கு உரியது.

எங்கும் எவையும் எரி உறுநீர்போல் ஏகம்
தங்குமவன் தானே தனி!!

என்பது அந்த அருட்பா. எரி உறுநீர் என்பது அங்குச் சிலேடைப் பொருள் பயந்தது. நெருப்பில் சூடுபோல உலகில் உடனாய் நின்ற இறைவன் தானே கொதிநீரின் சூடுபோலப்பிரிந்து வேறாயும் நிற்பனாம் என்றே அங்குப் பொருள் காணவேண்டும். நெருப்பின் சூடு இறைவன் உடனாய் நின்றதற்கு உவமை. கொதிநீரின் சூடு அவன் பிரிந்து வேறாதற்கு உவமை. இந்தப் பொருளை எமது திருவருட்பயன் - விளக்கவுரை நூலில் கண்டு தெளியலாம்.

உயிர்க்கு இறையறிவு வாய்த்தாலன்றி உயிரில் கலந்துள்ள இறையையோ மலத்தையோ மாயையையோ உணர முடியாது. அவற்றைத் தீரவுணர்ந்தாலன்றி வீட்டு நெறியிற் சென்று இறையருளில் தோயவும் முடியாது என்ற கருத்தைப் பிறிதுமொழிதல் அணியால் ஒரு அருட்பாவால் விளக்குவார் ஆசிரியர். அது,

''ஒளியும் இருளும் உலகும் அவர் கண்
தெளிவு இல் எனின் என் செய!!

என்பது. விரிந்த கண்ணிடத்துத் தெளிந்த பார்வை இல்லை என்றால் ஒளியையோ இருளையோ உலகையோ அறிய முடியாது என்பது அந்தப்பாவிற்குப் பொருள். உயிர்க்கு மெய் அறிவு வாய்க்கவில்லை என்றால் இறையையும் மலத்தையும் மாயையையும் அறிய முடியாது என்பது அங்கு வந்த பிறிது பொருள்.

ஆணவமலத்தின் கொடுமையைக் கூறவந்த போது நகைச்சுவை தோன்ற வேடிக்கை யாகப்பாடுவதும் ஆசிரியர்க்குக் கைவந்த திறனாய் இருந்தது.

''பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக் குண்டென்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு''

என்பது அந்தக் குறட்பா. மலமாகிய பெண் ஆனவள் உயிர்களாகிய கணவர் பலரையும் தோய்ந்தாலும் அவள் கற்பு என்றுமே கெட்டதில்லை. எவ்வாறெனில் அவள் தனது கற்பு என்னும் மரும உறுப்பினைக் கணவன்மார்களில் ஒருவருக்கேனும் இதுநாள் வரை காட்டியதில்லை. அவள் அவர்களைப்புணரும் போதே அவர் தம்மையும் மறந்து உறக்கத்தில் ஆழ்ந்து விடுவர் ஆதலால் அவள் கற்புக்கு ஒருநாளும் பங்கம் ஏற்பட்டதில்லை என்று சமத்காரம் தோன்றவே கூறினார் ஆசிரியர்.

அருளின் சிறப்பை மேலும் கூறவந்தபொழுது வஞ்சப்புலன் வழியே ஓயாது அலைந்து திரிகின்ற உலகமாந்தர் இறைவனது அருளில்தான் முழுக்க முழுக்க வாழ்கின்றனர் என்றாலும் அவ்வருளைப் புரிந்துகொள்ளாமல் வறிதே காலம் போக்குகின்றனரே! அவர்களை அறிவு இல்லாத மூடர் என்பதா? அல்லது கண்ணில்லாத குருடர் என்பதா? என்னவென்று சொல்வது? என்று சாடுகிறார். அது

''வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்து இருளாம்
கள்ளத்து அலைவர் கடன்''

என வருவது.

வெள்ளத்துள் நீந்துபவர் அருகில் இருந்த நீரை அள்ளிப்பருகித் தாகம் தணியலாம். அது செய்யாமல் அவர்கள் தாகத்தால் நாவுலர்ந்து வருந்துகிறார்கள் என்றால் உண்மையில் அவர்கள் அறிவு இல்லாத

மூடராகத்தான் இருத்தல் வேண்டும். எங்கும் பொழுது நன்றாக விடிந்த பின்னும் அறையில் இருந்தவர் இருளிலே கிடந்து வருந்துகிறார்கள் என்றால் அவர்கள் உண்மையில் கண்ணில்லாத குருடராகத்தான் இருத்தல் வேண்டும். இறைவனருள் உலகில் பல வழியால் உணர்த்தி நிற்கவும் அதனை உணர்ந்துகொள்ள மாட்டாத மனிதரை மூடர் என்றும் குருடர் என்றும் சொல்வது சரிதானே!

உடம்பிற்கு வரும் வாதம் முதலான நோயினை உடம்பிற்குள் இருந்த உயிரே அறிந்துபோக்குகிறது. உயிருக்கு வந்த பிறவி நோயினை அவ்வுயிருக்குள் உயிராய் இருந்த முதல்வனே அருட்குரவனாகி வந்து போக்குவன். அவ்வாறு வந்தவனை இறைவனாகத்தான் உணர வேண்டுமே தவிரச் சகத்தவருள் ஒருவனாக அவனை எண்ணவே கூடாது என்ற கருத்தினை

''அகத்துறு நோய்க்கு உள்ளின ரன்றி அதனைச்
சகத்தவரும் காண்பரோ தான்''

என்ற அருட்பாவால் இதமாக எடுத்துரைத்தார்.

வீட்டு நெறி என்பது எல்லோருக்கும் இன்பமாய் இராது. பக்குவப்பட்ட மனமுடைய ஒரு சிலர்க்கே அது இன்பமாகத் தோன்றும் என்பதைப் பித்தத்தில் இருந்தபோது ஒருவனுக்குப் பாலும் கசக்கவே செய்யும். ஆனால் பித்தம் தவிர்ந்த பின் முன்னர்க் கசந்த பாலும் இனிக்குமன்றோ என்று கூறி விளக்கினார்.

பொருளின் இழிவையும் அருளின் உயர்வையும் இதுவரை யாரும் சொல்லாத முறையில் எடுத்துச் சொல்லி விளக்கினார் ஆசிரியர்.

கையில் பொருளை வைத்துக் கொண்டு உறங்கும் ஒருவன் உறக்கத்தில் கைப்பொருளை நழுவவிட்டு வருந்தவே செய்வான். அருளிலே தோய்ந்து நிட்டையில் உறங்கும் சிவஞானி அந்த அருளை ஒருபோதும் நழுவ விடான். மாறாக அந்த அருளால் அந்த உறக்கத்திலும் அவன் இறையின்பத்தை அனுபவித்துக்கொண்டுதான் இருப்பன் என்கிறார் ஆசிரியர். அது,

''ஒண்பொருட் கண் உற்றார்க்கு உறுபயனே அல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போல் காண்!

எனவருவது. இந்த அருட்பாவில் உறுபயனே காண் எனவும் கைப்பொருள்போல் அல்லது காண் எனவும் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் காண்க.

திருவைந்தெழுத்தை உச்சரிக்குங்கால்பாக எழுத்துக்களை நீக்கியும் உச்சரிக்கலாம் என்கிறார் ஆசிரியர். அது சிவாய சிவாய சிவாய என உச்சரிப்பது. அவ்வாறு தொடர்ந்து உச்சரிக்கும்போது உயிரானது அருளுக்கும் சிவத்திற்கும் இடையே அகப்பட நிற்கும். அதுவே அவ்வுச்சரிப்புக்குப் பயனாம். ஆனால் குருவின் உபதேசத்திற்குப் பிறகே அவ்வாறு உச்சரிக்க வேண்டும் என்கிறார்.

இடைச் சாத்திர நெறிக்கண் சென்ற சிவஞானியர் இறுதியாகத் தோத்திர நெறியிலும் நின்று தமது ஞான வாழ்வை நிறைவு செய்து கொள்ள வேண்டும் என்பது முதனூல் செய்த ஆசிரியர் மெய்கண்டார் கோட்பாடு. அது ''மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரன்எனத்தொழுவான் சிவஞானி'' எனவரும் சிவஞானபோதப்பன்னிரண்டாம் சூத்திரத்தால் அறியப்பட்டது. அந்த மரபு மீறாமலே இந் நூலாசிரியரும்

கள்ளத்தலைவர் துயர் கருதித் தங்கருணை
வெள்ளத்தலைவர் மிக

என்று கூறி நூலை முடித்தார். அவ்வருட்பாவிற்கு என்ன பொருள்?

சிவஞானியர் உலகியல் கடந்த பெற்றியரே என்றாலும் வஞ்சப்புலன் வழியொழுகும் உலகமாந்தரின் துயர் துடைப்பான் வேண்டி உலகியற்கண் தாழவந்து இறைவனது கருணை வெள்ளத்தில்

தோய்ந்து திளைத்தவாறே சிவனடியார்களையும் சிவாலயங்களையும் சிவனாகவே கண்டு வழிபடற் பொருட்டு அவர்களைத்தேடி ஊர் ஊர் தோறும் ஓயாது அலைந்து திரிவர் நால்வர் நாயன்மார் களைப்போல என்றே அந்த அருட்பாவிற்குப் பொருள் காணவேண்டும்.

திருவருட்பயன் நூலுக்கு உரைகள் பலவிருந்தாலும் நூல் கற்பார்க்குத்தாகம் தணியவில்லை என அறிந்ததால் அந்த நூலுக்கு யாமும் ஓர் உரை செய்தனம். ''திருவருட்பயன் விளக்கவுரை'' என்ற பெயரில் அஃது அண்மையில் மெய்கண்டான் பண்ணையில வெளிவந்தது. நூல்கற்பவரின் தாகத்தை அது உறுதியாகத்தணிக்கும் என்று கூறி அமைகின்றேன்.

With the best compliments from

★

RAMESH IRON & STEEL COMPANY

★

234, 235, Thiruvenkateswamy Road,
P.B. No. 1024, R.S. Puram
Coimbatore - 641 002

திருவாசகத்தில் மணிவாசகர்

பேராசிரியர் முனைவர் கு. சுந்தரமூர்த்தி
அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம், மயிலாடுதுறை - தமிழ்நாடு.

இற்றைக்கிருக்கும் சமயங்களுள் தொன்மையும் தலைமையும் சான்ற சமயம் நம் சைவசமயம் ஆகும். இதற்கென அமைந்த அருள் நூல்களில் பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்ந்நூல்களும் முதன்மை உடையனவாம். இவற்றுள் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் அருளிய அருளாளர் மாணிக்கவாசகர் ஆவார். இவர்தம் வரலாறு அறிதற்குக் கல்லாடம் முதல், திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் நூல் வரை கருவியாக இருப்பினும், அவை கொண்டு முழுமையும் தெளிவும் பெற இயன்றிலது. ஆதலின் மணிவாசகர் அருளிய திருவாசகத்தைக் கொண்டே அறிய முற்படுதல் ஒராற்றான் உறுதியும் தெளிவும் பயக்கும். திருக்கோவையார் 400 பாடல்களைக் கொண்டது. அவற்றுள் மணிவாசகரின் வரலாறு பற்றி அறிதற்கு ஏதும் கருவியின்று. தில்லையில் அருளப் பெற்றது என்பது தெளிவாகிறது. கூத்தப்பெருமான் எழுந்தருளியிருக்கும் சிற்றம்பலத்தினருகே திருமால்கோவில் இருப்பதைக் குறிக்குமாற்றான், ஒருவாறு அவர் காலம் அறியவும் துணை ஆகின்றது. வேறு பிற செய்திகள் அறிதற்கு வாய்ப்பின்று. திருவாசகத்தில் அடிகள் தம் அனுபவங்களை ஆங்காங்கெல்லாம் குறித்துச் செல்லுதலின் அவர்தம் வரலாறு அறிதற்குத் துணையாகின்றது.

தோற்றம்

அடிகள் தோன்றிய ஊர் வாதவூர் என அனைவராலும் குறிக்கப்பெறுகின்றது. திருவாசகத்தில்

''வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்''[1]

என்றொரு குறிப்பைக் கீர்த்தித் திருஅகவலில் குறிப்பிடுகின்றார். இது, நேரிடையாக அடிகள் தோன்றிய ஊர் இதுவென உறுதிப்படுத்தாவிடினும், திருவருட்குறிப்பால் விரைவில் குதிரை வரும் என மன்னனிடம் தெரிவித்த அடிகள், ஒரு முறை திருவாதவூருக்குச் சென்றருளிய போது இவ்வனுபவம் பெற்றிருக்க வேண்டும் எனக்கருத இடனுளது.

பெற்றோர்

அடிகளின் தாயார் பெயர் சிவஞானவதி என்றும், தந்தையார் பெயர் சம்புபாதாசாரியார் என்றும் பிள்ளையவர்கள் தாம் இயற்றிய பெருந்துறைப் புராணத்தில் கூறுகின்றார். வடமொழி ஆலாஸ்யம் தந்தையார் பெயர் சுந்தரநாதர் எனக் குறிக்கின்றது. இவற்றிற்கு ஏதும் சான்றில.

இனம்

அடிகளின் குலம் ஆதிசைவ குலம் என்றும், அமாத்திய குலம் என்றும், பார்ப்பனர் குலமென்றும் பலவாறாகக் கூறுகின்றனர். இவற்றிற்கு ஏதும் சான்றில. அடிகள்,

''வைத்த நிதிபெண்டிர் மக்கள் குலங் கல்வியென்னும்
பித்த உலகிற் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ'[2]

என உலகின் மேல் வைத்தும்,

'சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தருமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவதில்லை கண்டேனே'[3]

எனத் தமக்கு இறைவன் அருளிய பாங்கைத் தம்மேல் வைத்தும் கூறுதலின் இது பற்றி எண்ணவேண்டுவதின்று. கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்? எனவரும் வினாவிற்கு, விடையின்மை கண்டு அமைதி பெறலாம்.

கல்வி

அடிகள் மிகச்சிறந்த கல்வியறிவு உடையவர். சிறந்த மதிநுட்பமும் உடையவர்.

'கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்'[4]

'வேண்டேன் புகழ் வேண்டேன் கல்வி'[5]

'கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்'[6]

என வரும் அவர் திருவாக்கால் இவ்வுண்மையை அறியலாம். இக்கல்விதானும் அருளியல் உணர்வை விளைவியாதாயின் அது பயனின்று என்பதை அறிதற்கு ஏதுவாகப்

'புழுக்கள் உடைப் புன் குரம்பைக் கொல்லாக் கல்வி ஞானமிலா
அழுக்கு மனத்தடியேன்'[7]

எனத் தம்பால் வைத்து விளக்கியருளுவதும் காணலாம்.

பணித்தகுதி

அடிகள் மாண்புமிகு அமைச்சராக இருந்தமை நேரிடையாகக் காண்டதற்கு உரிய சான்று இன்றேனும் உய்த்துணர்ந்து கொள்ளுவதற்கு ஏதுவான சான்றுகள் பல உள்ளன. மதிநுட்பம் நூலோடு உடைமையே அக்காலத்து அமைச்சராதற்கு உரிய தகுதிகளில் தலையாயதாகும். அவ்வகையில், முன் கல்வித் தகுதி குறித்துக் காட்டிய சான்றுகள் அனைத்தும் இங்கு நினைவு கூரலாம். அவையன்றி,

'வேண்டேன் புகழ்'[8]

'செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்'[9]

என வருவனவற்றால் புகழும் செல்வமும் பொருந்த அடிகள் வாழ்ந்தமை புலனாகின்றது. அச்செல்வந்தானும் அவர்தம் பணியும் தகுதியும் கருதி அரசன் வழங்கிய செல்வமன்றிப், பிறவாற்றான் வந்தது அன்று என்பதும் அடிகள் தம் உள்ளத்திலிருந்து வெளிவந்த திருவாசகத்தால் முழுமையாக அறியலாம். இனி அடிகள் திருவாக்கில் பாண்டிய மன்னனோடு தொடர்பான திருவாக்குகளும் இதற்கு அரணாகின்றன.

'பாண்டியன் தனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனகம் இசையைப் பெறா அது ஆண்டான்'[10]

'நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி'[11]

என வருவன காண்க. இவையும் பின் நரியைப் பரியாக்கி ஆட்கொண்ட அருளிப்பாடு மண்சுமந்த அருளிப்பாடு ஆகிய தலைப்புக்களில் கூறப்படும் சான்றுகளும் இவற்றோடு இணைத்துக் காணப், பாண்டியரிடத்து அமைச்சராயிருந்தமையும் அதனொடு தொடர்பான வரலாறுகளையும் அறியலாம்.

குருவருள்

பாண்டி மன்னன் கருத்தின் வண்ணம், குதிரை வாங்க அவன் உடைமை கொண்டு வந்த அடிகளைத் திருப்பெருந்துறையில் இறைவன் குருநாதனாகக் குருந்தின் கீழிருந்து ஆட்கொண்டு அருளினன் என்பது வரலாறு. இதற்குப் பல சான்றுகள் காணப்படினும், சில சான்றுகளை ஈண்டுக் காணலாம்.

'கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க'[12] •

'புவனியில் சேவடி தீண்டினன் காண்க
சிவன்என யானும் தேறினன் காண்க
அவன் எனை ஆட்கொண் டருளினன் காண்க' [13]

'செந்தழல் புரைதிரு மேனியுங்காட்டித்
திருப்பெருந்துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே' [14]

என வருவன காண்க. குருமூர்த்திகள் தமக்குத் தீக்கை அருளியபொழுது, நீறணிவித்தும், உபதேசித்தும், திருவடி சூட்டியும் அருளியபாங்கை அடிகள் மிக விளக்கமாக அருளுகின்றார்.

நீறணிவித்தது

'சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணல் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே' [15]

உபதேசித்தது

'உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே' [16]

'நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே' [17]

திருவடி சூட்டியது

'இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்துணையும் துறந்தொழிந்தேன்' [18]

'என்னையும் ஒருவன் ஆக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி' [19]

இவ்வரிய திருவாக்குகள் நினைந்து நினைந்து இன்புறத்தக்கன.

இறைவன் பொருள்கொண்டது

அடிகள் குதிரை வாங்குவதற்காகப் பாண்டியனின் கருவூலத்திலிருந்து பொருளெடுத்து வந்தார். அப்பொருளைத் தமக்கென எடுத்துக் கொள்ளவும் இல்லை. எடுத்துக்கொளின் அது பெரும் வஞ்சனையாகும். வன்கண்மையும் ஆகும். இறைவன்பால் கொடுக்கவும் இல்லை. காரணம் குதிரை வாங்குவதற்கெனக் கொண்டுவந்த பொருளை, இறைவனுக்கே எனினும், இவருக்குக் கொடுத்தற்கு உரிமை ஏது? ஆதலின் கொடுக்கவும் இல்லை. பின் அப்பொருள் என்னாயிற்று? இறைவனே கொண்டார் என்றருளுகின்றார் அடிகள். இதனை மிக அருமையாகக் குறித்தருளும் இடம்,

'அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமையும் எல்லாமும்
குன்றே யனையாய் எனை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ' [20]

என்பது அவர் திருவாக்காகும். குருந்தின் கீழ் இருந்தருளிய குருமூர்த்திகளைக் கண்டபொழுதே ஈர்த்து ஆட்கொள்ளப்பட்ட அவர், தம்மை மறந்தார்; தம்பணி மறந்தார்; அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தார்; அகலிடத்தார் ஆசாரத்தையும் அன்றே நீத்தார்; தம் நாமம் கெட்டார்; தலைப்பட்டார் குருநாதராம் தலைவன் தாளே. இவ்வனுபவநிலையில் அவர்தம் ஆவியும் உடலும் உடைமையும் குருநாதன் பாலவாயின. அடிகள் வரலாற்றில் பலரும் மேம்போக்காகக்குறைகாணுமிடம் இதுவாம். இதற்கு அடிகளின் அனுபவமாய் இத்திருவாக்கு, குறை காண்பதற்கு இடனின்றி அமைந்துள்ளது. அடிகள் அகலிடத்தார் ஆசாரத்தினின்றும் நீங்கினார். ஏன்? அவர்களினின்றுமே நீங்கினார்.

'சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அலைத்துப் பதறினர் பெருகவும்' [21]

'உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்' [22]

என வரும் திருவாக்குகள் அடிகளின் அருளனுபவ நீள அகலங்களைக் காட்டி நிற்பனவாகும். ஆரறிவார் அவர்தம் திருவுள்ளத்தின் அகலமும் நீளமும்?

நரியைப் பரியாக்கியது

அடிகள் பொருட்டு இறைவனே நரிகளைக் குதிரைகளாக்கினன். அவற்றை மதுரைவரை கொண்டும் வந்தனன்; பாண்டியன் முன்பு ஒப்படைத்தனன்; என்றெல்லாம் கூறப்படும் வரலாற்றிற்கு அடிகளின் திருவாக்குகளே அரணாக அமைந்துள்ளன.

'அரியொடு பிரமற்கு அளவரி யொண்ணான்
நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்' [23]

'ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகள் எல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவாறன்றே உன் பெருங்கழலே' [24]

என வருவன காண்க.

குதிரைகளை மதுரைக்குக் கொணர்ந்தருளியமை

'குதிரையைக்கொண்டு குடநாடதன் மிசை
சதுர்படச் சாத்தாய்த்தான் எழுந்தருளியும்' [25]

'பெருந்துறையான்
கொற்றக் குதிரையின் மேல் வந்தருளி' [26]

'மதுரைப் பெருநகர் மாநகர் இருந்து
குதிரைச் சேவகனாகிய நன்மையும்' [27]

'அரியொடு பிரமற்கு அளவரி யொண்ணான்
பரிமாவின் மிசைப்பயின்ற வண்ணமும்' [28]

'நரியைக் குதிரைப்பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சது ஏற்றும் பெருந்துறையாய்' [29]

'பள்ளிக்குப் பாயத்தர்பாய்பரி மேற்கொண்டு என்
உள்ளம் கவர்வரால் அன்னே என்னும்' [30]

என வருவன காண்க.

பிட்டுக்கு மண்சுமந்தது

நரிகளைக் குதிரைகளாக்கி வந்த பெருமான், மீள நரிகளாக்கி விட, அரசன் சினந்து, அமைச்சர்பெருமகனாராகிய அடிகளைப் பலவாறாகத் துன்புறுத்தினன். அடிகளின் அருட்பாங்கை வெளிப்படுத்தவும், மதுரையில் எங்கோ ஒரு

மூலையில் இருந்து தம்மீது அன்பு மீதூர்ந்து நிற்கும் வந்தியை வாழ்விக்கவும், பாண்டியருக்குப் பரகதி கொடுக்கவும் திருஉளம் கொண்ட இறைவன் வைகையில் வெள்ளம் வரச்செய்தனன். நீர்வெள்ளம் நகரை அழிக்காதிருக்க வீட்டுக்கு ஒருவர் வந்து கரை பெருக்கியிட ஆணை பிறப்பித்தனன் அரசன். கூலியாட்கள் யாரும் கிடைக்காத நிலையில் வருந்தியிருந்த வந்திக்கு, இறைவனே கூலியாளாய் வந்தருளினன். திருவிளையாட்டாகக் கரையை அடையாது நிற்க, பாண்டியனால் மொத்துண்டனன். அவ்வருளிப்பாட்டாலேயே அடிகள் பெருமை அறியப்பட்டது. வந்தியின் வாழ்வு சிறக்கப்பெற்றது. இவ்விருவர்தம் பெருமையையும் அறிந்த பாண்டிய மன்னனின் பக்தியும் வெளிப்பட்டது. இவை வரலாறு.

'மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்' [31]

'திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ' [32]

என வருவன காண்க. கூலி கொண்டமைக்கு ஏற்பக் கரை அடையாமை குற்றமாகுமே எனில் கரையை அடைக்காதிருப்பினன்றோ குற்றமாகும். உனக்குரிய பங்கின் கரையை அடைப்பேனென உறுதி கூறிப்பிட்டும் வாங்கி உண்டபெருமான், உரிய பணியைச் செய்யாதிருப்பரோ? இரார், வந்தியிடம் வாங்கி உண்ட கூலியாகிய பிட்டு நேர்பட ஒரு தட்டு மண்ணை எடுத்துக் கரையையும் அடைத்தருளித் தன் அருளையும் வெளிப்படுத்தினன். இதனை அறியுமாறு அருளிய அடிகளின் திருவாக்கு,

'பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தன்' [33]

என்பதாம். எனவே பெறும் ஊதியத்திற்கேற்பப் பணி செய்யாதிருப்பது அறனும் அன்று; முறையும் அன்று; மரபும் அன்று என்பது அறியத்தக்கதாம். ஒப்பிப்பணிசெய்யாமை பதினெண் வழக்குகளுள் ஒன்றாதலும் அறியத்தக்கது.

இறைவன் அருள்வழி தில்லை சேரலும் அடிகளின் பெரும்பேறும்

திருப்பெருந்துறையில் குருநாதனாக அமர்ந்து ஆட்கொண்டருளிய இறைவன், சில நாட்கள் இங்கிருந்து பின் தில்லைக்கு வருக எனப் பணித்தருளுகின்றான். அச்சில நாட்களே பல ஊழியாக அடிகளுக்கு அமைய, நீத்தல் விண்ணப்பத்தை அருளுகின்றார். திருச்சதகத்தும், பிறாண்டும் எல்லாம் அடிகளின் பிரிவாற்றாமை வெளிப்பட விளங்குகின்றன. இதனை,

'நாயினேனை நலம்மலி தில்லையுள்
கோலம் ஆர்தரு பொதுவினில் வருகவென
ஏல என்னை ஈங்கொழித்தருளினன்' [34]

எனவரும் அடிகளின் திருவாக்கால் அறியலாம். தில்லை சென்ற அடிகள் திருக்கோவையாரை அருளிச் செய்து, புத்த சமயப் பெண்ணின் ஊமைநீங்கத் திருச்சாழலை அருளிப் பின் இறையடி நீழலை அடைந்தார்.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருஆல வாயான் திரு நீறே.

(சம்பந்தர், தேவாரம்)

மேற்கோள் - எண்

1.	கீர்த்தித்திருஅகவல்	-	52-53
2.	திருக்கோத்தும்பி	-	6
3.	கண்டபத்து	-	5
4.	போற்றித் திரு அகவல்	-	38
5.	உயிர் உண்ணிப்பத்து	-	7
6.	திருப்புலம்பல்	-	3
7.	அடைக்கலப்பத்து	-	1
8.	உயிர் உண்ணிப் பத்து	-	7
9.	போற்றித் திருஅகவல்	-	39
10.	கீர்த்தித் திருஅகவல்	-	38-40
11.	போற்றித் திருஅகவல்	-	213-214
12.	சிவபுராணம்	-	3
13.	திருஅண்டப்பகுதி	-	61-63
14.	திருப்பள்ளியெழுச்சி	-	8
15.	அச்சோப்பதிகம்	-	4
16.	அச்சோப்பதிகம்	-	7
17.	திருவேசறவு	-	10
18.	திருப்பூவல்லி	-	1
19.	போற்றித்திரு அகவல்	-	129 - 130
20.	குழைத்த பத்து	-	7
21.	போற்றித் திருஅகவல்	-	48-49
22.	திருப்புலம்பல்	-	3
23.	கீர்த்தித் திருஅகவல்	-	48-49
24.	திருவேசறவு	-	1
25.	கீர்த்தித் திருஅகவல்	-	27-28
26.	திருவம்மானை	-	20
27.	கீர்த்தித் திருஅகவல்	-	44-45
28.	கீர்த்தித் திருஅகவல்	-	115-116
29.	ஆனந்தமாலை	-	7
30.	அன்னைப்பத்து	-	7
31.	திரு அம்மானை	-	8
32.	திருப் பூவல்லி	-	16
33.	திருக்கழுக்குன்றப் பதிகம்	-	2
34.	கீர்த்தித் திருஅகவல்	-	127 -129.

இருளும் விளக்கும் !

முனைவர் ஆ. ஆனந்தராசன்
பேராசிரியர், சைவசித்தாந்தத் தத்துவத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21

அறியும் பான்மை உடைய மாந்தரிடத்தில் அறியாமையும் இருத்தல் கண்கூடு, பல நேரங்களில் அவர்களது அறிவு விளங்காமற் போகிறது. அந்த அறியாமைக்கு - அறிவு விளங்காமைக்குக் காரணம் எதுவாக இருக்கும் ? இந்த வினாவை எழுப்பிக் கொண்டு சமயவாதிகள் அதற்குப் பலவிதமான விடைகளைக் கூறியுள்ளனர்.

'உயிரிடத்தில் அறியாமை யிருப்பது இயற்கை. அதற்குப் போய்க் காரணம் தேடுவது ஏன்' என்று ஒரு சாரார் கூறுவர். இது ஏற்கக் கூடியதன்று.

ஒரு பொருளிடத்தில் இரண்டு மாறுபட்ட தன்மைகள் இயற்கையாக இருக்க முடியாது. அப்படி மாறுபட்ட தன்மைகள் காணப்பட்டால் அவற்றுள் ஒன்றை அதன் இயற்கை என்றும் மற்றொன்றைச் செயற்கை என்றும் கொள்ள வேண்டும்.

நீரிடத்தில் குளிர்ச்சியும் மற்றொரு சமயத்தில் அதற்கு மாறாகிய வெப்பமும் காணப்பட்டால், வெப்பத்தைத் தீயின் சேர்க்கையால் வந்த செயற்கை எனவும், குளிர்ச்சியே நீருக்கு இயற்கை எனவும் கூறுகிறோம். அம்முறையில் உயிரிடத்தில் அறிவும் அதற்கு மாறாகிய அறியாமையும் காணப்படுவதனால், அவற்றுள் ஒன்றுதான் உயிருக்கு இயற்கையாகும். மற்றொன்று பிறிதொரு காரணத்தால் வந்த செயற்கையாகத்தான் இருக்க முடியும்.

அப்படிப் பார்த்தால் அறிவுப் பொருளாகிய உயிருக்கு அறிவுதான் இயற்கை என்பது சொல்லாமலே விளங்கும். அறியாமை என்பது அதற்கு வேறொரு காரணத்தால் வந்த செயற்கை என்று கூறிவிடலாம். இதனால், செயற்கையாய் வந்த அறியாமையை உயிரின் இயற்கை என்றால் பொருந்தாது என்பது விளங்கும்.

இனி, பிறப்பு நிலையில் உயிர் உடம்பின் சேர்க்கையைப் பெற்று நிற்கிறது. அறிவில்லாத உடம்பின் சேர்க்கையினாலேதான் உயிருக்கு அறியாமை உண்டாகிறது என்று கூறுகின்ற மதங்கள் உண்டு. இஃது அனுபவத்திற்கு ஒவ்வாத கருத்தாகும்.

உடம்பு ஊக்கமோடு செயற்படுகின்ற காலத்தில் உயிருக்கு அறிவு நன்கு விளங்குகிறது. உடம்பு செயலற்றுக் கிடக்கின்ற உறக்க நிலையிலும், மூர்ச்சை நிலையிலும் அறிவு நிகழவில்லை என்பது அனுபவமாக அறிந்தது. இதனால், உடம்பின் சேர்க்கையால் உயிருக்கு அறிவு விளங்குவதன்றி மறைவதில்லை என்பது தெளிவாகும். இது பற்றியே, உடம்பினால் உயிருக்கு அறியாமை உண்டாகவில்லை என்றும், அறிவை மறைத்து அறியாமையை உண்டாக்குகின்ற வேறொரு பொருள் இருத்தல் வேண்டும் என்றும் சைவ சித்தாந்தம் கொள்கிறது.

கன்மம் என ஒன்று உள்ளது என்பதையும், அதுவே உயிர்கள் எய்தும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் என்பதையும் பலரும் ஒப்புக் கொள்வர். அந்தக் கன்மமே உயிர்களின் அறிவைத் தடுத்து அறியாமையை உண்டாக்கும் என்று சில சமயவாதிகள் கூறுவர். கன்மம் செயற்படும் முறையை அறிந்தோமானால் இக் கருத்துப் பொருந்தாது என்பது புலனாகும்.

கன்மம் ஒருவருக்குத் தீமை தரவேண்டும் என்று இருந்தால், அந்த நேரத்தில் அக் கன்மம் அவருடைய அறிவைத் தூண்டித்தீமை வரும் வகையில் செலுத்தும். காட்டாக, ஒருவர் இரு சக்கர வண்டியில் சென்று கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். எப்பொழுதும் மெதுவாக வண்டியை ஓட்டுவதே அவர்க்கு இயல்பு. ஆனால் இந்த நேரத்தில் அவர் படுகாயம் அடைந்து துன்பப்பட வேண்டும் என்று இருக்கிறது. அது அவருக்கு எப்படித் தெரியும்? அதற்கு ஏற்ப அவருடைய கன்மம் அவரது அறிவைச் செலுத்துகிறது; அதி வேகமாக வண்டியை ஓட்டும்படி அவரது அறிவைத் தூண்டுகிறது. அந்த விதி வழியே அவரது மதி செல்கிறது. விதி செலுத்த அவரும் விரைந்து வண்டியை ஓட்டுகிறார். அந்த விரைவு விபத்திலே முடிகிறது.

T. 13999

இவ்வாறே கன்மம் ஒருவருக்கு நன்மை தரவேண்டும் என்று இருந்தால் அந்த நேரத்தில் அக்கன்மம் அவருடைய அறிவை நல்ல முறையில் தூண்டி நன்மை வரும் வகையில் செலுத்தும். மந்த அறிவுடைய ஒருவரையும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் சிறப்பாகச் செயல்படும்படித் தூண்டி அவரது கன்மம் அவருக்கு வெற்றியையோ, எதிர்பாராத பெரும்பயனையோ தேடித் தந்து விடும்.

இந்த நிகழ்ச்சிகளிலிருந்து ஓர் உண்மை தெளிவாகும், கன்மம் தன்னைச் செய்தவருக்கு நன்மை விளையும் முறையிலோ தீமை விளையும் முறையிலோ அவரது அறிவைத் தூண்டி விடுமேயன்றி, அவரது அறிவைத் தடுத்து அறியாமையை உண்டாக்காது என்பதே அந்த உண்மையாகும்.

இதுவரை கூறியவற்றால் உயிரின் அறியாமைக்கு உடம்பின் சேர்க்கையே காரணம், கன்மமே காரணம் என்பார் கூற்றுக்கள் பொருந்தா என்பது போதரும். சைவ சித்தாந்தம் அக்காரணங்களை ஏற்பதில்லை. அது, கண்ணை மறைக்கின்ற புற இருள் போல அறிவை மறைக்கின்ற அக இருள் ஒன்று உண்டு என்று கூறி அதற்கு ஆணவ மலம் என்ற பெயரையும் இட்டு வழங்குகிறது, பிறவித் துன்பத்தையும், பேரின்பமாகிய வீட்டின்பத்தையும், அதனைப் பெறுவதற்குத் துணைபுரியும் மேலோனாகிய இறைவனையும் அறிய வொண்ணாதபடி மாந்தரின் அறிவை மறைத்து நிற்பது அந்த அகவிருளே என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

ஆணவ மலத்தின் இயல்பை உமாபதி சிவம் போல எடுத்துக்காட்டியவர்கள் வேறுயாருமில்லை. உலகில் இருளை விட இருண்ட பொருள் உண்டா? உண்டு. உயிர்களிடத்தில் அஞ்ஞானமாகிய மயக்கத்தை விளைவிக்கின்ற ஆணவ மலம் அப்படிப்பட்ட பொருள். அதன் முன்னால் உலகத்து இருளும் ஒளி என்று சொல்லும்படி ஆகிவிடும் என்றால் அந்த ஆணவ மலம் எவ்வளவு இருண்டதாக இருக்க வேண்டும்! இக்கருத்துப்பட 'இருள் ஒளிர இருண்ட மோகமாய், அறிவு முழுதினையும் மறைக்கும்' என்று சிவப்பிரகாச நூலிற் கூறினார் அவ்வாசிரியர்.

மேலும், ஆணவ மலம் தான் ஒரு பொருள் இல்லை என்னும்படி உயிரில் பொருந்தியிருக்கும் எனவும், ஆணவத்தின் இருப்பைத் திருவருள் துணையால் அறியலாமே யன்றி வேறு எவ்வகையாலும் அறிதல் இயலாது எனவும் அந்நூலில் கூறியுள்ளமை காணலாம்.

இந்த ஆணவ மலத்திற்கு மாற்றுப் பொருளாக இருப்பது மாயை யாகும். ஆணவம் அறிவை மறைக்கின்ற இருள் என்றால், மாயை அறிவை விளக்குகின்ற ஒளி எனலாம். சூழ்ந்துள்ள இருளைச் சிறிதளவு நீக்கிப் பொருளைக் காட்டுகிற விளக்குப் போல மாயை உயிரைப் பற்றியுள்ள ஆணவ இருளை ஓரளவு நீக்கி அதன் அறிவை விளங்க வைக்கிறது. இதனை,

புகலுமலம் ஒழித்தற்குக் கலாதிமுதல் மாயை
பொருந்தியிடும் அரனருளால் போதம் தீப
சகலமெலாம் உடனாய வாறு போலத்
தரும் அருளை மலம் உயிர்கள் சாராமல் மறைக்கும்
இகலி வரும் இவை யுணரின் இருள் வெளியாம் தன்மை

என வரும் சிவப்பிரகாசச் செய்யுளால் அறியலாம். ஆன்ம அறிவை விளக்குதல் மாயையின் செயல். அவ்வறிவைத் தடுத்து நிற்றல் மலத்தின் செயல். இவையிரண்டும் இங்ஙனம் ஒளியும் இருளும் போல இகலி நிற்பன என்பது இச்செய்யுளில் உணர்த்தப்பட்டுள்ளது.

நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள உடம்பு மாயையினால் ஆனது. மாயையை விளக்கு எனக் குறிப்பிட்டோம். எனவே இந்த உடம்பும் விளக்குப் போன்றதேயாகும். உடம்பும் உடம்பிலுள்ள ஐம்பொறி முதலிய கருவிகளும் செயற்படுகிற போது நமக்கு உலகைப் பற்றிய அறிவு உண்டாகிறது. அவை செயலற்றுக் கிடக்கின்ற உறக்க நிலையில் நாம் யாதொன்றையும் அறிய மாட்டாமல் அறியாமையே வடிவாய் இருக்கின்றோம். இதனால், உடம்பினாலேயே நமக்கு அறிவு விளங்குகிறது என்பது புலனாகும். இது பற்றியே உடம்பினை விளக்கு என்றனர்.

ஆணவமாகிய இருளில் நிற்கின்ற உயிர் மாயையின் காரியமாகிய உடம்பை விளக்காகக் கொண்டு பொருள்களை அறியும். அவ்விளக்கு இல்லாவிடின் அஃது ஒரு பொருளையும் அறிய மாட்டாது; அறியாமை உடையதாகவே இருக்கும், என்று சிவஞான போதம் கூறும்.

'மாயா தனு விளக்கா மற்றுள்ளம் காணாதேல்

ஆயாதாம் ஒன்றை' (வெண்பா.27)

விளக்கு என்பது ஓர் இடைக்கால ஏற்பாடே. அதுவே இருளை முற்றிலும் நீக்கிவிடாது. இருள் முழுதும் நீங்க வேண்டுமாயின் பேரொளியாகிய சூரியவொளி வரவேண்டும். விளக்கொளியில் நீங்கியும் நீங்காமலும் இருந்த இருள் சூரியவொளி வரும்போதே அறவே அகலும். அவ்விடியல் வரும் வரையில் இருளை நீக்கிக் கொள்வதற்கு ஓர் இடைக்காலத் துணையாக விளக்கினைக் கொள்கின்றோம்.

இறைவன் நமக்கு உடம்பினைக் கொடுத்ததும் இம்முறையிலேதான். நாம் உடம்போடு கூடியிருக்கின்ற நிலையும் ஓர் இடைக்கால ஏற்பாடுதான். ஆணவமாகிய இருளினின்றும் சிறிது விடுபடுவதற்கு இந்த உடம்பாகிய விளக்கு உதவுகிறது. ஆனால் அதுவே ஆணவ இருளை முற்றிலும் நீக்கி விடாது. இருள் மலம் முழுவதும் நீங்க வேண்டுமாயின் திருவருளாகிய சூரிய வொளி வரவேண்டும். மாயா காரியமாகிய விளக்கொளியால் சிறிது விலகிய ஆணவ இருள் திருவருள் ஒளி வரும்போதே அறவே அகன்றொழியும். அந்த நிலையே சுத்த நிலை எனப்படும். அதுவே ஆன்மாவுக்கு விடிவு காலம்.

அவ்விடியல் வரும் வரையில் அக விருளை ஓரளவு நீக்கிக் கொள்வதற்குத் தனு கரணம் முதலிய மாயாகருவிகள் இடைக்காலத் துணையாக அமைகின்றன. அது பற்றியே 'விடிவாம் அளவும் விளக்கு அனைய மாயை' என்று திருவருட்பயன் கூறிற்று.

ஆறாம் உலகச் சைவ மாநாடு வெற்றி அடைய வாழ்த்துக்கள்!

வேல்ராஜ் அன் கம்பெனி

கைத்தறிச் சேலை உற்பத்தியாளர்கள்

46, தெப்பக்குளம் தெரு,
கோயம்புத்தூர் - 641 001
தொலைபேசி : 472837 472191

சிவதீக்கையும் சிவத்தணிக்கையும்

முனைவர் **கி.லோகநாதன்,** மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம், பினாங்கு
செயல்நாயகம், உலக சைவப் பேரவை

இன்றையப் பிரச்சினை

இருபதாவது நூற்றாண்டின் எல்லைக்கு வந்துவிட்ட சைவத்தமிழர்கள், ஆழச் சிந்தித்துப் பல தீர்க்கமான முடிவுகள் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகச் சிந்தனை அடிமைகளாய்த் தமிழர்கள் ஆய்விட்ட காரணத்தால் சிந்தித்து வழிகாட்டுகின்ற பொறுப்பைப் பிறருக்குக் கொடுத்துவிட்டு அவர்கள் சொல்கின்ற வழியில் சிந்திக்காது செல்கின்ற சிந்தனை அடிமைகளாய்த் தமிழ் சமுதாயம் மாறிவிட்டது. இதனால் அற்பர்கள் பெரிய ஞானிகளாய், பெரிய தலைவர்களாய் நாடகமாடிக் குருடனே குருடர்களைக் கொண்டுசென்று படுகுழியில் வீழ்த்துவது போல வீழ்த்திவிட்டனர்.

இதனால் நம் சமய வாழ்க்கையிலும் பெருங் குழப்பங்கள். தேவார முதலிகள் காலத்தில் நல்ல ஞானத்தெளிவோடு தொழவேண்டிய தெய்வம் அம்மையப்பராகிய சிவபெருமானையன்றி வேறல்ல என்ற நிலையில் கோயில் வழிபாடு சிறந்திருக்க இன்றோ கண்ட கண்ட தெய்வங்களும் தெய்வங்கள் அல்லாதவையும் தொழப்படுவதைக் காண்கின்றோம். அதனால் மக்கள் சீரழிந்து வீழ்வதையும் காண்கின்றோம். அய்யப்பன், இராஜராஜேஸ்வரி போன்ற தெய்வங்களைச் சைவக்கோயில்களில் பிரதிட்டை செய்து பெரும் பெரும் பூசைகளையும் செய்கின்றனர். அத்தோடு நவக்கிரகங்கள் இல்லாத கோயில்களே இல்லை என்னும் அளவில் நவக்கிரக வழிபாடு உறுதியான பரந்தவோர் இடத்தைப் பெற்றுள்ளது.

நம்முடைய கேள்வி என்னவென்றால், இத்தகைய வழிபாடுகள் அனுமதிக்கத் தக்கவையா? அல்லை என்றால் என்ன காரணம்?

இக்கேள்விகட்கு அறிவியல் முறையில் சிந்திக்கும் திறத்து மக்கள் அனைவரும் ஒத்துவரும் வகையில் ஒரு விளக்கம் தருவதே இக்கட்டுரையின் நோக்கம். மேலும் இவற்றையெல்லாம் தகுந்த ஏரணத்தெளிவோடு 'அழிவில் உண்மை' எனும் ஒரு பெரிய ஞான நூலில் எழுதியாகிவிட்ட போதிலும் அது அச்சேறுமா என்பது அய்யத்திற்கிடமாகவே இருக்க, அதன் சில பகுதிகளையாவது இக்கட்டுரையின் வழி அச்சேற்றலாம் என்ற நோக்கமும் உண்டு.

சிவதீக்கையும் சிவத்தணிக்கையும்

இன்று எழுந்துள்ள பிரச்சினையை, சிவதீக்கையை வெறுத்து இன்பத்தின் சிவத்தணிக்கைகளையே விரும்பும் இயல்பால் அதனை நாடியே இத்தகைய சிறுதெய்வ வழிபாடுகள் என்று கூறின் அது பொருந்துவதே. ஞான நாட்டம் குறைந்துபோய் இன்ப நாட்டமே மேலோங்கி நிற்க, தெய்வங்கள் என்பன இன்ப வாழ்க்கையைத் தருவன, வழிபாடு என்பது இத்தெய்வங்களை யாதாவதோர் வகையில் மகிழ்வித்துதான் வேண்டுவதைப் பெறச் செய்யப்படும் ஒரு தந்திரமே என்று கொள்ளப்படுகின்றது. இவ்வாறான இன்பத்தின் சிவத்தணிக்கைகளைப் பெறச் சிறுதெய்வங்களைத் தொழுவது மானிட இயற்கை. ஆயின் இதன் பொருட்டுச் சிவபெருமானைத் தொழுவதைவிட்டு அய்யப்பனையும் பிறபிற தெய்வங்களையும் தொழுவதுதான் வழியா? தேவாரப் பாடல்களை உணர்ந்தவர்கள், சைவ சமயத்தின் அடிப்படைகளை உணர்ந்தவர்கள், பழுதற்ற மெய்யறிவு பெற்றுச் சுடர்கின்ற மெய்ஞானிகள் இவ்வழிபாடுகள் பிழையானவையே ஆகவே கடுமையாகக் கண்டிக்கத் தக்கவையே என்று தெளிவுறுத்துவர். இவர்களில் தலையாய வொருவராகத் திகழ்பவர் நம் திருஞான சம்பந்தர் ஆவார். திருச்சிவபுரம் எனும் அழகிய பதிகத்தில், இப்பிரச்சினையை ஆழ ஆழச் சிந்தித்துத் தெளிந்து, இன்ப உணர்வின் சிவத்தணிக்கைகளைப் பெறுதற்கும் நாம் சிவபெருமானையே தொழவேண்டும் என்று தக்க காரணங்களோடு விளக்குகின்றார்.இவ்வாறான சிலபாடல்களை நாம் மீண்டும் ஆராய்வது காலத்தின் கட்டாயமாகும்.

ஒரு பாடலில், அலைகடல் நடுவில் அறிதுயில் மகிழும் திருமாலைச் சிவபரம்பொருளின் ஒரு வடிவே என்று கொண்டு வழிபட்டாலேயே திருமகள் அருளாகிய சிவத்தணிக்கைகளை மகிழ்வர் என்கின்றார்.

மலைபல வளர்தரு புவியிடை மறைதரு
வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர்முதல் உலகுகள் நிலைபெறு
வகை நினைவொடு மிகும்
அலைகடல் நடு அறிதுயில் அமரர் அரியுரு
வியல் பரன் உறைபதி
சிலைமலி மதிள் சிவபுரம் நினைபவர்
திருமகளொடு திகழ்வரே

இதன் பொழிப்பாவது: எல்லா உலகியல் வளங்கட்கும் மூலமாக நிற்கின்ற மலைகள் நிறைந்த இப்புவியையும் அதன்கண் தத்தம் அகத்தே தெளிஞானத்தோடு மறைஞானத்தையும் கொண்டிலங்கு மனிதர்களையும், மூவினைப்படும் இவர்கட்கு மாறாக நிலைபேறுடையனவாகத் திகழும் தெய்வங்களும் அண்ட சராசரமென நின்றுநிலைக்க, பாற்கடல் நடுவில் நாரணன் வடிவில் அறிதுயில் மகிழும் பராபரனாகிய சிவன் மதில்கள் சூழ்ந்த இச்சிவபுரத்திலே இருக்கின்றான் என்று அறிந்துணர்ந்து மகிழ்பவர்க்கே உலகியல் இன்பத்தை எல்லாம் அனுபவித்து மகிழத்தரும் திருமகள் அருள் கிட்டும் என்பது.

நாரண வடிவத்து இறைவனை நாம் வெறுத்து ஒதுக்காது, அவனும் அவனது துணையும் அம்மையப்பரின் ஒரு வடிவமே என்று, அவனைக் காணும்போதும் அங்கு பரனாகிய சிவனைக் காண்போருக்கே சிவத்தணிக்கைகள் அனுபவப் பொருளாகும் என்றவாறு.

இதே பதிகத்தில் இன்னொரு பாட்டில், சிவனைத் தொழவேதான், அயனின் துணையாகிய கலைமகள் அருளும் கிட்டும் என்கின்றார்.

சினமலி யறுபகை மிகுபொறி சிதைதரு
வகைவளி நிறுவிய
மனனுணர்வொடு மலர்மிசை எழுதரு பொருள்
இதயம் உணர்பவர்
தனது எழில் உருவது கொடு அடைதருபரன்
உறைவது நகர்மதிள்
கன மருவிய சிவபுரம் நினைபவர்
கலைமகள் தர நிகழ்வரே

இதன் பொழிப்பாவது: சினத்தைக் கண்டித்து, ஐம்புலன் நுகர்ச்சிதரும் இன்பச் சுவைகட்கு அடிமையாகாது, யோகப்பயிற்சிகளின் வழி புலன்களை வென்று, சிந்தித்துத் தெளியும் விருப்பில் பட்டு, மலர்மிசை எழுதரும் நற்றெய்வங்களைச் சிந்தித்துச் சிந்தித்துத் தெளிந்து தெய்வங்களின் நோக்கங்களை திருக்குறிப்புக்களை அறிகின்ற நன்மக்களே சிவனுடைய தணிக்கைப் பண்பின் திரு வடிவங்களை அடைந்து மகிழும் வரத்தைப் பெறுவர். இதனின் இவ்வாறான சிவபரம்பொருளை நினைபவர் கலைமகள் அருளையும் பெற்றுத் திகழ்வர் என்பதாம்.

இதே போன்று செயமகள் அருளைப் பெறுதற்கும் சிவவழிபாடே வேண்டற்பாலது என்கின்றார் இன்னொரு பாட்டில்.

நறைமலி தரும் அளறொடு முகை நகுமலர்
புகைமிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும்
வழிபடும் அடியவர்
குறைவில பதம் தர அருள் குணமுடை
யிறையுறை வனபதி
சிறைபுனல் அமர் சிவபுரமது நினைபவர்
செயமகள் தலைவரே

இதன் பொழிப்பாவது: மணமிக்க சந்தனக் குழம்பும், அரும்பும், நன்றாய் மலர்ந்த மலரும், மணமிக்க புகையும், சுடர்ந்தெரியும் திருவிளக்கும் சிறிது நீரும் கொண்டு மற்றெந் நினைவுமின்றிச் சிவ பரம் பொருளையே எக்காலமும் ஒடியாது வழிபடும் மெய்யான அடியார்கள் பேதமையும் அச்சமும் போக்கும் அருட்பேற்றின் செயமகள் அருளைப் பெற்றுத் தறுகண்மை உடையராய்த் திகழ்வர் என்பதாம்.

மாகாளியாக, துர்க்கையாக, சாமுண்டியாக வெல்லாம் வெளிப்பட்டு ஆன்மாக்கள் அகத்தே அடிமைத்தனத்தை, கோழைத் தனத்தை வளர்க்கும் மலமாசுக்களைத் தொலைத்துப் போராடும் திறத்து வீரனாக வீராங்கணையாகத் திகழச் செய்வர் என்பதாம்.

இவற்றையும் இதுபோன்ற வேறுபாடல்களையுங் கற்றுத் தெளிய ஓர் உண்மை புலப்படுகின்றது. தத்துவக் கழற்சிகளைத் தந்து துறவின் வழி வீடுபேற்றிற்கு இட்டுச் செல்லும் பரனாகிய சிவபெருமான், அயன் திருமால் என்றெல்லாம் ஆய் நிற்பதோடு பெண்ணுருத்தானாகி நின்று அட்டமாசித்திகள் என்று திருமூலரால் ஓதப்பட்ட பல்வேறு தணிக்கைகளையும் தந்தருளுகின்றான் என்பதே. அப்பனாய் நின்று சிவதீக்கைகளைச் செய்ய, அம்மையாய் நின்று பல்வேறு துறப்புக்களின் வேதனைகளெல்லாம் போம் வகையில் இன்பங்களையும் அருளுகின்றான் நம் பரன். துறப்பின் வரும் துயர்கட்கும் உறப்பின் வரும் இன்பங்கட்கும் தானே தனக்குத் தலைவனாகி நிற்கின்ற சிவபரம்பொருளே காரணமாக, பிற தெய்வவழிபாடுகள் தேவை இல்லாவாகின்றன என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

அழிவிலுண்மை தரும் தத்துவ விளக்கம்

திரோதகதிறத்து இறைவனாகிய பராபரன், தன்னைத் தானே அருளின் காட்டினாலேயொழிய, சிற்றறிவு ஆன்மாக்கள் அவனை மெய்யாகக் காணாதொழியும். இதனின் தற்போத வேதாந்த கற்பனாச் சேட்டைகளை எல்லாம் ஒடுக்கி, இயலிய நூனெறிபிழையாது செல்லவேதான், இறைவன் தன்னை எவ்வாறு காட்டி யருளுகின்றானோ அவ்வாறே கண்டு பதிஞானத்தில் உயர முடியும். இப்பதி அறிவு காலவுணர்வோடும் ஆகவே சுட்டுணர்வோடும் வரும் அசத்தறிவுகள் ஊடே காணும்போது தடத்தவிலக்கணத்து அறிவு என்றும் காலவுணர்வு கழன்று ஆகவே எல்லாத் தத்துவங்களிலிருந்தும் கழன்று கடுஞ் சுத்தமாகி நிற்கையில் தானே எழுந்து சுடர்கின்ற ஞானமே இறைவனது சொரூபவிலக்கணத்து அறிவும் ஆகும். தடத்தவிலக்கணத்துப் பரன் சிவத்தணிக்கைகளை அருள்பாலித்து உதவ, சொரூபவிலக்கணத்து இறைவன் வீடுபேற்றிற்கு வித்தாகிய சிவதீக்கைகளை அருள்பாலித்து உதவுகின்றான் என்பதே அழிவிலுண்மை எனும் இப்பெரிய ஞான நூல் ஏரணவியல் பிழையாது விளக்கும் பேருண்மையாகும்.

இக்கட்டுரையின் கருத்திற்குப் பொருந்திவரும் இரண்டு சூத்திரங்களை மாத்திரம் இங்குச் சிந்திப்போம். இருபத்தேழு சூத்திரங்களோடு ஒன்பது படலங்களில் செல்லும் இந்நூல் ஒவ்வொரு சூத்திரத்திற்கும் அதன் உண்மையை நிறுத்தும் அதிகரணங்களாகிய பல படிமெய்களோடும் இவற்றின் உண்மைகளை நிறுத்தும் பல எடுத்துக்காட்டுகளோடும் செல்லும் இந்நூலிலிருந்து சிவதீக்கைகளையும் தணிக்கைகளையும் விளக்கும் இரண்டு சூத்திரங்களை மாத்திரம் அவற்றின் படிமெய்களோடு இங்கு காண்பம். விரிவஞ்சி எடுத்துக்காட்டுகள் விடப்பட்டுள்ளன.

சூத்திரம் 7

சத்தறிவி னிறைவன் சதசத் தான்மாவைச்
சுத்தமதாச் சூழ்ந்து சோதிவடிவிற் காய்ந்து

சித்தமலங் கெடுத்து சிவமாக் குவன்

செம்மைச் சிவஞானம் சேரப்புகட்டி

முதலாம் படிமெய்

மேற்கோள்: இனி எல்லா ஆன்மாக்களுக்கும் பரம் அபரம் என்றமையும் இருவகை வாழ்க்கையிலும் சிவதீக்கைகள் உண்டென்பது.

ஏது : இல்லையேல் பக்குவ முதிர்ச்சியைத் தரும் பதவூழிகள் இல்லாதுபோம் என்றவாறு.

இரண்டாம் படிமெய்

மேற்கோள்: இனி எல்லாச் சிவதீக்கைகளும் நிவிர்த்தாதி பஞ்சகலைகளின் வழியேதான் நடக்குமென்றது.

ஏது: அபரமென்றும் பரமென்றும் அமையும் இருவகை வாழ்க்கையிலும் மெய்யாகும் பதவூழிகள் வைகரியிலிருந்து அதிசூக்குமை வாக்கிற்குப் பெயர்தலினால் அமைவது என்பதின்.

மூன்றாம் படிமெய்

மேற்கோள்: இனி இந்தப் பஞ்சகலைகட்கு மூலமாகப் பஞ்சகிருத்தியங்களே நிற்கின்றன என்றவாறு.

ஏது: வீடுபேற்றின் போது சுத்தமாயை உட்பட எல்லாத் தத்துவங்களின் கூட்டுறவும் பாழாக்கப்படுதலின்.

நான்காம் படிமெய்

மேற்கோள்: இனி பதியாகிய இறைவன் பல்வேறு சோதிவடிவங்களில் தனைக்காட்டி அருளுவன் என்பது.

ஏது: செம்மை வளர்த்து ஆன்மாக்கள் தேசிகத்திரு பெற்றுஉயர வல்லதாய் நிற்பதின்.

ஐந்தாம் படிமெய்

மேற்கோள்: இனி இச்சோதி வடிவ இறைவன் சுத்தனுமாம் என்றது.

ஏது: எல்லாவகை ஆதித்த வடிவொடு வெவ்வேறு வகைகளில் சுத்தமும் வருவதின்.

ஆறாம் படிமெய்

மேற்கோள்: இனி இறைவன் இவ்வகைத் தீக்கைகள் வழிச் செம்மைச் சிவஞானம் சேரப்புகட்டி அருளுவன் என்றவாறு.

ஏது: இத்தீக்கைகட்கு ஆளாகும் ஆன்மாக்கள் சித்தமலங்கெடுத்து அதனின் பசுத்துவம் போக்கிச் சிவத்துவம் பெற்றுச் சுடர்தலின்.

இனி இவ்வாறு பற்பல ஆதித்த வடிவங்களில் அகத்தே காய்ந்து காய்ந்து சிவதீக்கைகள் செய்வித்துச் சிவஞானம் சுடருமாறு அருள்பாலிக்கின்ற அதே இறைவன், குளிர்மையின் தண்மதி வடிவங்களில் பெண்ணுருதானாகிப் பற்பல தணிக்கைகளையும் செய்தருளுவன் என்பதை அடுத்த சூத்திரம் விளக்குகின்றது.

சூத்திரம் 8

அம்மையோ டிணைந்து அயர்விலா தாடியருளின்
புன்மையெ லாம்போக்கிப் புனிதமே வளர்த்து

நன்மை யெலாந் தருவன் நாடினார்க்கு
இன்பமெலாந் தூய்த்தினி தாற்றி இயல

இதன் உண்மையை விளக்கும் படிமெய்களாவன

முதலாம் படிமெய்

மேற்கோள்: பரசிவனாகிய இறைவன் அம்மையோடிணைந்து தீக்கைகளோடு தணிக்கைகளையுஞ் செய்து சிவஞானம் புகட்டுவன் என்பதாம்.

ஏது: ஆதித்த வடிவின் தீக்கைகளோடு யாண்டும் பிரிப்பின்றி ஒடியாத் தொடராய்த் தண்மதி வடிவின் தணிக்கைகளும் வருகின்றன என்பதின்.

இரண்டாம் படிமெய்

மேற்கோள்: இனி எழுந்தருளும் இரவிமதி வடிவங்கட்குத் தராதலமாய் இலிங்க யோனி வடிவங்களில் இறைவன் எழுந்தருளுவன் என்றவாறு.

ஏது: இலிங்க யோனி புணர்ச்சிகளின் வழியேதான் குண்டலினி வெளிப்படும் என்பதினாலும், அதுவே திரிந்து இரவியாய் மதியாய்ச் சுடர்கின்றது என்பதினாலும்.

மூன்றாம் படிமெய்

மேற்கோள்: இனி நாதவிந்துக்களே இலிங்கங்களாய் யோனிகளாய்த் திரிபுற்று வெளிப்படும் என்றது.

ஏது: இவை அனைத்தும் மந்திர வடிவங்கள் தாக்கவெழும் சுத்த அசுத்த மாயாவிருத்திகள் என்பதால்.

நான்காம் படிமெய்

மேற்கோள்: இனி இறைவன் அர்த்தநாரீசுர வடிவில் அம்மையப்பராய் எழுந்தருளாவிடில், அகிலமெலாம் புரக்கும் குண்டலினிப் பாய்வு இல்லை என்றது.

ஏது: பல்வேறு வகையில் எழும் இலிங்கங்களும் யோனிகளும், சுத்த அகத்த மாயைகளைத் திரித்து அவற்றைத் தோற்றும் மந்திர சொரூபங்களாகிய நாதவிந்துக்களும் அசித்தாகலின், தத்தமக்கென எவ்விதச் சலனமுமின்றிச் சடமாயே கிடக்குமென்பதின்.

ஐந்தாம் படிமெய்

மேற்கோள்: இனி இவ்வர்த்தநாரீசுர வடிவத்திறைவனே, ஆன்மாக்களின் புன்மை போக்கிப் புனிதம் வளர்க்கும் வல்லமைய தென்றது.

ஏது: இதர தெய்வங்கள் இதற்கு வேண்டற்பாலதாகிய குண்டலினிப் பாய்வினைத் தரவல்ல அல்லவாகலான்.

ஆறாம் படிமெய்

மேற்கோள்: இனி இத்தெய்வமே ஆன்மாக்கள் இன்பந் துய்த்து இனிதாற்றி இயல உதவும் என்றது.

ஏது: இத்தெய்வத்தால் மெய்யாகும் குண்டலினிப் பாய்வின் வழியேதான் சத்தினிபாதம் என்பதின்.

இச்சூத்திரங்கள், தேவார முதலிகள் பல்வேறு பாடல்கள் வழியாக உணர்த்திச் சென்ற பேருண்மைகளை, ஏரணநியதி பிழையாத முறையில் அனைவரும் உடன்படவரும் பேருண்மைகளாக

நிறுத்துகின்றன. அம்மையப்பர் வடிவிலே அந்தமாதியாகத் தனைக் காட்டியருளும் சிவபரம்பொருளே நாம் தொழவேண்டிய தெய்வம். திருமகள் செயமகள் கலைமகள் என்றவாறு பெண்தானாகி நிற்கும் பெருமானின் அருளைப் பெற, இவற்றையெலாம் ஆட்சி செய்து நிற்கும் சிவபெருமானையே நாம் தொழ வேண்டும், பிற தெய்வங்களை அல்ல.

நமக்கு வேண்டியது சிவகற்பே

இந்தத் தெளிவோடு, நாம் எடுத்துக்கொண்ட பிரச்சினைக்கு வருவோம். மேலே கூறிய விளக்கங்கள் ஒன்றை நன்றாகத் தெளிவுறுத்துகின்றன. சிவபெருமானே முழுமுதற் கடவுள், இவனின் ஒப்ப வேறு தெய்வம் இல்லை என்பதால், ஏனைய தெய்வங்கள் எல்லாம் சிறுதெய்வங்களே.

இத்தகைய சிறுதெய்வங்களைப் பார்க்கலாம், அவற்றால் மெய்யாகின்ற திருவிளையாடல்களை ஆய்ந்து தெளியலாம், ஓவியங்களாகக் கண்டு மகிழலாம், ஆனால் தொழக் கூடாது. 'சிவன் என்னும் ஓசை அல்லால் அறையோம் உலகில், திரு நின்ற செம்மை உளதே' என்ற அப்பர் வாக்கிற்கிணங்க வாழ்வதே சிவகற்போடு வாழ்வதாகும். இந்தச் சிவகற்பு இல்லாதோரோ 'சிவசிவ' என்னாத தீவினையாளர், நம் திருமூலர் கூற்றுப்படி.

சிவகற்பு இல்லாத தீவினையாளராகிவிட்ட திறத்தால்தான் தமிழினம் வீழ்ந்து கிடக்கின்றது. பொருள் வறுமையொடு அதனினும் கேவலமான சிந்தனை வறுமையில் சிக்குண்டு புதியது படைக்கும் திறத்தை இழந்த அடிமைகளாகக் கிடக்கின்றோம்.

விடுபடும் வழி

சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவாக உணர்ந்தாலன்றி, நமக்குச் சிவகற்பு அமையாது. கடந்த சில நூற்றாண்டுகளாக, வாயளவிலேதான் சித்தாந்திகளாக இருக்கின்றோமே தவிர, செயலளவிலும் சிந்தனை அளவிலும் அற்ப வேதாந்திகளாகவே இருக்கின்றோம். வாழ்க்கை என்பது கயிற்றிலே நடப்பது போன்றது. அதில் விழாது சிவபரம்பொருளின் எண்ணத்திலேயே வாழ்வது, அதனால் சுழிமுனைச் செலவிலேயே திகழ்வதென்பது சிவகற்போடு வாழ்வதாகும். இதில் தவறி வலது பக்கம் விழுந்தால் அப்பனை மறந்து அம்மையின் திருமாலின் பற்பல மயக்கத் திருவிளையாடல்கட்கு ஆளாகிமடிவது. வலது பக்கம் விழுந்தால் அயனின் ஆட்சிக்கு ஆளாகிச் சாத்திரப் பேய்களாய்த் திரிந்து அன்பு பாராட்டத் தெரியாது ஒழிவது. இவ்விரண்டு இழிநிலைகளே வேதாந்த வாழ்க்கையாக இன்று விளங்கி வருகின்றது. இந்தக் கயிற்றுப் பயணமே வேண்டாமென நாத்திகம் பேசிநாத்தழும்பேறி அரற்றுவது ஆணவச் செருக்கின் பத்துதலை இராவணனாகிச் சிவனுறையுங் கயிலையையே அசைக்க எண்ணி நசுக்குண்டு கதறுவதாகும்.

இன்றைய தமிழ்ச் சமுதாயம் கயிற்றுப் பயணத்தை அஞ்சுவோரையும் அவ்வாறு ஏறிய போதும் வலப்பக்கமும் இடப்பக்கமும் விழுந்து, சிவகற்பு நிலை தவறிய வேதாந்திகளையும், சிறுதெய்வ வழிபாடு செய்கின்றவர்களையும் கொண்டிருக்கின்ற ஓர் இழிவான சமுதாயமாகக் கீழே விழுந்து கிடக்கின்றது. நம்மையே நாம் போற்றிப் போற்றிப் புகழ்ந்து சுய துதி பாடிகளாக மயங்கிக் கிடப்பதொழித்து, மிகக் கசப்பான ஓர் உண்மையெனினும் நாம் மிகமிக வீழ்ந்து கிடப்பதை நன்றாக உணர்ந்து, சிவகற்பினை மீண்டும் நம் சமுதாயத்தில் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும். அதுவே சைவர்களாகிய நமது தலையாய கடமையாகும்.

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகைஅடியார் பதம்போற்றி
ஒல்லை அவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி.

உள்ளத் தெளிவே ஆன்மீகம்

எஸ். தெய்வநாயகம், உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி), இந்து சமயக் கலாச்சார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, இலங்கை

சைவ சமயம் மிகவும் தெளிவு நிலை கொண்ட சமயம், இதில் பிறந்த நாயன்மார்களும், அடியார்களும் துன்பநிலை நீங்கி இன்பவாழ்வு பெற்றதற்கு அவர்கள் கடைப்பிடித்த ஒழுக்க நெறிமுறைகளே காரணம். துன்பம் என்ற சொல்லை அவர்கள் துச்சமென மதித்தனர். இன்பநிலையிலும் இறுமாப்புக் கொள்ளாத மனநிலை அவர்களுக்கு இருந்தது. இதைச் செய்துதா என இறைவனிடம் கேட்டார்கள் பெற்றார்கள். ஆனால் நாம் இறைவனிடம் எதையும் கேட்கத் தகுதியற்றவர்கள். ஒரு பொருள் கிடைக்க வேண்டுமானால் அப்பொருள் பெறுபவர் தகுதியுடையவராக இருக்க வேண்டும். தகுதியுள்ள ஒரு மாணவனே பரீட்சையில் சித்தி பெறுவான். எனவேதான் எந்தத் துன்பம் வந்தபோதும் அதை விடுவிக்க அதற்கும் தகுதி வேண்டும் என்று மெய்யடியார் ஒருவர் கூறுவது போல் உலக வாழ்க்கையில் தகுதி உடையவர்களே முன்னேற்றம் பெறுகின்றனர்.

இந்தத் தகுதியைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் ஒழுக்க சீலர்களாக வாழவேண்டும். ''ஒழுக்கம் உயிரினும் மேலானது'' என்பது சான்றோர்களின் அருள்வாக்கு. ஒழுக்கசீலர்களாக வாழும்போது நமது வாழ்க்கையில் துன்பம் ஏற்பட்டாலும் அது இலகுவில் மறைந்து விடும். தேவையான நேரத்தில் மாத்திரமே ஒழுக்க சீலர்கள் தங்கள் தோற்றத்தை வெளிப்படுத்துவார்கள். அதுவரை அமைதியாக இருந்து தமது கருமங்களை முடிப்பர். கடல் அமைதியாக இருக்கும் போது அது வற்றிவிட்டது எனக் கணிப்பீடு செய்வது தவறு. என்றும் எப்போதும் ஒரு நிலையில் அமைந்து விடாது. தெளிந்த சிந்தையும், இறைத்தியானமும் கொண்ட வாழ்க்கையில் நிலைகொண்டோர் சான்றோர்களாகவே வாழ்ந்து கொண்டிருப்பர். நாம் யாருக்கும் பயப்படாவிட்டாலும் இறைவனுக்குப் பயப்பட வேண்டும்.

இறைவன் அர்ச்சனை, அபிஷேகம், ஆராதனை இவைகளைத் தந்தால்தான் உங்களுக்கு அருள் சுரப்பேன் என்று கேட்கவில்லை. அவனுக்குக் கொடுத்தாலும் சரி கொடுக்காவிட்டாலும் சரி அபிஷேகம் செய்தாலும்சரி, செய்யாவிட்டாலும் சரி காணிக்கை செலுத்தினாலும், செலுத்தாவிட்டாலும் ஒரு நிலையான மனநிலையுள்ளவன். எந்த மனநிலையில் நாம் வழிபடுகின்றோமோ அந்த மனநிலைக்குத் தகுந்தவாறு நம்மை வழி நடத்துபவன் இறைவன். ஞானசம்பந்தரைத் தன் குழந்தையாகக் கருதிப் பணிவிடை செய்த இறைவன் எமக்குச் செய்யமாட்டானா நிச்சயம் செய்வான் இதை உணர்ந்து கொண்டால், இறைத்தியானமும் இறைவனை வழிபடும் முறையும் எமக்கு இலகுவாகிவிடும். இறைவனைப் பணம் செலவிட்டு வணங்க வேண்டிய அவசியமில்லை. நாம் தூய மனத்துடன் நாளாந்தம் இறைவனைப் பிரார்த்தித்து வந்தால் நிச்சயம் அவன் அருள் கிடைக்கும்.

சமய வளர்ச்சியானது அந்தச் சமயம் சார்ந்துள்ள சமூகத்தின் பணியிலேயே தங்கியுள்ளது. அந்தச் சமுதாயப்பணியானது விரிவடையும் போது சமயத்தின் உறுதிப்பாடு சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. சைவ குரவர்களும் மெய்யடியார்களும் சமுதாயத்துக்காகவே தங்கள் வாழ்வை அர்ப்பணித்தார்கள். அவர்கள் என்றும் சமூகத்தைவிட்டு ஒதுங்கியது இல்லை. இன்பத்திலும் துன்பத்திலும் பிரியாது நின்று தொண்டாற்றி இறைவனடி சேர்ந்தார்கள். அதனால் சைவம் வளர்ந்தது அதன் பெருமை சுடர்விட்டுப் பிரகாசித்தது.

எமது சமயத்தில் உள்ள சிறப்புத்தன்மையைப் புரிந்து கொள்ளாத துர்ப்பாக்கிய நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வாழ வேண்டும் வாழ்ந்தால் மன அமைதியுடன் தாராள சிந்தையுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். ஏழை எளியவர்களையும் வயது குறைந்தோரையும் நாம் ஆதரிக்க வேண்டும். அவர்களுக்கு அள்ளிக் கொடுக்க வேண்டும் என்பது இல்லை. ஆனால் கிள்ளிக் கொடுத்தாவது அவர்களது துயர்களில் பங்கு கொள்ள வேண்டும். அப்போது ஆனந்த ஊற்று எமது வாழ்வுக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்துவிடுகின்றது. துன்பம் என்பதும் இன்பம் என்பதும் எல்லோருக்கும் ஒன்றாக அமைவதில்லை. ஆனால் அவர்களின் மன நிலையைப் பொறுத்து அமைந்து விடுகின்றது. போதும் என்ற மனம், எண்ணம் எவர் உள்ளத்தில் எழுகின்றதோ அன்றே தொல்லை என்ற பேய் நம்மை விட்டு

நீங்கிவிடுகின்றது. தானும் தன்குடும்பமும் வாழ்ந்தால் போதுமானது என்று எண்ணிவிடாது மற்றவர்களையும் அணைத்து வாழப் பழகிக் கொள்ளும்போது இனியவாழ்க்கை எமக்கு அமைந்து விடுகின்றது. எனவே எமது வாழ்க்கையில் இனிய வாழ்வு அமைய இளமையில் இருந்தே நற்பண்புகளுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

உயிர் உணர்வால் அறிய வேண்டிய உண்மைகள் உண்டு. அடைய வேண்டிய அனுபவங்கள் பலவுண்டு. உள்முகமாகச் சிந்தனை செய்ய வேண்டும். வெளிமுகச் சிந்தனை செய்யக் கூடாது. உள்முகச்சிந்தனை யாது, வெளிமுகச் சிந்தனை யாது என்று நீங்கள் கேட்கலாம். நாம் பார்ப்பவை கேட்பவை சுவைப்பவை முகர்ப்பவை, ஸ்பர்சிப்பவை இவற்றைப் பற்றிய சிந்தனை வெளிமுகச் சிந்தனை. இவற்றை அனுபவிக்க ஆசைப் படுவது அறிவு பெறுவதற்கே கூடத் தடையாகும். இவற்றோடு நாம் நம்முடைய கண், காது, வாய், மூக்கு, உடம்பு இவற்றின் மூலம் தொடர்பு கொள்கிறோம். பழக்கம் காரணமாகப் பொருள்களை அனுபவிக்கவே முந்துகின்றோம்.

உள்முகச் சிந்தனை என்பது மனத்தை ஒரு நிலைப்படுத்தி அதனை நமதுஉயிர் உணர்வை நோக்கித் திருப்பி அந்த உணர்வில் கலந்துவிடச் செய்வதாகும். அப்பொழுது உயிர் உணர்வுதான் இருக்கும் மன உணர்வு தனியாக இராது. உயிர் உணர்வால் பல புது உண்மைகளை அறியலாம். உயிருணர்வின் வளர்ச்சியும் பண்பாடுமே மனிதனுடைய சொந்த வளர்ச்சி இந்த உணர்வினால் அவன் ஆன்மீக வாழ்க்கை பெறுகின்றான். இந்த உள்முகச்சிந்தனைக்கும் மேலே குறிப்பிட்ட வெளிமுகச் சிந்தனைக்கும் தொடர்பே இல்லை. வெளிமுகமாகச் செல்லும் நம்முடைய ஐம்புலனும் உள்முகச் சிந்தனைக்கு உதவமாட்டா. அவை தடையாகும்.

ஆகவே உள்ளுணர்வாகிய உயிருணர்வை வளர்க்க விரும்புவோர், புலன்களை வெல்ல வேண்டும். அவை எவற்றை எல்லாம் விரும்புமோ அவற்றையெல்லாம் ஒன்றாக விட்டுவிடவேண்டும். சிறிது சிறிதாக விடலாம் என்று எண்ணினால் பழக்க வாசனை காரணமாக விடமுடியாத நிலைதான் வரும்.

அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு *(திருக்குறள் 343)*

என வள்ளுவர் கூறியுள்ளார். எனவே வாழ்க்கையில் மனத்தை ஒருநிலைப்படுத்தி இறைவனிடம் நமது புலனைச் செலுத்தும் போது அது மெய்யுணர்வாகி நம்மை நல்லெண்ணச் சூழ்நிலைக்குக் கொண்டு செல்லும். அந்த நல்லெண்ணங்கள் யாவும் நமக்கு இனிய வாழ்வைத் தேடித்தரும்.

நமது வாழ்க்கையில் தொல்லைகளும், துயர்களும் வருவது இயற்கையின் நியதி. இவைகளைக் கண்டு சோர்ந்துவிடக்கூடாது. இறைவன் ஒருவன் இருக்கின்றான் அவன் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வான் என்ற மனநிலையைத் தோற்றுவித்துக் கொண்டால் துன்பமும் துயரும் ஒரு நொடியில் பறந்துவிடும். சிலவேளை துயர்களை அதிகமாக ஏற்படுத்துபவர்களும் நாமாக அமையலாம். நாம் மற்றவரிடம் அன்புநிலையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இறைவனும் அன்புக்குக் கட்டுப்பட்டவன். நமது அடியார்களின் வாழ்க்கைநெறி முறைகளை எடுத்துப்பாருங்கள். அங்கு அன்புநிலையை எவ்வளவு தூரம் வளர்த்துச் செயல்பட்டுள்ளார்கள் என்பதை உணர்ந்துகொள்ளலாம். காரைக்கால் அம்மையார் இறைவனிடம் மாங்கனி பெற்றார் என்றால் அது நம்மால் முடியுமா என்று எண்ணக்கூடாது. இறைவனிடம் அன்பு கொண்டு செயற்படும் எவரும் எதையும் நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய வாய்ப்பு உண்டாகும். கண்ணப்பநாயனார் பக்தித்திறத்தை அவருடைய இறை அன்பின் பெருமையினை நம்மால் நினைத்துக் கூடப்பார்க்கமுடியாது. ஆனால் அன்பு நிலை உருவாகும் மனதுடையவர்கள், பிறரிடம் அன்பு காட்டுவது போல் இறைவனிடம் அன்பு கொண்டநிலை காணும் போது எதையும் எளிதில் நிறைவேற்றி இன்பம் காண்கின்றனர். வாழ்க்கையில் சோதனைகளும், வேதனைகளும் ஒரு மனிதனைப் பக்குவப்படுத்தவே ஏற்படுகின்றன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

நமது முன்னோர்கள் சமயநெறியில் ஊன்றிக் கால்வைத்து வாழ்க்கை நடத்தியதால் தொல்லைகளும், துயரங்களும் அவர்களை எளிதில் பற்றியதில்லை. அப்படி வந்த துயர்கள் யாவும் ஒரு நொடியில் மறைந்தும் விட்டன. ஆகவேதான் நமக்கு இறைவனின் கருணை, திருவருள் ஏற்பட

வேண்டுமானால் நாம் அன்பு நிலையை மனத்தில் தோற்றுவித்து அதன் மூலம் பிறரிடமும், இறைவனிடமும் அன்பு நிலையில் நடந்து கொள்வோமேயானால் நமக்கு எந்தவிதத் துன்பத்திற்கும் இடமில்லை.

இறைவனை இறுகப்பற்றி அன்பு செலுத்துபவர்களுக்கு அவன் என்றும் துணையிருப்பான். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து உதவுவான். இதற்கு ஒரேவழி, இறைத்தியானம். இறைத்தியானம் கொண்டவர்களது மனத்தில் அன்புநிலை தானாகவே வளரும். அந்த வளர்ச்சியில் பலவித நற்பேறுகள் கிடைக்கும். உயர்ந்த நோக்கங்கள் உருவாகி மற்றவர்களுக்கும், பெரும் பயனைக் கொடுக்கக் கூடியதாக அமைந்து விடும். அதனால்தான் வள்ளுவர் கூட ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்'' என்று கூறுகின்றார்.

அன்புள்ளம் கொண்டவர்களின் எந்தச் செயலிலும் இறைவனைக் கண்டுகொள்ள முடியும். கோயில், பூசை, வழிபாடுகள் இறைவனுக்குத் தேவைதான். ஆனால் பிறரிடம் காட்டும் அன்பு நிலையை இறைவன் பெரிதும் விரும்புவான். அதுவே அவனுக்குச் சிறந்த பூஜை வழிபாடு ஆகும். எந்த உயிர்களிடமும் நாம் அன்பாக நடந்து கொண்டால் அதுவே நிறைந்த இறைவழிபாட்டிற்குச் சமமாக அமைந்துவிடும். உயர்ந்த இறைவழிபாட்டிற்கு அன்புவழி நடப்பதே நிறைந்த வாழ்க்கையாகும்.

நாம் பிறந்தது உலகில் தீயவழிகளில் இருந்து விலகி நன்மைகளைச் செய்து வாழ வேண்டும் என்பதற்காக, மனித எண்ணங்கள் அளவிடற்கரியன. அவைகள் நல்லவைகளாகவும் இருக்கும். அதேவேளை தீயவைகளாகவும் அமையும். நல்ல எண்ணங்களும், சிந்தனைகளும் ஒரு மனிதனைப் பூரணத்துவம் பெற வைக்கின்றன. ஆசைகள் யாவும் நமது தகுதிக்கும் தன்னம்பிக்கைக்கும் கட்டுப் பட்டவையாக அமைய வேண்டும். கூழுக்கு வழியில்லாத ஒருவன் கூடைநிறையப் பழங்கள் வாங்க ஆசைப்படக்கூடாது. கல்லியறிவில்லாதவன் கற்றவன் போல் நடிக்க ஆசைப்படக் கூடாது. அருள் எண்ணம் இல்லாதவன் பக்திமானாக வேடம் போட முற்படலாகாது. இதேபோல் பல ஆசைகள் மனத்தில் எழும்போது அவைகள் மனிதனின் புத்திக்குப் பலமான அடியைக் கொடுக்கின்றன. அந்த அடியின் மூலம் அவன் பலவாறாக ஆசைகளின் தாளங்களுக்கு ஆடி அமரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

இவைகள் யாவும் நமது இவ்வுலக வாழ்க்கைக்கு இடைஞ்சல்களாக அமைவதோடு மறுவுலக வாழ்க்கையைத் திசைதிருப்பி விடவும் செய்கின்றன. எனவே இவைகளிலிருந்து விடுபட வேண்டுமானால் தூய சிந்தனையுடன் கூடிய எண்ணங் கொண்டவர்களாக வாழ முற்படவேண்டும். அதற்கு ஒரே வழி இறைச்சிந்தை கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும். இதற்கு நாளாந்தம் எந்த வேலைகள் இருந்தாலும் ஒரு நிமிடமேனும் இறைவனைத் தியானிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த ஒருநிமிடம் நமக்கு எவ்வளவோ மனச்சுமையைக் குறைக்க உதவுகின்றது. நல்ல சிந்தனை ஏற்பட வழிவகுக்கின்றது. அடுத்தவரைப்பற்றிக் குறைகூறுவதும் அவன் வாழ்வைக் கண்டு பொறாமைப்படுவதும் நல்லதல்ல. ஒரு பொருள் அடுத்தவருக்குக் கிடைத்துவிட்டதே நமக்குக் கிடைக்கவில்லையே என எண்ணி அவர்மேல் பொறாமைப்படுவதைத் தவிர்த்துப் பொருள் கிடைத்தவனை வாழ்த்தி மகிழ வேண்டும். இனிவரும் காலத்தில் அந்தப்பொருள் கிடைக்க இறைவன் அருள்புரிய வேண்டும் என எண்ணுவதே சாலச்சிறந்தது. அதை விடுத்து அந்தப் பொருள் எப்படி அவனுக்குக் கிடைத்தது என ஆராய முற்படுவதும் அது பிழை, இது பிழை எனச் சுட்டிக்காட்டுவதும் நல்ல எண்ணமாகாது.

எனவே நல்ல எண்ணங்களை மனத்தில் கொண்டு செயற்படும்போது வாழ்க்கையில் உயர்ந்த நோக்கமும், இறையருளும் கூடி, சிறந்த வாழ்வை அளிக்கும். இறைவனைத் தியானம் செய்யும்போது இதய சுத்தியுடன் தியானம் பண்ண வேண்டும். பலவிதமான மனப்பாடுகளைக் கொண்டு இறைத்தியானம் செய்ய முனைவது ஓட்டைக்குடத்தில் நீர் வார்ப்பது போன்றதாகும். பலகாலம் தியானம் பண்ணினாலும் சபல மனம் படைத்தவர்களுக்கு இறைவனைக் காண்பது எளிதன்று. தேனீ சிறுகச்சிறுகச் சேமித்துப் பெரிய தேன்கூட்டைக் கட்டுகின்றது. அதிலிருந்து பெறப்படும் தேன் சிறந்த உணவாகவும் மருந்தாகவும் பயன்படுவது போல இறைவனைத் தெளிந்த ஒருவரது மனத்திலிருந்து வெளிப்படும் எண்ணங்கள், சிந்தனைகள் யாவும் சமூகத்துக்கு ஏற்ற உணவாகவும், மருந்தாகவும் அமைந்துவிடுகின்றது.

எடுத்தவுடன் இறைவனைக் கண்டுவிடலாம் என எண்ணுவது தவறு. அப்படி எடுத்த எடுப்பில் இறைவனைக் காண்பதற்கு நாம் முற்பிறப்பில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். அல்லது இறையருள் கைகூடும் நிலை உருவாகியிருக்க வேண்டும். ஞானிகளும், யோனிகளும் பலநாள் தவமிருந்து கஷ்டப்பட்டே இறைவன் திருவருளைப் பெற்றிருக்கின்றனர். வாழ்க்கையில் ஒரு பிடிப்புநிலை ஏற்படும் போது அந்தப் பிடிப்பு இறையருளைத்தொட்டு நிற்க வேண்டும். அப்போதுதான் நமது வாழ்வும் சிறக்கும், வளமும் பெருகும். சமய உண்மைகளையும் அதன் யதார்த்தத்தையும் புரிந்து கொள்ளாதவர்கள் வாழ்க்கையில் கஷ்டமுறவே செய்வர். நமது முன்னோர்கள் எத்தகைய கஷ்டத்தின் மத்தியிலும் இறைவழிபாட்டைக் கைவிட்டதில்லை. ஆனால் இறைவன் அதைக் கொடுக்கவில்லை. இதைக் கொடுக்கவில்லை என்று மனம் நொந்து கொள்கின்றோமே தவிர இப்புவியில் பிறப்பெடுத்ததே இறையருளின்தன்மை என்று எண்ணுகிறோமில்லை. இனிய வாழ்க்கையும், மாடமாளிகைகளும் பொன், பொருளும் வேண்டுமென்று நாளாந்தம் வேண்டுகின்றோம். ஆனால் நல்ல மனத்தையும் சிறந்த இறையருளையும் தரவேண்டுமென ஒருதரமாவது இறைவனைக் கேட்டதில்லை. பருந்து எவ்வளவு தூரம் வட்டமிட்டாலும் தனது இறையெனும் குறிக்கோளிலிருந்து விடுபடுவதில்லை. அதேபோல் நாம் எத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்தாலும் இறையருளைப்பெற வேண்டும் என்ற நிலையிலிருந்து மாறுபடக்கூடாது. அந்த மாறுபாடானது நமது வாழ்வைச் சாகடித்துவிடும். நமது உள்ளத்தில் தெளிவை ஏற்படுத்த வேண்டும். அந்தத் தெளிவின் மூலம் இறைவனைக் காணமுனைய வேண்டும். அப்போது இனிய வாழ்வு நம்மைத் தொடர்ந்துவரும். சமயநம்பிக்கை எல்லோர்க்கும் வேண்டும். அப்போது தான் நமது சமூகத்தின் வளர்ச்சி சுடர்விட்டுப் பிரகாசிக்கும். நமது சமயத்தில் உள்ள ஆழமான கருத்துக்களையும் தெய்வீகத் தன்மையையும் மனத்தில் பதித்துக் கொண்டால் குறை என்ற சொல்லுக்கே இடமிராது. மனக்குறை எதனால் ஏற்படுகின்றது. திருவருளை நன்கு உணர்ந்து கொள்ளாத தன்மையினாலேயே மனக்குறை உண்டாகின்றது. கடவுளின் மேல் நம்பிக்கை கொண்ட எவருக்கும் திருவருள் தானாகக் கைகூடிவரும். ஒரு செயலைத் தொடங்குமுன் அந்தச் செயலையொட்டிய முன்கூட்டிய திட்டம் எவ்வளவு அவசியமோ அதேபோல்தான் இறைவன் திருவருள் நிலையைப் பெறுவதற்கு நாம் முன்னேற்பாடான காரியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். மனத்தூய்மை, இறையருளில் அசைக்க முடியாத நம்பிக்கை, உண்மை, சத்தியம் கொண்ட வாழ்வு, முன்னுக்குப்பின் முரண்படாத தன்மை போன்ற ஒழுங்குமுறைகளை மனத்தில் இருத்திக் கொண்டால் நமது வாழ்க்கையில் திருவருளின் தன்மை என்றும் நிலைத்திருக்கும்.

ஒரு மனிதனுடைய வாழ்வில் துன்பங்களும் சோதனைகளும் ஏற்படத்தான் செய்யும். அதற்காகக் கடவுள் நம்மைக் கைவிட்டுவிட்டார் என்று எண்ணம் கொள்வது தவறு. கடவுள் எல்லோருக்கும் சொந்தமானவர். எல்லோரும் அவரது பிள்ளைகளே. அவருக்கு இன்பம், துன்பம், ஏழை, பணக்காரன் என்ற பேதம் கிடையாது. எதிலும் விருப்பு, வெறுப்பு என்ற பேச்சுக்கே இடம் கொடாதவர். துயர்வந்த போதும்கூட நாவுக்கரசர் நமசிவாயம் என்ற சொல்லை மறந்ததில்லை. சுண்ணாம்பு சுடும் அறையில் இட்டு நெருப்பூட்டிய போதும் நாவுக்கரசருக்கு அது பஞ்சணை மெத்தையாகத் தோன்றியது. காரணம் என்ன, அவர் மனத்தில் குடி கொண்ட திருவருளும், இறைவன் அவருக்குக் காட்டிய கருணையும் கொண்டே, இறைவனின் திருவருள் சக்தி கைகூடியநிலையில் நாவுக்கரசர் சுண்ணாம்பு அறையைப் பஞ்சணை மெத்தையாக்கினார். ஆனால் நாம் என்ன செய்கின்றோம். நம் மனத்தில் இறைத்தியானமும், திருவருள் நிலையும் ஒன்று சேர்க்காமல் விட்டு விட்டு இறைவன் எம்மைக் கைவிட்டு விட்டார் என்று கண்ணீர் வடிப்பது மடமை. பிழை செய்தவர் தண்டிக்கப்படல் வேண்டும். நாம் தெரிந்தோ, தெரியாமலோ பிழைகளை முற்பிறப்பிலும், இப்பிறப்பிலும் செய்திருப்போம். அவைகளுக்கு ஏற்படும் தண்டனையே துன்பநிலை, தண்டனை முடிந்து விடுதலையாவது போல் நாம் செய்த பிழைகளுக்கு, தண்டனை அனுபவித்ததன் பின்பு இன்பநிலை ஏற்படும். அந்த இன்பநிலையில் நாம் இறைவனைக் காண வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையின் துன்பநிலையிலிருந்து விடுபட்டு நாம் முத்திநிலையடைய முடியும். உள்ளத் தெளிவே ஆன்மீகம் இதை உணர்ந்தால் இறையருள் தானாகவந்து சேரும்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே (திருமந்திரம்)

நாவரசர் வாழ்வும் நம்மனோர் கடமையும்

முனைவர் ச. சாம்பசிவனார், சிறப்புநிலைப் பேராசிரியர்,
சைவ சித்தாந்தத் தத்துவத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 21.

முன்னுரை

''உலகச் சமயங்கட்குள்ளே ஓர் ஒருமைப்பாடு வேண்டும் என்று விரும்பியவர் அப்பர் அடிகள். ஆனாலும் அவருடைய வீட்டு நாகரிகத்தை-சமுதாய நாகரிகத்தைப் பிற நாகரிகம் வந்து ஆட்சி செய்வதை அவர் வெறுத்தார்! அவர் நடத்திய போராட்டம் சமயப் போராட்டமேயன்று! நாம் நன்றாக எண்ணிப் பார்த்தால், 25 விழுக்காடுதான் அதனைச் சமயப் போராட்டம் என்று கூறலாம். பௌத்த-சமண சமயங்களால் ஏற்பட்ட குழப்பநிலையிலிருந்து சமுதாயத்தைக் காப்பாற்றும் முயற்சிதான் 75 விழுக்காடு!'' (''குன்றக்குடி அடிகளார், அப்பர் விருந்து, ப.6.) என்பது தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூற்று. இத்தகு அருளாளர் நாவரசர் வாழ்வு குறித்தும், நம்மனோர் ஆற்ற வேண்டிய கடமை குறித்தும் ஒரு சிறிது ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

நாவரசர் வாழ்வு

''நான்கு பேர் போனவழியே நாமும் போவோம்!'' என்பது தமிழகத்துப் பழமொழி. ''சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் எனும் நால்வர்'' காட்டிய நன்னெறிவழிச் செல்வதே நம்மவர் கடமை என்பது கருத்து. சைவ சமய மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்து இப்பழமொழி எழுந்திருக்கக்கூடும்!

இந்நால்வரினும், நெடிது வாழ்ந்து, அல்லல் பலவற்றுக்கு ஆளாகி, இறைவனருளால் உய்வு பெற்றவர் நாவரசர்! சம்பந்தர், திருமண வாழ்வு கொண்டு, கொண்ட அன்றே சிவசோதியினுட் கலந்தவர்; அம்மட்டோடன்றி, ''இம்மணத்தில் வந்தோர் ஈனமாம் பிறவிதீர யாவரும் புகுக!'' (பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணம், 1248:3-4) என்றும் அருளியவர்! சுந்தரர், இருவரை மணமுடித்து இன்ப வாழ்வு எய்தித் தம் உடம்போடு திருக்கயிலை நண்ணியவர்! மணிவாசகர் தலைமை அமைச்சுப் பொறுப்பேற்று, இறைவனால் ஆட்கொள்ளப் பெற்று, இறுதியில் தில்லை அம்பலவாணர் திருவடியில் கலந்தவர்! ஆனால் நாவரசரோ, தூய துறவு மேற்கொண்டொழுகியவர்! அன்றியும், ஏனைய மூவரைப் போலன்றித் தாம் தோன்றிய சைவ சமயத்திலேயே நிலைகொள்ளாமல், சமண் சமயஞ் சார்ந்து, அல்லல்பல ஏற்றுப் பின் இறைவனருளால் சைவத்திற்கு மீண்டவர்! மூவரைவிட, இந்நிலவுலகில் நெடிது வாழ்ந்தவர்; தம் திருத்தொண்டால் சிவப்பேறுற்றவர்! அதனால்தான் தெய்வச் சேக்கிழார், இவரது வரலாறு இயம்பும் போது, எடுத்த எடுப்பிலேயே,

''திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ!'' (பெ.பு.திருநாவுக்கரசர் புரா.1:1)

என்று தொடங்குகின்றார். இம்மூவரைவிட வாழ்வில் பெருந்துன்பத்திற்காளானவர் நாவரசரேயாவர்!

நாவரசரின் தந்தையும் தாயும் விண்ணுலகு சென்றடையத் தமக்கு ஆதரவாக இருக்கும் அருமைத் தமக்கையாருக்கு மணமகனாக வரவேண்டிய கலிப்பகையார், போர்க்களத்தே உயர்கொடுத்துப் புகழ் கொண்டார்; திலகவதியாரோ, ''எந்தையும் எம் அனையும் அவர்க்கு எனைக் கொடுக்க இசைந்தார்கள்; அந்த முறையால் அவர்க்கே உரியது நான் ஆதலினால் இந்த உயிர் அவருயிரோடு இசைவிப்பன்!'' எனத் துணிந்தபோது, 'மருள்நீக்கியார்' என்னும் இயற்பெயருடைய நாவரசர், தமக்கையின் திருவடியில் வீழ்ந்து அழுது புலம்பலானார். தம் அருமைத் தம்பிக்காக உயிர் தாங்கி, 'இம்பர்மனைத்தவம் புரிந்து' வரலானார். ஆனால் நடந்ததோ வேறு! எந்தத் தம்பிக்காக இவ்வுலகில் வாழ்ந்தாரோ, அந்தத் தம்பி, தமக்குரிய சைவ சமயத்தை விட்டு நீங்கி, அமண் சமயம் குறுகினார்!. பாடலிபுத்திரம் சென்ற மருள்நீக்கியாரை மாற்றுச் சமயத்தினர் அன்புடன் வரவேற்றனர்; ஆதரவு நல்கினர்; 'தருமசேனர்' என்னும் பட்டமும் தந்து பாராட்டினர்; அமண் சமயத்தலைமைப் பதவியும் அளித்தனர்!

அன்புத் தம்பியின் அவலநிலை கண்ட திலகவதியார் மனம் நொந்தார்; திருவதிகை வீரட்டானம் சென்றார்; ஆங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருவடி பணிந்தார்; சிவ சின்னமாகிய திருநீறு,

உருத்திராக்கம் முதலாயின அணிந்து கொண்டார்; தம் திருக்கையால் திருத்தொண்டு புரிந்து வரலானார்! இறைவனைத் தொழும்போதெல்லாம்.

''... என்னை

ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவனை

ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாள

வேண்டும்!'' *(பெ.புரா. திருநாவுக். 46:1-3)*

என்றே விண்ணப்பம் செய்து வரலானார் திலகவதியார்! இறைவன் திருவுளங்கொண்டு, அம்மையாரது கனவில் தோன்றி, 'அன்னவனை இனிச் சூலை மடுத்தாள்வம்!' என்றனன்.

அவ்வாறே, 'மண்டுபெருஞ்சூலை' நாவரசர்தம் வயிற்றிடைப் புக்கது. சமணர் பலர் எத்துணை முயன்றும், அந்நோயின் கொடுமை மென்மேலும் மிகுந்ததேயன்றிக் குறைந்திலது! வேறு வழியின்றித் திருநாவுக்கரசர், தமக்கையாரை நாடித் திருவதிகை வந்தார்; திலகவதியார் இருந்த திருமடத்தைச் சென்றணைந்தார்; அம்மையாரின் அடிமேலுற வணங்கினார்; திலகவதியாரோ, இறைவன் திருவருள் இப்போதேனும் கிட்டியதே என்றெண்ணிக்,

''கோளில்பர சமயநெறிக் குழியில் விழுந் தறியாது

மூளும்அருந் துயர்உழந்தீர்! எழுந்திரீர்!'' (பெ.புரா.திருநாவுக். 64:3-4)

என்றார்; ''பற்றறுப்பார் தமைப்பணிந்து பணிசெய்வீர்!'' என்று பணித்துத் திருவைந்தெழுத்து ஓதித் திருநீற்றைக் கொடுத்தார்! அதனைப் பெற்றதுமே 'பெருவாழ்வு வந்தது' என எண்ணி, அதனை உருவார அணிந்தார்; தமக்கை, முன் செல்லத் தம்பியார் பின்செல்லத் திருக்கோயில் புக்கனர். அதனைத் தொழுது வலங்கொண்டு சிவபெருமான் திருமுன்னர் இறைஞ்சித் தரைமிசை வீழ்ந்தார். இறைவன் திருவருளால் உரைத்தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு பெற்றார்;''கூற்றா யினவாறு விலக்ககிலீர்!'' என்னும் தேவாரத் திருப்பதிகத்தைப் பாடியருளினார் நாவரசர்! இப்பதிகம் பாடியபின் வயிற்றடு சூலை அடியோடகன்றது! மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த மருள்நீக்கியார், அங்கங்கள் அடங்க, உரோமமெலாம் அடையப் புளகங்கள் முகிழ்த்தலரப், பொங்கும் புனல் கண்கள் பொழிந்திழியப் புவிமீது புரண்டு அயர்ந்தார். அப்போது அவர், இறைவன் திருமுன்,

''பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப் பொறியில் சமண் நீசர் புறத்துறையாம்
அவ்வாழ்குழி யின்கண் விழுந்தெழுமா றறியாது மயங்கி அவம்புரிவேன்
மைவாச நறுங்குழல் மாமலையாள் மணவாளன் மலர்க்கழல் வந்தடையும்
இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக் கெதிர்செய் குறைஎன்கொல்?''

எனத் தொழுதார், அப்போது,

''பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப் பதிகத்தொடை பாடிய பான்மையினால்
'நாவுக்கரசு' என்று உலகுஏழினும் நின்நாமம் நயப்புற மன்னுக!''
(பெ.புரா.திருநாவுக்.73;74:2-3)

என்னும் ஓர் அசரீரி எழுந்தது. அன்று முதல் 'நாவரசர்' என்னும் நற்றிருப்பெயர் தாங்கி, மனத்தொடு வாய்மையுடன் விரவும் சிவசின்னம் தாங்கித் திருக்கையில் 'உழவாரம்' கொண்டு, இறைவனைத் தேவாரத் திருப்பதிகங்களால் பாடிப் பரவலாயினர்.

நாவரசரின் மாற்றங்கண்டு மலைத்தனர் சமணர்; அரசனாம் மகேந்திரவர்மபல்லவனிடம், ''நற்சமயம் ஒழித்தார் தருமசேனர்'' என நாவில் வந்தன உரைத்தனர். அரசன் ஆணைப்படி நாவரசருக்கு நவிலமுடியா இன்னல்பல இழைத்தனர் அமணர்கள். நாவரசரை நீற்றறையில் இட்டனர்; நஞ்சு கலந்த பாலடிசில் உண்ணச் செய்தனர்; யானையின் காலால் இடறச் செய்தனர்; இறுதியாகக் கல்லுடன் கட்டிக் கடலில் தள்ளினர். நாவரசரோ, சொற்றுணை வேதியனின் தூமலரடி நினைந்தவராய்த் திருப்பதிகங்கள் பாடி, ஒன்றாலும் துன்புறாதிருந்த உயர்நிலை கண்டு திகைத்தனர் சமணர். மகேந்திர பல்லவனோ, சைவ சமய மேன்மை உணர்ந்து, சைவனாகி, நாவரசரை வணங்கினார்; சமணர் பள்ளிகளைச் சிவன் கோயிலாக்கினான்; திருவதிகையில் 'குணதரவீச்சரம்' என்னும் திருக்கோயிலைக் கட்டுவித்தான்!

இறைவன் திருவருட்டுணையால் விந்தை நிகழ்ச்சிகள் பல புரிந்து தாம் விரும்பியவாறே, ''எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ... புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே!'' என்னும் இறுதித் திருத்தாண்டகம் பாடிச் சிவானந்த ஞானவடிவேயாகி, அண்ணலார் சேவடிக்கீழ் இனிதமர்ந்தார் இன்றமிழ் நாவுக்கரசர்! *(ச. சாம்பசிவனார்,* அப்பர் குறுந்தொகை ஐம்பது மூலமும் விளக்கவுரையும், *பக். 6-10).*

நாவரசர் வாழ்வில் அறியத்தகுவன!

உலகில் தோன்றிய சமயங்கள் அனைத்துமே, மன்பதை வாழ வழிகாட்டுவன! நன்னெறிக்கு உய்ப்பன! சமண் சமயமும் அத்தகையதே! 'கொல்லாமை' என்னும் உயர்நெறியைக் கொண்டொழுகும் சமணர்கள், இத்தகைய கொடுமைகளை நாவரசருக்குச் செய்திருப்பார்களா எனும் ஐயம் எழுதல் இயல்பு. இதற்கு விடையாகப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் கூறுவது இவண் குறித்தல் சாலும் : ''வாகீசர், சேக்கிழார் என்ற இருவருக்குமே சமண சமயத்திலிருந்த நலமான கொள்கைகளை ஏற்றுக் கொள்வதில் தடை ஒன்றும் இல்லை!..... ஆனால் சமயம் வேறு; சமயிகள் வேறு என்பதை மறத்தலாகாது! சமயங் கூறும் தத்துவங்கள் அனைத்தையும் சமயிகள் அனைவரும் பின்பற்றுகிறார்கள் என்று நினைப்பது பெரும் தவறாக முடியும்!'' *(அ.ச. ஞானசம்பந்தன்,* பெரியபுராணம் ஓர் ஆய்வு, *ப.251)*

இஃது எத்துணை உண்மை என்பதை இன்றைய நடைமுறையிலும் காணலாம்! பொதுவாக, யாதானும் ஓர் சமயத்தைச் சார்ந்தவர், எந்த ஒரு காரணத்தினாலாவது வேற்றுச்சமயஞ் சார்ந்தால், முதலில் அத்தகையோர்க்கு ஆங்கே நல்வரவேற்பும், பாராட்டும், ஏன் பெரிய பதவிகளுங்கூடக் கிடைக்கும்! அப்படித்தான், சைவ சமயத்திலிருந்து மாறிச் சமண் சமயம் சென்ற 'வாகீசரை' 'வருக வருக' என்று வரவேற்றுத் 'தருமசேனர்' எனும் பட்டமளித்துச் சமண் சமயத் தலைமைப் பதவியும் தந்தனர் சமணர்கள்!

ஆனால் அவ்வாறு புறச்சமயம் சார்ந்தோர், தாம் ஆங்கு எதிர்பார்த்தவாறு மன அமைதி (ஆத்மதிருப்தி) கிட்டவில்லை என்று கருதினால், மீண்டும் தமது பழைய சமயத்துக்கே திரும்பிவிடுதல் கூடும்! அப்படித் திரும்புவோரிடத்துப் புறச்சமயத்தார் காழ்ப்பும் வெறுப்பும் கொண்டு, பல்வேறு இடையூறுகளைச் செய்தலும், இன்னும் உலகில் கண்கூடாகக் காண்பதொன்று! ஆதலினாற்றான் இந்து மதத்திலிருந்தோ, அன்றிச் சைவ-வைணவ சமயங்களிலிருந்தோ புறச்சமயம் சார்வோர், மீண்டும் தம் பழைய மதத்திற்கு அன்றிச் சமயத்திற்குத் திரும்பிவர அச்சங்கொண்டு ஆங்கேயே இருந்து விடுகின்றனர்!

அன்றியும் சமண் சமயத்திற்குப் பல்லவ மன்னனின் பேராதரவும் இருந்தது; எனவேதான் அவனது ஆணைப்படி நாவரசருக்கு வாயினாற் சொல்லவியலாத அத்துணைக் கொடுமைகளை இழைத்தனர் என்பது வரலாறு கூறும் உண்மை!

சமணர்கள் இழைத்த கொடுமைகள் குறித்துச் சேக்கிழார், தம் பெரியபுராணத்தில் கூறியுள்ளார் என்பது ஒருபுறமிருக்க, நாவரசரே, பல்வேறு பதிகங்களில், தாம் சமண்சமயம் குறுகி, அதனால் பட்ட துன்பங்களை எடுத்துரைத்துள்ளனர் என்பதும் இவண் அறியத்தகும்!

நாவரசர் பாடும் முதற்பதிகத்திலேயே, ''கொடுமைபல செய்தன நானறியேன்!'' என்றவர்,

''காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூ க்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்!'' (4.1.5)

என்றும் கூறுகின்றார்.

''ஓர் ஆழமான நீர்நிலை! அதன் கரையில் நின்று காக்கின்றவர் ஒருவர். அந்த நீர்நிலையில் யாரும் மூழ்கிவிடாமல் காப்பது அக்காவலர் கடமை! ஆனால், ஒருவர், அந்தக் காவலர் சொல்லியும் கேட்கவில்லை; கரையில் இருந்தவர் சிலரோ, ''இந்த நீர்நிலையின் ஆழத்தை நீதான் கண்டு சொல்ல முடியும்!'' என்று ஊக்கப்படுத்த, அவரும் அந்த ஆழமான நீர்நிலையில் குதித்தார்! குதித்தவர், கரையேற வழியறியாது தவித்தார்! என்பது இதன் பொருள். ஆனால் இஃது உள்ளுறையாக அமைந்து பிறிதோர் பொருள் தருவது!

ஈண்டுக் 'காத்தாள்பவர்' என்பது, தம்மைக் காப்பதற்கென்றே உயிர் தாங்கி வாழும் தமக்கை திலகவதியாரைக் குறிக்கும். அவரது பாதுகாவலை இகழ்ந்தார் நாவரசர். 'கரை நின்றவர்' என்பது சமண சமயத்தவரைக் குறிக்கும். 'ஆழமான நீர்நிலை' என்பது சமண் சமயத்தைக் குறிக்கும். அவர்கள், நாவரசரைப் பார்த்து, ''இச்சமண் சமய ஆழ்நீரில் மூழ்கு; ஆழத்தை அறியலாம்!'' என்றனர். நாவரசரும் அதனை நம்பி, மூழ்கினர்; கரையேறி மீள வழி தெரியாது தவித்தார். இறைவன் அளித்த 'சூலைநோய்' எனும் 'புணை'யால் கரையேறிக் காவலாக இருக்கும் தமக்கையாரைச் சார்ந்தார் என்பது இதன் உள்ளுறைப் பொருள்!

''கதியொன்றும் அறியாதே கண்ணழலத்
தலைபறித்துக் கையில் உண்டு
பதியொன்று நெடுவீதிப் பலர்காம
நகைநாணாது உழிதர் வேற்கு!'' (4.48 : 1-2)

என, முன்பு சமணரோடு சேர்ந்து வாழ்ந்தமை குறித்துப் பற்பல பாக்களிலும் குறிப்பிட்டுச் செல்கின்றார் நாவரசர். ''அமணர்கள்தம் அறவுரை கேட்டு அலமந்தேன்!'' *(4 : 124 : 2)* என்பவர், ''கற்றுணைப் பூட்டி ஓர் கடலிற் பாய்ச்சினும்'' *(4 : 104 : 3)* என அவர்கள் இழைத்த கொடுமைதனையும் கூறுவர்.

நம்மனோர் கடமை!

சைவ சித்தாந்தம் கூறும் நெறிகள் நான்கு. அவை : சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இந்த நான்கினையும் தம் வாழ்விற் கடைப்பிடித்து நன்னெறிக்கு நம்மை இழுத்துச் செல்பவர்கள், 'சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர்' எனும் நால்வராவர்!

''சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதமார்க்கம், என்றும் சங்கரனை அடையும்
நன்மார்க்கம் நாலவைதாம் ஞான யோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்!'' (270 : 1-2)

என்பது சிவஞான சித்தியார். ''சிவனடியைச் சேர்தற்குரிய நெறிகள் நான்கு. அவை : சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாதமார்க்கம் என்பன. இவற்றை 'ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம்' என்றும் சொல்லுவர்!'' என்பது இதன் பொருள்.

''இம்முறையில் நான்கு மார்க்கங்களின திலக்கணங்களையும் தமிழுலகி லொழுகிக் காட்டியுள்ளார் சிவஞானச் செல்வர்களாகிய மாணிக்கர், சுந்தரர், சம்பந்தர், அப்பர் என்னும் சமயகுரவப் பெருந்தகையாளர் என்ப!'' என மு. திருவிளங்கம் விளக்குவர். இந்நால்வகை நெறிகளுள் நாவரசர் மேற்கொண்டது 'தாதமார்க்கம்' எனப்படும் 'அடிமைநெறி'.

''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பது நாவரசர் கொள்கை. தூய தொண்டின் மூலம் இறைவனையடையலாம் என்பதைச் செயன்முறையாற் காட்டிய அருளாளர் நாவரசர். அதனால்தான் சேக்கிழாரும், **'திருத்தொண்டின் நெறி'** என்று அருமையாகச் சுட்டினார்!

எனவே சைவப்பெருமக்கள், தம் சமயம் நெடிது நின்று தழைத்தோங்க வேண்டும் என மெய்யாகவே எண்ணுவராயின், முதற்கண் எப்பணிக்கும் முதற்பணியாய்ச் செய்யத் தகுவது 'தொண்டு'! இஃது இருவகைப்படும். ஒன்று : தெய்வத் திருத்தொண்டு; மற்றது, சமூகத்தொண்டு. நாவரசர் இவ்விருவகைத் தொண்டாலும் மேம்பட்டவர்!

இன்று சைவ நன்மக்களும், சைவ மடத்துத் தலைவர்களும் இத்தகைய தொண்டுகளைச் செய்து வருகின்றார்களா என்பது சிந்திக்கத்தகுவது! 'அன்பே சிவம்' என்று வாயளவில் சொல்வதால் மட்டும் எப்பயனும் விளையாது. 'எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி இரங்கி' உதவும் மனப்பான்மை நம்மில் ஒவ்வொருவர்க்கும் வரவேண்டும். அடுத்த வீட்டுக்காரரையே பகைவராகப் பார்க்கும் நமக்கு - சொந்த உறவினரையே வெறுத்தொதுக்கி வாழும் நமக்கு - மற்றவர்களை அன்பால் நோக்கி, அவர்க்கு உதவுதல் கடினமே!

இன்று, பிற சமயத்தில், மகளிர்க்கெனப் பல்வேறு அமைப்புக்கள் உள்ளன என்பதை அனைவரும் அறிவர். 'திருமணம் வேண்டா' என வெறுத்தோர், கணவனை இழந்தோர், திக்கற்றோர், ஆண்டவனுக்கு

அடித்தொண்டு செய்ய விழைவோர் எனப் பலதிறப்பெண்டிர்க்கும் எனப் பண்டு, இத் தமிழகத்தில் 'தனி மடங்கள்' இருந்தன! திலகவதியார், திருவதிகையில் இத்தகைய திருமடம் ஒன்றில் தங்கியிருந்து,

''புலர்வதன்முன் திருவலகு பணிமாறிப் புனிறகன்ற
நலம்மலிஆன் சாணத்தால் நன்குதிரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளும் தொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினால் திருப்பணிகள் பலசெய்தார்!''

(பெ. புரா. திருநாவுக். 44)

என்னும் சேக்கிழார், ''திலகவதியார் இருந்த **திருமடத்தைச்** சென்றணைந்தார்'' நாவரசர் என்றும் கூறுவர்!

திருவொற்றியூரில் சங்கிலியார், **'கன்னிமாடத்'** திருந்து இறைவனுக்குத் 'திருமலர் மென்மாலை' தொகுத்தளித்ததாகவும் சேக்கிழார் குறிப்பிடுவர்.

ஆனால் இத்தகைய **'திருமடங்கள்'** பின்னால் என்னவாயின யாமறியோம்! இன்று சைவ சமயத்தில், ''திக்கற்றோர், கணவனை இழந்தோர், வேலையின்றித் துன்புறுவோர், மணவாழ்க்கையில் வெறுப்புற்றோர், கைவிடப்பட்டோர்'' எனப் பலதிறத்துப் பெண்டிர் உள்ளனரே! இவர்களின் நல்வாழ்வுக்கென நம்மனோர் யாது செய்கின்றனர்? இவர்களிற் பலர் புறச்சமயத்தால் எளிதில் ஈர்க்கப்பட்டு நாளும் மதமாறுகின்றதைக் காண்கின்றோமன்றே!

கல்வி நிறுவனங்கள், மருத்துவச் சாலைகள், திக்கற்றோர் இல்லங்கள், மகளிர் மடங்கள் எனப் பலவற்றை நிறுவுதல்; இளஞ்சிறார்க்குச் சைவ சமய உண்மைகளை எளிமையாக எடுத்துரைத்தல்; தேவாரப் பாக்களைப் பண்ணோடு பாடுவது ஒருபுறமிருக்கக் காலத்துக்கேற்றவாறு பல்வேறு நவீன இசைக்கருவிகளுடன் குழுவினர் பாடலாகப் பாடி மக்களை ஈர்த்துச் சைவ சமய உண்மைகளை உணர்த்தல் ஆகியன மேற்கொள்ள வேண்டும்.

சைவ சமயத்தைப் போற்றி வளர்ப்பதற்கென்றே சைவ ஆதீனங்கள் தோற்றுவிக்கப்பெற்றன. இவற்றின் தலைவர்கள், மேலே கூறியாங்கு உடனடியாகச் செயல் மேற்கொளல் நன்று.

இல்லையேல், என்றேனும் ஒருநாள், கடவுள் நம்பிக்கை அற்றவர்களோ, பொதுவுடைமைவாதிகளோ ஆட்சிக்கு வந்து, ஓருகாலத்தில் சமீன்களை ஒழித்த கதை போலச் சைவ மடங்களையும் பொதுவுடைமையாக்குங்காலம் வந்தாலும் வரலாம்! அப்போதைக்கு இப்போதே சொல்லி வைப்பது நமது கடமை என்பதால் இதனைக் கூறுகின்றோம்; சைவம் ஓங்க வேண்டும்; சமயத்தைப் பரப்பும் ஆதீனங்களும் செயல் மூலம் செய்து காட்ட வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார், 'அருள்நெறித் திருக்கூட்டம்' என்றதோர் அரிய அமைப்பினை உருவாக்கினார். பட்டிதொட்டியெல்லாம் சைவம் பரவியது. ஆனால் அது நெடிது நிலைக்காது போனது! அவ்வாறே மதுரை ஆதீனமும், 'திருவருள் தவநெறி மன்றம்' என்றதோர் அமைப்பை உருவாக்கினார். அதுவும் செயலிழந்தது!

முடிவுரை

நாவரசர் வாழ்வினின்றும் நாம் அறிவன, பின்பற்றத்தகுவன இன்னும் பலவுள! ஈண்டுச் சிலவே சுட்டப்பட்டன. எதுவுமே செய்ய இயலவில்லையா? நாவரசர், நம்மனோர்க்காக நான்குமுறை உயிர் பெற்றெழுந்தார்! உலகில் எங்கும் எப்போதும் காணாத விந்தை இது! அந்த நாளிலாவது அவரை எண்ணி, உண்ணாநோன்பிருந்து, வழிபட்டு, ''இறைவா! எமது சைவம் நிலைத்திருக்கச் 'சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர்' போன்ற அருளாளர்கள் மீண்டும் இத் தமிழகத்தில் தோன்றும்வண்ணம் அருள்புரிக!'' என்று வேண்டுதலையாவது செய்யலாமன்றோ?

நாவரசர் திருவடி போற்றி!

நடராசர் இல்லாத தில்லை

முனைவர் செ. இராசு,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தில்லைச் செப்பேடுகள்

தில்லையில் நடராசர் இல்லையா? ஆம். 24.12.1648 முதல் 21.11.1684 வரை நடராசர் இல்லாமல் தில்லைச் சிற்றம்பலம் விளங்கியது. குடமுழுக்கு விழா நடைபெற்று 14.11.1686 அன்றே தில்லைச் சிற்றம்பலத்தில் நடராசப்பெருமான் ஆனந்த நடனத்தோடு எழுந்தருளினார். இதனைத் திருவாரூர்க் கோயிலில் உள்ள நான்கு செப்பேடுகள் விளக்கமாகக் கூறுகின்றன. சிதம்பரம் கோயிலுக்குரிய பல செப்பேடுகள் பாதுகாப்பின் பொருட்டுத் திருவாரூர்க் கோயிலுக்கும், திருப்பனந்தாள் காசிமடத்திற்கும் கொண்டுவரப்பட்டு அங்கேயே நிலையாகத் தங்கிவிட்டன. அவை மீண்டும் தில்லைக்குத் திரும்பவே இல்லை.

பட்டயச் செய்தி

சோழன் பூர்வ பட்டயம் என்பது கொங்கு நாட்டுப் பெருமக்கள், சேர அரசர் ஆகியோர் துணையோடு சோழன் கொங்குநாட்டில் செய்த திருப்பணிகளைக் கூறும் விரிவான தொன்மையானதொரு சிறந்த ஆவணம். அதில் எதிர்கால வரலாறு கூறும் பகுதியில்,

> *'கச்சிக் காமாட்சி, காசியில் விசாலாட்சி, மதுரை மீனாட்சி*
> *இந்த மூவராட்சியாகிய ஆட்சி தேவதைகளும் அவரிருந்த*
> *திருக்கோயில் திருமாளிகை விட்டெழுந்தருளி வலசு போய்விடு*
> *வார்கள். அதுவுமல்லாமல் அறுபத்தாறு தேசத்தில் அரிய*
> *தலந்தோறும் திருக்கோயில் திருமாளிகையிலிருக்கிற*
> *விக்கிரகங்களெல்லாம் எழுந்தருளிக் காடுதோறும் வலசு*
> *போய்விடுவார்கள்'*

என்று கூறப்பட்டுள்ளது.[1] அவ்வாறு தெய்வத் திருமேனிகள் பல காரணங்களால் பல கோயில்களிலிருந்து வெளியேறிய நிகழ்ச்சிகள் தமிழகத்தில் நடைபெற்றிருக்கின்றன.

காஞ்சி முதலிய இடங்களில்

காஞ்சிபுரத்தில் அருளாளப் பெருமான் ஆகிய வரதராசப்பெருமான் தாயாரோடு கி.பி.1688 முதல் 1710 வரை உடையார்பாளையம் காடுகளில் உறைந்தார் என்பது வரலாற்றுச் செய்தி. கர்நாடக நவாப் சாததுல்லாகானின் சேனாபதி சீனிவாச தாஸ் மகன் லாலா ராஜா தோடர்மால் என்பவரால் விரோதி ஆண்டு பங்குனி மாதம் திரிதியையும் உத்திரட்டாதி நட்சத்திரமும் பெற்ற சனிக்கிழமை நன்னாளில் விருஷப லக்கினத்தில் காஞ்சியில் மீண்டும் வரதராசர் பிரதிட்டை செய்யப்பட்டார்.[2]

தஞ்சை மேலவீதியில் உள்ள பங்காரு காமாட்சியம்மன் திருவுருவம் காஞ்சியிலிருந்து உடையார்பாளையம் வழியாகத் தஞ்சை வந்தது மீண்டும் செல்லவில்லை என்பர். திருவரங்கம் அரங்கநாதர் சில காலம் கோயிலிலிருந்து வெளியேறியிருந்தார் என்பது வரலாறு.[3] திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் இரண்டுமுறை காவிரியைக் கடந்து பாதுகாப்பிற்காக எடுத்துச் செல்லப்பட்டார் என்று திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை கூறுகிறது.[4]

தில்லைப்பகுதியில் தொல்லை

இந்து சமயத்தைக் காக்கத் தோன்றிய விஜயநகர மைய அரசு கி.பி.17ஆம் நூற்றாண்டின் இடையில் தன் கீழ் உள்ள சிற்றரசுகளின் எழுச்சியில் வலுவிழந்தது. மூன்றாம் சீரங்கன் (1642-1672) தன் எதிரிகளான சிற்றரசர்களை அடக்க முடியாமல் தலைநகரைவிட்டே வெளியேறிவிட்டான்.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பீஜப்பூர் சுல்தானின் படைகள் போர்

ஒப்பந்தத்தின் மூலம் கிடைத்த கோல்கொண்டாப் படையுடன் கூட்டாகத் தென்னகம் நோக்கிப் படை எடுத்தது. பீஜப்பூர்ப் பெரும் படைத்தலைவன் நவாப் முஸ்தபா கான், மராட்டிய மாவீரர் ஷாஜி (சிவாஜியின் தந்தை) ஆகியோர் தலைமையில் பெரும் போர்ப்படை தமிழகத்தைக் கலக்கியது. 1647 இல் இப் படையெடுப்பின் தாக்கம் மிக அதிகமாகியது. மேற்கண்ட பீஜப்பூர் படைகளின் நடவடிக்கையால் 1647 இல் சிதம்பரம் பகுதியில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் பலர் வேறிடங்களுக்குக் குடிபெயர்ந்தனர். [5]

சிதம்பரம் பகுதியின் நிலை மிக மோசமாக இருந்ததால் பக்தர்களும், தில்லைத் திருக்கோயில் நிருவாகிகளும் நடராசரைப் பாதுகாக்க நினைத்தனர். இரவோடு இரவாகத் தில்லை நடராசரைக் குடுமியாமலைக்கு எடுத்துக் கொண்டுவந்து சேர்த்தனர். இந்நிகழ்ச்சி 24.12.1648 அன்று நடைபெற்றது.

40 மாதங்கள் குடுமியாமலையில் இருந்த தில்லை நடராசர் மீண்டும் மதுரைக்குச் சென்றார். மதுரையில் இருப்பதோ வெள்ளியம்பலம். பொன்னம்பலத்தில் இருந்த நடராசப்பெருமான் வெள்ளியம்பலத்தை விரும்பிச் சென்றார் என்று நயமுடன் கூறப்பட்டது.

தில்லைமாநகர் பொலிவிழந்தது. பக்தர்கள் கவலையுற்றனர். மழைகூடத் தில்லையில் பெய்யவில்லையாம். மீண்டும் நடராசர் தில்லைக்கு வரவேண்டும் என்று அனைவரும் விரும்பினர். அவ்விருப்பம் 21.11.1684 இல் நடைபெற்றது. அதனையும் அச்செப்பேடுகளில் ஒன்று விரிவாக விளக்குகிறது.

இதற்கும் சில காலம் முன்புகூடத் தில்லையில் பூசைக்குக் கூடப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. கும்பகோணத்தில் சைவ வேளாளர் மரபில் தோன்றிய சிவப்பிரகாசர் என்பவர் அதனை நீக்கித்தொடர்ந்து வழிபாடு நடைபெற முயற்சிகள் செய்தார். அதற்கு இலிங்கமாநாயக்கர் என்ற வீரசைவர் உதவிகள் புரிந்தார் (1610). அது முதல் 1648 வரை துறையூர்ப் பாளையக்காரர்கள் ஆதரவில் தில்லைக் கோயில் இருந்தது.[6] இக்காலகட்டத்தில் நடராசர் ஒரு பெரிய புளியமரப் பொந்தில் சிலகாலம் உறைந்தார் என்பர். அப்புளிய மரத்தை அம்பலர்புளி என்று சோழமண்டல சதகம் கூறும்.[7]

செஞ்சிமன்னர் முயற்சி

மராட்டிய மாவீரர் சிவாஜியின் (1640-1680) மூத்த மகன் சாம்பாஜி செஞ்சிக்கோட்டையில் அரசு புரிந்தார் (1680-1689). அவர் தன் தாத்தா சாஜி பான்ஸ்லே (1621-1664) காலத்தில் தில்லையிலிருந்து வெளியே சென்ற நடராசரைப் பக்தர்கள் விருப்பத்திற்கு இணங்க மீண்டும் தில்லைக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டார். அப்போது தஞ்சையில் ஆட்சிபுரிந்த சகசி மன்னருக்கும் (1684-1711) செஞ்சி சாம்பாஜிக்கும் நல்ல உறவு இருந்தது. மதுரை நாயக்க மன்னரும் இம்முயற்சிக்கு உதவியிருக்க வேண்டும்.

செஞ்சி மன்னர் சாம்பாஜியின் பறங்கிப்பேட்டை சுபேதார் கோபால தாதாஜி பண்டிதரிடம் நடராசரை மீண்டும் தில்லைக்குக் கொண்டுவரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. சாம்பாஜியின் குலகுருவாக விளங்கிய முத்தையா தீட்சிதர், சிதம்பரம் அழகிய சிற்றம்பலமுனிவர் ஆகியோர் இப்பணியில் கோபால தாதாசி பண்டிதருக்கு மிகவும் துணை நின்றனர். இவர்கள் எல்லோருடைய நன்முயற்சியின் பயனாகத் தில்லை நடராசர் 21.11.1684 அன்று மீண்டும் தில்லை திரும்பினார். மக்கள் மகிழ்ந்தனர். பொன்னம்பலம் பொலிவு பெற்றது.

ஆனால் இரண்டாண்டுகள் தேவையான திருப்பணிகள் செய்து 14.11.1686 அன்று தில்லையில் குடமுழுக்கு விழா நடைபெற்ற பின்னரே வழிபாடு தொடர்ச்சியாகத் தொடங்கி நடைபெற்றுள்ளது. 21.11.1684இல் ஒரு குடமுழுக்குவிழா நடைபெற்றது என்ற குறிப்பும் உண்டு.

37 ஆண்டு 10 மாதம் 20 நாட்கள் தில்லையில் நடராசர் இல்லை. தில்லை வரலாற்றில் இச்செய்தி மிகவும் முக்கியமானதாகும். [8]

செப்பேடுகள்

மேற்கண்ட வரலாற்றுச் செய்திகள் நான்கு செப்பெடுகளில் பொறிக்கப் பட்டுள்ளன. தில்லைக்குரிய நான்கு செப்பேடுகளும் இன்று திருவாரூர்க் கோயிலில் பாதுகாப்பாக உள்ளன. அங்குள்ள 14 செப்பேடுகளையும் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறை 1982 இல் படி எடுத்தபோது

இச்செய்திகளை அறிய நேர்ந்தது.

இச்செப்பேடுகள் அனைத்தையும் 1947 ஆம் ஆண்டு மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.[9] தமிழக அரசின் தொல்லியல் துறை அலுவலர்களும் இச்செப்பேடுகளைப் பார்வையிட்டுள்ளனர்.[10]

நான்கு செப்பேடுகளும் வடமொழியில் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. மூன்று செப்பேடுகளின் இறுதியில் மூன்று அழகிய நயம்மிக்க தமிழ்விருத்தப் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் மேற்கண்ட வரலாற்றுச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

வடமொழியில் மட்டுமே எழுதப்பட்ட செப்பேடு வாசகம் தில்லை நடராசரின் விமானக் கலசத்திலும் பொறிக்கப்பட்டதாக ஒரு செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

பறங்கிப்பேட்டை சுபேதார் கோபால தாதாஜி பண்டிதர் செய்த தில்லைத் திருப்பணிகள் பற்றி மேற்கண்ட செப்பேடு இல்லாமல் மராட்டி, தெலுங்கு, தமிழ் மொழிகளில் வெட்டப்பட்ட மும்மொழிக் கல்வெட்டொன்றும் சிதம்பரம் கோயிலில் உள்ளது.

செப்பேடுகளின் தமிழாக்கம்

முதல் செப்பேடு

ஸ்ரீமத் சருவதாரி ஆண்டு மார்கழி மாதம் தன் இடத்தைவிட்டு வெளியே சென்றவருக்குச் சாம்போசி என்னும் அரசனுடைய ஆணையில் கோபால தாதாசி என்பவரால் இரத்தாட்சி ஆண்டு நடப்புக் கார்த்திகையில் நற்பேற்றின் காரணமாக நற்பலன்களை அடையும்பொருட்டுப் புதுப்பிக்கப்பட்டு ஆடவல்லான் மீண்டும் தன் அம்பலத்தை அலங்கரித்தார்.

பூமிக்குச் சூரியனைப்போன்று ஒளிவழங்கக் கூடியவரும், திங்களைப் போன்று குளிர்ந்த ஒளியைக் கொடுப்பவரும், எல்லா மக்களும் வணங்குதற்கு உரியவராக இருக்கக் கூடியவராகிய நடராசப் பெருமானுக்கு நில உலகில் உள்ள அரசர்களுக்குத் திலகம்போல் உள்ளவரும், பண்டிதர்களுக்குத் தலைவன்போல் கருணை உள்ளவரும், மிகுந்த பெரும் புகழை உடையவரும் ஆகிய ஸ்ரீமத் தாதாசி அவர்கள் திருப்பணி செய்தார். சிவனுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளை நோக்கி அடியார்கள் வருகிறார்கள்.

விபவ ஆண்டு தை மாதம் 27ஆம் நாள் வியாழக்கிழமை பவுர்ணமியன்று யோகியினுடைய மனத்தை மகிழச் செய்யும் முற்றிலும் பொன்னால் ஆன கனகசபையின் இறைவனுக்குக் குடமுழுக்கு நடத்தப்பெற்றது.

இரண்டாம் செப்பேடு

இரத்தாட்சி ஆண்டு சகாப்தம் 1606 கோபால பிருத்விசுரபதியினுடைய வேண்டுகோளுக்கு இணங்க சாம்போசி புதுப்பித்தலை மேற்கொண்டார். பொன் வேய்ந்தார். செப்பேடு அளித்தார். சிற்சபை மந்திர தந்திரங்களினால் பலன்களைக் கொடுக்கக் கூடியதாக அமையட்டும்.

உலகில் உள்ள அடியார்கள் அனைவரும் மலைமகளுடன் கூடிய சிவனை, மலைமகளின்மேல் எல்லையில்லாத அன்புகொண்ட சிவனை, மந்திரங்களினாலும், தயிர், நெய், பால் முதலிய ஐவகை அமிர்தத்தினாலும், சந்தனம் போன்ற பலவிதமான அபிடேகத் திருமஞ்சனநீரால் மேலான அந்தணர்களால் அபிடேகம் செய்யப்படுபவரும், பலி நைவேத்தியம் தூய நீர் ஆகியவைகளால் அபிடேகம் செய்யப்படுபவருமாகிய சபேசனை வணங்குகிறேன்.

முகரப்படாத அருச்சனை மாலைபோல் விளங்குகின்ற பல குணநலன்களையுடைய நல்லறிவு பெற்ற யோகீஸ்வரனால் செப்பேடு செய்யப்பெற்றது. சிற்சபையில் இறைவனுக்காகப் பொன் வேயப்பட்டு அது பலருடைய உதவியால் ஒளி வீசித் திகழுகிறது.

மூன்றாம் செப்பேடு

பிரமன், இந்திரன், உபேந்திரன் முதலிய முக்கியமான தேவர்களாலும், மற்றுமுள்ள முனிவர் கூட்டங்களாலும் வணங்கப்படுபவரும், சக்தி சாகசங்களை உடையவரும், புகலிடமான திருவடிகளை உடையவரும், அடியார்களைக் காப்பதாகிய விரதத்தையுடையவரும் ஆகிய தாண்டவப் பெருமானாகிய சம்பு வணங்கப்படுகிறார்.

புலவர்களுடைய கூட்டத்திற்குப் பெரும் தலைவரும், திலகம் போன்று இருப்பவரும், எல்லாக் கலைகளையும் அறிந்தவரும், சமநோக்கு உடையவருமாகிய முத்தையா தீட்சிதரால் கும்பாபிடேகம் செய்யப்பட்டது.

குலகுரு தச சாகாரி கும்பாபிடேகம்

ஸ்ரீ சிவகாமசுந்தரியின் திருக்கடைக்கண் பார்வை வீச்சினில் உண்டான அருளால் எல்லா உலகங்களிலும் உள்ள ஜகண்டம், பிரமாண்டம், பாண்டோதரம், நெருப்பு, மலை முதலானவைகளை அடக்கி ஆள்பவரும், தாமரை மலர் இதழ் போன்ற கண்களை உடையவரும், தாண்டவம் என்ற நடனத்தில் முன்னணியில் இருப்பவரும், சுழல்கின்ற ஞாயிற்றைப்போல ஒளி விடுகின்றவரும், இதயத் தாமரையில் இருப்பவரும், ஆசிரியருடைய கடைக்கண் பார்வையில் இருக்கின்றவரும், அன்பைப் பொழிபவரும், கருணை வேண்டுபவர்களுக்கு அடைக்கலம் அளிப்பவரும், கேரள தேசத்தின் மலைகளுக்கு அருகில் உள்ளவரும், மரத்தின் நிழலில் இருப்பவரும், மக்களின் அரசரும் ஆள்பவரும், அருந்தும் நீருக்கு அருகில் இருப்பவரும், அம்பலத்திற்கு இலக்கணமாக விளங்குபவரும் ஆகிய சிவனுக்குக் கேரள தேசத்தைச் சேர்ந்த சிற்பி கொடுத்த செப்பேடு.

பற்பலவிதமான மனத்தை ஈர்க்கக்கூடிய பொற் குடங்களினால் அலங்கரிக்கப்பட்ட பொற்சபை நாகலோகத்தைப்போல் இருக்கிறது. ஆனந்த நடனமாடிக் கொண்டிருக்கின்றதும், மேன்மேலும் அவைகளைப் போன்ற சிறந்த அந்தணர்கள் நிறைந்த இடமானதும், சிவகங்கையினால் சிறந்த அட்டபந்தனம் முதலியவைகள் செய்யப்பட்டதும், யோகங்களினாலும் அடைய முடியாததுமாகிய பொன்னம்பலத்தைச் சிந்தனையுடன் சரண் அடைகிறேன்.

பொன்னம்பலநாதனின் பயன்தரக்கூடிய திருநாமத்தின் அழகாகிய அருளாலேயே எல்லாவிதமான குணங்களையும், புண்ணியங்களையும் பெற்று அவன் தாமரைத் திருவடிகளை அடியார்கள் அடைகிறார்கள்.

நான்காம் செப்பேடு

அவர்தம் பெருமை போற்றி! இரத்தாட்சி ஆண்டு தேய்பிறை தசமி வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரம் கும்ப லக்கனத்தில் எல்லாக் கோள்களும் கூடிய நன்னாளில் சாம்போசி அரசரால் எல்லோருடைய நன்மைக்காகவும் நற்பேறுகளுக்காகவும் கும்பாபிடேகம் செய்யப்பட்டது.

நடப்பு சருவதாரி ஆண்டில் மார்கழி மாதம் 25ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை பொன்னம்பலத்தை விட்டு மதுரையம்பதியில் எழுந்தருளியிருந்த சிவனுடைய ஆணையை நிறைவேற்றுபவரான சிற்றம்பல முனிவரால் இரத்தாட்சி ஆண்டு கார்த்திகை மாதம் 22 ஆம் தேதி இச்செப்பேடு விமானக் கலசத்தில் அலங்கரிக்கப்பட்டது.

பொன்னம்பலத்தில் கும்பாபிடேகம் முதலியவை அட்சய ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நடராசர் சிற்சபையில் புகுந்து நடனம் ஆடுகின்றார். சுமார் 37 ஆண்டு 10 மாதம் 20 நாட்கள் சபாநாயகர் சபையை விட்டு வெளியேறியிருந்தார்.

குல தீட்சிதர்கள், பேரரசர்கள், சிற்றரசர்கள், சிவஞானிகள், சிறந்த யோகிகள், சகல மக்கள் ஆகியோர் அவனுடைய பாதத் தாமரைகளில் ஈடுபாடு கொண்ட பக்தர்கள் சிவனை வழிபடுகின்ற ஆயிரக்கணக்கான உலகத்துக்கும் உடையவனான சிற்சபேசனை வழிபடுகின்றவர்களுக்காக சருவதாரி ஆண்டு மார்கழி மாதம் சபையிலிருந்து வெளியேறிய நடராசருக்குச் சாம்போசி மகாராசாவின்

சம்மதத்தினால் கோபால தாதாசியின் ஆணையின்படி இரத்தாட்சி ஆண்டு கார்த்திகை மாதம் வெள்ளிக்கிழமை பொன்னம்பலம் புதுப்பிக்கப்பட்டு அங்கே மெய்யாகவே நடராசப் பெருமான் அலங்கரித்தார்.

செப்பேட்டுப் பாடல்கள்

1) *விடையில்வந்த செம்பொன்அம் பலத்தான் அந்த*
வெள்ளியம் பலத்திலே விரும்பிச் சென்ற
நடையில்வந்த வருடமோ சர்வ தாரி
நாயன்மார் கழியிருபத் தைந்து நாளாம்
கடையில்வந்த வருடங்கார்த் திகையீ ரேழு
கதிர்வாரம் திரும்பவந்து கலந்த நாளாம்
இடையில்வந்த வருடமெண்ணில் பார்க்கில் முப்பத்
தேழுபத்து மாதநாள் இருப தாமே.

2) *மருவிய சகாத்தமா யிரமும்ஐ நூற்றெழுப*
துக்குமேல் சறுவதாரி
வருஷமார் கழிமாதம் ஆதித்த வாரமதில்
மன்னும்அம் பலவாணரை
அருமையொடு குடுமியா மலையில்நாற் பதுமாதம்
அப்புறம் மதுரைதனிலே
அடவுடன் எழுந்தருளி ஆகமுப் பதிமின்
னெட்டான அக்ஷயவருஷம்
பரவுகார்த் திகைமாதம் தேதிபதி நாலுடன்
பருதிநாள் வளர்பக்கமும்
பகருத்தி ரட்டாதி திசமிகும் பத்தினிற்ப
பாருயிரெ லாம்உய்யவே
திருமருவு செம்பொன்மா மழைகளது பொழியவும்
தில்லைமா நகர்வாழவும்
தேவர்கள் துதிக்கவும் ஊருடைய முதலியார்
சிற்சபையுள் மேவினாரே.



3) *இயல்வாம சகாத்தமா யிரம்மோட ஆநூத்தாறின்*
இனியரத் தாட்சிவருடம்
இலகுகார்த் திகைமாதம் இருபத்தி ரண்டாம்
தேதிசுக் கிரவாரமும்
செயமான திசமியும் அத்தநட் சேத்திரமும்
திகழ்கும்ப லெக்கனமுமே
திருந்துபவ கரணமும் ஆயிஷ்மான யோகமும்
தினமும்வந் தேசிறப்ப
உயர்ஆக மப்படிபின் ஆனந்த நடராசர்
ஒளிர்பெற நிருத்தமிடவே
ஓங்குசிற் சபைஅதனைச் செம்பினால் மேய்ந்திடும்
உண்மையை உரைக்களிதோ

வயலாரும் வாவிசூழ் புலிசைஅழ கியதிருச்
சிற்றம் பலத்தவமுனி
வையகம் துதிசெயக் கும்பாபி ஷேகமும்
மகிழுற முடித்தநாளே.

குறிப்புக்கள்

1. சோழன் பூர்வ பட்டயம், (பதி) சி.எம்.இராமச்சந்திரஞ் செட்டியார் (1950), ப. 220.
2. S.I.T.I. Vol. III Part I No. 1207; ARE 639 of 1919.
3. தஞ்சை மராட்டியர் செப்பேடுகள், செ.இராசு, (1983), ப.228
4. திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, (பதி) தி.அ. முத்துசாமிக்கோனார்.
5. The Historical Inscriptions of Southern India, Robert Sewell, p. 279.
6. அரசவனத்து அறநிலையம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, ப. 43.
7. சோழமண்டல சதகம், (பதி)செ. இராசு, 1994, பாடல் 99.
8. தஞ்சை மராட்டியர் செப்பேடுகள், பக். 227-237.
9. ARE 20-23 of 1947 (A)
10. தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் தஞ்சைப் பதிவு அலுவலர் அவர்கள் அவற்றைப் பதிவு செய்துள்ளார்.

(மராட்டிய மாநிலம் சாதாராவில் மராட்டிய மரபினர் வட சிதம்பரம் என்னும் பெயரில் நடராசர் ஆலயம் ஒன்றை அழகுற எடுத்துள்ளனர். அக்கோயில் எடுத்தற்குக் காரணம் இச்செப்பேடுகள் கூறும் வரலாற்று நிகழ்ச்சியே அடிப்படைக் காரணம் என்று பரணீதரன் தம் கட்டுரையொன்றில் குறித்துள்ளார்.)





தில்லைச் செப்பேடு
I அ



தில்லைச் செப்பேடு
I ஆ

திருநீறு

முனைவர் **கு.வெ. பாலசுப்பிரமணியன்,** பேராசிரியர், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

உலகெலாம் படைத்தளித்துத் துடைக்கும் எல்லையறு பரம்பொருள் உவகைமிக நள்ளிருளில் நட்டம் பயின்றாடுமிடம் காடென்ப. இதனைத் தொல்காப்பியர் ''பலர்செல செல்லாக் காடு'' என்பர். பலர் மாயத் தான் மாயாது நிற்கும் காடும், காட்டுறு பூழ்தியாம் சுடலைப்பொடியும் பிறப்பும் இறப்பு மிலாப் பெருந்தகையானின் குறியீடுகளாகும். ஆணவமலத் தழுந்திய உயிர்கள் உலகத்தில் பல்வேறு ஆட்டமெலாம் நிகழ்த்திச் சுழற்சியடங்கிய பம்பரக் கட்டையாய்க் கிடக்கும்போது சுடலைக்கானிற் கொடு போய்ச் சுட்டெரித்துத் தமர் நீறாக்குவர். 'வாழ்ந்த வாழ்வின் எச்சம் இதுகாண்' என்றுணரும் வகையில் காடெங்கும் நீறே பொலியும். சிவபெருமான், மாயைவழி உலக உயிர்களை உய்விக்கப் படைத்தளித்த உலகம் முதலாய யாவுமழியச் சாம்பற் பொடியொன்றே எஞ்சும் என்பதனைத் தாமே அந்நீறணிந்து உயிர்கட்கு உணர்த்துகின்றார். பெருமானணிந்த நீறாதலின் அது திருநீறாயிற்று.

நீறணி நெற்றியன்

சிவபெருமான் செருநர் செருக்கறத் தீவிழி தோற்றும் திறனினன். அண்டமெலாம் பறந்து அடங்காது திரியும் முப்புரத்தையும் தண்டு கொண்டு பொறாது நகையாற் புகைசெய்த நல்வலியினன். இதனை

மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால் பணையெழில் அணைமென்தோள்
வண்டரற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ

என்று கலித்தொகைக் கடவுள் வாழ்த்துக் கூறும். அசுரர் மூவரையும் அழித்து நீறாக்கி உடம்பிற் பூசி மகிழ்ந்த கூத்தாதலின் சிவபெருமானின் திருக்கூத்துப் 'பாண்டரங்கம்' எனப்பெற்றது. வெண்ணீறு பூசி விளர்த்த மேனியனாய், வானவரும் ஏனவரும் உற்ற துயர் போக்க மூவெயில் முனிந்து நின்ற தகைமையினைப் பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்து,

எரியெள்ளு வன்ன நிறத்தன், விரியிணர்க்
கொன்றையம் பைந்தார் அகலத்தன், பொன்றார்
எயிலெரி யூட்டிய வில்லன், பயிலிருள்
காடமர்ந் தாடிய ஆடலன்....

என்று கூறக்காணலாம். முப்புரம் மட்டுமோ நீறாயின? வெள்ளி மாமலையை அள்ளியெடுத்த அரக்கர்கோன் ஐந்நான்கு தோளினும் தங்கிய வலியைத்தம் சேவடிக் கொழுந்தால் செற்றவன் அல்லனோ அப்பெருமான். அன்புப் பிழம்பாகிய காரைக்காலம்மையார்,

அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தலமும் நீ முரித்த வாறென் - முடித்தலத்தில்
ஆறாடி ஆறா அனலாடி அவ்வனலின்
நீறாடி நெய்யாடி நீ

எனத் திருவிரட்டை மணிமாலையிற் கூறினர். சிவபெருமான் தாமே நீறணிந்த மேனியனாய் நின்றாடக் காரணமென்? மாணிக்கவாசகர் தம் திருக்கோவையாரில் இதற்குரிய விடை கூறுவர்.

தினைவளம் காத்துச் சிலம்பெதிர் கூஉய்ச்சிற்றில் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர் கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி அம்பலவன்றன் வெற்பில்
புனைவளர் கொம்பரன்னாயன்ன காண்டும் புனமயிலே.

உயிர்களின் வினை வளமுற்றுக் கிடக்கின்றது. அவ்வினை நீக்கம் செய்வான் இறைவன் நீறணிந்து நிற்கின்றான். நீறணிய வினைவளம் கெடுமாறெங்ஙன்? காடுடைய சுடலைப் பொடி பூசிய அக்கள்வன் உருத்தோன்றுங்கால் ''ஓ இவன் இக்கால் நமக்கு அறிவுறுப்பதென்னை'' என்ற நினைவு அகத்தில் தோன்றும். தோன்றவே 'இச்சாம்பர் காண் நம் மேனி' எனும் நிலையாமை நெஞ்சிற் பிறக்கும். பிறக்கவே நானார் என்னுள்ளமார் ஞானங்களார் எனும் அடுக்கிய வினாக்கள் சிந்தைக் கழனியில் முளைவிடும். விடவே ஆணவம் மெல்ல அகலும். உலக நிலையாமையும், யாக்கை நிலையாமையும் எனப் பல்வேறு நிலையாமைகளை உணர்த்தி உயிர்களை ஒருநெறிய ஆக்கவே இறைவன் என்பும் சுடுநீறும் மண்டையோடும் கொண்டு திரிபவனாயினன். பேரூர்ப் புராணம்

நீடல் உறுந்தீ வினையனைத்தும் நீற்றி விடலால் நீறென்றும்
வீடில் வெறுக்கை தருதலினால் விபூதியென்றும் உயிர்தோறும்
கூடும் மலமாசினைக் கழுவும் குணத்தால் சாரம் என்றுமடம்
ஓட வளர்சோதியைத் தரலாற் பசிதம் என்றும் உரைப்பாரால்

என் மொழியும். எனவே உயிர்க்குல உய்வின் பொருட்டே சிவபெருமான் நீறணி நெற்றியன் ஆயினன் என்பது போதரும்.

நீறருளிய பேறு

வெண்ணீறு எண்ணற்கரிய பெரும் பேறுகளைப் பயந்துள்ளது. பூழியர்கோன் வெப்புநோயிற் சிக்கி உழன்ற போது புகலியர்கோன் நீறளித்து அந்நோய் மாறுமாறருளினர். ஒரு பொருட்கு உடையார் அப்பொருளின் மேல் தம் பெயரெழுதுவது மரபு. அது போல வெண்ணீறு சண்ணித்த உடல் சிவபெருமானின் அருள் நயந்து அவனுடையதாகப் பொலிகின்றது. ஆட்பாலவர்க்கு அருளும் வகையில் வெண்ணீறு ஆடிய மேனியரை இறைவன் காத்தருள் புரிகின்றனன். தூசும் தும்பும் அழுக்குமேறிக் கிடக்கும் வீட்டினைத் தூயதாக்கி அகத்தும் புறத்தும் சுண்ணப் பூச்சிட்டுப் பொலிவுசெய்ய, வீடு துலக்கமாகும். நச்சுயிரிகள் அண்டாது ஒழியும். பயன்தரு செடியும் கொடியும் பயிரும் பூச்சிகளாற் பயனழியுங்கால் சாம்பல் தூவி அவ்வுயிரிகள் செயலொடுக்குவர். மனித உயிர்கட்கும் இவ்வகைப் பயனைத் திருநீறு அளிக்கக் காணலாம்.

ஆற்றல் அடல் விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலிநி லாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன்உடல் உற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்தாமே

எனத் திருஞானசம்பந்தர் அருளினர். ஞானசம்பந்தர் அளித்த நீறு பாண்டியனின் வெப்பு நோய் நீக்கியது. மருணீக்கியாரைச் சூலைநோய் வருத்திக் குடரோடு துடக்கி முடக்கியகாலை அச்சூலையைத் திலகவதியார் அளித்த திருவாளன் திருநீறன்றோ துடைத்தது!

திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப்
பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையர் பணிந்தேற்றங்கு
உருவார அணிந்துதமக் குற்றவிடத் துய்யுநெறி
தருவாராய்த் தம்முன்பு வந்தார்பின் தாம் வந்தார்

எனச் சூலைநோய் நீங்கித் திருநாவுக்கரசராய் உலகேழும் போற்றத் திகழ்ந்தார். அடியவர் வரலாறு காட்டும் இச்சான்றுகளால் வெண்ணீறு நோய் நீக்க வல்லதென்பதை அறியலாம். புறத்துற்ற நோய் நீக்குவதோடு அமையாது வெண்ணீறு அகத்தே இறையுணர்வையும், தானெனை மீதுறும் செருக்கைக் கிள்ளும் தவவலியையும் உண்டாக்கும். மேனியெலாம் உவர்மண் படிந்து திருநீறு பூசிய கோலமென நினையுமாறு வந்த ஆடை வெளுப்பானைக் கண்டு சேரமான் பெருமாள் யானை எருத்தத்தினின்றும் இறங்கிப் போந்து கைதொழுதார். ''யாரென்று அடியேனைக் கொண்டது? அடியேன் அடி வண்ணான்''

என்று அவர்கூறச் சேமான் ''வார வேடம் நினைப்பித்தீர் வருந்தாது ஏகும்'' என்று கூறினர். நீறு பூசிய பொலிவென நினைந்து உள்ளம் நெக்குருகும் அடியவர் பண்பு இஃது. உவர்மண் படிவையே நீறென்று நினைந்து மயங்கியவர் நீற்றணி கோலமே காணிலென் செய்வார்? ''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்'' என்று கொண்டு தம்மைக் கொன்றவனுக்கும் அருள் சுரந்தனர். சிவனடியார் திருநீற்றுக்களித்த மதிப்பினை இந்நிகழ்ச்சிகள் இயம்புகின்றன. நீறணியக் கண்டாரைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்து உவகை எய்தும் அடியார் அஃதணியாதாரைக் கண்டு அஞ்சி அலமருவர்.

பிணியெலாம் வரினும் அஞ்சேன்; பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்;
துணிநிலா அணியினான்தன் தொழும்பரோ டழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்தும் காணாச் சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே!

என்று நாவுக்கரசர் கூறுவார். திருநீற்றுக் கோலம் இறைவனை நினைவுறுத்துவது. உலகவினைகளில் அழுந்தித் துயருறும் உயிர்களைப் பவக்கடற் கரையேறத் திருநீறே துணையாம்.

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே!

எனத் திருமந்திரம் வெண்ணீற்றொளியில் விளங்கு மேன்மை மொழியும். திருநீறு நோயொழித்தலால் இம்மை நலனும், வினையகற்றலால் மறுமைப்பேறும் அளிக்கவல்லதாம்.

நீறணி முறைமை

திருநீற்றை எங்கிருந்து பெறுவது? உலகில் பெறுதற்கு எளியதாயுள்ள மிக அரிய பொருள் திருநீறேயாம். உயிரினங்களில் ஆவினம் போற்றத்தகுவது. பால், தயிர், வெண்ணெய், கோமயம், சாணம் என்றைந்தும் தருவது. இவ்வினத்தினின்றும் பெறத்தக்கதே திருநீறு.

அம்பலத்தே உலகுய்ய ஆடும் அண்ணல்
உவந்தாடும் அஞ்சினையும் அளித்த ஆக்கள்
இம்பர்மிசை அநாமயமாய் இருந்த போதில்
ஈன்றணிய கோமயம் மந்திரத்தினால் ஏற்று
உம்பர்தொழ எழும்சிவ மந்திர ஓமத்தால்
உற்பவித்த சிவாங்கிதனில் உணர்வுக் கெட்டா
எம்பெருமான் கழல்நினைந் தங்கிட்ட தூநீறு
இதுகற்பம் என்றெடுத்து இங்கேத்த லாகும்

எனக் கன்றை ஈன்ற ஆவின் சாணத்தை நெருப்பினுள் இட்டுப் பெறும் நீறு பற்றிப் பெரியபுராணம் கூறும். இத்திருநீறு கற்பம் எனப்பெறும். இஃதன்றி ஆவின் சாணத்தைக் கோமய நீராற் பிசைந்து திரட்சியாக்கி ஓம நெருப்பிலிட்டுப் பெறுவது அநுகற்பம் எனப்பெறும். இஃதன்றிக் காடுபற்றி எரிதலானும், ஆன்நிலைகள் தீப்பற்ற வெந்த நீறும், செங்கற்கள் வெந்த நீறும், பல்வேறு இடங்கள் எரிந்து பெற்ற நீறும், உபகற்பமெனப் பெறும்.

அரசுடன் ஆல் அத்தி ஆகும் அக்காரம்
விரவு கனலில் வியனுரு மாறி
நிரவயன் நின்மலன் தான்பெற்ற நீதர்
உருவம் பிரமன் உயர்குலம் ஆகுமே

என மரங்கள் எரித்துப் பெறும் நீற்றைத் திருமந்திரம் கூறும். எப்பொருளும் எரிந்து பொடியாய சாம்பல் திருநீறேயாம். புறங்காட்டுச் சுடலைப் பொடியே திருநீறெனின் வேறென்? இத்திருநீற்றை அணியும் முறைமையைச் சேக்கிழார்,

இந்தவகையால் அமைத்த நீறு கொண்டே
இருதிறமும் சுத்திவரத் தெறித்த பின்னர்
அந்தமிலா அரன் அங்கி ஆறு மெய்ம்மை
அறிவித்த குரு நன்மையல்லாப் பூமி
முந்த எதிர் அணியாதே அணியும் போது
முழுவதும் மெய்ப்புண்டரம் சந்திரனில் பாதி
நந்திஎரி தீபம் நிகழ் வட்டம் ஆக
நாதரடியார் அணிவர் நன்மையாலே.

எனக் கூறுவர். இம்முறையாற் சிவனடி தொழுது நீறணியப் பெற்றாரெல்லாரும் சிவமே எனக் கொள்ளத் தகுவர். இதனைச் சிவஞான போத இறுதிச் சூத்திரம் ''மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே'' என்றுரைக்கும். எனவே சிவானுபூதி பெறுதற்கு விபூதி ஒரு சாதனம் என்றுணர்க.

உ

திருச்சிற்றம்பலம்

வந்தே சுந்தர பரசிவ குடிலம் சித்தேஸ்வரம் சாஸ்வதம்

ஸ்ரீ சித்தர் ஞானபீடம் டிரஸ்ட்

நேதாஜி நகர், கோவைப்புதூர், கோயம்புத்தூர் - 641 042

ஆறாம் உலகச் சைவ மாநாடு சிறப்புற நடை பெற வாழ்த்துக்கள்

சீர் கொண்ட புவனமெல்லாம் சிந்தனையாற்
படைத்தறித்துச் சிதைத்துப் பின்னர்
கார் கொண்ட நள்ளிருள் போற் கரந்தருளி
எவ்வுலகும் கவிந்து நீங்கா
நீர் கொண்ட வேணிமலி நித்தியனாய்
உயிர்களுய்ய நிழலார் சோலை
ஏர் கொண்ட சிவக்குடிலில் இருந்தொளிரும்
சித்தரடி எத்தி வாழ்வாம்.

சிவசித்தர் பெருமாற் ஒருவரால் ஆட்கொள்ளப்பட்ட தவத்திரு சர்வோத்தம சச்சிதானந்த நாதேசுவர சுவாமிகளால் 1986 ஆம் ஆண்டு சிவக்குடிலும், சித்தர் ஞான பாட சாலையும் நிறுவப்பட்டன. சிவக்குடில் சிவ வழிபாட்டிற்கும், சித்தர் ஞான பாடசாலை, திருமுறைப் பயிற்சி, சித்தாந்த நூற் பயிற்சி ஆகியவற்றிற்கும் எனச் செயல்பட்டு வருகின்றன. உடலிலிருந்து சிவ சித்தர் பெருமான் தன்னை அடைந்தோர்க்கு அருள்வாக்கின் வழி துயர் துடைத்து இன்பம் நல்கி வருகிறார். நூற்றுக்கணக்கான அன்பர்கள் சிவதீக்கை பெற்று உய்கின்றனர்

தேவாரப் பண்ணிசைப் பாடுமுறை

முனைவர் ஞானாம்பிகை குலேந்திரன்,
சிறப்புநிலைப் பேராசிரியர், இசைத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 5

தேவாரம் பாடுவதைப் ''பண்ணிசை பாடுதல்'' எனச் சொல்லும் வழக்கமொன்றுள்ளது. தேவாரப் பண்கள் கருநாடக இசை இராகங்களுக்கு வேறுபட்டன அல்ல. இருந்தும் இசைப் பாடல்களைப் பாடும் பல்வேறு முறைகளில் தேவாரப் பாடுமுறை தனித்து இணங்காணப்பட்டு வருகிறது.

சம்பந்தரும் அப்பரும் சுந்தரரும் இனிய பண்களால் இறைவனைப் பாடியருளிய தேவார இசை முறைகளைக் காலந்தோறும் காத்து வந்த பெருமை ஓதுவார் மூர்த்திகளைச் சாரும். தலைமுறை தலைமுறையாக இவர்கள் பாடிவரும் தேவாரப் பாடுமுறைதான் ''பண்ணிசைத்தல்'' என்று அழைக்கப்படுகிறது. இப்பாடுமுறைகள் சிலவற்றின் சிறப்பியல்புகள் ஈண்டு விளக்கப்படுகின்றன.

பதிகப்பெருவழிப் பாடுமுறை

தேவாரப் பாடல்கள் பதிகம் என்னும் அமைப்பிலானவை. ஒரு பொருள்மேல் ஒரே சீரிலானது ஒரு பதிகம், பத்து, பதினொன்று அல்லது பன்னிரண்டு பாடல்களால் தேவாரப் பதிகங்கள் அமையினும் பத்துப் பாடல்களைக் கொண்டது பதிகம். ''.... ஒன்றமிழ் பத்தும் வல்லார்கள்... விண்ணிடை மன்னியே சீர் பெறுவார்களே'' (1.142.12) என்ற ஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய திருஐயாறுப் பதிகத்தின் 12ஆம் பாடற்குறிப்பு இதனைத் தெளிவுபடுத்துகிறது.

நம்பியாண்டார் நம்பிகளால் 'பதிகப் பெருவழி' எனப் போற்றப்பெற்ற தேவாரப் பதிகங்களின் கடைசிப் பாடலைத் 'திருக்கடைக்காப்பு' எனக் கூறுவார் சேக்கிழார். திருக்கடைக்காப்புப் பாடலில் அப்பதிகப் பாடல் பத்தினையும் பாடுவோர் பெறும் பயன் கூறப்பட்டிருக்கும்.

''... ஊரன் பாடிய பாடல் பத்தும் இவை வல்லார்
அறவனார் அடி சென்று சேர்வதற்கு யாதும் ஐயுறவில்லையே''

(திருப்புகலூர்ப் பதிகம் 7.34.11)

*''...ஆன சொன்மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே''* ***(கோளறு பதிகம் 11.85.10)***

என்பவை நம்பி ஆரூர்ப் பெருமானும் சம்பந்தப் பெருமானும் அடியார்களுக்கு ஊட்டிய உறுதி மொழியாகும்.

இதிலிருந்து பாடும் பயன் கருதிப் பதிகத்திலுள்ள எல்லாப் பாடல்களையும் பாடும் முறை ஒன்றிருந்தமை தெளிவு. கி.பி.8ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக் குறிப்பொன்று ''....திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட பல பணி செய்வார்க்கும்..... எனவும், திருமுட்டம் சிவன் கோயிற் கோபுரத்தில் பொறிக்கப்பட்டுள்ள குறிப்பு[1]''.....திருப்பதியம் விண்ணப்பம் செய்து விடை பெற்ற....[2]'' என்றும் கூறுவதிலிருந்து தேவாரங்கள் தனித்தனிப்பாடல்களாக அன்றி முழுப் பதிகங்களாக நாயன்மார் காலத்தில் பாடப்பெற்ற செய்தி உறுதியாகிறது.

ஒரு பதிகத்தின் முதற்பாடல் எவ்வாறு பாடப்பெறுகின்றதோ அதே இசையமைப்பில் பதிகத்திலுள்ள அத்தனைப் பாடல்களையும் பாடுவது மரபு. அதேபோல் இரண்டு அல்லது நான்கு அடிகளாலான பாடலின் முற்பகுதி இசை அமைப்பில் பாடலின் பிற்பகுதியும் பாடப்பெறுகிறது. பிற்காலத்தெழுந்த கீர்த்தனை என்னும் இசைப்பாடல் வகையின் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற இயலிசை அமைப்புக்கும், ஒன்றுக்கு மேலுள்ள சரணங்கள் ஒரே பாடுமுறையில் அமைவதற்கும் தேவாரப் பதிகப் பெருவழியின் இயல் அமைப்பும் பாடுமுறையும் வழிகாட்டியிருக்க வேண்டும்.

தற்காலத்தவர் பதிகத்தின் முதற் பாடலை அல்லது பதிகத்தில் விரும்பியதொரு பாடலை மட்டும் பாடி நிரவல், கற்பனைச் சுரம் முதலான அரங்க உத்திப் பாடுமுறைகளைக் கையாண்டு தேவாரம் பாடிய

மனநிறைவைப் பெறுகின்றனர். காலச் செலவு கருதியும் கலை ரசனை கருதியும் இம்முறை பிற்கால வழக்கத்தில் வந்திருக்கவேண்டும். இருப்பினும் சைவ ஆதீனங்களிலும், தேவாரப் பாடசாலைகளிலும் பதிகத்திலுள்ள பத்துப் பாடல்களையும் பதிகப் பெருவழிப் பாடுமுறையில் இன்றளவும் மரபு மாறாமல் பாடப்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

எடுப்புத் தேவாரப் பாடுமுறை

வடமொழியில் 'யதி' எனப்படும் இசை அணி தமிழில் 'முழக்குக் கோலம்' என்றழைக்கப்படும். ஆறு பெருகுவது போலப் பாடற் சொற்களும் இசைத்தொடரும் பெருகிப் பெருகி வருவது ஒருவகை முழக்குக் கோலமாகும்.

சில பதிகங்களை இயலும் இசையும் ஆறு பெருகுவது போன்ற அணிநயத்தோடு பாடும் மரபொன்றுள்ளது. ஞானசம்பந்தப் பெருமான் செவ்வழிப் பண்ணில் பாடியருளிய ''தொண்டர் அஞ்சு களிறும் அடக்கி'' எனத் தொடங்கும் திருக்கேதாரப் பதிகமும் (11-114) பழந்தக்கராகப் பண்ணில் பாடிய 'வன் தரங்கப் புனல்' எனத் தொடங்கும் திருத்தோணிபுரப் பதிகமும் (1-60) பிரபலமான முழக்குக் கோல அணிநயப் பதிகங்களாகும்.

இப் பதிகப் பாடல்களைப் பாடும்பொழுது பாடலின் பொருளானது இசையால் விரிவுபடுத்தி விளக்கப்படுகிறது. அதற்காகச் சொற்கள் ஒன்றோடொன்று கொண்டு கூட்டிப் பாடப்பெறும். இதனை 'மாட்டு செய்தல்' என்பர் இலக்கண ஆசிரியர். 'எடுப்புத் தேவாரம்' என்பர் ஓதுவாமூர்த்தியர். இம்முறையில் பாடுவதற்குப் பெரும்பாலும் திச்ர திருபுடை தாளம் கையாளப்படும். திச்ர திருபுடைதாளத்தில் அமைந்த எடுப்புத் தேவாரப் பாடல்கள் எப்பொழுதும் இடை நடுவான கால அளவில் அமைத்துக் கொள்வது மரபு. ஒரு களை அல்லாத இரண்டு களையுமல்லாத இடைப்பட்ட நடை இது. இவ்வாறு அமையும் தேவாரப் பாடல்களைப் பாடுவதற்குத் தனித்திறமை வேண்டும். 'சிறையாரும் மடக்கிளியே' எனத் தொடங்கும் சம்பந்தர் தேவாரத்தின்,

''துறை ஆரும் கடல் தோணிபுரத்து ஈசன் துளங்கும் இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே'' *(1-60-10-3ம் 4ம் அடிகள்)*

என்ற பாடல் வரிகள் பழந்தக்கராகப் பண்ணிலும் (சுத்த சாவேரி இராகம்) திச்ர திருபுடை தாளத்திலும் மாட்டு செய்து பாடும் மரபு முறையினை இங்குக் காணலாம்.

பிறையாளன்

இளம் பிறையாளன்

துளங்கும் இளம் பிறையாளன்

தோணிபுரத்து ஈசன் துளங்கும் இளம் பிறையாளன்

கடல் தோணிபுரத்து ஈசன் துளங்கும் இளம் பிறையாளன்

துறையாரும் கடல் தோணிபுரத்து ஈசன் துளங்கும் இளம் பிறையாளன்

எடுப்புத் தேவாரம் பாடும்போது தாளத்தின் முதலாவது ஆவர்த்தனம் 1½ எண்ணிக்கை தள்ளியும் இரண்டாவது ஆவர்த்தனம் ½ எண்ணிக்கை தள்ளியும் பாடுவது ஓதுவாமூர்த்திகள் வழிவந்த பாடுமுறை. பிற்காலத்தில் 'பதம்' என்னும் கருநாடக இசை உருப்படி திச்ர திருபுடை தாளத்தில் அமையின், மேற்சொன்ன தேவார எடுப்பு முறையே கையாளப்படுவது கருதத்தக்கது.

முடுகிசைப் பாடுமுறை

சில தேவாரப் பதிகப் பாடல்களின் முதல் நான்கு அடிகள் தாழ்ந்த நடையிலும் (விளம்ப காலம்) அடுத்து வரும் இரண்டு அடிகள் சொற்செறிவு கொண்டு விரைவு நடையிலும் (மத்திம காலம்) பாட வாய்ப்பளிக்கும். சான்றாகக் காந்தார பஞ்சமப் பண்ணில் (கேதாரகௌள) ஞானசம்பந்தப் பெருமானின் இது திருஆவடுதுறைப் பதிகப் பாடலைக் கூறலாம்.

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே!
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே!

இப்பாடலின் கடைசி இரண்டு அடிகள் இரண்டாம் காலத்தில் பாடப்பெறும். இத்தகைய பாடுமுறையைத் தமிழில் 'பின்முடுகிசைப் பாட்டு' என்பர். பிற்காலத்தெழுந்த கீர்த்தனை என்னும் உருப்படி வகையில் இத்தகையதோர் அமைப்பை வடமொழியாளர் 'சமஷ்டி சரணம்' என்றும் 'மத்திமகாலச் சாகித்தியம்' என்றும் அழைப்பர். தேவார ஓதுவார்கள் பாடுவழி வந்த மரபு இதுவெனக் கொள்ளலாம்.

நடைவேறுபாட்டுப் பாடுமுறை

முடுகிசைப் பாடலின் இறுதியில் மட்டுமன்றி இடையிடையே நடை வேறுபாடுகளோடு பாடப்பெறும் தனிச்சிறப்பு வாய்ந்ததோர் பதிகமாக விளங்குவது ஞானசம்பந்தப் பெருமானின் திருத்தருமபுரத்து யாழ்முரிப்பதிகம். நூற்றுமூன்று பண் வரிசையிலும் இடைக்காலப் பண் ஆசிரியர்கள் பாடல்களிலும் காணப்பெறாத யாழ்முரிப் பண் ஞானசம்பந்தப் பெருமானால் தோற்றுவிக்கப் பெற்ற ஒரு புதிய பண்ணாகும்.[3]

''எடுத்த இயலும் இசையுந் தம்மின்
முரித்துப் பாடுதல் முரி எனப்படுமே''[4]

என்ற சூத்திரத்தின்படி, முரி என்பது, ஓரடியில் தொடங்கிய யாப்பியலும் இசை நடையும் அவ்விடியிலேயே முறிந்து மாற்றி மற்றொரு யாப்பியலும் இசை நடையும் அமையப் பாடப் பெறுவதாகிய இசைப் பாட்டாகிறது. இத்தகையதோர் அமைப்பில் சம்பந்தப் பெருமான் பாடியருளிய ''மாதர் மடப்பிடியும்'' எனத் தொடங்கும் பதிகப் பாடல்களைப் பெரும்பாலான ஓதுவார் மூர்த்திகள் அடாணா இராகத்திலும் ரூபக தாளத்திலும் பாடி வருகிறார்கள்.

பிற்காலத்தெழுந்த வர்ணம், கீர்த்தனை முதலான இசை உருப்படி வகைகளில் இடம்பெறும் நடைவேறுபாட்டுடன் பாடவல்ல சிட்டைசுரம் என்னும் இசையணி உறுப்பிற்கு, யாழ்முரித் தேவாரம் பாடுமுறை அடிகோலியிருக்கலாம். கதனகுதூகலத்திலும் ஆதி தாளத்திலும் பட்டணம் சுப்பிரமணியய்யர் பாடிய 'ரகுவம்ச சுதா' என்னும் பாடலுக்கு இசைவாணர்கள் பாடும் சிட்டைசுரப் பாடுமுறையை ஆய்வுக்குட்படுத்தி நோக்கலாம்.

முக்கால நடைப் பாடுமுறை

தேவாரம் என்னும் சொல்லுக்குப் பல்வேறு பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. அவற்றுள் 'ஆரித்தல்' என்பது சேர்ந்திசைத்தல் என்னும் பொருளைத் தரும். பண்ணாங்கப் பாடல்கள் எனப்படும் தாளக்கட்டுப்பாடுடன் அமைந்த தேவாரங்கள் அனைத்துமே பலர் சேர்ந்திசைப்பதற்கு உகந்தவை. அவற்றுள், பாடுவோர் அனைவரும் உற்சாகத்தோடு பாடுவதற்கெனத் தேவாரங்கள் முக்காலத்தில் பாடும் பாடுமுறை பழக்கத்திலுள்ளது. காட்டாக ஞானசம்பந்தர் பாடியருளிய ''பிடியதன் உரு உமை'' என்னும் தேவாரம் முதற் காலத்திலும், இரண்டாம் காலத்திலும் மூன்றாம் காலத்திலும், பின்னர் இரண்டாம்

காலத்திலும், முதலாம் காலத்திலும் பாடி முடிக்கப் பெறும் பாடுமுறை ஈண்டு குறிப்பிடலாம்.

பலர் சேர்ந்து பாட உதவும் இந்த உத்தி, பின்னர்ப் பஜனைகளில் கையாளப்பட்டிருக்கின்றது. இசைப் பயிற்சியை வளர்க்க அப்பியாச கானமாகிய அலங்காரணங்களை இந்த வகையில் பாடுவது இக்கால வழக்கமாகும்.

சுத்தாங்கப் பாடுமுறை

தாளக் கட்டுப்பாடில்லாத பொருட்சுவையும் இராகச் சுவையும் சிறக்கப் பாடல்களைப் பாடும் இசைமுறை ஒன்றுண்டு. தேவார இசையில் இது சுத்தாங்கப் பாடுமுறை என்றழைக்கப்படும். இதுவே பிற்காலத்தில் விருத்தப் பாடுமுறை என்றாகியது.

தேவாரப் பதிகங்களில் திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை, திருவிருத்தம் ஆகியவற்றைச் சுத்தாங்கமாகப் பாடுவது மரபு. திருத்தாண்டகப் பாடல்களை அரிகாம்போதி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடுவதை ஓதுவாமூர்த்திகள் வழிவழி காத்து வருகிறார்கள்.

தாளமில்லாது சேர்ந்து பாடுமுறை

தாளமில்லாமல் கொல்லிப் பண்ணிற்கு இணையான நவரோசு இராகத்தில் பல ஓதுவாமூர்த்திகள் சேர்ந்து தேவாரம் இசைக்கும் மரபு ஒன்று பழங்காலம் முதல் இருந்து வருகிறது. 'மனமென்னும் தோணி பற்றி' என்னும் அப்பர் நேரிசைப் பாடலின் பாடுமுறை[5] இவ்வகையைச் சேர்ந்தது. பலர்கூடி வேத மந்திரம் ஓதும்போது ஏற்படும் ஒருவகை அமைதி உணர்வை இப்பாடுமுறை தரவல்லது.

முடிவுரை

இந்திய இசை வரலாற்றில் மூல இசையுடன் கிடைக்கும் மிகப் பழமையான இசைப்பாடல்கள் தேவாரங்கள் என்று அறியப்படுகின்றன. பிற்காலத்தெழுந்த பல்வேறு கருநாடக இசை வடிவங்களுக்கு இவற்றின் பாடுமுறைகள் அடிகோலி இருக்கின்றன. இந்த வகையில் தென்னக இசையின் தொன்மையும் தொடர்ச்சியும் தேவார இசையால் உறுதி செய்யப்படுகிறது. தமிழரின் மகத்தான பங்களிப்பும் உணர்த்தப்படுகிறது.

உலகின் பல்வேறு இசை முறைகளின் தாக்கங்களுக்கு இந்திய இசை உள்ளாகியிருக்கும் காலகட்டமிது. இதுபோழ்து தேவார இசையைப் 'பண்ணிசை' எனப் போற்றிப் பழமையான பாடுமுறையில் இன்றளவும் பாடி வருவது போற்றற்குரியது. இந்தியா தன் நீண்ட பாரம்பரிய இசை வளத்தை உணர்ந்து கொள்ளவும், உலக இசையரங்கில் தன்னை இனங்காட்டிக் கொள்ளவும் தேவாரப் பண்ணிசை என்றென்றும் உதவும்.

குறிப்புக்கள்

1. விஜயநந்தி விக்கிரமனாகிய நந்திவர்ம பல்லவ மன்னனது 17 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு (கி.பி. 750), தென்னிந்தியக் கல்வெட்டு-3, பக்கம்-93.
2. சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தவரான மானக்கஞ்சாற நாயனார் உருவத்தின் கீழ் இச்செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு எண் 255, 1916.
3. முனைவர் ஞானா குலேந்திரன், 'தமிழிசைக்கு ஞானசம்பந்தர் தந்த புதிய பண்', தமிழ்க்கலை, தமிழியல் ஆய்விதழ், தமிழ் 5, கலை 1, 2 தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987.
4. சிலப்பதிகாரம், 7-16 அரும்பதவுரையார் காட்டும் மேற்கோள்.
5. மூவர் திருமுறைப் பாடல்கள், இசைத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1990, பக்.85.

சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணியில் சைவசமயத்தின் பங்கு

முனைவர் தா. ஈசுவரபிள்ளை, இணைப்பேராசிரியர், இலக்கியத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613005

சமுதாயம் சீராகச் செயல்படவும் சமுதாயத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படவும் சமுதாயத்தில் பல்வேறு அமைப்புக்கள் இடம்பெறுகின்றன. இவ்வமைப்புக்களில் ஒன்றாகச் சமயம் திகழ்கின்றது. எந்த ஓர் அமைப்பும் மக்களோடு மக்களாக ஒன்றிச் செயல்பட்டால்தான் அது சமுதாயத்தில் நிலைத்து நிற்க முடியும். இவ்வகையில் சமயம் என்ற அமைப்பும் சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களை இறை வழிபாட்டில் ஈடுபடுத்தி, இறையருளைப் பெற வழிகாட்டுவதுடன் மட்டும் நின்றுவிடாது சமுதாய உறுப்பினர்கள் இவ்வுலக வாழ்க்கையில் வாழ்வாங்கு வாழ்ந்து, சமுதாயத்திற்குப் பயன் அளிக்கும் வகையில் செயலாற்றப் பாடுபடவும் செய்கின்றது. சைவ சமயமும் சமுதாயத்ததின் மேம்பாட்டுக்கும், சமுதாய மக்களின் உயர் வாழ்க்கை நிலைக்கும் வழிவகுக்கும் பல்வேறு கருத்துக்களையும் அறிவுரைகளையும் வழங்குமாற்றை அறியமுடிகின்றது. இவ்வகையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணியில் சைவசமயத்தின் பங்களிப்பைப் பற்றிச் சிறிது காணலாம்.

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் தம்மைச் சுற்றியுள்ள, இயற்கைச் செல்வங்களாகிய நிலம், காற்று, நீர் ஆகியவற்றைத் தூய்மையாக வைத்துக் கொள்வதன் மூலம் தம்மை நோய்நொடியின்றிப் பாதுகாத்ததுக் கொள்வதைச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு எனக் கொள்ளலாம். இக்காலத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இன்றியமையாததொரு சமூகக் கடமை என்ற நிலையில் அரசாலும், தொண்டு நிறுவனங்களாலும் சமுதாய நலம் விரும்பும் அமைப்புக்களாலும் பெரிதும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. சைவ சமயமும் இச்சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணியில் தம் பங்களிப்பைச் செலுத்தியுள்ளமை சுட்டுதற்குரியது ஆகும்.

மக்கள் உயிர் வாழ இன்றியமையாதது காற்று ஆகும். எனவே, இக்காற்றைத் தூய்மையாக வைத்துக் கொள்வதன் மூலம் பல்வேறு நோய்களை ஒழிக்க முடியும். நோயினை உருவாக்கும் பல நுண்ணுயிர்கள் காற்றின் மூலமே பரவுகின்றன. தூய்மையான காற்றைத் தருவதில் மரங்கள் பெரும்பங்காற்றுகின்றன. மழையைப் பொழிந்து, நீர்வளத்தைப் பெருக்குவதிலும் மரங்களின் பணி குறிப்பிடத்தக்கது. இதனால் தான் இக்காலத்தில் சமூகக்காடு வளர்ப்புத்திட்டம், சாலையோரக் காடுவளர்ப்புத் திட்டம் முதலியன வகுக்கப்பட்டுள்ளன. வீட்டுக்கொரு மரம் வளர்க்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

சைவ சமயம் குறிப்பிடும் அடியார் கடமைகளில் இறைவனுக்கு மலரிட்டு வணங்கும் செயலும் ஒன்றாகும்.

''நகமெலாம் தேயக் கையால் நாண்மலர் தொழுது'' என்ற அப்பர்பெருமான் வாக்கு இதற்குச் சான்றாகும். மலர்களைப் பெற மரங்களையும் செடிகளையும் வளர்க்க வேண்டும்.

''மரங்களேறி மலர் பறித்திட்டிலர்'' என்ற அப்பர் தேவார அடி இதனைக் காட்டும். மலர்பறிப்பதற்காகச் சோலைகளை உருவாக்கியுள்ளமையைத் திருத்தலங்களின் வருணனைகள் மூலம் அறியமுடிகின்றது. சான்றாக

''.... விண்ணுறச்
சோலையார்தரு திருத்தோணிபுரத்தவர்க்கே''

என்ற அடிகளைக் கூறலாம். இவற்றால், சுற்றுப்புறக்காற்றைத் தூய்மை செய்யும் மரங்களை வளர்க்கும் பணியை மேற்கொள்ளச் சைவசமயம் வலியுறுத்துமாறு புலனாகின்றது.

சுற்றுப்புறம் பல்வேறு சூழல்களில் மாசுபடுகின்றமையால் நோயை உருவாக்கும் நுண்ணுயிர்கள் உருவாகின்றன. இந்நுண்ணுயிர்களை மருத்துவக்குணம் உடைய புகையானது அழிக்கும் ஆற்றல்

உடையது. சைவசமயம் அடியார் இறைவனுக்குச் செய்யும் பணிகளில் ஒன்றாகத் தூப தீபம் காட்டுதலைக் கூறுகின்றது.

''தூபமும் தீபமும் காட்டித் தொழுமவர்க்கு அருள்கள் செய்து''
''தூம நல் அகிலும் காட்டித் தொழுது அடிவணங்குமினோ''

எனவரும் அடிகள் மணப்பொருட்களால் தூபம் காட்டுவதன் மூலம் சுற்றுப்புறத் தூய்மைக்கு வழிவகுக்கின்றமை புலனாகின்றது.

சுற்றுப்புறத்தைத் தூய்மை செய்யும் பணிகளில் அலகிட்டுப் பெருக்கி, மெழுகுதலும் அடங்கும். கோயில்கள் மக்களின் சமுதாய, பொருளாதார, சமயச் செயல்பாடுகளின் இருப்பிடங்கள். ஒவ்வோர் ஊரும் கோயிலை மையமாகக் கொண்டே திகழ்கின்றது. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஆன்றோர் அறிவுரை.

''நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை
புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி''

''ஆப்பி நீரொடு அலகு கைக் கொண்டிலர்''

என்ற அப்பர்பெருமான் வாக்கு நிலத்தை ஆவின் சாணத்தால் மெழுக வேண்டும் என்றும் தரையைப் பெருக்கித் தூய்மையாக வைக்கவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றது. ஆவின் சாணம் கிருமிகளை அழிக்கும் ஆற்றலுடையது என்பது சுட்டுதற்குரியதாகும்.

காற்று, நிலம் போன்று நீரையும் தூய்மையுடன் காக்க வேண்டும். நீரின் மூலமும் நோய்க்கிருமிகள் பரவும். நீரை அசுத்தம் செய்தால் தூய்மை இழந்து சுற்றுப்புறம் சீர்கெட்டு விடும். எனவே, சைவ சமயம் நீரைப் புனித நீர் என்றும், அதில் நீராடினால் பாவம் அகலும் என்றும் அறிவுரை கூறுவதன் மூலம் நீர்த் தூய்மையை வலியுறுத்துகின்றது.

''கங்கை ஆடில் என் காவிரி ஆடில் என்
கொங்கு தண்குமரித்துறை ஆடில் என்
ஓங்கு மாகடல் ஓத நீர் ஆடில் என்
எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே''

என்ற அப்பர் தேவாரப்பாடல் நீரின் புனிதத்தன்மையைக் காட்டுகின்றது.

சமுதாயம் என்பது தனிமனிதர்களை உள்ளடக்கியது. தனிமனிதர்களின் செயல்பாடுகளும் ஒழுக்கக்கேடுகளும் சமுதாயத்தையும் சுற்றுச்சூழலையும் பாதிக்கும். எனவே, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் தனிமனிதர்களின் செயல்பாடுகளும் பெரும்பங்காற்றுகின்றன. எனவே, சைவ சமயச் சான்றோர்கள் தனிமனிதர்களுக்கு அறிவுரைகள் கூறுவதன் மூலமும் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வழிவகை செய்கின்றனர்.

அதிகாலையில் எழுந்து பணிகளைத் தொடங்குவதன் மூலம் உடலும் உள்ளமும் மூளையும் சுறுசுறுப்படைவதோடு பல நோய்களைத் தடுக்க இயலும். இக்கருத்தை வலியுறுத்தும் பொருட்டு,

''பெரும்புலர்காலை எழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்''

என்று அப்பர்பெருமான் சுட்டுகின்றார் எனக் கொள்ளலாம்.

உடலைத் தூய்மை செய்து, உடலிலுள்ள நோய்க்கிருமிகளை அகற்றும் பொருட்டு நீராடவேண்டும். அதுவும் மாசற்ற நீரில் நீராடவேண்டும். இதனையே,

''பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி''

என்ற அடி உணர்த்துகின்றது.

மக்கள் மானம் காப்பதற்காகப் பயன்படுத்தும் ஆடைகளும் தூய்மையுடையனவாகத் திகழ வேண்டும். ஆடைகளில் அழுக்கு நிறையுமாயின் பல நோயை உண்டாக்கும் நுண்ணுயிர்கள் தொற்றிக்கொண்டு நோய்களை ஏற்படுத்தும். இதனால், தனி மனிதனும் அவன் வாழும் சுற்றுப்புறமும் சீர்கேடு உறும். எனவே அடியார் பண்புகளைக் கூறுமிடத்து அப்பர்பெருமான்,

''விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற்பூசி
வெளுத்தமைந்த கீளொடு கோவணமும் தற்று''

என்று குறிப்பிடுகின்றார் எனலாம். வெளுத்த ஆடையை அணியவேண்டும் என்பது இதனால் வலியுறுத்தப்படுகின்றது.

சாம்பல் கிருமிகளை அழிக்கும் ஆற்றல் மிக்கது. நோய்கள் அண்டாமல் காப்பது. இத்தகைய நோய் எதிர்ப்பு ஆற்றல் மிக்க நீற்றைச் சைவ சமயம் திருநீறு என அடைகொடுத்துச் சிறப்பிக்கின்றது. திருநீற்றைக் கவசமாகக் காட்டுகின்றது.

''விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி''

என அப்பர்பெருமானும்,

''பூசின்தான் திருநீறே நிறையப் பூசி''

என மணிவாசகரும் திருநீற்றைப் பூசுமாறு வலியுறுத்தி நோயின்றி வாழ வழி செய்கின்றனர்.

சமுதாயத்தில் பொருளாதார வளம் மிகுந்த, ஆண் ஆதிக்கம் மேம்பட்ட சில ஆடவர்கள் தம் பால் உணர்வுக்கு வடிகாலாகப் பிற பெண்களுடன் பாலுறவு கொள்ளும் நிலை உள்ளது. இவ்வொழுக்கக் கேட்டால் சமுதாயப் பண்பாடு பெருமை குன்றுவதுடன் பல பாலியல் நோய்களும் உருவாகின்றன. பாலியல் நோய்கள் பாதிக்கப்பட்டவரை மட்டுமன்றிச் சமுதாயத்தில் அவருடன் பழகுகின்ற, உறவு கொள்கின்ற பிறரையும் பாதிப்புக்குள்ளாக்குகின்றன. இதனால், சுற்றுச்சூழல் பாதிக்கும் நிலையும் உருவாகின்றது. எனவே, சைவ சமயம், காமம் மிகுதியால் தவறான பாலுணர்வைக் கண்டிக்கின்றது.

''கண்ட பேச்சினில் காளையர் தங்கள் பால்
மண்டி எச்சுனும் மாதரைச் சாராதே''

என அப்பர்பெருமான் கண்டிக்கின்றார்.

மேற்கண்டவாறு சைவசமயம் பல்வேறு அறிவுரைகள் கூறுவதன் மூலமும், கண்டனக்குரல்கள் எழுப்புவதன் மூலமும் தனிமனிதர்களை நல்வழிப்படுத்தி, நோயின்றி வாழ வழிவகுத்து, சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வலியுறுத்தி, இன்றைய அறிவியல் அறிஞர்களால் வலியுறுத்தப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குத் தம் பங்களிப்பையும் மேற்கொள்கின்றமையை உணரலாம். சைவசமயம் அறிவியல் சார்ந்த சமயம் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்கு வாம் (பெரியபுராணம்)

பேரின்பத் தூது மொழி

முனைவர் வ. குருநாதன்,
இணைப் பேராசிரியர், இலக்கியத் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005

இறைவனைத் தலைவனாகக் கொண்டு அவனிடத்துக் காதலுற்ற தலைவியின் உணர்வு நிலையிலே தாம் நின்று பாடிய அடியவர்கள் பலர். அவர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமய நாயன்மார் நால்வரும் இவ்வகப்பொருள் நெறிநின்று அன்புருகிப் பாடியுள்ள பாடல்கள் மிகவும் அருமை சான்றன. அவற்றுள்ளும் தலைவனைக் கூடிப் பிரிந்த தலைவி அப்பிரிவினை ஆற்றாத இரக்கவுணர்விலே அஃறிணை உயிரினங்களை விளித்து, அவனிடம் தூதுபோய்த் தன் ஆற்றாமையினை அறிவிக்குமாறும் அழைத்து வருமாறும் வேண்டுகின்ற பாடல்கள் உணர்ந்து கற்போர்தம் உள்ளத்தை உருக்குவன. அகத்திணைத் தலைமக்கள், 'நோயும் இன்பமும் இருவகை நிலையில், காமம் கண்ணிய மரபிடை தெரிய.... சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச், செய்யா மரபில் தொழிற்படுத்து அடக்கி' (தொல். பொருள். நூ.194) மொழியும் முறையில் தொல்காப்பியத்திலே அமைந்துள்ள இலக்கண நெறிப்படி இத்தூதுமொழிகள் இயல்வனவாம்.

சிறையாரும் மடக்கிளியே

திருமுறை முதல்வராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார், தாம் திருவவதாரம் புரிந்து திருஞானம் பெற்ற திருத்தலமாகிய திருத்தோணிபுரத்தில் உறையும் திருவாளனிடம் தூது போக்குமாறு பழந்தக்கராகத்தில் பாடியுள்ள பதிகம் (1:60) இங்கு முதற்கண் நோக்கத்தக்கதாம். வண்டு, குருகு, கோழி, நாரை, புறாக்கள், அன்னங்கள், அன்றில்கள், குயில், பூவை, கிளி ஆகிய அஃறிணை இனங்கள் பத்தையும் தனித்தனியே ஒவ்வொரு பாடலிலும் விளித்து, இறைவனிடம் போய்த் தன் இரக்கநிலைகளை இயம்புமாறு தலைவி மிகக் கனிந்து வேண்டும் முறையில் இப்பதிகம் அமைந்துள்ளது. அவ்வவ் வுயிரினங்களை அன்பும் இன்பமும் வெளிப்பட விளிக்கும் அழகும், அவற்றிற்குத் தலைவனாகிய பெரியோனைக் குறித்து அறிவிக்கும் பெருமிதமும், அவனிடம் போய்த் தெரிவிக்குமாறு வேண்டுகின்ற தன் காதலின் ஆற்றாமையும் ஒவ்வொரு பாடலிலும் நயமுற நடக்கின்றன.

வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடை யினொடும்
ஒண்டரங்க இசைபாடும் அளியரசே! (1:60:1)

பண்பழனக் கோட்டகத்து வாட்டமிலாச் செஞ்சூட்டுக்
கண்பகத்தின் வாரணமே! (1:60:2)

காண்டகைய செங்காலொண் கழிநாராய்! (1:60:4)

சேற்றெழுந்த மலர்க்கமலச் செஞ்சாலிக் கதிர்வீச
வீற்றிருந்த அன்னங்காள்! (1:60:6)

பானாறும் மலர்ச்சூதப் பல்லவங்கள் அவைகோதி,
ஏனோர்க்கும் இனிதாக மொழியுமெழில் இளங்குயிலே! (1:60:8)

நற்பதங்கள் மிகவறிவாய், நானுன்னை வேண்டுகின்றேன்;
பொற்பமைந்த வாயலகின் பூவைநல்லாய்! போற்றுகின்றேன். (1:60:9)

என்பனபோல் விளிக்கப் பெறுகின்ற உயிரினங்களை நன்முறையில் பாராட்டி நயமுறத் தூது வேண்டுகின்ற நுட்பம் இலக்கிய இன்பம் சான்றன.

...................................ஒளிமதியத்

துண்டர், அங்கப் பூண்மார்பர், திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர் (1:60:1)

செறிசிறார் பதமோதும் திருத்தோணி புரத்துறையும்
வெறிநிறார் மலர்க்கண்ணி வேதியர் (1:60:2)

செண்பகஞ்சேர் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்துறையும்
பண்பன் (1:60:3)

சொற்பதஞ்சேர் மறையாளர் திருத்தோணி புரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தன் (1:60:9)

என்றவாறு இறைவன் பெருமையுறக் குறிக்கப் பெறுகின்றான்.

'அளியரசே,..... பண்டரங்கர்க்கு என்நிலைமை பரிந்தொருகால் பகராயே'(1), 'இளங்குருகே, என்பயலை.... வேதியர்க்கு விளம்பாயே'(2), 'வாரணமே.... பண்பனுக்கென் பரிசுரைத்தால் பழியாமோ மொழியாயே'(3), 'கழிநாராய், காதலால் பூண்டகைய முலைமெலிந்து பொன்பயந்தாள் என்றுவளர்,...... ஆண்டகையாற்கு இன்றே சென்று அடியறிய உணர்த்தாயே'(4), 'கபோதகங்காள்,.... நீராரும் சடையாருக்கு என்நிலைமை நிகழ்த்தீரே'(5), 'அன்னங்காள்....திருத்தோணி புரத்தீசன் துளங்காத கூற்றுதைத்த திருவடியே கூடுமா கூறீரே (6), அன்றில் காள், கொன்றைவார் சடையார்க்கென் கூர்பயலை கூறீரே(7), 'இளங்குயிலே....அமரர் கோனாரை என்னிடைக்கே வரவொருகால் கூவாயே'(8), 'பூவை நல்லாய்....விகிர்தனுக்கென்.....மெய்ப் பயலை விளம்பாயே'(9), 'சிறையாரும் மடக்கிளியே... பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே'(10) என்று இப்பதிகத்தின் தூது மொழிகள் இயல்கின்றன.

தலைவனைப் பிரிந்திருக்கின்ற நிலையில் அப்பிரிவாற்றாமையினால் இளைத்த தன்னுடல் மெலிவையும் அதில் பரவிய பசலையையும் அவனுக்கு அறிவித்து அழைத்து வருமாறு வேண்டுகின்ற செய்தியே இப்பதிகத்தின் தூதுப் பொருண்மையாம். என் ஆற்றாமை நோயினை அறியாமல் இறைவன் பாராமுகமாயிருப்பதால் நீவிர் என்பால் பரிவுற்று என்னிலையை அவர்க்கு எடுத்துரைக்க வேண்டும் என்பது இப்பாடல்களின் மையக் கருத்தாகும்.

இறைவனிடம் அன்பு பூண்ட நிலையில் அவன் இறங்கிவந்து அருள்புரிதலில் வேட்கையுற்று விளம்புதலாக இம்மொழிகளின் உட்பொருள் உணரப்படும்.

வஞ்சித்தென் வளைகவர்ந்தான்

திருஞானசம்பந்தரின் இப்பதிகத்திற்கு இணையாகத் திருநாவுக்கரசரின் திருப்பழனப் பதிகம் (4:12) ஒன்றைப் பார்க்கலாம். பழந்தக்க ராகம் என்ற இதே பண்ணில் அமைந்த அப்பதிகத்தில், தலைவனைக் கூடிப் பிரிந்த தலைவி, அவனது பிரிவினையாற்றாமல் கலங்கிய நிலையில் இயங்குதிணை உயிர்களோடு நிலைத்திணை உயிரினங்களையும் விளித்துத் தன் கலக்கத்தை மொழியக் காண்கிறோம். திருஞான சம்பந்தரின் பதிகம் தலைவியின் தூது மொழிகளாய் அமைய, திருநாவுக்கரசரின் பதிகம் அவளுடைய காமம் மிக்க கழிபடர் கிளவிகளாய்க் காணப்படுகின்றன. அகப்பொருள் துறைகளில் காமம் மிக்க கழிபடர் கிளவிகளாவன காதலுணர்வு மிக்கதனால் உண்டாகிய பேரிரக்கம் காரணமாகக் கேட்டலும் கூறலும் மாட்டாத பறவைகள் முதலான உயிரினங்களை நோக்கி மொழிதலாம். ஆகவே, பிரிவாற்றாமையாகிய உணர்வு நிலையில் முன்னைப் பதிகத்தினும் இப்பதிகம் இரக்கம் மிக்கதாய் இயன்றுள்ளது.

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்! சொல்லீரே;
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்,
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கும் முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண்டு இகழ்வானோ? (4:12:1)

எனத் தொடங்கும் பாடலில் தன் புதுநலமாகிய இளமையின்பத்தைத் துய்த்துப் பிரிந்த தலைவன் தொடர்ந்து கூடித் துய்க்காமல் அகன்றிருப்பதை எண்ணி அவலம் கொள்கிறாள் தலைவி. கூடி நலமுண்டவன் தொடர்ந்து கூடாது அகன்றிருப்பதே இங்கு அவலமாகின்றது. அந்த அவலத்தைக் குயிலினங்களிடம் வெளியிட்டுச் சொல்லி, அவற்றின் ஆறுதல் மொழிகளை வேண்டுகின்றாள்.

தன் அவலத்தைக் கேட்டுணர்ந்தால் அதனை மாற்றுமாறு தலைவனை அழைத்துக் கூவவும் கூடுமென்று குயிலினங்களிடம் கூறியவள், எவ்வளவும் அவனைக் கூட்டுவிக்க மாட்டாத நிலைத்திணை உயிர்களிடமும் தன் குறைபாட்டை நிகழ்த்துகின்றாள்.

கண்டகங்காள்! முண்டகங்காள்! கைதைகாள்! நெய்தல்காள்!
பண்டரங்க வேடத்தான், பாட்டோவாப் பழனத்தான்,
வண்டுலாம் தடமூழ்கி மற்றவனென் தளிர்வண்ணம்
கொண்டநாள் தானறிவான்; குறிக்கொள்ளா தொழிவானோ? (4:12:2)

எனவரும் இப்பாடலில், தலைவன் தன்னுடன் கூடி நீர்விளையாடல் நிகழ்த்திப் பிரிந்ததை நினைந்து நெஞ்சு புண்ணாகிறாள் தலைவி. அன்று அவன் நீர்விளையாட்டு நிகழ்த்தியபோது என்னிடமிருந்த என் தளிர்வண்ணத் தகைமையை அவனே கவர்ந்துகொண்டு சென்றுவிட்டான். அதனையிழந்து வாடியிருக்கும் என்னை இன்று அடையாளம் தெரியாமல் அவன் அணையாதொழிந்தானோ என்று ஆற்றாமை மேலிடுகிறாள் அவள்.

தொடர்ந்து, மனைக்காஞ்சி மரத்திலிருக்கும் இளங்குருகினை விளித்து அதன் மறதியை வினவுகிறாள்; வண்டினை விளித்துத் தலைவனின் நினைப்புக்களையெல்லாம் உரைக்க வேண்டுகிறாள் (3); தென்றலை விளித்து, 'விதியாளன் என்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானோ?' என்று வெதும்பிக் கேட்கிறாள்(4); இரைதேரும் செங்கால் நாரையை அழைத்துத் தன் செயலற்ற நிலைமையைச் செப்புவதோடு தலைவன் மாலையருளானோ எனவும் மயங்குகின்றாள்(6); துணையுடன் கூடித் துறை சேருகின்ற நாரையைக் கண்டு, தன்னைக் கூடிப்பிரிந்த துணைவன் மீண்டும் கூடாமல் இகழ்ந்து விடுவானோ என்று ஏங்குகிறாள்(7); பூவைகளையும் கிளிகளையும் கண்டு பொழுது போகாமை சொல்லிப் புலம்புகிறாள்(8); நினைப்பவர் வினைகளை நீக்கியருள்வான் என்று உலகத்தார் உரைசெய்யும் தலைவனைத் தான் நினைந்து நினைந்தே உடல்மெலிந்து வளையிழந்தமைக்கு வாடுகிறாள்(9); அவ்வாறு வஞ்சித்து வளைகவர்ந்த திருப்பழனத்தான் மீண்டு வந்தருளானாயினும் இந்தக் கோடு இயைவதாக என்று அவனது வருகையைக் குறித்துக் கூடலிழைக்கின்றாள்(10).

இப்பதிகத்தில் தலைவி தன் இரக்கவுணர்வினால் தலைவனை ஆராக் காதல் அடைமொழிச் சிறப்புக்களோடு குறித்து மொழிவது அறிந்து இன்புறத்தக்க இலக்கிய நயமாம்.

'விதியாளன் என்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானோ?'(4) என்பது சித்தாந்தக் கருத்தமைந்த சிறப்புமிக்க அடியாம்.

பண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானை,
பண்பொருந்த இசைபாடும் பழனம்சேர் அப்பனை,என்
கண்பொருந்தும் போதத்தும் கைவிடநான் கடவேனோ? (5)

எனவரும் அருமைப் பாடல் சிவபூசைச் செல்வர்களால் நாள்தோறும் பூசைமுடிவிலே புகலப்பெறும் பொருட்சிறப்பு மிக்கதாம்.

சங்காட்டம் தவிர்த்தான்

திருஞான சம்பந்தர் தேவாரத்திலேயே காணப்பெறுகின்ற மற்றொரு தூதுப் பதிகம் திருச் செங்காட்டங் குடியின்மேல் பஞ்சமப் பண்ணில் அமைந்த பதிகமாகும் (3:63).

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள்! பயப்பூரச்
சங்காட்டம் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே!
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே. (3:63:1)

என்பது அப்பதிகத்தின் தொடக்கப் பாடல். இதில் புன்னை மரத்தில் உறையும் பறவைகளை இனஞ்சுட்டாமல் பொதுப்பட விளித்துத் தன்னுடம்பிலே பசலை படருமாறும் கைவளைகளாகிய சங்குகள் ஆடுதலொழிந்து கழன்று விழுமாறும் செங்காட்டங்குடிமேய பெருமான் தனக்குக் காதல்நோய் தந்தான் எனக் கவன்று மொழிகின்றாள் தலைவி. அடுத்து,

பொன்னம்பூங் கழிக்கானல் புணர்துணையோடு உடன்வாழும்
அன்னங்காள்! அன்றில்காள்! அகன்றும்போய் வருவீர்காள்!
கன்னவில்தோள் சிறுத்தொண்டன் கணபதீச் சரம்மேய
இன்னமுதன் இணையடிக்கீழ் எனதல்லல் உரையீரே. (3:63:2)

என்பதுபோல் தொடர்ந்து நாரை, குருகு, தாரா ஆகியவற்றை அழைத்துத் தலைவனிடம்போய்த் தன் வருத்தத்தை அறிவிக்குமாறு வேண்டுகின்றாள்.

முடிவுரை

இவ்வாறெல்லாம் தேவாரம் முதலிய திருமுறைகளிலும் ஏனைத் தோத்திர சாத்திரங்களிலும் அகப்பொருள் பற்றி அமைந்துள்ள பாடல்களைச் சிற்றின்பப் போக்கிலன்றிப் பேரின்ப நோக்கில் புலன்கள் ஒன்றுமாறு ஓதியுணர்ந்து, அவற்றின் உட்பொருளை உணர வேண்டும்.

With the Best Complements from

M/S. RAJENDRA TEXTILES
342, Big Bazaar Street,
Coimbatore - 641 001.

Phone
(O) : 392923-24-25, (R) 212212
Fax : 0422-390703

அரிய சிவமூர்த்தங்கள்

குடவாயில் பாலசுப்ரமணியன்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர் - 613 009

சிவமகாபுராணம், சிவபராக்கிரமம் முதலிய நூல்கள் சிவபெருமானுடைய 64 மூர்த்தங்களையும், உபதேசகாண்டம் 25 மூர்த்தங்களையும் விவரிக்கின்றன. மூவர் தேவாரத்தில் ஏறத்தாழ 40 வடிவங்கள் பேசப்பெறுகின்றன. இவை அனைத்திற்கும் அடிப்படையாய் அமைவது அட்ட மூர்த்தங்களே. இதனை அப்பர் அடிகள்,

இருநிலனாய், தீயாகி, நீரும் ஆகி,
இயமான னாய்எரியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய், ஞாயிறாகி,
ஆகாசமாய், அட்டமூர்த்தி ஆகி . . .
. . . அடிகள் நின்றவாறே!'

- எனப் போற்றுவார். சைவசமயநூல்கள், ஆகமங்கள், சிற்ப நூல்கள் காட்டும் சிவனாரின் திருவுருவைப் பல்லாயிரக்கணக்கான சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும் நமக்குக் காட்டி நிற்கின்றன. அண்மையில் தஞ்சைப் பெரிய கோயில், தாராசுரம் இராஜராஜேச்சரம், நந்திபுரத்து ஆயிரத்தளி ஆகிய இடங்களில் எனது ஆசிரியர் திரு.இரா.நாகசாமி அவர்களோடு ஆய்வு மேற்கொண்டபோது, நாங்கள் புதிதாகக் கண்டறிந்த கல்வெட்டுக்கள், சிற்பங்களின் துணைகொண்டு பரமேட்டியின் வடிவங்கள் சிலவற்றை அறிந்தோம். இதுவரை சைவப்பேருலகு அவ்வளவாக அறிந்திராத அந்தச் சிவமூர்த்தங்கள் பற்றி இக்கட்டுரையின்கண் காண்போம்.

மகாமேருவிடங்கர்

தஞ்சைப் பெரியகோயிலிலுள்ள மூன்று கல்வெட்டுக்கள் (இராஜேந்திரசோழன் காலத்தவை) இராஜராஜன் எடுத்த "மகாமேருவிடங்கர்" என்ற செப்புத் திருமேனி பற்றிக் கூறுகின்றன. இக்குறிப்புக் கொண்டு அது சோமாஸ்கந்த திருமேனியாக இருத்தல் கூடும் என ஆய்வாளர்கள் கருதினர். அண்மையில் இத்திருக்கோயிலின் தூண் ஒன்றில் ஒரு கல்வெட்டு மறைந்திருந்ததைக் கண்டு வியந்தோம். அது மகாமேருவிடங்க மூர்த்தியின் வடிவமைப்பு எவ்வாறு திகழ்ந்தது என்பதனைத் துல்லியமான அளவுகளோடு விவரிப்பதாகும். மாமன்னன் இராஜராஜனால் பொறிக்கப் பெற்ற அக்கல்வெட்டு பின்வருமாறு அத்திருமேனியின் வடிவம் பற்றிக் கூறுகின்றது.

செம்பில் வடிக்கப் பெற்ற மகாமேருபர்வதம் மூன்று சிகரங்களுடன் திகழ்வதாகவும் அவற்றில் இருசிகரங்களில் சூரிய சந்திரர் வடிவங்களும், பர்வதத்தின் மத்தியில் உள்ள ஆசனத்தின் மேல் மகாமேருவிடங்கர் நான்கு திருக்கரத்தோடு அமர்ந்திருக்க அருகே உமாபரமேஸ்வரியின் திருவுருவம் உள்ளதாகவும். இவர்களுக்கு அருகாக நான்கு கரத்தோடு கணபதிப் பிள்ளையாரும் இரண்டு கரத்தோடு சுப்ரமணியப் பிள்ளையாரும் இருப்பதாகவும் அக்கல்வெட்டு கூறுகின்றது. ஈசனுக்கு அருகாக விருட்சம் ஒன்றும் கந்தனுக்கு அருகாக ஒரு விரலறை உயரமுடைய செடி ஒன்றும் உள்ளதாகவும் கூறுகின்றது. ஆசனத்தருகே இடபம் படுத்திருக்க உமைக்கருகே குறளி ஒருத்தி நிற்பதாகவும் குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு காட்டும் அரிய இச்சிவமூர்த்தத்தினை வரைகோட்டு ஓவியமாகத் தந்துள்ளோம். ஓவிய வடிவில் இத்திருமேனியைக் கண்ணுற்றபோது மேலும் ஒரு தெளிவு கிடைத்தது. தஞ்சைப் பெரிய கோயில் ஸ்ரீவிமானம் 216 அடி உயரமுடையது. அதன் வெளித்தோற்றமும் உள்தோற்றமும் இரண்டு சிவமூர்த்தங்களின் பெருவடிவே என்பதறிய முடிந்தது. இவ்விமானம் "தெக்ஷிணமேரு" என்ற பெயரால் அழைக்கப் பெற்றதை இராஜராஜனின் பல கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. மேரு என்பது மலையைக் குறிக்கும் சொல்லாகும். சிவபெருமான் உமாபரமேசுவரியோடு உறையுமிடம் மகாமேரு எனும் பொன்மலையாகும். விண்ணகத்து விளங்கும் அம்மாமேருவின் வடிவே கயிலயங்கிரியாகும். அதனைத் தஞ்சையில் கல்லால் அமைத்தான் சிவபாதசேகரன். மகாமேருவுக்கு "இராஜராஜன்" - என்ற பெயருமுண்டு.



மகாமேருவிடங்கர் - கல்வெட்டில் கூறியுள்ளவாறு வரையப் பெற்ற ஓவியம்

மகாமேருவாகத் திகழும் தஞ்சை இராஜராஜேச்சரத்து ஸ்ரீவிமானத்தின் கீழ்ப்புறம் சிகரங்கள் காட்டப் பெற்று அங்குச் சிவனாரும் உமையும், திருப்புதல்வர்களும், தேவாதிதேவர்களும் கணங்களும் புடைசூழ அமர்ந்திருக்கும் திருக்காட்சி சுதைவடிவில் காணப்பெறுகின்றது. கல்வெட்டில் குறிக்கப்பெற்ற செப்புத் திருமேனியான மகாமேருவிடங்கர் மூர்த்தத்தினை மீண்டும் காணமுடிகிறது. இங்கு விமானமே மேரு பர்வதமாக விளங்குவதை உணர முடிகிறது. அண்மையில் நாங்கள் கண்டுபிடித்த கல்வெட்டொன்று தஞ்சை விமானம் முழுவதற்குமே இராஜராஜன் பொற்றகடுகள் போர்த்தி அழகு செய்தான் என்பதைக் கூறுகின்றது. மகாமேரு என்பது பொன்மலையாகக் காட்சி நல்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான் இராஜராஜன் ஸ்ரீவிமானத்திற்குப் பொன்மேய்ந்தான். செம்பில் வடிக்கப் பெற்ற சிவமூர்த்தத்தையும் விமானத்துப் பொற்றகடுகளையும் காலவெள்ளத்தில் இழந்தபோதுங்கூட மகாமேருவிடங்கரையும் மேருவையும் தஞ்சை விமானத்தில் இன்றும் நாம் கண்டு மகிழலாம்.

மகாமேருவாகத் (தெட்சிணமேருவாக) திகழும் இவ்விமானத்தின் மேல்நிலையிலிருந்து கீழ்வரை பல்வேறு நிலைகளில் சிவமூர்த்தங்கள் விளங்குகின்றன. மேலே இரண்டாம் தளத்தில் உள்ள கோஷ்டங்களில் வித்யேச்வரர்கள் எனும் அனந்தன், சூக்ஷமன், சிவோத்தமன், ஏகநேத்திரன், ஏகருத்திரன், திரிமூர்த்தி, சீகண்டன், சீகண்டி ஆகிய சிவ வடிவங்கள் வில்லேந்திய கோலத்தில் காணப்பெறுகின்றன. இவ்வடிவங்களை இராஜராஜேச்வரர்கள் என்று நூல்கள் கூறுகின்றன. அடுத்து இதே நிலையில் சிவரூபமாகத் திகழும் மூர்த்திச்வரர்களாகிய பவன், சர்வன், பசுபதி, உக்ரன், ருத்ரன், பீமன், ஈசானன், மகாதேவன் ஆகிய எண்மர் உருவங்களும், பதினொரு ருத்திரர்களின் வடிவங்களும் உள்ளன. கீழ்நிலை தேவகோஷ்டங்களில் பல்வேறு சிவ வடிவங்கள் இருப்பினும் குறிப்பிடத்தக்க வடிவங்களாக, சிவலிங்க வடிவிற்குள் நின்றவண்ணம் திருமாலுக்குச் சக்கரம் ஈந்து அருள்பாலிக்கும் விஷ்ணு அனுக்கிரக மூர்த்தி, சிவனாரின் ஐந்துடல் மூர்த்திகளாகிய சத்யோஜாதம், அகோரம், தத்புருஷம், வாமதேவம், ஈசானம் ஆகிய மூர்த்திகளின் தனித்தனி வடிவங்கள், வாமபாகத்தில் உறையும் மனோன்மணி ஆகியவை அங்கு இடம் பெற்றுத் திகழ்வது, வேறு எந்த சிவலாயத்திலும் காணமுடியாத அரிய மூர்த்தங்களாகும்.



மகாமேருவிடங்கர் சுதைச் சிற்பம்
உள்ள இடம்

தஞ்சைப் பெரிய கோயில்
ஸ்ரீவிமானம்

தெக்ஷிணமேருவிடங்கர்

இராஜராஜசோழனின் கல்வெட்டுக்கள் தஞ்சை ஸ்ரீவிமானத்தை "தெக்ஷிணமேரு" என்று கூறுவதுபோல் அவன் செய்தளித்த செப்புத் திருமேனி ஒன்றினைத் "தெக்ஷிணமேருவிடங்கர்" என்று கூறுகின்றது. இவ்வாறு குறிக்கும் இடத்தில் "தெக்ஷிணமேருவிடங்கரான ஆடவல்லார் . . ." என்ற குறிப்பு காணப்பெறுவதால் அத்திருமேனி ஆடல்வல்லானாகிய நடராசப் பெருமான் திருவடிவே என்பது தெற்றென விளங்கும்.

மேருவிடங்கர் எனும் சொல் ஸ்ரீவிமானத்தின் உட்புற அமைப்பின் தத்துவத்தையும், அங்கு அருளி நிற்கின்ற பரமனின் திருவடிவையும் குறிப்பதாகும். திருமாளிகைத்தேவர்,

" விடங்கொள் கண்டத்தெம் விடங்கனே யுன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே. "

என்று கூறி விடங்கர் எனும் சொல்லால் ஆடல்வல்லானைக் குறித்துள்ளார். தில்லைப் பேரம்பலத்திற்கு "மேரு" எனும் சொல் வழங்கிற்று என்பதனைச் சேக்கிழார் சுவாமிகள்,

பெருமதில் சிறந்தபொன் மாளிகையின்
பிறங்கு பேரம்பல மேரு
வருமுறை வளங்கொண் டிறைஞ்சிய பின்னர்
வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார். "

எனக் கூறுவதிலிருந்து ஆடல்வல்ல பரமன் உறையும் அம்பலத்திற்கு மேரு என்ற சொல் வழக்கில் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் இராஜராஜன் தஞ்சையில் எடுத்த பெருங்கோயில் சிறப்பையும் தில்லைக் கோயில் அம்பலத்தின் சிறப்பையும் கூறுமிடத்து,

" தாரக வண்டத் தொடுத்தணிந்தார்
தமக்கிடம் போதத் தமனியத்தாற்
சீராச ராசீச் சரஞ்சமைத்த
தெய்வப் பெருமாளை வாழ்த்தினவே
நீடிய வெண்டிசை நீழல்வாய்ப்ப

நேரிய தெக்கிண மேருவென்னப்

பிடிகை தில்லை வனத்தமைத்த

பெரிய பெருமானை வாழ்த்தினவே

- என்ற தாழிசைகளால் போற்றுகின்றார். இங்குத் தெக்கிண மேருவாம் தஞ்சை இராஜராஜேச்சரத்தை எவ்வாறு இராஜராஜன் பொன்மயமாக - மகாமேருவாக - தெக்கிணமேருவாக அமைத்தானோ அதேபோன்று தில்லை அம்பலத்தை இரண்டாம் குலோத்துங்கன் அமைத்தான் என்ற அரிய செய்தியை அறிகிறோம்.



ஸ்ரீவிமானத்தின் உட்புறத் தோற்றம்



தெக்ஷிணமேருவிடங்கர் எனும் ஆடல்வல்லான் செப்புத் திருமேனி - தஞ்சைக் கோயிலில் உள்ளது

தெக்ஷிணமேருவாகிய தஞ்சை விமானம் சிதாகாசம் எனும் பரமேஷ்டியின் அருவ நிலைத் தத்துவத்தைக் காட்டுவதாகும். இக்கோயில் மகுடாகம வழி அமைக்கப்பெற்றதாகும். பரமசுவாமி எனும் இலிங்கத்திருமேனி நவதத்துவ அடிப்படையில் அர்ச்சிக்கப் பெறுவதாகும். பிரமனில் தொடங்கும் வழிபாடு பின்பு விஷ்ணு, ருத்திரன், சதாசிவன், பரபிந்து, பரநாதம், பராசக்தி வழிபாடு கூறப்பெற்று நிறைவாகப் பரசிவ வணக்கமாகிய பிரபஞ்ச வழிபாட்டில் நிறைவுறும். இலிங்கத்திருமேனிக்கு மேலாக 200 அடி உயரத்திற்குக் காணப் பெறும் உட்கூடு முழுவதும் பரசிவனாகிய பரமானந்த தத்துவத்தின் வடிவமே. அதுவே பின்பு திருவுருவோடு ஆடல்வல்லானாகப் போற்றப்பெறுவதாகும்.

எனவே தான் அந்த விமானத்தின் உள்வெளித்தத்துவமாகத் திகழும் தஞ்சைப் பெரிய கோயில் ஆடல்வல்லான் செப்புத் திருமேனிக்குத் "தெக்ஷிணமேருவிடங்கர்" திருநாமத்தை இராஜராஜன் சூட்டியதோடு மேல் நிலையில் முதல் தளத்தில் உட்கூட்டைச் சுற்றிலும் அறை அமைத்து அதனுள் ஆடல்வல்லானே 108 கரணங்களையும் ஆடுகின்ற திருமூர்த்தங்களை இடம்பெறச் செய்துள்ளான். சிவனாரே கரணங்கள் காட்டும் ஒரே திருக்கோயில் தஞ்சை இராஜராஜேச்சரமேயாகும்.

புறத் தோற்றத்தில் மகாமேருவிடங்கராகவும், அகத் தோற்றத்தில் தெக்ஷிணமேருவிடங்கராகவும் திகழும் தஞ்சைப் பெரிய கோயில், ஸ்ரீவிமானமே ஒரு சிவமூர்த்தம் (சிவனார் வடிவம்) என்பதுதான் உண்மை.

பஞ்சதேகமூர்த்தி

தஞ்சை இராஜராஜேச்சரத்தின் அக்னிதேவர் ஆலயத்துக்கு அருகே உள்ள தூண் ஒன்றில் இராஜராஜன் செய்தளித்த பஞ்சதேகமூர்த்தி என்ற செப்புத் திருமேனி பற்றி அளவுகளோடு கல்வெட்டொன்று விவரிக்கின்றது. நடுவே உயரமான வடிவத்தோடு பத்துக்கரங்கள் திகழ மூர்த்தி ஒருவரும், அவரது உடலோடு இணைந்து நான்கு பக்கங்களிலும் நந்நான்கு ஸ்ரீஹஸ்தங்கள் உடையாா்களாக நான்கு மூர்த்திகளும் ஒரே பீடத்தின்மேல் எழுந்தருளி இருக்குமாறு அச்செப்புத் திருமேனி விளங்கியதாகக் கல்வெட்டு கூறுகின்றது.

பஞ்சதேகமூர்த்தி [ஆயுதமூர்த்தி]

மேலே கண்ட பஞ்சதேகமூர்த்தி பற்றி விவரிக்கும் கல்வெட்டு உள்ள இடத்திற்கு அருகாக இதுவரை கண்டறியப்படாத கல்வெட்டொன்றை அண்மையில் வெளிப்படுத்தினோம். அதில் மீண்டும் ஒரு பஞ்சதேகமூர்த்தி என்ற இராஜராஜன் செய்தளித்த செப்புத் திருமேனி பற்றி அளவுகளோடு விவரிக்கப் பெற்றுள்ளது. நடுவே திகழும் மூர்த்தி இருகரத்தினராய் உயரமாகத் திகழ அவரது உடலோடு இணைந்து நான்கு பக்கங்களிலும் இரண்டு இரண்டு கரங்களோடு திகழும் நான்கு மூர்த்திகளையும் இக்கல்வெட்டு விவரிக்கின்றது. இவர்கள் சிவனாரின் ஆயுதமூர்த்திகளாவர். ஒவ்வொருவர் முடிமேலும் அவரவர் ஆயுதங்கள் விளங்கியதாகவும் கூறுகின்றது. சூலமும், கதையும் இருவர் சிரசின்மேல் இருந்ததாகக் கூறும் கல்வெட்டுப் பகுதி தெளிவாக உள்ளது. மற்ற மூன்று ஆயுதங்களைப்பற்றி விவரிக்கும் கல்வெட்டுப் பகுதி சிதைந்து விட்டது. அவை முறையே மழு, சக்தி, பாசம் என்பவையாக இருத்தல் வேண்டும்.



பஞ்சதேகமூர்த்தி

இச்செப்புத் திருமேனியில் காணப்பெறும் ஆயுதமூர்த்திகள் போன்றே தெக்ஷிணமேரு எனும் ஸ்ரீவிமானத்தின் வாயில்களில் சிவனாரின் தசாயுதங்களான வஜ்ரம், சக்தி, தண்டம், கொடி, சூலம், அங்குசம், கதை, பாசம், சக்கரம் என்பவற்றைக் கையில் ஏந்திக் காவல் புரியும் ஆயுத புருஷா்களின் திருவடிவங்களும் காணப்பெறுகின்றன.

மகாசதாசிவன்

பஞ்சதேகமூர்த்தியாகவோ, அல்லது ஐந்து முகங்கள் பத்துக் கரங்கள் திகழப் பத்மாசனத்தில் அமா்ந்த ஒருடல் மூர்த்தியாகவோ வடித்துச் சதாசிவனைப் போற்றுவர். தஞ்சைப் பெரியகோயிலின் முதல் திருவாயிலான கேரளாந்தகன் திருவாயிற் கோபுரத்தில் மேற்கு மற்றும் வட திசைகளில் மேல்நிலையில் ஐந்து தலைகளுடன் கூடிய ஒருடல் மூர்த்தியாகப் பத்மாசனத்தில், பத்துத்திருக்கரங்களோடு சிவனாா் விளங்கும் இரண்டு சுதை வடிவங்கள் உள்ளன. இவையும் அரிய வடிவங்களே.

வாகீசசிவன்

"மூவுலகின் மேன்மைக்காகச் சுமேரு மலையின் உச்சியிலே சிறந்த யோக பந்த நிலையில் அமா்ந்திருப்பவரும் சூரிய சந்திரா்களை இருகண்களாக உடையவரும் உமையுடன் கூடியவரும், சடை முடி தரித்தவருமான சதாசிவனை நான் வணங்குகிறேன்" - என்பது இரண்டாம் நந்திவா்ம பல்லவனின் வரலாறு கூறும் உதயேந்திரம் செப்பேட்டின் தொடக்கப் பகுதியாகும்.

சதாசிவ மூர்த்தத்திற்கே முதலிடம் கொடுத்து வழிபட்ட இப்பல்லவ மன்னன் தஞ்சைக்கருகிலுள்ள கண்டியூர் பகுதியிலும், நியமத்திலும் "ஆயிரத்தளி" என்ற பெயரில் ஆயிரம் சிவலிங்கங்களை வைத்துக்

கோயில் எடுத்தான். அக்கோயிலில் சதாசிவ வடிவினை வாகீஸ்வரராகவும், உமா பரமேஸ்வரியை வாகீஸ்வரியாகவும் மூர்த்தங்களாக்கி வழிபட்டான்.

இம்மூர்த்தங்கள் பெரும்பாலும் நான்கு தலையுடன் கூடியதாகவும், சிலவற்றில் ஒருதலையுடனும் காணப் பெறுகின்றன. சதுராணனன் எனப்படும் இம்மூர்த்தி தாமரை மலரின் மேல் அமர்ந்த நிலையில் மேலிருகரங்களில் திரிசூலமும், அக்கமாலையும் ஏந்தியிருப்பார்; கீழிரு கரங்களில் வலக்கரத்தில் தாமரைமொட்டையும், தொடைமேல் இருத்திய இடக்கரத்தில் சுவடியையும் ஏந்தியிருப்பார். இத்தகைய திருவுருங்களைக் கண்டியூர், தஞ்சை, செந்தலை, வீரசிங்கம்பேட்டை, திருவையாறு, திருநெய்த்தானம் ஆகிய இடங்களில் காணலாம். கண்டியூர்க் கோயிலில் உள்ள சிற்றுருவச் சிற்பப் படைப்பொன்றில் நான்முகனாகப் பத்மத்தில் அமர்ந்துள்ள வாகீச சிவனாரை நான்முகனும், திருமாலும் போற்றி நிற்கும் காட்சி உள்ளது.

அரிய இச் சிவவடிவினைத் திருஞானசம்பந்தர் "பதுமநன்மலரது மருவிய சிவன்" - என்றும், அப்பர் அடிகள் "தாமரை ஆதனத்தான்" , "புண்டரீகப் புதுமலர் ஆதனத்தார்" , "தங்கையின் யாழும் வைத்தார் தாமரை மலரும் வைத்தார்" - என்றெல்லாமும் குறிப்பிடுவதுபோல் மணிவாசகர் "தாமரைச்சைவன்" என்று போற்றுவார். லகுலீச பாசுபதசைவர்களின் செல்வாக்கால் செழித்த நந்திபுரம் பகுதியிலன்றி இவ்வடிவங்களை வேறு எங்கும் காணல் அரிது.

அர்த்தநாரிசூரியன்

அட்டமூர்த்தங்களுள் ஒன்றாகச் சூரியனைச் சிவசூரியனாகப் போற்றுவது சைவமரபாகும். பரமேட்டியை முளைஞாயிறாகக் கண்ட அப்பரடிகள், காலை இளங்கதிர் ஒளியினை வேதத்தில் ஸ்ரீருத்ரம் கூறுமாறு போல,

"செக்கரொளி பவளஒளி மின்னின்சோதி" - என மூன்று ஒளிவடிவங்களாகக் கண்டு போற்றுகின்றார். இதன் அடிப்படையில் தாராசுரம் திருக்கோயிலில் அமைந்துள்ள ஒரு திருவடிவமே அர்த்தநாரிசூரியன் என்பதாகும். நின்ற கோலத்தில் நான்கு திருமுகம் கொண்டு (ஒருமுகம் மறைந்த நிலையில்) சூரிய ஒளிவட்டத்தோடு, ஒரு பாதி ஆண் உருவம், ஒரு பாதி பெண் உருவம் திகழ எட்டுக்கரத்தினராய்ச் சிவனார்க்குரிய கபாலம், தாமரை, அக்கமாலை, பாசம், வாள் போன்ற ஆயுதங்கள் ஏந்தி, நெற்றிக்கண்ணும், பத்ர மகர குண்டலங்களும் தரித்து இத்திருவடிவம் காணப்பெறுகின்றது. இவ்வடிவம் அமைந்துள்ள மாடத்திற்கு மேலாகச் சோழர்காலச் செந்தூர எழுத்துக்களில் **"அர்த்தநாரிசூரியன்"** என்ற பெயர்ப்பொறிப்பு மறைந்து இருப்பதைக் கண்டு இவ்வடிவமும் அரிய சிவமூர்த்தங்களுள் ஒன்றே என்பதறிந்தோம்.

மகாசதாசிவமூர்த்தி - தஞ்சைப் பெரிய
கோயிலில் உள்ள சுதைச் சிற்பம்

சரபமூர்த்தி-அமைப்பும் பெருமையும்

செந்தமிழ்ச்செல்வர், அருந்தமிழ்ச்செம்மல், புலவர்
டாக்டர் **அ. ஆனந்தநடராசன்**, எம்.ஏ., பி.ஓ.எல்., சமஸ்கிருதம் (பட்டயம்), பிஎச்.டி.,
பேராசிரியர், தமிழியல்துறைத்தலைவர், இந்தியமொழிப்புல முதன்மையர்,
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

சிவபெருமானும் திருமாலும் அனைத்துலக நலங்களுக்காக ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து அருள்புரியும் வல்லமை படைத்தவர்கள். இருவருமே *'பரம்பொருள்'* எனப் போற்றத்தக்கவர்களே. உறவுமுறையில் திருமாலின் தங்கை பார்வதியைத் திருமணம் புரிந்துகொண்டமையால் மைத்துன முறையுடையவர் சிவபெருமான். சைவ வைணவ ஒருமை நிலையை உலகிற்குணர்த்த *'சங்கரநாராயணன்'* என அருட்காட்சி வழங்குபவர்களும் அவர்களே. சிவனுக்குச் சக்தியாகத் - தேவியாக-வருபவரே திருமால் என்பதும் உண்டு; இதனையுணர்ந்து, ''அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே'' என்று தேவார அருள்மொழியும் கூறிச் செல்லும். புராண நோக்கில் இன்னும் பல குறிப்புகள் உண்டு; ஈண்டுச் சிலவற்றை இயைபுடன் முன்கூட்டிக் காண்பது, இக்கட்டுரைக்குத் துணைநிற்கும்.

அறக்கடவுளாகத் திருமால், சிவபெருமானுக்குக் காளையூர்தியாகத் தோன்றித் தாங்கியவர்; அவரே திரிபுர சம்மாரக் காலத்தில், மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமானுக்கு அம்பாகச்-சரமாக-இருந்து உதவியவர். எல்லா உயிரினங்களும் 'சரம்' எனப்படுவதாலும், திருமாலும், 'சரம்' என உதவியாலும், உயிரினங்களும் திருமாலும் சிவனிடத்தே விளங்குகின்ற தத்துவம் புலப்படும்; இந்த அடிப்படையில் மோட்சமளிக்கும் பரம்பொருளாகிய சிவனே *'சரப'* என்ற பதத்தால் உணர்த்தப்படுகின்றான் என்பர். சரபமூர்த்தியாகச் சிவன் தோன்றுதற்குரிய புராணப்பின்னணியைத் தெரிந்துகொண்டு, மூர்த்தியின் அமைப்பையும் பெருமையையும் காண்பது பொருத்தமாகும்.

இரணியகசிபு எனும் அசுரன் நான்முகனிடம் தான் பெற்ற வரவலிமையால் தன்னையே இறைவனாக வழிபடுமாறு அனைவரையும் வற்புறுத்தியதுடன், அப்படி வணங்காதவரைக் கடுமையாகத் தண்டித்துத் துன்புறுத்தினான். அவன் புதல்வனான பிரகலாதன், நாராயணனே எல்லோருக்கும் இறைவன் என்பதை உள்ளொளியால் உணர்ந்து பத்திமேலீட்டால் வணங்கி வழிபட்டான்; இதனால் தந்தையின் சினத்திற்காளாகிப் பல வகையால் துன்புறுத்தப்பட்டான். அடியார்க்கு எளியனாகிய நாராயணன், நரசிங்க மூர்த்தியாக அவதரித்து, இரணியகசிபைக் கொன்று, அவன் உடலிலிருந்து பொங்கிவந்த குருதியைப் பருகினார். ஆவேசமூர்த்தியான நரசிம்மர், இரணியகசிபின் இரத்தத்தைப் பருகியதும் சினத்தீ பெரிதும் வளர்ந்து உக்கிரம் கொண்டார். அதனைத் தணிக்கப் பிரகலாதன் மேற்கொண்ட முயற்சிகளும் பலனளிக்கவில்லை. இரத்தம் பருகியதால் மதிமயங்கி உலகத்தை அழிக்கத் தொடங்கியதும், தேவர்களும் அடியவர்களும் சிவனை நாடி, அடைக்கலம் புகுந்து காத்தருளவேண்டினர். அடியவர்களின் குறைதீர்க்கும் சிவன், நரசிம்மத்தின் உக்கிரத்தைத் தணிக்கச் சரபமூர்த்தியாகத் தோன்றி ஆவன புரிந்தருளினார். தேவர்களுக்கும் அடியவர்களுக்கும் ஏற்பட்ட நடுக்கத்தைப் போக்கியருளியமையால் - நடுக்கந்தவிர்த்த நாயகராக-கம்பஹரேசுவராகத்-திரிபுவனத்தலத்தில் வீற்றிருந்தருள் புரியலானார் என்பது புராணம். இஃது ஒரு புறமிருக்கச், சரபப் பறவையாகச் சிவன் தோன்றியவுடனேயே அவனை நன்கு உணர்ந்துகொண்ட நரசிங்கம் அவனுடன் போரிடாமலேயே அவனுடன் ஐக்கியமாயிற்று என்றும் ஒரு புராணம் கூறும். எப்படியோ நரசிங்கத்தைக் கட்டுக்குள் கொணர்ந்து கருணைபுரிந்தவர் சரபமூர்த்தி என்பது தெள்ளிது.

சரபமூர்த்தியின் வடிவமைப்பு

சரபேசுவரரின் திருமேனியமைப்பிலும் சிற்சில வேறுபாடுகள் உண்டு; புராணங்களையும் தியான சுலோகங்களையும் நன்கு கற்றே சிற்பத் திருவுருவங்களை அமைக்கும் சிற்பியர்கள் எப்படியோ சிற்சில வேறுபாடுகளுடன் சரபமூர்த்தியை அமைத்துள்ளனர்; ஆராய்ச்சி நோக்கில் சிந்திக்க நிரம்பவுள.

வேதாந்த சிரோமணி கே.இராஜகோபால சாஸ்திரி ஆராய்ந்து எழுதுகையில், ''பிரமாண்ட புராணத்தில் கௌரீ மாயூர க்ஷேத்திர மகாத்மியம் உள்ளது. அதில் 59, 60 ஆவது அத்தியாயங்களில்

சரபஸ்வரூபம் கூறப்படுகிறது. கீழே நான்கு கால்கள், மேலே நான்கு கால்கள் ஆக எட்டுக் கால்களும், நான்கு திருக்கரங்களும் உடையவர். (சில புராணங்களிலும் தியான சுலோகங்களிலும் ஆயிரம் கையுடையவர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது). பட்சியின் அங்கமாக அலகும், இறக்கைகளு முடையவர். விலங்கின் அங்கமாக வாலுடையவர் (நரியின் வால் போன்ற வாலுடையவர் என்றும் ஒரு தியான சுலோகம் உண்டு). கூர்மையான நகங்களையும் கோரைப்பல்லையுமுடையவர். சந்திரன், சூரியன், அக்கினி என்ற மூன்று திருக்கண்ணுடையவர். சந்திரப் பிறையணிந்த சடையுடையவர். ஊழிக் காலத்து மேகம்போல் பெரிய கூச்சல் உடையவர். மின்னற்கொடி போன்று ஒளி வீசும் உடலையுடையவர். தூக்கிய காதும், கருத்த கழுத்தும், பயங்கரமான துடிக்கும் நாக்குமுடையவர். காளியும் துர்க்கையும் இரு இறகுகள். இருதயத்தில் பைரவரும், வயிற்றில் பாடவாக்கினியும், தொடைகளில் வியாதியும் மிருத்யுவும் உடையவர். புயல் காற்றினும் கடுகிய வேகமுடையவர். தலையில் கங்கையும் கிரீடமும் கொண்டவர். தொடையில் கிடத்திய நரசிங்கமுடையவர். இவ்விதமாகச் சரபரூபம் கூறப்படுகிறது. மந்திய யந்திர பேதங்களுக்கு ஏற்றவாறு சிற்சில மாறுபாடுகளும் உருவத்தில் கூறப்பட்டிருக்கின்றன''[1] என்று சரபமூர்த்தி வடிவத்தை விளக்கிக் காட்டுகிறார்.

வடமொழியாளர்கள் சரபமூர்த்தி பற்றிய வரலாற்றை, *'ரிக்'* வேதத்தில் குறிப்பாகவும், *'யசுர்'* வேதத்தில் ஓரளவு தெளிவாகவும் கூறப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுவர்; மேலும் அஷ்டோத்தர சதோபநிஷத்துக்களில் *'சரபோநிஷத்'* என்பது ஒன்றாக விளங்கிச் சரபமூர்த்தி பற்றி அறியத் துணைநிற்குமாற்றைக் கூறுவர்.

தமிழ்ப்புராணங்களைப் பொறுத்தவரையில் காஞ்சிப்புராணத்தில் சரபேசுவரரின் திருவுருவம் நன்கு விளக்கப்பட்டுள்ளது; அதனை,

''நன்னா லிரண்டு திருவடியும் நனிநீள் வாலும் முகமிரண்டும்
கொன்னார் சிறகும் உருத்திரமும் கொடும்பே ரார்ப்பும் எதிர்தோற்றிச்
செந்நீர் பருகிச் செருக்கு நரமடங்க லாவிசெகுத் துரிகொண்(டு)
ஒன்னார் குலங்கள் முழுதழிக்கு முடையான் சரபத் திருவுருவம்'' [2]

என வருஞ்செய்யுளால் அறிந்து கொள்ளலாம்.

காமிகாகமம் சரபேசமூர்த்தியை விளக்குகையில், அதன் உடல்பொன்னிறமுடையதாய்ப் பறவை போன்றது; சரபமூர்த்தி மேல்நோக்கிய இரு இறக்கைகளையும், சிவந்த இருகண்களையும், எட்டுக்கால்களையும், விலங்கினுடைய வாலையும், மனித உடலையும், சிம்மத்தின் தலையையும், மகுடத்தையும், பக்கத்தந்தங்களையும் உடையவராகக் காட்சியளிக்கிறார் எனக் கூறும். மேலும், தம் இரு கால்களால் நரசிம்மத்தைத் தூக்கியிருக்க, நரசிம்மம் மனித உடலுடன் கூப்பிய இருகரங்களுடன் உள்ளதாகவும், அச்சுறுத்தும் நிலைகொண்ட திருவுருவம் அஃது எனவும் கூறிச் செல்லும்.

''சிரீத்துவநிதி என்னும் நூல், சரபமூர்த்தி முப்பத்திரண்டு கைகளுடன் விளங்குவதாகக் குறிப்பிடுவதுடன், வலக்கைகளில் வச்சிரம், முசுதி, அபயம், சக்கரம், சக்தி, தண்டம், அங்குசம், கட்கம், கதவான்யம், பரசு, அக்கமாலை, எலும்பு, தனுசு, முசலம், அக்கினி ஆகியவைகளையும் இடக்கைகளில் பாசம், வரதம் கதை, பானம், துவசம், வாள், பாம்பு, தாமரைமலர், கபாலம், புத்தகம், ஆலம், முத்கரம் ஆகியவைகளையும் உடையதாய் ஒரு கை துர்க்கையை அணைத்துக் கொண்டதாகவும் விளங்கியது என்று குறிப்பிடுகிறது'' [3] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

பவ சிவாலயங்களில் சிற்பச்சிலை வடிவிலும், சுதைச் சிற்பவடிவிலும் சரப மூர்த்தியின் திருவுருவம் காணப்படுகின்றது. எனினும், திரிபுவனத்திலுள்ள சரபேசுவரர் திருவுருவம் மூன்று கால்களுடன் சிம்மவுடல், சிம்மத்தலை ஆகியவற்றைக் கொண்டதாகவும், விலங்கின் வாலுடனும்

---

1. திருபுவனம் ஸ்ரீகம்பஹரேசுவரசுவாமிகோயில் கும்பாபிஷேகமலர் (1963) பக்.81.
2. காஞ்சி. சிவபுண். 32
3. வாழ்வியல் களஞ்சியம் (தொகுதி எட்டு), தஞ்சைத்தமிழ்ப்பல்கலைக்கழகம், ப.674.

T. 13999

நான்கு மானுடக்கைகளுடனும் விளங்குகிறது. மேல் நோக்கிய வலக்கையில் பரசுப்படையும், கீழ்நோக்கிய வலக்கையில் பாசமும், மேல்நோக்கிய இடக்கையில் மானையும், கீழ்நோக்கிய இடக்கையில் கனலையும் கொண்டதாக உள்ளது; மேலும், தன் முன்னிரு கால்களால் நரசிங்கத்தை இறுக்கிப் பிடித்தநிலையிலேயே, நரசிங்கம் அதனின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளத்தன் எட்டுக் கைகளாலும் போராடுவது போன்ற நிலையிலும், அத்திருவுருவம் காணப்படுகின்றது.

இவ்வாறெல்லாம் பெரிதும் போற்றிப் புகழப்படும் சரபமூர்த்தியைச் சிவமூர்த்தங்கள் இருபத்தைந்தனுள் ஒன்றாகச் சான்றோர்கள் சேர்க்காத காரணம் புரியவில்லை. எனினும், 'சிவபராக்கிரமம்' எனும் நூலில் அஷ்டாஷ்ட மூர்த்தங்களை-அறுபத்துநான்கு மூர்த்தங்களை - விளக்குமிடத்து முப்பதாவதாக *'ஸிம்ஹக்னமூர்த்தி'* கூறப்படுதலைக் காணலாம்.

சரபமூர்த்தி வழிபாடும் பயன்களும்

சோழன் மூன்றாம் குலோத்துங்கனைத் திரிபுவனச்சக்கரவர்த்தி என்றும் அழைப்பர். பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டப்பட்ட திரிபுவனம் கோயில், கட்டடக்கலை நோக்கிலும் சமயச்சிறப்பு நோக்கிலும் மிகவும் சிந்திக்கத்தக்க பெருமையுடையது.

பிற்காலச் சோழர்கள்-விசயாலயன் மரபினர்-போராற்றலால் பல நாடுகளை வென்று, மாமன்னர்களென்று தலையெடுத்துப் பொற்காலம் (Golden age) கண்டவர்கள். சமய நூல்களும், சிற்பக் கட்டடக் கலைகளும் தழைக்க வழிவகுத்த சோழமன்னர்கள் என்றும் தம்பெயர்நிலைக்கும் வண்ணம் வரலாற்றில் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர். முதலாம் இராசராசன் எடுத்த பெரியகோயிலும், முதலாம் இராசேந்திரன் எடுத்த கங்கைகொண்டசோழீச்சுரமும், கட்டடக்கலையில் முறையே, ஆண், பெண் அமைப்பினைக் கொண்டவை. இவற்றைப் பின்பற்றிக் கருவறைக்கு மேலேயுள்ள விமானமே கோபுரம் போன்ற அமைப்பில் உயரமாகக் கட்டப்பட்ட பெருமைகொண்டது திரிபுவனம் கம்பஹரேசுவரர் கோயிலாகும்; இங்குச் சரபமூர்த்திக்கெனவும் தனிச்சந்நிதியமைக்கப்பட்டுள்ளது; மக்கள் பலரையும் வழிபாட்டு நோக்கில் கவரும்வண்ணம் இது அமைந்துள்ளது. இதற்குக் காரணம் என்ன எனச் சிந்திப்பது இயைபுடையதாகும்.

சங்க காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் போர்த்தெய்வமாகப் போரில் வெற்றி வழங்குந் தெய்வமாகக்-காளியாகிய கொற்றவை வழிபடப் பெற்றாள். பிற்காலச் சோழர்களும் காளியை ஒரு பக்கம் வழிபட்டாலும், மற்றொரு பக்கம் திரிபுராந்தக மூர்த்தியையும் சிறப்பாக வழிபடலாயினர். முதலாம் இராசராசன் காளியாகிய நிசும்பசூதனிக்குக் கோயில்கட்டித் தனித்த வழிபாட்டுக்கு வழிசெய்திருந்தும், திரிபுராந்தக மூர்த்தியையும் வழிபட்டு வந்தான் என்பது தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள ஓவியத்தையும் சிற்பத்தையும் காண்கையில் உணரலாகுஞ் செய்தியாக உள்ளது. சோழர் பரம்பரையில் வந்த திரிபுவன சக்கரவர்த்தியும் திரிபுராந்தக மூர்த்தியின் பெருமையை அறிந்திருந்தும், நரசிங்கத்தையே அடக்கிய சரபமூர்த்தியை வழிபடுவதால் மேலும் போராற்றல் பெறலாம் என்று அவன் சிந்தித்திருக்கக்கூடும். அதற்கேற்பப் புராணங்களும் உபநிடதங்களும் அவனுக்குத் தூண்டுகோலாக விளங்கியுள்ளன; இந்த நோக்கில் சில செய்திகள் மனங்கொள்ளத் தக்கவையாகவுள்ளன.

''சரப மந்திரங்கள் சத்துருக்களை அழிப்பதில் ஒப்புயர்வற்றனவாக உலக வழக்கத்தில் கூறப்படினும், சாந்தி, வசீகரணம், ஸ்தம்பனம், வித்வேஷணம், உச்சாடனம், மாரணம் என்ற சத்து ஜயத்திற்குத் தேவையான ஷட்கர்ம விதானத்தைத் தவிரப் பிள்ளைப்பேறு, பிணிநீக்கம், பிசாசு முதலியவற்றின் நிவர்த்தி முதலிய பயன்களைக் குறித்தும் யந்திரங்களும் அபிஷேக முறைகளும் பலமுறைகளும் கூறப்படுகின்றன''[4] என்று குறிப்பிட்டுவிட்டு, அவற்றை விளக்கியும் சொல்கிறார் கோ.இராஜகோபால சாஸ்திரி; விவரங்களுக்கு அவர் கட்டுரையைக் காண்க.

---

4. திருபுவனம் ஸ்ரீகம்பஹரேசுவர சுவாமிகோயில் கும்பாபிஷேகமலர் (1963) பக்.82-83.

உத்தர காரண ஆகமம் சரபமூர்த்தியின் பேராற்றலை விளக்கி அந்தத் திருமேனியை ஆலயங்களில் அமைப்பதால், பகைவர்கள் அழிவர் என்பதையும், போரில் வெற்றியும் நாட்டில் நன்மையும் உண்டாகும் என்பதையும், வழிபடுவோரின் நோய்நொடிகள் நீங்கும் என்பதையும், விவரமாகக் குறிப்பிட்டுச் செல்லும். மிகப் பெரும் வலிமைவாய்ந்த மூர்த்தி என்பதற்கு அரண்கோலுவது போல அந்த ஆகமம், ''சரபமூர்த்திக்கு மூன்று கண்கள் உண்டென்றும், அவை சூரியன், சந்திரன், நெருப்பு ஆகியவை என்றும், அதன் நாக்கு நிலத்தடியில் மறைந்திருக்கும் பாதவாலைம் எனப்படும் அக்கினி என்றும், அதன் இறக்கைகளைக் காளி துர்க்கை என்றும், நகங்கள் இந்திரன் என்றும், வயிறு காலாக்கினி என்றும், அதன் தொடைகள் காலனும் மிருத்யுமாக விளங்குகின்றன என்றும், சரபமூர்த்தியின் வலிமை வாயுவை ஒத்தது என்றும்'' மிகச் சிறப்பாகக் கூறிச் செல்வதையும் காண்க.

எப்படியோ போராற்றலும் வெற்றியும் கிட்டுவதற்குச் சோழமன்னர்கள் சரபமூர்த்தி வழிபாட்டில் தம் ஈடுபாட்டினைக் கொண்டு விளங்கினர் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. (அப்பர் தேவாரம்)

With the Best Compliments from

R.V. ESWAR
Chief Executive

COSMOS ENTERPRISES

23, Chinna Thambi Street, Chennai - 600 001.
Pager : 9632-709791 (Chennai)

Manufacturers of
Plastic Files / Folders, Conference Files, Seminor Folders, Conference Bags, Executive Bags, Travel Bags, Leather Bags, Leather Folders, Leathers wallers, Bank Fixed Deposit covers, Identity card Badges all types of gift articles and all kinds of conference materials.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்களில் சைவ சித்தாந்தத்தின் அளவைக் கொள்கை

திருப்பனந்தாள் காசித்திருமடம் காறுபாறு ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான்.

உலகில் உள்ள எப்பொருளின் உண்மையையும், நன்மையையும் அறியவேண்டுமாயின் அவற்றை அளத்தற்குரிய அளவுக் கருவிகள் வேண்டும். எனவே இறை, உயிர், தளை ஆகிய பொருள்களை அறிதற்கும், தெளிதற்கும் சில அளவுக்கருவிகள் வேண்டும்.

அவ்வளவுக் கருவிகள் காண்டல், கருதல், உரை, இன்மை, பொருட்பேறு, உவமை என அறுவகைப்படும். ஒழிபு, உண்மை, ஐதிகம், இயல்பு என்ற நான்கையும் கூட்டப் பத்தாகும்.

இவற்றில் இன்மை, இயல்பு, இரண்டும் காண்டலிலும்; பொருட்பேறு, ஒப்பு, ஒழிபு, உண்மை நான்கும் கருதலிலும்; ஐதிகம் உரையிலும் அடங்கும். எனவே காண்டல், கருதல், உரை எனும் மூன்றுமே முதன்மையுடையதாகும். இதனை அருள்நந்திசிவம்,

''அளவை காண்டல் கருதலுரை யபாவம் பொருளொப் பாறென்பர்
அளவை மேலு மொழிபுண்மை ஐதி கத்தோ டியல்பெனநான்
களவை காண்ப ரவையிற்றின் மேலு மறைவ ரவையெல்லாம்
அளவை காண்டல் கருதலுரை யென்றிம் மூன்றி னடங்கிடுமே''

என்பார்.

ஐயமும் திரிபும் இன்றி ஒருபொருளை நேராகக் காணுதல் காண்டல் ஆகும். நேராகக் காண முடியாத பொருளை அதனைவிட்டு நீங்காது அதன் உடன் உறைகின்ற பொருளைக் கொண்டு அறிவது கருதலாகும். இவ்வாறு அறிய முடியாதபொருளை அருளாளர்களின் அனுபவக் கூற்றைக்கொண்டு அறிவது உரையாகும். இதனை அருள்நந்திசிவம்,

''மாசறு காட்சி யையந் திரிபின்றி விகற்ப முன்னா
ஆசற வறிவ தாகு மனுமான மவினா பாவம்
பேசுறு மேதுக் கொண்டு மறைபொருள் பெறுவ தாகுங்
காசறு முரையிம் மானத் தடங்கிடாப் பொருளைக் காட்டும்''

என்பார். குமரகுருபரரும்,

''ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளந்து''
''அளவில் காட்சியை யையமின் றுணர்த்தலிற்''
''அளவையி னளந்துகொண் டுத்தியிற் றெளிந்து''
''அளவா நின்னிலை யளத்தும் போலும்''

எனக்காட்டுவார்.

காண்டல் அளவை

இது வேற்றுமையில்லாதது, வேற்றுமை உடையது என்று இரு வகைப்படும். இவற்றில் ஒரு பொருள் உண்டு என்ற அளவில் அறிவது வேற்றுமையில்லாதது. அப்பொருளுடன் அதன்பெயர், இனம், பண்பு, தொழில் முதலியவைகளை அறிவது வேற்றுமை உடையது. இதனை ஐயம் திரிபு இன்றிச் காண்டல் வேண்டும். இதுவோ அதுவோ என ஐயப்படுவது ஐயம்; ஒன்றை மற்றொன்றாக அறிவது திரிபு இக்காண்டல் மேலும் பொறி, மனம், தன்வேதனை, யோகம் என நான்காகும்.

உடல் கருவிகளைப் பொருத்தி அறிவது பொறிக்காட்சியாகும். காணும் பொருளை மனத்தால் தெளிவது மானதக் காட்சியாகும். அதன்வழி இன்ப துன்ப அனுபவங்களை அறியும் அறிவ

தன்வேதனைக் காட்சியாகும். மூவிடத்தும் முக்காலத்தும் உள்ள பொருளைத் தன் யோக நெறியில் நின்று அறிவது யோகக் காட்சியாகும்.

பொறிக்காட்சி

அளப்பவனாகிய உயிரோடு கூடி அறிவு மனத்தால் செலுத்தப்பெறும் கண் முதலிய அறி கருவிகளையும், தீ முதலிய பூதங்களையும், உருவம் முதலிய தன்மாத்திரைகளையும் பொருத்தி ஐயம், திரிபு முதலிய குற்றம் தீரப் பெயர், இனம் என்ற பாகுபாடின்றிப் பொதுவாக அறியும் அறிவு, பொறிவழி அறியும் அறிவாகும். இதனை அருள்நந்திசிவம்,

''உயிரி னோ டுணர்வு வாயி லொளியுரு வாதி பற்றிச்
செயிரொடு விகற்ப மின்றித் தெரிவதிந் திரியக் காட்சி''

என்பார். குமரகுருபரரும்,

''அளவா நின்னிலை யளத்தும் போலும்
அறிவு மாயுளுங் குறையக் குறையாத
பையுணோ யெண்ணில படைத்துப்
பொய்யுடல் சுமக்கும் புன்மை யோமே''

என்பார்.

மானதக்காட்சி

சுவை முதலிய புலன்களை அறிந்த அறிவு புத்தியின்கண் ஐயம் திரிபற நிலைபெற்ற நிலையில் அதன் பெயர், இனம் முதலியன அறியப்பட்டு இனந்தெரிந்து உணரும் உணர்வு மனவழிவரும் அறிவாகும். இதனை அருள்நந்திசிவம்,

''அயர்விலிந் திரிய ஞான மைம்புலன் சார்ந்து யிர்க்கண்
மயர்வற வந்த ஞான மானதக் காண்ட லாமே''

என்பார். இதனைக் குமரகுருபரரும்,

''மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார் தம்முளே
காண்பதே காட்சி''

எனக் காட்டுவர்.

தன்வேதனைக் காட்சி

அராகம் முதலிய ஐந்து தத்துவங்களாலும் செலுத்தப்பட்டுத் துய்க்கப்பெறும் இன்பதுன்பங்கள் உயிரது அறிவிற்குப் புலனாதல் தன்வேதனைக் காட்சியாகும். இதனை அருள்நந்திசிவம்,

''அருந்தின்பத் துன்ப முள்ளத் தறிவினுக் கராக மாதி
தருந்தன்வே தனையாங் காட்சி''

என்று விளக்குகிறார். இதனைக் குமரகுருபரரும்,

''சலியாது முயன்ற தவப்பெருந் தொண்டர்
பலநா ளோதிக் கலைமுற்று நிரம்பி
அளவையி னளந்துகொண் டுத்தியிற் றெளிந்து
செம்பொரு ளிதுவெனத் தேறி யம்பலத்
தாரா வன்பினோ டகனமர்ந் திறைஞ்சிப்
பேரா வியற்கை பெற்றனர்''

என்று குறிப்பிடுகின்றார். ஈண்டு சலியாது என்றதனால் தன் உடற்கேற்படும் ஒவ்வொரு வேதனையையும் பொருட்படுத்தாது மனம் சலியாது பலநாள் உணர்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

யோகக்காட்சி

மனங்களின் ஆற்றல்களை இயமம் நியமம் முதலிய எண்வகை யோக உறுப்புகளால் கெடுத்துத் தனித்திருந்து பொருந்திய மூவிடத்தும், முக்காலத்தும் இயல்பாக விரிந்த எல்லாப் பொருள்களையும் உணர்கின்ற அறிவு நல்ல யோகக் காட்சியாகும். இதனை அருள்நந்திசிவம்,

''... ... ... சமாதியான் மலங்கள் வாட்டிப்
பொருந்திய தேச கால வியல்பகல் பொருள்க ளெல்லாம்
இருந்துணர் கின்ற ஞானமி யோகநற் காண்ட லாமே''

என்பார். இக்கருத்தினைக் குமரகுருபரரும்,

''மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூ ங்குவார் தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்'' [14]

என்று விளக்குகின்றார்.

கருதல் அளவை

கருதல் தன்பொருட்டும், பிறர்பொருட்டும் என இருவகைப்படும். பக்கம், சபக்கம், விபக்கம் எனும் மூன்றானும் இயல்பு, காரியம், அநுபலத்தி எனும் மூன்று ஏதுக்களில் ஒன்றாலும்,தன் அளவில் உணரும் உணர்ச்சி தன் பொருட்டுக் கருதலாம். இவ்வேதுக்களால் பிறர் அறியுமாறு செய்தல் பிறர்பொருட்டுக் கருதலாம். கருத்தினால் துணியப்படும் பொருளிருக்குமிடம் பக்கம் எனவும், அதற்கு எடுத்துக்காட்டாகக் காட்சியினால் துணிந்த பொருளிருக்குமிடம் சபக்கம் எனவும், துணிந்த பொருள் இல்லாத இடம் விபக்கம் எனவும் கூறுவர்.

மா என்னும் சொல் அச்சொல்லின் இயல்பாற்றலால் மாமரத்தை உணர்த்துவது இயல்பு ஏதுவாகும். புகையாகிய காரியம் அதற்கு ஏதுவாய நெருப்பை உணர்த்துதல் காரிய ஏதுவாகும். குளிர் இன்மையாகிய காரியம் பனி இன்மையாகிய காரண இன்மையை உணர்த்தல் அநுபலத்தி ஏதுவாகும்.

மற்றும் கருதலளவையில் பூர்வ காட்சி அனுமானம், கருதல் அனுமானம், உரை அனுமானம் என்பனவும் அடங்கும். நாற்றமாகிய ஏதுவைக்கொண்டு பூவை அறிவது போல்வது பூர்வ காட்சி அனுமானம். இதுபொழுது துய்க்கும் இன்பதுன்பங்களுக்கு முற்பிறவியில் செய்த இன்பதுன்பங்களே காரணம் என்று கூறுவதே உரை அனுமானம் ஆகும். இதனை அருள்நந்திசிவம்,

''பக்க முன்றின் முன்றேது வுடைய பொருளைப் பார்த்துணரத்
தக்க ஞானந் தன்பொருட்டாம் பிறர்தம் பொருட்டா மனுமானந்
தொக்க விவற்றாற் பிறர்தெளியச் சொல்ல லாகு மச்சொல்லு
மிக்க வன்னு வயத்தினொடு வெதிரே கச்சொல் லெனவிரண்டாம்'' [15]

என்பார். இக்கருதல் அளவையைக் குமரகுருபரர்,

''மெய்கண்ட தெய்வமித் தெய்வமல் லாற்புவனியில்
வேறில்லை யென்றுணர்தியாற்'' [16]

என்று சுருக்கிக் காட்டுவார்.

உரையளவை

இது தந்திர, மந்திர, உபதேசம் என மூவகைப்படும். மறை, ஆகமங்களில் கூறப்படும் கரும காண்டத்தில் சொல்லப்படும் செயற்பாடுகளை முன்பின் மாறுபாடின்றிக் கொண்டொழுகுதல் தந்திர

உரையளவையாகும். உபாசனா காண்டத்தில் சொல்லப்படும் மன அடக்கம் கொண்டு மந்திரங்களை எண்ணித் தெளிவது மந்திர உரையளவையாகும். ஞான காண்டத்தில் சொல்லப்படும் இறை, உயிர், தளை ஆகியவற்றின் இயல்பினைத் தான் உணருமாறும், பிறருக்கு உணர்த்துமாறும் தெரிவது உபதேச உரையளவையாகும். இவற்றை அருள்நந்திசிவம்,

''அனாதியே யமல னாய வறிவனூ லாக மந்தான்
பினாதிமா றின்றிப் பேணல் தந்திர மந்தி ரங்கண்
மனாதிக ளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை யாகுந்
தனாதியி றிலாதான் தன்மை யுணர்த்துத லுபதே சந்தான்''

என்பார். இவ்வுரையளவையைக் குமரகுருபரர்,

''உளவயி னுளவள வுணர்வதை யலதுரை
அளவையி னளவிடு மளவினையலை''

என்றும்,

''இதுவென வருமையி னெழுதரு மொழிகளும்
அதுவல வெனுமெனி னெவருனை யறிபவர்''

என்றும்,

''ஒழியாத புவனத் துயிர்க்குயிர தாய்நிற்ப
தொருதெய்வ முண்டெனவெடுத்
துரையாலுணர்த்துவதை யொழியவெவ ரெவர்கட்கும்
ஊன்கண் ணுளக்கண்ணதாம்''

என்றும் காட்டுவார்.

இவ்வளவைகள் இறை, உயிர், தளைகளை அறியப் பயன்படுகின்றன. இவ்வளவைகளின் மூலம் இறைத் தன்மையை உணர முடியுமே தவிர இறைவனைக் காண முடியாது எனக் குமரகுருபரர்,

''இலதென வுளதென விலதுள தெனுமவை
அலதென வளவிட வரியதொ ரளவினை''

எனவும்,

''தளவையி னளவா வானந்த மாக்கடல்''

எனவும்,

''அறிவு ளறிவை யறியு மவரு மறிய வரிய பிரமமே''

எனவும்,

''இலதெனி னுளதுள தெனினில திலதுள
தலதெனி னினதுரு வறிபவரெவர்''

எனவும்,

''உளதென விலதென வொருவரொ ரளவையின்
அளவினி லளவிட லரியதொ ருருவினை''

எனவும்,

''அறிபவ ரறிவினு ளறிவுகொ டறிவுற
நெறியல தொருவரு மறிவரு நிலைமையை''

எனவும்,

''அலகி றந்தனை தலைசி றந்தனை
அருள்சு ரந்தனை இருடு ரந்தனை''

எனவும் பாடல்கள் பலவற்றின்வழி காட்டுவார். இறைத்தன்மை அளவைக்கு அளவாகி நிற்கும் பெருங்கருணையைச் சிவப்பிரகாசம்,

''புகல் அளவைக்களராகி''

எனக் காட்டும். இவ்வளவைகள் மட்டுமல்லாது அளவைகள் மேலும் பலவகையாக விரிதலை,

''பக்கப் போலி நான்கும், ஏதுப் போலி இருபத்தொன்றும்,
உவமைப்போலி பதினெட்டும், தோல்வித்தானம் இருபத்திரண்டும்,
ஆகக் கூறப்பெறும் அறுபத்தைந்து அளவைகளும் வாதம்
நிகழ்த்தும்பொழுது எடுத்துக் கூறப்பெறும் அளவைகளாம்.
இவற்றின் இலக்கணங்களை அந்நூ ல்வழி யறிக''

என்ற கூற்றால் அறியமுடிகிறது.

With the best compliments from

ஸ்ரீ கந்தமகான் துணை

பூமி வாங்க விற்க

அணுகவும்

ஸ்ரீ கந்தன் ரியல் எஸ்டேட்,

56-பி, பூளைக்காடு,
அரசூர் (P.O), பல்லடம் (TK)
கோயமுத்தூர் - 641407
போன் : 887668, 888074 (0422)

சிவபெருமான் குணங்களை உணர்த்தும் பொருள்கள்

சூலம்	-	முக்குணம்
பரசு	-	சத்தியம் (உண்மை)
கட்கம் (வாள்)	-	பேராண்மை
வஜ்ரம்	-	(முழுமை) பிரிக்க வொண்ணாதது
அபயம்	-	பேரருளுடைமை
நாகம்	-	பாசங்களினின்று நீங்கிய தன்மை
பாசம்	-	மாயை வடிவம்
அங்குசம்	-	நிறமின்மை
மணி	-	நாதமயம் (ஒலி வடிவு)
அக்கினி	-	ஒடுக்கம்

With the best compliments from

Sri Sarada Niketan College of Science for Women

(Sri Saradapuri, Karur - 639 005. Phone : 63301)

Notification

1. UNDER GRADUATE COURSES OFFERED

1. Computer Science
2. Microbiology
3. Industrial Electronics
4. Physics
5. Chemistry
6. Mathematics
7. Home Science
8. B.Com
9. B.B.A.,
10. B.A. (Tamil)

2. POST GRADUATE COURSES OFFERED

1. M.C.A., (Master of Computer Application)
2. M.Com.,
3. P.G. Diploma in Textile Processing

   (Eligibility : Bachelor degree in Chemistry / Applied Chemistry / Home Science / Textiles and Clothing / Any Bachelor Degree with Chemistry as allied subject.)

3. CERTIFICATE COURSES OFFERED

1. Pre-Primary Teacher Training
2. Functional English

RESIDENTIAL FACILITIES ARE AVAILABLE

SWAMI ATHMANANDA, SECRETARY

திருநாவுக்கரசர் நந்தவன மடாலயம் - தலவரலாறு

தவத்திரு முத்து சிவராமசாமி அடிகள்

கொங்கு நாட்டில் கோவையை அடுத்த பல்லடம் வட்டம் தென்சேரிமலையில் பாண்டியர் காலம் தொட்டு மந்திராசல மூர்த்தி என்ற திருப்பெயரில் சண்முகர் ஆறுமுகமும் பன்னிரு கரமும் இடது கரத்தில் சேவலையே கொண்டும் வள்ளி தெய்வானையுடன் அருள் பாலித்துக் கொண்டுள்ளார்.

இம்மலைமேல் உள்ள சுனை நீர் (சித்த சுவாதீன மக்களை) சிலநாள் குளித்து முருகனைத் தெரிசிக்கத் தெளிவு அடைந்து சுகம் பெறுவர். மலைமேலேயே கணபதி, ஈஸ்வரர், அம்பாள், விஷ்ணு, உற்சவ மூர்த்திகளுக்கு ஆலயம் உள்ளது. நான்கு காலப்பூசைகளும், தைப்பூசம் இரத உற்சவமும், சஷ்டியன்று சூரசம்உறாரமும், கார்த்திகை ஜோதியும் சிறப்புற நடைபெறும், மடாலய வரலாறு அருணகிரிநாதர் திருப்புகழ் பாடல் பெற்ற தலம். இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் மேற்படி மலைக்கு அருகில் வடமேற்குத் திசையில் சைவர் திருத்தொண்டர் மாரிமுத்துப் பரதேசி என்னும் சிறந்த அடியார் அவர்களால் திருநாவுக்கரசு என்னும் நந்தவனமடம் என்னும் திருமடம் கட்டப்பட்டு நால்வர் குருபூசைகளும் மேற்படிக் குரு முதல்வர் மாரிமுத்து சுவாமிகள் குருபூசையும் தண்ணீர்ப் பந்தல், அன்னதானம் ஆகிய திருப்பணிகளும் இன்றும் சிறப்புற நடந்து வருகிறது.

இளையான் குடிமாறநாயனார் அவர்களின் இல்லற தர்ம தத்துவத்தின் சிறப்பின் முடிவு.

முளையை வறுத்தும்
இல்லத்தை அறுத்தும்
பாசத்தைப் பறித்தும் மும்மலங்களை நீக்கி
முக்திப்பேறு அடைந்தது இல்லற தர்ம தத்துவத்தை காட்டும்.

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
    உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
    மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
    பிரானாய் அடிஎன்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
    திருவையாறு அகலாத செம்பொற் சோதீ.

(அப்பர் தேவாரம்)

திருமுதுகுன்றம் அருள்மிகு குமாரதேவ சுவாமிகள் ஆதீன வரலாற்றுச் சுருக்கம்

சீர்வளர்சீர் **கல்யாணசுந்தர சிவப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள்,** விருத்தாசலம்.

தமிழ் வளர்ச்சிக்குக் காலங்காலமாகத் திருமடங்கள் தொண்டாற்றி வந்திருக்கின்றன. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப்புற்று விளங்கும் தலங்களில் சிறந்த ஒன்று திருமுதுகுன்றமாகும். இங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தி பழமலைநாதர்; அம்மையார் பெரியநாயகி.

பழமலை நாதரால் ஆட்கொள்ளப்பட்டுப் பெரியநாயகியால் ஞானப்பால் பெற்றவர் அருள்மிகு குமார தேவராகும்.

மெய்கண்ட சந்தானமரபில் வந்தவர்களுள் நமச்சிவாய தேசிகரின் சீடராகிய சிவப்பிரகாச தேசிகரால் தோற்றுவிக்கப்பட்ட வீரசைவத்தின் மடங்கள் பல. அவற்றுள் ஒன்றுதான் திருமுதுகுன்றில் உள்ள அருள்மிகு குமாரதேவர் மடமாகும். இதன் கீழ் 16 மடங்கள் உள்ளன.

குமாரதேவர் கன்னடநாட்டு அரசர். அரசாட்சியின்போது சிவனால் ஈர்க்கப்பட்டுக் கோவை பேரூர் சாந்தலிங்க சுவாமிகளால் தீட்சை பெற்றவர். குருவின் ஆணைப்படித் திருமுதுகுன்றம் புறப்பட்டுவர வழியில் சின்ன சேலத்தை அடுத்துள்ள காட்டில் பழமலைநாதரால் ஆட்கொள்ளப்பட்டார். பின் திருமுதுகுன்றம் வந்து கோயிலின் கிழக்குப் பக்கம் உள்ள அரசமரத்தடியில் பசியால் படுத்திருந்தார். இதைக் கண்ட தாய் பெரியநாயகி ஒரு பெண் வடிவில் வந்து தலையைத் தன் மடிமேல் வைத்து ஞானப்பால் ஊட்டினார். கண் விழித்த அவர் நீ யார் எனக் கேட்க, குமாரதேவா! நான்தான் உன் தாய் பெரியநாயகி என்று அம்பாள் கூறினாள். அன்று முதல் குமாரதேவர் என்ற நாமத்தோடு கோயிலிலே தங்கிப் பல அற்புதங்கள் செய்து வந்தார்.

அரசமரத்தில் தங்கியிருந்த ஜடாமுனிக்குச் சாப விடுதலை கொடுத்தார். இல்லறத்தானுக்கு அருளும் கொடுத்தார். தொழுநோயாளிக்கு நோய் நீக்கமும் செய்தார். கரப்பிச்சையில் இட்ட வேக வைத்த மீனை உயிர் பெறச் செய்தார். திருவாரூரில் ஓடாத தேரை ஓடச் செய்தார். மாந்திரீகனின் மயக்கம் நீக்கி அருள் கொடுத்தார். இவ்வாறு பல அற்புதங்களைச் செய்த குமார தேவர் 16 சாத்திர நூற்களை (மகாராஜா துறவு, சுத்த சாதகம், விஞ்ஞான சாரம், அத்துவித உண்மை, பிரமானுபூதி விளக்கம், ஞானவம்மானை, தசாவத்தைக் கட்டளைச் சுருக்கம், தசகாரியக் கட்டளை, சகசநிட்டை, உபதேச சித்தாந்தக் கட்டளை, பிரம சித்தியகவல், சிவதரிசன அகவல், ஆகம நெறியகவல், வேதநெறி அகவல், பிரமானுபவ அகவல், சிவ சமரச வாத அகவல்)யும், பெரியநாயகியம்மன் பதிகத்தையும் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

இவ்வாறு பல அற்புதங்களைச் செய்துவந்த குமாரதேவர் திருமுதுகுன்றில் பல இடங்களில் தங்கி இருந்துள்ளார். அவ்வாறு தங்கிய இடங்களில் ஒன்றுதான் இப்பொழுதுள்ள மடத்தின் குகையாகும். அதில் தங்கியிருக்கும் போது ஒரு புரட்டாசி மாதம் பூர்வ பட்சம் சதுர்த்தசி திதி கூடிய பூர நட்சத்திரம் கூடிய நந்நாளில் இறைவனோடு சோதியில் கலந்தார். அந்த நன்னாளைக் குருபூசை நாளாக இந்த மடத்திலுள்ள எல்லாச் சந்நிதானங்களும் சிறப்புடன் நடத்தி வந்திருக்கின்றனர்.

இப்பொழுது பீடத்தில் வீற்றிருக்கும் 23 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் கல்யாண சுந்தர சிவப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள் தங்களுடைய 26 ஆண்டுக் காலத்தில் இந்த ஆதீனத்தின் கீழ்

உள்ள பல மடங்களிலுள்ள குரு மூர்த்தங்களுக்கு மேல் விமானம் அமைத்து நன்னீராட்டுவிழா நடத்தியுள்ளார்கள்.

அருள்மிகு குமாரதேவர் மடத்தின் முன் வளைவு ஒன்று 25 ஆவது ஆண்டு நினைவாகக் கட்டியுள்ளார்கள்.

இந்தக் கால கட்டத்தில் ஆதீனத்தில் முன் உள்ள குருமகா சந்தானங்களும் பெரியவர்களும் இயற்றிய 11 நூற்களைப் பதிப்பித்து இலக்கியத் தொண்டும் ஆற்றிவருகிறார்கள்.

அருள்மிகு குமாரதேவர் திருமடத்தில் திருப்பணி செய்யத் திட்டமிட்டுள்ளார்கள்.

இந்த மடத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு குமாரதேவருக்கு நான்கு கால பூசை நடைபெற்று வருகிறது. ஆன்மீக மெய்யன்பர்கள் திருமடத்திற்கு வந்து குருவருளையும் திருவருளையும் பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.

பொன்னும் மெய்ப்பொரு ளும் தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாம்தவிரப் பணிப் பானை
இன்ன தன்மையன் என்றுஅறி வொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும்வயற் பழனத்துஅணி
ஆரூ ரானை மறக்கலு மாமே.

(சுந்தரர் தேவாரம்)

ஸ்ரீ மாணிக்கவாசகத் திருமடாலயம் கூனம்பட்டி ஆதீன வரலாறு

சீர்வளர்சீர் **இராசலிங்க மாணிக்கவாசக சுவாமிகள்**

சைவ சமயாச்சாரியர், நால்வரில் ஞானமே வடிவமாக விளங்கியவர் வாதவூர் வள்ளலாகிய ஸ்ரீ மாணிக்கவாசகர். மதுரையில் அரிமர்த்தன பாண்டியனிடம் முதலமைச்சராக விளங்கிய போதும் தாமரை இலைத் தண்ணீர் போல உலக வாழ்வில் பற்றற்ற நிலையில் திகழ்ந்த மணிவாசகர் அற்புதங்கள் யாவரும் அறிந்ததே.

மதுரையில் இறைவனாலே அளிக்கப் பெற்ற ஆன்மார்த்த பூசையினை அன்றாடம் திருக்கோயிலில் வழுவாது செய்தருளுவார் வாதவூரர். திருச்சி மாவட்டம், குளித்தலை அருகே உள்ள சிவாய மலை எனும் அரிய தலத்தில் தலைமை அர்ச்சகராக முப்போதும் திருமேனி தீண்டிப் பூசிக்கும் மாணிக்க பண்டிதர் என்பவர் தலயாத்திரை புறப்பட்டவர் மதுரை வந்தபோது மணிவாசகரைக் கண்டு அவரால் ஈர்க்கப்பட்டுச் சீடரானார். சில காலம் கழிந்த பின் வாதவூர்ப் பெருமான் இறைவன் திருவருட் பேறு பெறும் நிமித்தம் தில்லை புறப்படும் போது மாணிக்க பண்டிதரும் உடன் வருவதாக வேண்டிய, மணிவாசகர் அவரைத் தடுத்துத் தமது ஆன்மார்த்த பூஜையை அவரிடம் கொடுத்துக் கொங்கு நாடு சென்று சைவ மடாலயம் அமைத்துச் சைவம் பரவிடச் செய்யுமாறு கட்டளையிட்டருளினார்.

அவ்வண்ணம் மாணிக்க பண்டிதர் கொங்கு நாடு வந்து திருமடம் அமைத்துச் சைவம் வளர்த்தார். அவ்வாறு அமையப் பெற்றதே ''ஸ்ரீ மாணிக்கவாசகர் திருமடாலயமாகும். அதன் பின் வந்த சந்நிதானங்கள் பல அற்புதங்கள் நிகழ்த்திய சிறப்புடைய இடமாகும் கூனம்பட்டி ஆதீனம், கொங்கு நாட்டிலே ஈரோடு மாவட்டத்திலே அமைந்துள்ளது. அருகில் உள்ள விஜயமங்கலத்தை ஆண்ட சமண மன்னனின் கூனை நீக்கிய பெருமையால் கூனம்பட்டி எனும் பெயர் பெற்றது. சைவமும் தமிழும் வளர்க்கும் பீடம். இன்று திருமடத்தின் மகா சந்நிதானமாக விளங்கி அருளாட்சி செய்து வருவது 56ஆவது பட்டமாகிய ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகள். பற்பல இடங்கள் சென்று ஆன்மீகம் வளர்ப்பவர்கள். ஞாயிறு, வியாழன் இரு நாட்களும் திருமடத்திற்கு வரும் அன்பர்களின் உடற் பிணி, உள்ளப் பிணி, தொழில் சிரமம் ஆகியவை நீங்குவது கண் கூடு.

திருமடத்தில் வேத சிவாகம பாடசாலையும், பள்ளியும் திருமுறை வகுப்புக்களும் நடந்து வருகின்றன. சமயத்துக்கு மட்டுமின்றிச் சமுதாயத்துக்கும் பணியாற்றுகின்ற மேலான சைவ மடாலயம் கூனம்பட்டி ஸ்ரீ மாணிக்க வாசகர் திருமடாலயம் ஆகும்.

ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமாள் மலரடி வாழ்க!

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துஉன் விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப்போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்என்னைக் கண்டுகொள்ளே.

(திருவாசகம்)

"தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை"

பேராசிரியர் **கு. ஆளுடையபிள்ளை,**
துணைவேந்தர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 21.

முன்னுரை

'சைவ சமயம்' மிக மிகத் தொன்மையானது என்பது வரலாற்றறிஞர் கூறும் உண்மை. தமிழகத்தில், சங்க காலத்திற்கு முன்பிருந்தே 'சைவம்' பெருமை பெற்று வருவது. பழம் பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும், பின்னர்த் தோன்றிய இலக்கியங்களிலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளமை யாவரும் அறிவர். இத்தகு ஏற்றமிகு 'சைவம்', வேற்றவர் வருகையாலும், சைவசமயத்தவர்களே தம் சமயத்தின்பால் ஆழ்ந்த பற்றுக் கொள்ளாமையாலும், தமிழ்நாட்டில் புறச் சமயங்கள் மேலோங்கலாயின! அத்தகு சூழ்நிலையில், எம்பெருமான் அருளால், சமய குரவர்கள் அவதரித்து, மீண்டும் சைவத்திற்குப் புத்துயிரளித்தனர். சைவசமய மறுமலர்ச்சியில் மங்கையர்களின் பங்கும் பெரிது எனலாம். அத்தகையோருள் ஒருவர், 'தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை' எனப் போற்றப்படும் மங்கையர்க்கரசியாவர்!

முப்பெரும் பாவையர்

சைவ சமயத்தில் மூன்று பெண்மணிகளுக்குத் தனிச் சிறப்பு உண்டு. அவர்கள் காரைக் காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார். இவர்களில் காலத்தால் முற்பட்டவர் காரைக்காலம்மையார். ஏனைய இருவரும், ஏறக்குறையச் சமகாலத்தவர் எனலாம். இன்பமும் துன்பமும் கலந்ததே வாழ்க்கை என்பர். ஆனால், சிலரது வாழ்வு முழுவதும் இன்பமயமாக இருப்பதும், சிலரது வாழ்வு துன்பமயமாக இருப்பதும் உலகியலில் காணப்படக்கூடிய உண்மை. காரைக் காலம்மையார் வாழ்வில், முற்பகுதி இன்பமுடையது; பிற்பகுதி வேறுபட்டது. திலகவதியார் வாழ்வு முழுவதுமே துன்பமுடையது! மங்கையர்க்கரசியார் வாழ்வோ - அரச வாழ்வு! கணவனோடு சில காலம் வாழக் கொடுத்து வைத்தவர் - காரைக்காலம்மையார்; கணவனேயின்றிக் காலங்கழித்தவர் - திலகவதியார். கணவன், புறச்சமயம் சார்ந்தமையால் மனம் வருந்தி, அவனைத் திருத்தி நன்னெறிக்குக் கொணர்ந்தவர் மங்கையர்க்கரசியார். இம்மூவரையும் 'தெய்வப் பாவையர்' எனக் கூறுவதும் பொருந்தும்.

மங்கையர்க்கரசியாரின் மாண்பு

மங்கையர்க்கரசியார், சோழப் பேரரசரின் அருமந்த மகளார்; மதுரையையாண்ட 'கூன்பாண்டியன்' எனப்படும் 'நின்றசீர் நெடுமாறனி'ன் வாழ்க்கைத் துணைவியார்.

"தடுமாறும் நெறியதனைத் தவமென்று தம்உடலை
அடுமாறு செய்தொழுகும் அமண்வலையில் அகப்பட்ட" (பெ.புரா.நின்றசீர் : 1:1-2)

தன் கணவன், மீண்டும் சைவசமயத்திற்கு வருதற் பொருட்டு அம்மையார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அளப்பரியன. அம்மையாரின் கருத்திற்கு ஆதரவாக நின்றவர், அமைச்சர் குலச்சிறையார்.

ஞானசம்பந்தப் பெருமான், திருமறைக் காட்டில் எழுந்தருளியிருந்த நேரம். அஃதறிந்த அம்மையாரும் அமைச்சரும், பாண்டி நாட்டு நிலைமையைச் சம்பந்தரிடம் நேரில் கூறற் பொருட்டு ஏவலர் சிலரை அனுப்பினர். அவர்களும் அங்குச் சென்று உண்மை விளம்பினர். சம்பந்தரும், பாண்டி

நாட்டுக்கு எழுந்தருளத் திருவுளம் கொண்டார். உடனிருந்த திருநாவுக்கரசர், ''ஞானச் செல்வரே! சமணர்கள் வஞ்சனையால் புகழ் பெற்றவர்கள்; அன்றியும் இப்போது நாளும் கோளும் ஏற்புடையனவாக இல்லை!'' என்று கூறினர். ஆனால் சம்பந்தரோ, ''எம்பெருமான் திருவருளால் எதுவும் நேராது'' என்று எண்ணியவராய், 'வேயுறு தோளிபங்கன்' எனும் திருப்பதிகம் பாடி, மதுரைக்கு எழுந்தருளினார். அவரைக் குலச்சிறையார் எதிர்கொண்டு பணிந்து வரவேற்றார். ஆலவாயண்ணலின் திருக்கோயிற் கோபுரத்தைக் கண்ணுற்றார் ஞானசம்பந்தர்; பக்தி வெள்ளம் கண்களில் பெருகிற்று: திருவாய் மலர்ந்து திருப்பதிகம் பாடினார்.

''மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே!'' *(தேவாரம் 3 : 120)*

என்பது சம்பந்தர் திருவாக்கு. மூன்று வயதிலேயே ஞானப்பால் உண்டு, இறைக்காட்சி கண்டு இன்புற்ற சிவஞானச் செல்வராம் திருஞானசம்பந்தரது திருவாக்கில் - தேவாரத் திருப்பதிகத்தில், மங்கையர்க்கரசியாரின் திருப்பெயர் இடம் பெற்றது எனின், அம்மையாரின் பெருமையை என்னென்பது?

நாவுக்கரசர் கூறியதும் பொய்யாகவில்லை; சம்பந்தர் கூறியதும் தவறாகவில்லை. சம்பந்தப் பெருமான் தங்கியிருந்த திருமடத்துக்கு அமணர்கள் நெருப்பிட்டனர். பாண்டிய மன்னனின் ஆதரவு இல்லாமல் அத்தகு கொடுஞ்செயலை அவர்கள் செய்திருக்க முடியாதன்றோ? எனவே, அந் நெருப்பு, அப் பாண்டியனையே சார வேண்டும் என்று எண்ணினார் சம்பந்தர்.

''செய்ய னே! திரு ஆலவாய் மேவிய
ஐயனே! அஞ்சல் என்றருள் செய், எனைப்
பொய்ய ராம், அம ணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே!'' *(3:51)*

என்று திருவாய் மலர்ந்தார்! அவ்வளவே! பாண்டியன், கொடிய வெப்பு நோயினால் போராடலானான். அவன் இறந்துபட்டால், மங்கையர்க்கரசியாருக்கன்றோ பெருந் துன்பம். எனவேதான், 'பையவே' என்று பாடினார் எனின் சம்பந்தப் பெருமானின் கருணைத் திறத்தை என்னென்பது?

மதுரையில் நடந்த பல அற்புத நிகழ்ச்சிகளால், பாண்டிய நாட்டில், மீண்டும் சைவம் மலர்ந்தது. கூன்பாண்டியனும் மனம் திருந்திச் சைவத்திற்குத் திரும்பினான். இவ்வாறு, பாண்டியர்களுக்கு நேரவிருந்த பெரும் பழியைத் தீர்த்த பெருமைக்குரியர் மங்கையர்க்கரசியாராவர். அதனால்தான், தெய்வச் சேக்கிழார்,

''மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை!

எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே!" (பெ.புரா. மங்கை :1)

என அம்மையாரைப் போற்றுவாராயினர்.

முடிவுரை

அன்று, மங்கையர்க்கரசியாரால் 'சைவம்' மலர்ந்தது; புத்துயிர் பெற்றது. அத்தகு மங்கையர்கள் தமிழ்நாட்டில் மீண்டும் தோன்ற வேண்டும். அதற்கு இறைவன் அருள்புரிவானாகுக!

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

(திருவிசைப்பா)

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய்அகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனிஎல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

(திருப்பல்லாண்டு)

எந்தை அருளாளனின் திருவருளாக்ஞையின்
துணை கொண்டு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன

திருப்பணிகளுக்கு எப்போதுமே முடிவு என்பது இல்லை. அவை தொடர்ந்து கொண்டே இருக்கும்

அறப்பணிகள் மட்டுமல்லாமல் மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் திருமணக் கூடங்கள், ஊரக வளர்ச்சி மருத்துவமனை, சித்த மருந்தகம், கல்விக் கூடம், நூலகம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவைகளை விரிவு படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

அண்மையில் மெய்யன்பர்கள் அனைவரது உதவியினைக் கொண்டு நன் கொடையாளர் திட்டத்தின் கீழ்ப் பழைய கருவறை இருந்த இடத்தில் புதியதொரு கருவறை கருங்கல்லினால் சோழர் காலத்துக் கலைநுட்ப வேலைப்பாடுடன் ரூ. 15 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி அதற்கேற்பச் சுற்று மண்டபம், விமானம் ஆகிய திருப்பணிகள் ரூ. 27 இலட்சம் மதிப்பீட்டில் நன்கொடையாளர் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இத்திருப்பணிகள் நடைபெறத் தாங்கள் மனமுவந்து பெருமளவில் நிதியாகவோ, பொருளாகவே தந்து பாலமுருகன் திருவருளைப் பெற்றுய்ய விழைகிறோம்.

அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்

இரத்தினகிரி, கீழ்மின்னல் - 632517
வ.ஆ. அம்பேத்கர் மாவட்டம்
தமிழ்நாடு

திருக்குறளில் சைவ சித்தாந்தம்

சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான் முனைவர். **சி. அருணை வடிவேலு முதலியார்,** காஞ்சிபுரம்

தமிழில் உள்ள அளவற்ற நூல்களுள் திருக்குறள் உலகப் பொது நூலாய் விளங்குகின்றது. எனினும் அதனைப் பலர் சமண சமயத்தைக் சார்ந்ததாகச் கருதுகின்றனர். அதற்குக் காரணம் 'கொல்லாமை' - என்பதை அந்நூல் தலையாய அறமாகக் கூறுதலாகும். கொல்லாமையைச் சிறப்பித்தல் பற்றி அந்நூலைச் சமண் சமயம் சார்ந்ததாகக் கொள்ளின்,

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்'' *(திருக்குறள் 1062)*

என்னும் குறளில், உலகம் ஒருவனால் படைக்கப்பட்ட பொருளாக அந்நூல் கூறிற்று. இது சமண் சமயத்திற்கு ஏலாக் கொள்கை. 'உலகம் தோற்றமும், அழிவும் இல்லாத பொருள்' என்பது சமண் சமயக் கொள்கை.

''மூவா முதலா உலகம் ஒரு மூன்றும்''

என்பது சீவக சிந்தாமணியின் முதற்பாட்டு.

மணிமேகலைக் காப்பிய ஆசிரியர்க்கு 'திருக்குறள் புத்த நூல்' - என்பது கொள்கை.

திருக்குறளின் உரையாசிரியர்களுள் சிறந்தவராகிய பரிமேலழகர்க்கு, 'திருக்குறள் வைணவ நூல்' என்பது கருத்து.

இவைகளைச் சான்று காட்டி விளக்குதல் இங்குத் தேவையில்லை.

ஆங்கிலத்தில் தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய திரு. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள், 'திருவள்ளுவர் எம்மதத்தைச் சார்ந்தவர்' - என்பதை அவர் உடன்பட்டுக் கூறிய பொருள்பற்றித் துணிய இயலாது; 'எந்த மதக் கொள்கைக்கு அவர் மறுப்புச் சொல்லவில்லை! என்பதைப் பார்த்தே அவரது மதத்தைத் துணிதல் வேண்டும் என்றார்; அஃதே சரியான வழி. அப்படிப் பார்க்கும் பொழுது, 'திருக்குறளில் உள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளையும் அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடிய சமயம் எதுவாய் இருக்கும்? என்று பார்த்தால், அது, சைவ சமயம் ஒன்றாகத்தான் இருக்க முடியும். இதனையும் இங்கு விளக்க இடமில்லை.

காலம் சென்ற, சித்தாந்த ஞானபானு, திரு.க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், பல்லாண்டுகட்கு முன்னே ''திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே'' என்ற ஒரு நூலை எழுதினார்; அதில் எனது முன்னுரை உள்ளது.

சைவ சித்தாந்த சாத்திரங்களுள் எட்டுச் சாத்திரங்களை அருளிச் செய்த உமாபதி சிவாசாரியார் திருவள்ளுவரை,

''தெய்வப் புலமைத் திருவள்ளுவர்''

என்றும், அவர் செய்த திருக்குறளை,

''நிலைத்தமிழின் - மெய் வைத்த சொல்'' *(நெஞ்சு விடுதூது, கண்ணி 25)*

என்றும் போற்றினார்.

பதினான்கு சாத்திரங்களுள் காலத்தால் முற்பட்டவை இரண்டு. அவைகளில் ஒன்று திருக் களிற்றுப்படியார். அந்நூல் இரண்டிடங்களில் (பாட்டு 34, 40) திருக்குறளைப் பிரமாணமாக எடுத்துக் காட்டியுள்ளது.

பதினொன்றாந் திருமுறையில் உள்ள ''ஆதியுலா'' - என்னும் அருட் பிரபந்தத்தை அருளிச் செய்த சேரமான் பெருமாள் நாயனார் அப்பிரபந்தத்துள் இரண்டிடங்களில் திருக்குறள் இரண்டு பாடல்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

சைவர்கள் திருவள்ளுவரை, 'திருவள்ளுவ நாயனார்' என்றும், 'நாயனார்' என்றும் கூறுவார்கள். இவ்வாற்றால் திருக்குறள் சைவ நூலாகப் பழமையாகவே கொள்ளப்பட்டு வருதல் விளங்கும். ஆகவே, அந்நூலின்கண் சைவ சித்தாந்தம் இடம் பெற்றிருத்தல் இயல்பே. ஆயினும் அவை அனைத்தையும் இங்கு எடுத்துக் காட்டல் இயலாது.'' ஒருபானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம்'' என்னும் முறையில்தான் காட்ட இயலும்.

சிவஞான சுவாமிகள் தமது ''சோமேசர் முதுமொழி வெண்பா'' - என்னும் நூலின் முதற்பாட்டில் முதல் திருக்குறளில் சொல்லப்பட்ட ''ஆதி பகவன்'' - என்னும் பெயரில் ''ஆதி'' - என்பது ஆதி சத்தியைக் குறிக்கும். முதற் பொருளைச் 'சிவம், சக்தி' - என்றும் சத்தியை, 'பராசக்தி, ஆதிசக்தி'' - என்றும் வழங்குதல் சைவாகம வழக்கே யாதலின், ஆதி சத்தியோடு கூடிய பகவன் ஆதிபகவன்; எனவே, 'அவனை முதல்வனாக உடையது உலகம்'' - எனக் கூறியது, 'சிவனை முதலாக உடையது உலகம்' என்றே பொருள்படும் - எனக் கூறினார். ஆயினும் அதனைச் சிலர் வலிந்துரையாகக் கருதுதல் கூடும். அதனால், அதனை நான் இங்கு வலியுறுத்தவில்லை.

'ஆதி பகவன்' - என்னும் வடசொல்லைத் தமிழாக்கி, ''முதற் கடவுள்'' என வழங்கினார் பரிமேலழகர். அதில் தவறு ஏதும் இல்லை.

''ஆதி பகவன்'' - என்பது ஒருமைச் சொல். முதல் அதிகாரமாகிய ''கடவுள் வாழ்த்து'' முழுவதிலும் திருவள்ளுவர் கடவுளை ஒருமைச் சொல்லாலே கூறினமை நோக்கற்பாலது. எனவே, ''முதற் கடவுள் ஒருவனே யன்றிப் பலர் இல்லை'' - என்பது திருக்குறட் கருத்தாயிற்று.

கடவுளை 'முதற் கடவுள்' - எனச் சிறப்பித்து, அவனை, ''ஒருவன்'' என்றமையால் 'பணிக் கடவுளர் பலர் உளர்' - என்பதும், 'அவரெல்லாம் முதற் கடவுளின் ஆணை வழி நின்று ஒரே ஒரு செயலை ஆற்றி வருவர்' என்பதும் விளங்கும். இக்கருத்துச் சிவஞான சித்தியாரில்,

''உரைத்த இத் தொழில்கள் மூன்றும்
மூவருக்கு உலகம் ஓத,
வரைத்து ஒருவனுக்கே ஆக்கி
வைத்ததிங்கு என்னை யென்னின்
விரைக்கம லத்தோன் மாறும்
ஏவலால் மேவி னோர்கள்,
புரைத்ததி கார சத்தி
புண்ணியம் நண்ண லாலே'' (சூ. 1.34.)

என விளக்கப்பட்டது.

பணிக் கடவுளர் 'தெய்வம்' என்றும், 'தேவர்' என்றும் சொல்லப்படுவர். கடவுள் ஒருவனே. ''ஒருவன் என்னும் ஒருவன் காண்க'' என்பது திருவாசகம் (திருவண்டப்பகுதி).

தெய்வங்கள் பல; அல்லது தேவர்கள் பலர்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'' (திருக்குறள் 50)

என்னும் குறளில் ''தெய்வத்துள்'' என்றமையால், 'தெய்வம் பல' என்பது விளங்கும்.

''பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு'' (திருக்குறள் 58)

''செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு'' *(திருக்குறள் 86)*

என்னும் குறள்களில், ''புத்தேளிர்'' - என்றும் ''வானத்தவர்க்கு'' என்றும் பன்மையாகக் கூறியதனை நோக்குதல் வேண்டும்.

''யாதொரு தெய்வங் கொண்டீர்,
அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னார் தாம் வருவர்''(சூ.2.25)

என்னும் சிவஞான சித்திச் செய்யுள் உரையில் சிவஞான சுவாமிகள்,

''நால்வகை யோனியுள் ஒரு யோனிவாய்ப் பட்டுப் பிறப்பன யாவை, அவையெல்லாம் சீவ வர்க்கம். அவ்வாறு பிறத்தல் இல்லது யாது, அது பதிப் பொருள்'' - என உரைத்தார். புராணங்களிலும், இதிகாசங்களிலும் தேவர்கள் பூமியில் பிறந்து வாழ்ந்து இறந்தமை பரக்கக் கூறப்படும். ஆயினும் சிவன் பிறந்ததாக எங்கும் கதையில்லை. அதனால் சிவனைத் திருமுறைகள் ''பிறப்பில் பெருமான்'' - எனச் சிறப்பிக்கின்றன.

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவ னடிசேரா தார்''

என்னும் குறள், ''பிறவியாகிய பெரிய கடலைக் கடத்தற்குப் புணையாகி உதவுவது இறைவன் திருவடி ஒன்றே'' என்பதைத் திருக்குறள் நூல் உடன்பாட்டாலும், எதிர் மறையாலும் வலியுறுத்திற்று, அதில், ''இறைவன்'' - என்றது பிறப்பில்லாதவனையே யன்றிப் பிறப்புடையவனைக் குறித்தற்கு இயைபே இல்லை. ஏன்? பிறப்புடையவனது திருவடி பிறவிக் கடலைக் கடக்கத் துணை புரியுமோ!

இன்ன பல சைவ சித்தாந்தக் கருத்துக்கள் திருக்குறளை ஆழ்ந்து நோக்கினால் விளங்குவனவாம்.

பண்சுமந்த பாடற் பரிசு படைத்து அருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசன்
கண்சுமந் நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதும்காண் அம்மானாய்

(திருவாசகம்)

தமிழ் நிலைபெற்ற சைவம்

முனைவர் **அருணை பாலறாவாயன்,** தமிழ்ப் பேராசிரியர்
இலயோலா கல்லூரி, சென்னை - 34.

ஆரியர் வரவால் இந்தியாவின் மொழி, சமயம், பண்பாடு, இவை கலக்குண்ட போதிலும் தமிழ்ச் சைவம் தன் தனித்தன்மையைத் தக்க வைத்துக் கொண்டதை விளக்க முற்படுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

தமிழ் - வடமொழி

இந்திய மொழிகளுள் பழைய மொழி நம் தமிழ். வடமொழியும் இதற்கு இணையானது என்கிறார்கள். ஆரியர்கள் இந்நாட்டில் குடியேறிப் பரவியதால் அவர்கள் கொண்ட வடமொழியும் இந்திய மொழிகளில் கலந்தது. இன்று வடசொற்கள் கலவாத இந்திய மொழிகள் இல்லை. நம் தமிழ் மொழியும் இதற்கு விலக்கன்று.

ஆயினும் நம் நாட்டு மொழிகளில் தமிழ் மொழியைத் தவிரப் பிறமொழிகள் ஒன்றேனும் வடசொற்கள் கலவாமல் இயங்க முடியாது. நம் மொழி அவ்வாறின்றித் தனித்தமிழாய் நடக்கும் மேன்மையுடையது.

தமிழின் தொல்லிலக்கண நூலான தொல்காப்பியத்தில் வடசொற்கள் கலந்துள்ளன. தமிழில் வடசொற்கலப்புப் பற்றிய நூற்பாக்களும் உள்ளன. எனினும் தொல்காப்பியப் பாயிரத்தில் தமிழ் மொழியைச் 'செந்தமிழ்' எனக் குறிப்பதை நோக்கினால் தமிழின் பழைமை, செம்மை, தனித்தியங்கும் ஆற்றல் இவை தெளிவாகும். 'செந்தமிழ்' என்ற சொல்லின் அடையால் தமிழ் பிறமொழிக் கலப்பு வேண்டா மொழி என்பது விளங்குகிறது.

வேதம் - மறை

இந்தியாவில் ஆரியர்களால் தோற்றுவிக்கப்பட்ட நான்கு வேதங்கள் சிறப்பானவை எனக் கருதப்படுகின்றன. வேத ஒழுக்கமே மக்கள் வாழ்விற்குச் சிறந்தது என எடுத்துரைக்கப்படுகின்றது.

தமிழர்கள் இவ் ஆரிய வேதம் தோன்றுவதற்கு முன்பே நான்கு மறைகளைத் தம் வாழ்வியலுக்கும் அருளியலுக்கும் கொண்டிருந்தனர். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களை விளக்குவனவாய் இருந்தன. தொல்காப்பியம்,

'இன்பமும் பொருளும் அற்றும் என்றாங்கு"

எனவும் புறநானூறு,

'சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் 'போல"[2]

எனவும் இவ்வுறுதிப் பொருள்களைச் சுட்டின.

திருக்குறளும் முப்பாலில் நாற்பால் மொழியும் நூல் ஆகும். தமிழர்க்கு இந்நான்கு பொருள்களைக் காலந்தோறும் விளக்கிய நூல்களைத் தொகுத்துப் பிற்கால ஔவையார்,

தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும் - கோவை
திருவா சகமும் திரு மூலர் சொல்லும்
ஒருவா சகமென்று உணர் [3]

எனப் பாடினார். இதில் 'நான்மறை' என்பது வடமொழி வேதத்தைக் குறியாது தமிழ் நான் மறையையே குறிக்கும். ஏனெனில் ஔவையார் பாடலில் பிறநூல்கள் யாவும் தமிழ் நூல்களாதலை அறிக. இந் நான்மறைகளைச் சிவபெருமானே நால்வர்க்கு அருளிச் செய்தான் என்பது சைவக் கொள்கையாகும். திருஞானசம்பந்தர்,

''அறங்கிளரும் நால்வேதம் ஆலின்கீழ் இருந்தருளி'' [4]

''அன்றவ் ஆல்நிழல் அமர்ந்து அறவுரை நால்வர்க் கருளி'' [5]

என இதனைப் பாடியருளினார்.

தமிழரின் இந்த நான்கு மறைகளைக் கருத்தில் கொண்டே ஆரியரின் வேதங்கள் நான்காக வகுக்கப்பட்டன. முதற் காலத்தில் 'வேதம் மூன்று' எனவும் அதன் பின்பு அதர்வண வேதம் நான்காவதாக இணைக்கப்பட்டது எனவும் கூறுவர்.

தமிழரின் நான்கு மறைகள் ஒரு தொகுப்பாக இன்று நமக்குக் கிடைக்கவில்லை. அதற்குக் காலக் கோள்களும் தமிழர் எதனையும் போற்றிப் பாதுகாவாத இயல்புமே காரணங்கள். ஆயினும் அந் நான்மறைக் கருத்துக்கள் மட்டும் தமிழ் இலக்கியங்களாலும் சமயச் சான்றோர்களாலும் மக்களுக்கு அவ்வப்போது எடுத்துரைக்கப்பட்டு வந்தன; வருகின்றன.

தமிழர்க்கெனத் தனியே 'மறை' இருந்ததில்லை; வடமொழி வேதமே இந்திய நாட்டில் நிலவியது; 'வேதம்' என்ற சொல்லின் மொழிபெயர்ப்பாகவே 'மறை' என்னும் சொல்லாக்கம் தமிழில் தோன்றியது என்பர். 'வேதம்' என்ற சொல்லிற்கு 'வித்' என்பதே அடிச்சொல். ஆனால் 'மறை' என்ற சொல்லிற்கு 'மறைத்தல்' என்ற பொருள் தோன்றும். எனவே 'வேதம்', 'மறை' என்ற இரு சொற்களுக்கிடையே பொருள் வேற்றுமை தெரியலாம்.

வேதம் - சைவம்

வேத நெறியைச் சைவம் புறக்கணிக்காமல் ஏற்றுக் கொண்டது என்னவோ உண்மை. ஆனால் வேத மறுப்புச் சமயங்களான சமணம், பௌத்தம் போலக் கடுமையான எதிர்ப்பைச் சைவம் காட்டவில்லை.

'வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க [6]

'வேதப் பயனாம் சைவம்'' [7]

என வேதத்தைச் சைவம் உடன்பட்டுச் சென்ற இடங்கள் உள்ளன.

வேதத்தை உலகியல் நூலாகக் கருதிச் சில நெறி முறைகளை நிலவுலகில் நிலைநிறுத்தும் முயற்சியை வேதம் மேற்கொள்ளுவதால் அந்த அளவில் சைவம் தன் பாராட்டை வேதத்திற்குத் தெரிவித்துக் கொண்டது. அதனால்தான் 'மிகு சைவத்துறை' என்றும், 'வேதத்தின் முடிந்த பயன் சைவம்' என்றும் சேக்கிழார் கூறியருளினார். மேலும் வேதம் பொதுநூல்; ஆகமம் சிறப்புநூல் என்றும் சைவசமயம்

கொள்கிறது. உலகியலுக்கு வேதம் பொருந்தி வரலாம். ஆனால் அது அருளியலுக்கு உதவாது. அருளியலுக்கு ஆகம நெறியே உகந்தது என்பது சைவ நெறியாயிற்று. இதனைத் தெளிவாகச் சேக்கிழார்,

'உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்
நிலவு மெய்ந் நெறி சிவநெறிய தென்பதும்'[8]

எனக் கூறியருளினார். வேதம் பொது; ஆகமம் சிறப்பு என்பதைச் சைவ சித்தாந்த சாத்திரங்களும் கூறுகின்றன. சைவ நெறி ஆகம வழிப்பட்டது என்பதை ஆகம நெறியில் அமைந்த நம் நாட்டுச் சிவத்திருக் கோயில்கள் விளக்கும். வேதங்களில் எங்கும் திருக்கோயில் வழிபாடு, தெய்வத் திருவுருவங்கள், திருநீராட்டு, திருப்படையல் இவை போன்றவை கூறப்படவில்லை.

வேதம் - தெய்வங்கள்

வேதத்தில் இந்திரன், வருணன், அக்கினி போன்ற தெய்வங்கள் கூறப்படுகின்றன. அயன் அல்லது பிரமன் வேதம் படைத்தவன்; படித்தவன்; எப்போதும் வேதம் ஓதுபவன் எனப்படுகின்றான்.

இந்திரன் : வேதம் கூறும் இந்திரன் போரிற் சிறந்தவனாகவே முதற் காலங்களில் கூறப்பட்டுப் பின்பே அவன் வேளாண்மைத் தொழில் தலைவனாகச் சொல்லப்படுகின்றான்.[9] ஆரியர்கள் இந்தியாவின் தென்பகுதி - சிறப்பாகத் தமிழ் நாட்டுப் பகுதியின் உழவுத் தொழிலைக் கற்றபின்னால் செய்து கொண்ட மாற்றமே இது. எனவே வேதகால இந்திரனுக்கும் தொல்காப்பியர் கூறும் மருத நிலத் தலைவனான வேந்தனுக்கும் ஏதும் தொடர்பில்லை. தமிழ் நிலப் பகுப்புக் கூறும் தொல்காப்பியர் தமிழரின் இன்றியமையாத் தொழிலான உழவுத் தொழிலுக்கு உரிய மருத நிலத்திற்கு ஆரியர் கூறும் தெய்வத்தைத் தலைவனாகக் கூற மாட்டார். தொல்காப்பியர் கூறும் 'வருணன்' என்பது 'வருநன்' என்ற சொல்லின் திரிபு எனக் கொள்கின்றார் மகாவித்துவான். சி. அருணைவடிவேலு முதலியார். வருநன் - காற்று. நெய்தல் நில மக்களின் மரக்கல வாழ்விற்குக் காற்றே தெய்வம் என்பதுதான் பொருந்துவது என அவர் கருதுகிறார்.

தமிழில் சிறந்த தலைமை நூலான திருக்குறளில் வேதங்கூறும் இந்திரன் குறிக்கப்படுகின்றான். திருவள்ளுவர் ஐம்புல அடக்கம் இன்மைக்கு இந்திரனைச் சான்று காட்டுகின்றார்.

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி. [10]

அகலிகையை விரும்பிய இந்திரன் கௌதம முனிவரால் பெற்ற இழிசாபத்தை மாற்ற, சிவபிரானை வேண்டித் தன் உடம்பெல்லாம் கண்ணாகப் பெற்றான் என்கிறார் திருஞானசம்பந்தர்.

''முன்னொருகாலத் திந்திரன் உற்ற முனிசாபம்
பின்னொருநாளவ் விண்ணவரேத்தப் பெயர்வெய்தித்
தன்னருளாற்கண் ஆயிரம் ஈந்தோன் சார்பென்பர்'' [11]

இந்திரன் பதவி தேவர்களுக்கெல்லாம் தலைமை வகிக்கும் நிலை; இன்பம் நிறைந்த வாழ்வுடையது என்றாலும் சைவசமயச் சான்றோர்கள் அதனை வெறுத்து ஒதுக்குவதாகவே பாடல்கள் உள்ளன.

''கொள்ளேன் புரந்தான் மால் அயன் வாழ்வு''[12]

என்கிறார் மணிவாசகர். இந்திரன் எப்போதும் சிவபிரானை வணங்கிக் கொண்டிருக்கின்றான் என்பதைத் திருநாவுக்கரசர்,

''கோவாய இந்திரன் உள்ளிட்டாராகக் குமரனும்
விக்கின விநாயகன்னும்
பூவாய பீடத்துமேல யன்னும் பூமி யளந்தானும் போற்றி சைப்ப''[13]

எனப் பாடுகின்றார்.

பிரமன் : தமிழ் நாட்டில் பிரமனுக்கு எங்கும் கோயில் இல்லை என்ற செய்தி ஒன்றே தமிழர் கொண்ட வேத மறுப்பு வெளிப்படையாகின்றது.

சைவத்தில் கூறப்படும் அடிமுடி தேடிய வரலாற்றில் அடி தேடிய திருமால் 'தான் திருவடியைக் காணவில்லை' என உண்மை கூறினார் எனப்படுகின்றது. திருமால் தமிழ் நாட்டுத் தெய்வம் ஆதலின் அவர் உண்மை கூற, வேதம் ஓதும் பிரமன் 'தான் முடி கண்டேன்' எனப் பொய் கூறியதாகக் கூறப்படுவது சைவம் பிரமனை எவ்வாறு பார்க்கிறது என்பதற்குச் சான்றாகும்.

''அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர் மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேன் என்று அச்சுதன் சொல்ல
முடிகண்டேன் என்றயன் பொய்மொழிந் தானே'' [14]

பிரணவப் பொருள் கூறத் தெரியாத பிரமனைக் குமரன் குட்டிச் சிறையிலிட்டதைக் கந்தபுராணமும் காஞ்சிப்புராணமும் கூறுகின்றன.

சேக்கிழார் தம் பெரியபுராணத்துள் அங்கம் பூம்பாவை ஆக்கிய வரலாற்றில் சிவபிரான் திருவருளால் பதிகம் பாடி எலும்பைப் பெண்ணாக்கிய திருஞானசம்பந்தர் அப்பெண்ணின் அழகைத் திருவருளின் விளக்கமாகவே நோக்கி மகிழ்ந்தார் என்கிறார். அந்த இடத்தில்

''எண்ணில் ஆண் செய்தும் வேதா படைத்தவள் எழிலின் வண்ணம்
நண்ணும் நான் முகத்தாற் கண்டான்''[15]

எனப் பிரமன் தான் படைத்த திலோத்தமையின் அழகை மகள் என்ற நினைப்புவர மறந்து கண்டு களித்த குற்றம் கூறி வேதாவை விடப் புண்ணியப் பதினாறாண்டு பெற்ற புகலி வேந்தர் எவ்வளவோ உயர்ந்தவர் எனச் சிறப்பித்துப் பிரமனைச் சாடினார்.

வேதத்தில் பிள்ளைப் பேறு கருதி மகளைத் தந்தை சேரலாம் எனக் காணப்படுகிறது. இவையெல்லாம் தமிழ்ப் பண்பாட்டின் சாயலைக் கூடப் பெறாதவை என்பதற்குச் சேக்கிழார் காட்டும் மேற்கூறிய இடம் சிறந்த சான்றாகின்றது.

திருவள்ளுவரும் பிரமனைக் 'கெடுக'[16] எனக் கூறிய இடம் உள்ளதை நாம் அறிவோம்.

அக்கினி: வேதத்தில் அக்கினி ஒரு தூதுவன். தன்னிடத்தில் இடப்பெறும் உணவை உரிய தெய்வத்திடம் கொண்டு சேர்ப்பவனே அவன்.

நெருப்பை வணங்கும் ஆரியர்கள் கதிரவனை இன்றியமையாத தெய்வமாகக் கருதிய காயத்திரி மந்திரங்கள் உண்டு. காயத்திரியில் 'சூரிய காயத்திரியே' அவர்கட்குச் சிறந்தது. சைவர்கள் இதனால்

"அருக்கனில் சோதி அடைந்தோன்" [17]

"அருக்கன் ஆவான் அரன் உரு அல்லனோ" [18]

எனக் கூறிச் சிவனுக்குப் பெருமை சேர்த்தனர்.

மேலும் அக்கினியை வணங்குவதாயின் 'சிவாக்கினியாக' எண்ணியே வழிபட வேண்டும் என்ற சிவபூசா விதியும் கொண்டனர்.

வேதநெறி கூறும் கொலை வேள்வியை மறுத்துச் சைவர்கள் சிவ வேள்வியாகிய நல்வேள்வியையே வற்புறுத்தினர். திருவள்ளுவரும்,

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று[19]

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை[20]

எனக் கூறி ஆரியர் கொலை வேள்வியை மறுத்தார்.

சைவம் - முழு முதற் கடவுள்

"சைவம் சிவனுடன் சம்பந்த மாவது"[21]

என்றார் திருமூலர். சைவர்க்குச் சிவபிரானே முழுமுதற் கடவுள்.

பிற்காலத்தில் கந்தனும், கணபதியும் சைவத் தெய்வங்களாக இடம் பெற்றாலும் அவர்களும் ஆன்ம இயல்பினரே என்பதே சைவர் கொள்கை. சிவஞான பாடியப் பேருரையில் சிறப்புப் பாயிர விளக்கம் கூறும் மாதவச் சிவஞான சுவாமிகள்,

"சர்வஞ்ஞானோத்தரம் முதலிய சிவாகமங்கள் கந்தன், கணபதி முதலாயினார்க்கு அருளிச் செய்தது......முனிவர் முதலாயினாரை நோக்கக் கந்தன் முதலாயினோர் பரிபாகத்தின் முதிர்ந்தவர் ஆதலின்...[22] என்று எழுதுகையில் 'கந்தன் முதலானவர் பரிபாகம் மிக்கவர்' என்று குறிப்பிடுவதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

வேத குலத்தில் பிறந்தாலும் வடமொழியில் ஒரு சுலோகம் செய்ய முயலாமலும், 'தமிழ் ஞானசம்பந்தன்' என்று தம்மைக் கூறிக் கொண்டு காயத்திரியை விட 'அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே' என உறுதிபடக் கூறிய திருஞான சம்பந்தரை முதற் குரவராகக் கொண்டு சைவம் தன் வேத மறுப்புக் கொள்கைகளைக் காட்டுகிறது.

எனினும் வேதத்தில் கடவுள் கொள்கை காணப்படுவதாலும், உலகியல் அறங்கள் கூறப்படுவதாலும் சைவ சமயம் அதனைப் 'பொதுநூல்' எனக் கருதி வருகிறது.

வேதம் குறித்த சைவத்தின் மிகவாதப் போக்கு இது!

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம்; பொருள்; களவு; நூற்பா-1.
2. புறநானூறு - 31.
3. தனிப்பாடல்.
4. திருஞான சம்பந்தர் - முதல் திருமுறை.
5. திருஞான சம்பந்தர் - இரண்டாந் திருமுறை.
6. சேக்கிழார் - பெரிய புராணம்.
7. மேலது.
8. மேலது.
9. வேதம் ஓர் ஆய்வு - சனல் இடமருகு மொ. பெ. த. அமலா. ப.39.
10. திருக்குறள் - 25
11. திருஞான சம்பந்தர் தேவாரம் - முதல் திருமுறை.
12. திருவாசகம் - திருச்சதகம் - 2.
13. திருநாவுக்கரசர் - ஆறாந்திருமுறை.
14. திருமந்திரம் - 88.
15. பெரியபுராணம்; பாடல் : 1109.
16. திருக்குறள் - 1062.
17. திருவாசகம்; திருஅண்டம்; அடி.20.
18. திருநாவுக்கரசர் பொதுப்பதிகம்.
19. திருக்குறள் - 269.
20. மேலது - 328.
21. திருமந்திரம்; 15, 12.
22. சிவஞான மாபாடியம் சிறப்புப் பாயிரம்.

திருமுறையே சைவநெறிக் கருவூலம்
தென்தமிழின் தேன்பா காகும்
திருமுறையே கயிலையின்கண் சிவபெருமான்
செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன்கரம் வருந்த
எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்
மலர்ந்தருளும் சிறப்பிற்றா மால் (தனிப்பாடல்)

வழிபாடும் தமிழும்

தவத்திரு **சாந்தலிங்க இராமசாமி அடிகளார்,**
பேரூராதீனம், கோவை.

நமது நாட்டில் அறநெறிப் பண்பாடுகள் வளரத் துணை புரிவன திருக்கோயில்கள். மனித இனம் மனநலத்துடன் வாழ்வாங்கு வாழத் திருமுறைகளும், அருட்பாடல்களும் அருளாளர்களால் பாடப்பெற்றவை. ''மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் மொழி''யென்றார் தாயுமானவர். உவட்டாமல் இனிப்பது திருவாசகம். 'மலம் கெடுத்து மனம் கரைக்கும் வாசகம்' என்றார் மனோன்மணி ஆசிரியர் சுந்தரம் பிள்ளை. இப் பாடல்களுக்குக் 'கருவாக அமைந்தவை திருக்கோயில்கள். வேறுபாடின்றி மக்கள் ஒருங்கிணைந்து வாழும் மனப்பாங்கு உடையவர்களாக வழிபட்டனர். மனநலம் பெற்றனர். உயிர் மென்மேலும் உயர்வதற்கு வழிகாட்டியது திருமுறை. இன்று அப்பாடல்கள் கருவறைகளில் ஒலிக்கப் பெறவில்லை.

என்றுமுள செந்தமிழ் வழிபாட்டிற்குச் சிறந்த மொழி. அருளாளர் கசிந்து உள்ளுருகிப் பாடிய பாடலுக்கு இரங்கிப் பரம்பொருள் வண்ணம் காட்டி, வடிவு காட்டி வேண்டுவார் வேண்டும் திருவுருவில் தோன்றி அருள் வழங்கிய சிறப்பை நமது வரலாறுகள் தெரிவிக்கின்றன.

நமது திருமுறை ஆசிரியர்களும், அருளாளர்களும் பண்ணிசைத் தமிழாய், பழத்திடைச் சுவையாய், ஏழிசையாய், இசைப்பயனாய்க் கண்டு, 'பண்ணின் இசையாய் நின்றாய் போற்றி' என்று பாடினர். 'தண்ணார் தமிழ் அளிக்கும் தென்பாண்டி நாட்டானே'' எனப் போற்றினர். அப்பாடல்களால் தமிழினம் விழிப்புற்றது. எழுச்சி கொண்டு மன்னர்களும் மக்களது உணர்ச்சிகளுக்கு ஏற்ப நாடும் நகரமும் நல்ல திருக்கோயிலும் பொலிவுறச் செய்தனர்.

நமது நுண்கலைகளை வெளிப்படுத்தும் சிற்ப ஓவியங்களோடு கற்கோயில்களை எடுத்தனர். நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்களாக வளர்ந்தன. விண்ணளாவிய கோபுரங்கள் எழுந்தன. பாட்டும் இசையும், கூத்தும் இடம் பெற்றன. இறைவனைக் 'கொட்டு ஆட்டுப் பாடலாய் நின்றார்'' என்று அப்பரடிகள் பாடினார். தெய்வத் தமிழால் தொடுமணற் கேணியில் சுரந்து நீர் பாய அன்பர்கள் போற்றினர். இத்தகைய திருக்கோயில்களில் இறைவனும், பாடுவார் பசி தீர்த்தார், பரவுவார், பிணிகளைக் களைந்தார். வாழ்வியல் நெறிமுறைகள் திருக்கோயில்களில் இடம் பெற்றன என்பதை வரலாற்று அமைப்பிலே காணலாம். பிறமொழியால் வழிபட்ட செய்தியே இல்லை.

அயலவர் ஆதிக்கங்களால் நமது வழிபாட்டில் தமிழ் புறக்கணிக்கப்பட்டது. பிறமொழியில் தமிழர்க்கு இருக்கும் மயக்க உணர்வை என்னவென்பது? சங்க காலத்திற்கு முன்னிருந்த நமது வழிபாட்டு நெறிமுறையை உணராமல் கோயில் பூசை முறைகளும் வழிபாடும் வடமொழியில்தான் இருந்தன என்று கூசாமல் இதழ்களில் எழுதத் தொடங்கி உள்ளனர். எல்லா மொழியாலும் இறைவனைப் போற்றலாம். ஆனால் நமது மொழியில் நமது கோயில் வழிபாட்டை நடத்த முன்வராமல் வேறாக வழிகாட்டுவது ஏற்புடையது இல்லை என்பதை அறிவீர்கள்.

நமது பழமை மிக்க வழிபாட்டு முறையைத் தொடங்குதற்கு இளையோர்கட்கு வழிகாட்டுவோம்.

சமய நெறியில் நான்கு நிலையுண்டு. தல வழிபாடு, தீர்த்தமாடல், திருவேடத்தைப் போற்றுதல், தூய்மை செய்தல், வலம் வருதல், வணங்குதல், வழிபாட்டிற்கு வேண்டியவற்றை வழங்குதல் முதலியன. இவை **சரியை** எனப்படும். சரியையின் முதல்படியாக

பூவலமாத்தீர்த்தங்கள் பலவும் ஆடிப் புரதகனன்
அரிமுதலாப் புகலுந்தேவர்
யாவரையும் ஆலயங்கள் தோறும் சேவித்து ஏன்றமட்டில்
மெய்யடியார்க்கு ஏவல் செய்து
பாபம் ஒரு சிறிதேனும் புரிந்திடாமல் பலவிரதாதிகள்
முயன்று பாடுபட்டுச்
சீவர்களுக்கு எந்நாளும் இதமே நாடித் திகழ்வதனைச்
சரியை யெனச் செப்பலாமே

என அருளினார், தவத்திரு முருததாச அடிகள். மேலும்

பாபம் அற வேண்டும் எனச் சுற்றிச் சுற்றிப் பணிந்தெழுவார்
உலகிடத்துப் பலபேர் கோயில்
தீபமிடத் தூபமிட மெழுகக் கூட்டச் செழுமலர் மாலிகை
அமைக்கத் தெளிவார் சில்லோர்
தாபதரும் தெய்வ வடிவு என்னக் காண்பார் சரியையே
பலன் கொடுக்கும் தமது தெய்வம்
நீபதரேவ் என உரைக்க நேர் வந்தாலும் நெறிப்பிழையோர்
வேறுவிதம் நினைப்பார் அன்றே

எனப் பாடியருளினார். இது சரியையின் முதிர்ந்த நிலையைக் குறிப்பதாகும்.

மலர்கொண்டு வழிபடல், கூடிப் பாடுதல், இறைவன் திருநாமத்தை ஓதுதல் முதலியன **கிரியை** எனப்படும்.

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய ராறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே

என்று பூசை நெறியினை ஞானசம்பந்தப் பெருமான் அருளுகிறார்.

இறைவனுடைய திருவுருவத்தை நெஞ்சில் இருத்துதல், மனத்தை அடக்குதல் முதலியன **யோகம்** எனப்படும். இதை நாவுக்கரசுப் பெருமான்,

''நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்''

என்று அருளியுள்ளார்.

எப்போதும் கடவுள் தொடர்பை நீங்காதிருத்தல் **ஞானம்** எனப்படும்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங்கேட்டாள்
பின்னையவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தா ராசாரத்தைத்
தன்னை மறந்தாள் தனநாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே

என்று இறையின் இணைப்பை நீங்காதிருப்பதை அப்பரடிகள் விளக்குகிறார்.

இத்தகைய நெறிகளில் நின்று அருள் பெற்றவர்களது வாழ்க்கையை, வரலாற்றைத் தெரிந்து கொள்வது பயனுடையதாகும். அவர்கள் பெற்ற அருளை நாமும் பெற இறைவனை வழிபட வேண்டும்.

வாயானை மனத்தானை மனத்துள்நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்றுஎன்
தாயானைத் தவமாய தன்மையானைத்
தலையாய தேவாதி தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல் திருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமைபூண் டேனுக்கே.

(அப்பர் தேவாரம்)

தமிழ்ச் சமயம் காட்டும் அப்பாலைத் தத்துவம்

பேராசிரியர் முனைவர் **வை. இரத்தினசபாபதி,** *மேனாள் பேராசிரியர், சைவசித்தாந்தத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 5.*

மனிதன் தன்னுடைய ஐந்து புலன்களாலும் உணர்ச்சித்து நின்றும் ஒலியினால் கேட்டு, கற்று அறிந்து நின்றும் அமைக்கின்ற அனுபவங்களுக்கெல்லாம் மூலமாக நின்ற பொருள் பௌதிகப் பொருள்களே - பருமைப் பொருள்களே.

பருமைப் பொருளே - பௌதிகப் பொருளே முடிந்த நிலைப் பொருள் அன்று. புலன் கடந்த பொருளையே முடி நிலைப்பொருள் என்று தத்துவ உலகம் (Metaphysics) வரையறை செய்துள்ளது.

புலன்கடந்த பொருள் என்பதை அப்பாலைத் தத்துவம் எனத் தமிழில் கூறுவதுண்டு. அப்பாலைத் தத்துவமாகக் கடந்த நிலைப் பொருளை - பரம்பொருளை உலகத் தத்துவ அரங்கில் தனிப் பெருமையுடைய விளக்கத்தில் நிலை நிறுத்திய பெருமை தமிழகத்திற்குண்டு. அவ்வாறு நிலைநிறுத்திய வரலாறு தொல்காப்பியர் தொடங்கித் திருஞானசம்பந்தர் திருமுறையாலும் விளக்கம் பெறுவது தமிழக மண்ணின் தகைமை தொடர்ந்து நிலைபெறுந் தன்மையில் விளங்குவதைக் காணமுடிகிறது.

தொல்காப்பியப் பொருளதிகாரக் களவியலில் இரண்டாவது நூற்பாவைக் கீழே காணலாம்.

''ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே''

என்ற நூற்பாவின் பொருளை நன்கு சிந்தித்தல் வேண்டும்.

தலைவனும் தலைவியும் இயல்பான முறையில் - எதிர்பாராத வகையில் நடந்தது என்று எண்ணும் வகையில் சந்தித்தமைக்கு ஒரு பொருள் செயற்பட்டிருக்க வேண்டும் என்று தொல்காப்பியம் திட்டவட்டமாகக் கருதுகிறது. இருவரையும் அவ்வாறு சந்திக்க வைத்த பொருள் எதுவாக இருக்கும்.

''ஒன்றே வேறே என்றுஇரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணை'' யினால்''

இத்தகைய சந்திப்பு நடந்தது என்பதே அந்நூற்பாவின் விளக்கம். இந்நூற்பாவில் அமைந்த 'பால்' என்ற சொல்லுக்கு 'ஊழ்' என்று விளக்கம் கூறினார்கள்.

''ஒன்றாக இணைத்தல், வேறாகப் பிரித்தல் என்று வரும் இருவகை ஊழ்நிலைகளுள் பல பிறவிகளில் ஒன்றியிருக்கும்படிச் செய்து அதனால் அன்பு உயர்வதற்குக் காரணமாகிய ஒருவகை ஊழினது ஆணையினால்'' என்று பொருள் கொள்ளப் பெற்றுள்ளது.

ஒன்றாக்குதலும் வேறாக்குதலும் இருவகை ஊழ்கள் என்றால், ஒன்றி உயர்ந்த பால் என்பது மூன்றாவது வகை ஊழா?

ஊழ் நேரே வரும் என்பதே தத்துவம், அதன் ஆணையாக ஏதும் வருதல் இல்லை. 'பால்' என்ற சொல்லுக்கு ஊழ் என்ற பொருள் இருப்பதினால் 'ஒன்றி உயர்தல்' என்பதற்குப் பொருத்தமில்லாத உரையைக் கொள்ள வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உண்டாகி விட்டது.

பொருள், குணம், அனுபவம் எதுவாக இருந்தாலும் இரண்டு நிலைகள் உண்டு.

ஒன்று, வேறு என்பனவே அவை. நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருள் எதுவாயினும் அது 'ஒன்று' என்று சொல்லப்பெறும். அதைத்தவிர ஏனைய பொருள்களெல்லாம் எடுத்துக் கொண்ட பொருளுக்கு வேறானவைகளே. வேறு ஒரு எடுத்துக்காட்டின் மூலம் இதனை மேலும் நன்கு உணரலாம்.

மேலை நாட்டுத் தத்துவ ஞானத்தை நெறிப்படுத்திய பெருமை 'ஹெகல்' என்ற பேரறிஞர்க்கு உண்டு. ஹெகல் என்ற பேரறிஞர்தான் என்னை அறியாமை என்ற தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பினார் என்று தத்துவ மேதை இமானுவேல் காண்ட் என்பவர் கூறுகிறார் என்றால் 'ஹெகல்' என்பாரின் பெருமை தெரிய வரும்.

கொள்கை (Thesis) என்ற ஒன்று இருக்குமானால், அதற்கு எதிர்க்கொள்கை என்பது ஒன்று உண்டு. அந்த எதிர்க் கொள்கை (Anti Thesis) என்று சொல்லப்பெறும்.

கொள்கைகளிலோ பொருள்களிலோ நேர் எதிர் என்ற வேறுபாடு இல்லை. எந்த ஒரு கொள்கை முன்மொழியப் பெறுகிறதோ அது எதிர்நிலை இல்லாது இல்லை என்பது முடிந்த முடிவு.

இங்கே கூறப்பெற்ற இரண்டும் இணையுமா என்றால் நேர்நிலையில் இணையாது.

எடுத்துக் கொண்ட கொள்கையில் உள்ள எதிர்ப்பும், எதிர்க் கொள்கையில் உள்ள எதிர்ப்பும் இணைந்த ஒரு இணைப்புக் கொள்கை (Synthesis) உருவாகும் என்று கொண்டார்.

ஹெகல் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். தொல்காப்பியம் கி.மு. ஆண்டைச் சார்ந்தது.

நேரும் எதிர்வும் என இரு கொள்கைகள் உண்டு என்பதை முழுமையாக ஏற்கிறது தொல்காப்பியம். பொருள்கள், அனுபவங்கள், கொள்கைகள் எல்லாவற்றிலும் இத்தகைய இருநிலைகள் அல்லது இருமைகள் உண்டு.

''ஒன்றே வேறே என்று இருபால்'' என்று தொல்காப்பியம் வரையறை செய்தது.

இனி மூன்றாம் நிலையில் அமைந்த பால் ஒன்று உண்டு. அது ஒன்று என்றதோடும் சேர்க்க முடியாது; வேறு என்றதோடும் சேர்க்க முடியாது.

அதற்குத் தொல்காப்பியம் தரும் விளக்கம் ''ஒன்றி உயர்ந்த பால்'' என்பதே.

ஒன்றும் அல்ல வேறும் அல்ல. ஆனால் ஒன்றாம் நின்றதையும் வேறாய் நின்றதையும் பற்றுக் கோடாகக் கொண்டு வெளிப்படும். அது வெளிப்படுவதற்கு ஒன்றும் வேறும் என்ற இரு நிலைகள் தேவை.

மெய் என்பது ஒன்று; பொய் என்பது வேறு. இரண்டுமே முடிநிலைப் பொருள் இல்லை.

மெய் என்பதையும் பொய் என்பதையும் எல்லைக்குட்படுத்தி நிறுத்தி, அவைகளின் நடுவில் தோன்றி வெளிப்படுவதாய் அதே சமயத்தில் மெய் பொய் என்ற இரண்டையும் கடந்ததாய் நிற்பதே 'ஒன்றி உயர்ந்த பால்' எனப்பெறும்.

நீதி என்பது ஒன்று. அதற்கு வேறாய் நிற்பது அநீதி. நீதி என்பதே முடிந்த நிலை உடையது அன்று. அதுபோல அநீதி என்பதும் முடிந்த நிலை உடையது அன்று. எதிர்நிலைகளாக எந்த ஒன்று நின்றாலும் அது அல்லது அவை முடிந்தநிலைக் கொள்கையாகவோ பொருளாகவோ இருக்க முடியாது என்பது தமிழகச் சிந்தனையின் தலைநிலை.

நீதி அநீதியை அழிக்காது. அநீதியும் நீதியை அழிக்காது. இரண்டையும் இணைத்துவிட முடியாது. இரண்டையும் அதனதன் எல்லையில் நிறுத்துவது எது? நீதியும் அநீதியும் தத்தம் எல்லைகளில் நிற்கின்றன என்றால் அவைகள் அவ்வாறு நிற்பதற்கு அவைகளின் எல்லைகளுக்கு அப்பால் நின்ற ஒன்றன் ஆணையால் அவை அவ்வாறு இயக்கப்படுகின்றன.

புலியும் மானும் ஒன்றையொன்று சந்திக்கின்றன. இரண்டும் ஒன்றையொன்று பார்க்கின்றன. ஆனால் ஒன்றை ஒன்று தாக்காமல், ஓடாமல் நிற்கின்றன. அந்நிலைக்கு என்ன காரணம்?

இருநிலைகளுக்கும் மேற்பட்ட ஒன்றன் முன்னிலையில் இந்த இரண்டும் பேசாமல் இருக்கின்றன. ஆனால் அவை பகைமை மறந்து ஒன்றுபட்டு விடவில்லை.

நீதியையும் அநீதியையும் இடைநின்று நிறுத்தி, அதே சமயத்தில் அவைகளின் எல்லைக்கு அப்பால் உயர்ந்து நிற்பது அறம்.

'முரண்' என்ற கொள்கையை எந்த இடத்திலும் காண முடியவில்லை. வேறுபாடு என்பது வேறு, முரண்பாடு என்பது வேறு. வேறுபாட்டை ஏற்றுக்கொள்ளும் தமிழகம் 'முரண்' என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளவே இல்லை.

''ஆணானான் பெண்ணானான்''

என்று கூறிய கருத்துக்குப்பின் 'அல்லன்' என்பதையும் இணைத்துக் கூறிய கருத்தைச் சமய உலகில் காணலாம்.

எனவே 'பாலை' என்பது இடைநின்றது. குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இடை நின்றது அது. ஆனால் குறிஞ்சியும் முல்லையும் இணைந்த ஒன்று அன்று, (Not the aggregation of the two) குறிஞ்சியும் முல்லையும் இல்லாமல் வெளிப்படுவதாய், குறிஞ்சியையும் முல்லையையும் கடந்ததாய் வருவது பாலை. இக் கருத்தையே,

''ஒன்றே வேறே என்று இருபால்வயின்
ஒன்றி, உயர்ந்தபால், அது ஆணையின்''

என்றது தொல்காப்பியம்.

இருமைக் கருத்துக்களுக்கு இடையில் வெளிப்படுவதாய் அதே சமயத்தில் இருமைக் கருத்துக்களின் இணைப்பு என்று சொல்லுவதற்கு இடமில்லாததாய், இருமைக் கருத்துக்களைக் கடந்ததாய் நின்ற ஒருமையே 'பொருள்' என்று கண்டனர் தமிழர்.

இருமையை ஒன்றி நின்றது; இருமையை உயர்ந்து நின்றது எதுவோ அது ஒருமைப்பொருள்; பரம்பொருள் அப்பாலைப் பொருள் என்று பொருள்நிலை வரையறையைத் தம் அனுபவத்தால் கண்ட பெருமையுடையவர் தமிழர்.

அத்தகைய ஒருமைப் பொருளின் ஆணையால் தலைவனும் தலைவியும் சந்தித்தனர் என்பதே அத்தொல்காப்பிய நூற்பாவின் கருத்து.

உலகத் தத்துவ அரங்கில் அப்பாலைப் பொருளுக்கு இத்தகைய விளக்கம் காண முடியவில்லை; தொல்காப்பியக் காலம் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கொள்கிறார்கள். அக்காலத்திலேயே 'பொருள்' என்ற ஒன்றைப் 'பாலை' என்பதாகச் சுட்டி அது இருமையும், இருமை கடந்த ஒருமையும் ஆக நின்றது என விளக்கம் காணப்பெற்றது. தமிழகத்தின் தொன்மைச் சுட்டாம் அப்பாலைத் தத்துவத்தைக் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வந்த திருஞானசம்பந்தர் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டி, சைவசித்தாந்தக் கொள்கையாக அத் தத்துவப் பொருள் அமையுமாற்றைத் 'திருவெழு கூற்றிருக்கை' என்ற திருப்பதிகத்துள் எடுத்துக் காட்டுகிறார்.

''இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்''

என, மெய்ம்மொழிப் பொருளாக திருஞானசம்பந்தப் பெருமான் அதனை எடுத்துக் காட்டுகின்றார்.

தமிழகத்தின் தொன்மை தொடங்கி இன்றும் அப்பாலைத் தத்துவம் சைவக் கொள்கையாக உலகத் தத்துவ அரங்கிற்கு வழங்கப் பெற்றிருத்தலை வரலாற்று நிலையாலும் தெரிந்து இறும்பூதெய்தலாம்.

Saivism Through the Ages

Dr T.B. Siddalingaiah, Chennai.

A study of the Mayan Culture reveals that worship of Siva was there is central America. The remnants of the temples in Jawa. Bali and other islands also speak of the spread of Śaivism in the far corners of the world. And this is testified by the excavations done in many parts of the world. Only in India we have this tradition uninterruptedly continued. The twelve Jyotir lingas situated at different centres from Kashmir to Rāmeśwaram stand to prove its wide-spread existence [2]. The Telugu region, presently called Āndhra Pradesh, got its name. Triliṅgadesa, after the three lingas establised in the territory. Bengal, Gujarat and Maharashtra have the practice of Śiva worship, Tamilnādu has been known for its Śiva temples; so is Karnātaka. Uttar Pradesh is proud of having Banaras, housing the temple of the Lord of the Universe-Viśvanātha. People from south trekking the Himalayas to visit the Kedārnath temple at Kedār, and people from the north visiting South India to have a glimpse of Rāmanātha at Rāmeśwaram also speak volumes of the faith and the distribution of the cult throughout the length and the breadth of the Country.

The Śaivism widely spread all over the subcontinant, developed its own form and name, regionwise. The Śaivism of Kashmir was called pratya bhijñā darśanam, or popularly Kashmir Śaivism. The Gujarat sect developed into Nakulīśa Pāśupatam or Lakulīśa Pāśupatam.[3] This was very widely followed. Appar, a saint of the 7th Century mentions it is his Tēvāram (one of the Śaivite devotional works in Tamil)[4]. In Karnātaka, the Kālāmukhas slowly emerged as a new faith with a new name. It was called the Vīraśaivism and the followers were called the Vīraśaivaites or the Liṅgāyats. In Tamilnādu this faith is called the Siddhānta śaivam, after the philosophical system it produced. There were other sects also. St. Tirumūlar of Tamilnādu speaks of four types of Śaivism. [5] He is said to add pāśupata, Mahāvrata, Kāpālike, Vāma, Bhairava and Śaiva.[6] There were the Kālāmukhas who were patronized by the later Colas. Ānandagiri, in his *Śankaravijaya* makes mention of six types of Śaiva Cult, namely, Śaiva, Roudra, Ugra, Bhatta, Jaṅgama and Pāśupata.[7]

Apart from being the faith of the common man, the cult of Śiva was the practising religion of the philosophers of India. Rājasekhara (14th Century) in his *Saddarśana Samuccaya* calls the Naiyāyikas the Śaivaites, and the Vaiśesikas the Pāśupatas.[8] Madhavācārya of the same period mentions about the Nakulīśa Pāśupata cult in his *Sarva darśana Saṅgraha.* The inscriptions of the Imperial colas of Tamilnadu speak in detail of the Kālāmukhas and the grants they received from the Cola kings. These kings accepted them as their religious masters and brought them from the banks of the Godāvari. They were the people, it can safely be said, who introduced the rites and rituals in the temples according to the Agamas. By the beginning of the 12th Century of Āgamic worship took deep roots in Tamilnādu. The pallavas accepted Śaivism as the State religion. And also started constructing temples. This was followed by the Colas later.

All the sects of Śaivism, whether of Northern origin or of the Sourthern one, accept the Vedas and the Āgamas as the Scriputure. For them, these are the words of Śiva. He gave them to the mankind. The Vedas are general and the Āgamas are specific in nature.[9] There are 28 āgamas. They speak of the Sadhana, namely, Caryā, Kriyā, Yoga and Jñāna. They prescribe the mode to worship too. The Vedas also speak of Śiva. Indisputedly the oldest and the most important of all the works of Vedic literature is the *Rg Veda Samhita,* usually called simply the *`Rg Veda'.* So many Gods are spoken of in the *Rg Veda.* So also there has been an under current indicating the supreme God or God-head [10]. The search for the supreme God was on. By the time the *Yajur Veda* was compiled, Rudra-Śiva gained importance and prominence. This is evident from the fact that the Śatarudrīya occupies a prominent

